ஆன்மீக சஞ்சிகை

# சிவ ஒளி

வள்ளுவர் ஆண்டு 2051 - வீறியெழல் ஆண்டு
கும்பம்- மீனம் - மாசி- பங்குனி 2021

மாதாந்த மின்னிதழ்: ஒளி 10-11



சிவன் மலையில் மகாசிவனிரவு

சிந்துவெளியில் நடராஜர் வழிபாடு நிலவியதா ?

சிவசின்னங்களில் விபூதியின் மகிமை

பௌத்த விகாரைக்குள் சங்கமமாகிய சிவபக்தன் இராவணன்

ஒரு தனித்துவமான கவிஞரின் தனித்துவமான மாணவர்

சுவாமி விபுலாநந்தரின் ஆய்வுநோக்கு

சமய ஞானிகளும் பெரியார்களும்

ISSN 1393-8754

sivaoli.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவ ஒளி

மாதாந்த மின்னிதழ்

மாசி– பங்குனி 2021
ஆன்மீக மின்னிதழ்– ஒளி– 10

சிவஒளி ஆலோசனை தென்கயிலை
ஆதீனம் குரு முதல்வர் அகத்தியர் அடிகளார்

**தலைமை ஆசிரியர்**

அனைதுலக ஒருங்கிணைப்பாளர்
தென்கயிலை ஆதினம்
தென்கயிலை சிவா (பிரான்ஸ்)

**ஆசிரியர் குழுமம்**

நாட்டியக் கலைமணி
திருமதி பவானி குகப்பிரியா

திருமதி ஹேமலோஜினி குமரன்
உதவிப் பணிப்பாளர் அறநெறி

கலாநிதி
திரு பொன் ஜெயரூபன்

சைவப்புலவர்
திரு சுந்தரமூர்த்தி துஷ்யந்த்

ஆசிரியர்
திரு சற்குணலிங்கம் ஹோபிநாத்

**வடிவமைப்பு**

மோகன ஷாந்தி

தென்கயிலை ஆதீனம்
இல-36 சிவன் மலை பீலியடி
கன்னியா, திருகோணமலை.
இலங்கை.

**குரு மகா சந்நிதானம்:**

தவத்திரு அகத்தியர் அடிகளார்
00 94 77 509 8157.

**இளைய பட்டம்:**

திருமூலர் தம்பிரான் அடிகளார்.
00 94 77 173 1728

**தொடர்புகளுக்கு:**

தென்கயிலை சிவா
00 33 6 13 15 93 49
thenkailaisiva@gmail.com



**படைப்புரிமை**

சிவ ஒளியில் வெளிவரும் கட்டுரைகள் யாவும்
படைப்பாளிகளுக்கே உரித்துடையதாகும்


## உள்ளடக்கம்

### சமயம்


1 தென்கயிலை சிவா
ஒளியில் ஒளியாகி ....... பக்கம் 03

2 தென்கயிலை சிவா
அன்பே சிவமாகி ....... பக்கம் 04

3 திருமதி ஹேமலோஜினி குமரன்
மாசி மாதமும் அதன் மகத்துவமும் பக்கம் 06

4 கலாநிதி பொன் ஜெயரூபன்
தமிழர்களின் மேலான சமயம் சைவசமயமே பக்கம் 09

5 சித்தாந்தரத்தினம் தயாராபரன்
ஈழத்து சித்தர் பரம்பரை பக்கம் 14

6 கு.தவசீலன் முதுதத்துவமாணிப்பட்ட ஆய்வாளர்
சைவசித்தாந்த வாழ்வியல் பக்கம் 17

7 சைவப்புலவர் தயாழுகன்
சிவசின்னங்களில் விபூதியின் மகிமை பக்கம் 23

8 ஆசிரியர் பு.பிரியதர்ன்
சிந்துவெளியில் நடராஜர் வழிபாடு நிலவியதா ? பக்கம் 26

9 சைவப்புலவர் திருமதி.சிவானந்தஜோதி ஞானசூரியம்
விரதங்களும் அதன் நியமங்களும் பக்கம் 29

10 நா.வை.குமரிவேந்தன்
சமயமும் அறிவியலும் பக்கம் 35

11 பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி
வாசகர் பார்வையில் பக்கம் 44

12 தானெனை ஆண்டவன்
வித்தவான் வேந்தனார் பக்கம் 49

13 ஞானக்கவி வே.இராஜலிங்கம்
தென்கயிலை கவிச்கோலை பக்கம் 53


### வரலாறு


14 பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி
சுவாமி விபுலாநந்திரின் ஆய்வு நோக்கு பக்கம் 54

15 என்.கே.எஸ்.திருச்செல்வம் வரலாற்று ஆய்வாளர்
எல்லாளனின் பலம்வாய்ந்த விஜித்தநகரக் பக்கம் 61

16 தமிழ் நிதி அருணா செல்லத்தரை
மானிடகுல இராவணனின் ....... பக்கம் 65

17 என்.கே.எஸ்.திருச்செல்வம் வரலாற்று ஆய்வாளர்
இலங்கையை சுற்றி வந்த சிவபக்தன் பக்கம் 69


### பண்பாடு


18 சைவப்புலவர் சு.துஷ்யந்த்
சமயஞானிகளும் பெரியார்களும்....... பக்கம் 72

19 சித்த வைத்தியர் சுதர்மன்
சித்தமருத்துவமும் விஞ்ஞானமும் பக்கம் 77

20 சைவப்புலவர் திருமதி.சிவானந்தஜோதி ஞானசூரியம்
முருக வழிபாட்டில் வாழ்க்கை நெறி பக்கம் 81


### கலை இலக்கியம்


21 இளங்கலைமணி நரேன் சுரேன்
இறையும் இசையும்....... பக்கம் 87

22 சைவப்புலவர் சு.துஷ்யந்த்
விஜய நகர நாயக்கர் கால கட்டடக் கலை பக்கம் 91

23 கலாநிதி பாலசிவகடாட்சம்
ஒரு தனித்துவமான கவிஞரின் தனித்துவமான பக்கம் 97

24 திருமதி யுவராயினி பழனித்தம்பி ஓய்வு பெற்ற தமிழ் ஆசிரியை
இலக்கியங்களில் நடமாடும் இலட்சிய புருர்கள் பக்கம் 102

25 திருமதி பவானி சற்குணசெல்வம்
இளைய தலைமுறையினரின் மனநலம் &&&& பக்கம் 105



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஒளியில் ஒளியாகி... உயிரில் உயிராகி

**சிவஒளியில் பிரகாசித்து சிவப்பரம் பொருள் அருளாசியுடன் இணைந்திருக்கும் அனைவருக்கும் வணக்கம்.**

### ஓம் நமசிவாய...

**கடந்த** 11 03 2021 மகாசிவனிரவு நிகழ்வுகள் தென்கயிலை ஆதீனத்தில் சிறப்புறவும் பக்தியுணர்வுடனும் நடைபெற்றன. 108 கலசங்கள் வைத்து 108 லிங்கப் பெருமான்களுக்கு வேள்விப்பூசைகளும் இடம்பெற்றன. இந்நிகழ்வுகளை நேரில் தரிசனம் செய்தவர்கள் தவிர, இலங்கையிலும்,உலகிலும் உள்ள சிவனடியார்கள் தரிசிக்கும் வண்ணம் தென்கயிலை ஆதீனம் நேரலை ஒளிபரப்புச் செய்தமை அனைவருக்கும் பேறாகவே அமைந்தது.

இன்று எங்கு பார்த்தாலும் தென்கயிலை ஆதீனம் ஒரு பேசுபொருளாகவே நிலைபெற்று இருக்கிறது. இலங்கையின் பல பிரதேசத்தில் இருக்கின்ற சிவனடியார்களுக்கு 108 லிங்கங்கள் சிவன் மலையில் உயிர்ச்சக்தி கொடுக்கப்பட்டு இருப்பது அதிசயமிக்க செய்தியாகவே காணப்பட்டது. அதனால் பலர் தாம் நேரில் தரிசிக்கவேண்டும் என்ற நேர்த்தியுடன் சிவன் மலையை நோக்கி வருகை தருகின்றனர்.



**தென்கயிலை சிவா**
அனைத்துலக ஒருங்கிணைப்பாளர்
தென்கயிலை ஆதீனம்

மேலும் பலர் தமது வேண்டுதலை நிறைவேற்ற தாமும் லிங்கங்களை வழங்க முன்வந்து பதிவு செய்கின்றார்கள். அத்துடன் சிவன் மலையில் செய்யப்பட வேண்டிய திருத்த வேலைகளை கவனித்து அதை எவ்வாறு திருப்பணி வேலைகள் மூலம் செய்து முடிக்கலாம் என்பதனையும் கலந்துரையாட முன்வந்துள்ளனர். அது போல் வேறு சிலர் தாம் விரும்பும் தெய்வச் சிலைகளை ஆதீனத்திற்கு நன்கொடையாக வழங்கவும் முன் வந்துள்ளனர்.

108 லிங்கங்களின் ஒன்று திரண்டு வியாபித்துள்ள சக்திகளின் வெளிப்பாடாக தென்கயிலை சிவன் மலை காணப்படுகிறது. இதனால், இன்று இலங்கையில் புகழ்பெற்ற முதலாவது லிங்கமலையாக சிவன் மலை உயர்ந்து நிற்கிறது. இவையனைத்தும் எல்லாம் வல்ல சிவப்பரம்பொருளின் அருளாகவே காணப்படுகிறது.

தென்கயிலை சிவன் மலைக்கு தரிசனம்பெற வரும் அடியார்களுக்கு ஆச்சரியமான செய்தியாக இருப்பது என்னவென்றால் அமர்த்தப்பட்டிருக்கும் 108 லிங்கங்களில் அதிகமானவை வெளிநாடுகளில் வாழும் சிவனடியார்களால் நன்கொடையாக வழங்கப்பட்ட விடயம். பலர் தமது பிள்ளைகளின் பெயரிலும் பலர் தமது பெற்றோர்களின் பெயரிலும் லிங்கங்களை வழங்கியுள்ளனர். முக்கிய விடயமானது என்னவென்றால் தாயகத்திலிருந்து தூரதேசம் சென்றும் தமது இறைவழிபாட்டையும் தமிழ்ப் பண்பாட்டையும் கலைகளையும் கட்டிக்காத்து வருகின்றார்கள் என்பதை வரும் அடியார்களுக்கு உணர்த்துகின்றது என்பதே வெளிப்படையான பேருண்மையாகும்.

மாதாந்தம் நிறைமதி வழிபாட்டுப் பூசைகள் (பௌர்ணமி), மறைமதி வழிபாட்டுப் பூசைகள் (அமாவாசை), மற்றும் ஆண்டுப் பிறைநாள் பூசைகள் (திவசம்), பிறந்த நாள் வழிபாட்டுப்பூசை என்பன பொறுப்பேற்று நடைபெறுகின்றன. இதன்போது அவரவர்களின் லிங்கப் பெருமான்களுக்கு வேள்விப்பூசை நடைபெற்று நன்னீராட்டும் இடம் பெறுகின்றன. ஒவ்வொரு நிகழ்வின்போதும் பல பிரதேசங்களில் பின்தங்கிய கிராமங்களில் உள்ள ஆலயங்களில், அன்னதானங்களும் ஆதீனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெறுகின்றன. அனைத்திற்குமாக பூசைப்பொறுப்பை ஏற்பவர்கள் நன்கொடை வழங்குகின்றார்கள். அன்னதான நிகழ்வானது கோயில்களில் கிராமம் ஒன்று சேர்ந்து கூடி சமைத்து உணவு வழங்கும் நிகழ்வுகள் தங்களையும் அறியாது இறைபக்தியுடன் கூடிய ஒற்றுமையையும் ஏற்படுத்துவது இன்னுமோர் அற்புதமான செயற்பாடாகும்.

இது போன்ற நிகழ்வுகள் ஒரு உண்மையை சொல்கிறது. அதாவது ஒவ்வொரு சைவப்பெருமக்களும் தமது இறை அடையாளங்களை என்றைக்கும் பாதுகாத்து எதிர்காலச் சந்ததிக்கும் அவர்களின் இறை நம்பிக்கைக்கும் தம்மாலான சிவத்தொண்டினை மேற்கொண்டு வழிகோல வேண்டுமென்னும் ஆர்வத்துடன் செயலில் இறங்கவேண்டும் என்ற உண்மையை உணர்த்துகின்றது.

இச் செயற்பாட்டின் மூலம் சைவத்தைப் பாதுகாப்போம் . சைவநெறியைப் பின்பற்றுவோம் மனிதத்தை நேசிப்போம்.அன்பு, பாசம், இரக்கம், உண்மை , நேர்மை, அமைதி, இறைசக்தி என்னும் வழிகளிலே பயணித்து இப்பிரபஞ்சத்தில் வந்துதித்த பெருங்கடனை நிறைவேற்றி பிறவிப் பெரும் பயனை அடைவோம்.

அன்பே சிவமாகி அனைவரையும் நேசிப்போம்.

ஒளியில் ஒளியாகி உயிரில் உயிராகி மனித உறவுகளைப் போற்றுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்பே சிவமாய்

## இலங்கையில் 108 லிங்கங்கள் அருளாட்சி செய்யும் முதல் சிவன் மலை

## தென்கயிலை சிவன் மலையில் 108 லிங்ஙங்கள்

## மகாசிவனிரவு நாளில் சிவனடியார்கள் நேரிலும் நேரலையிலும் தரிசனம்





**கடந்த** 11 03 2021 வியாழக்கிழமை தென்கயிலை ஆதீனம் சிவன் மலையில் உயிர்ச்சக்தி கொடுக்கப்பட்ட 108 லிங்கங்கள் அமர்த்தப்பட்டிருக்கும் அற்புதமான காட்சியுடன் மகாசிவனிரவு நிகழ்வுகளையும் நான்கு இரவுப்பூசைகளையும் தென்கயிலை ஆதீனம் நேரலை ஒளிபரப்பு செய்தமையானது இலங்கையிலும் உலகெங்குமுள்ள சிவனடியார்களுக்கு கிடைத்த மிகப்பெரும் வரமாக அமைந்தது..

மகாசிவனிரவுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பே 108 லிங்கப்பெருமான்களுக்கு எண்ணெய்க் காப்பு இடுதல் பற்றிய அறிவிப்பு செய்ததைத் தொடர்ந்து சிவனடியார்கள் பல பிரதேசங்களில் இருந்தும் உள்ளூரில் இருந்தும் சிவன் மலையை நோக்கி செல்லத் தொடங்கினர். பங்குனி ஒன்பதாம், பத்தாம் திகதிகளில் சிறியோர் பெரியோர் முதல் அனைவரும் சிவன்மலையில் வியாபித்திருக்கும் சிவலிங்கப் பெருமான்களுக்கு எண்ணெய்க் காப்பு இட்டு வணங்கினர்.

பங்குனி 11 ம் நாள் மகாசிவனிரவு. காலை பத்து மணிக்கே சிவன் மலையில் மகாசிவனிரவு நிகழ்வுகள் ஆரம்பமானது. முதலில் மங்கள விளக்கு ஏற்றப்பட்டது. இலங்கை தேசியக்கல்வி நிறுவக விரிவுரையாளர் கலாநிதி பொன் ஜெயரூபன் அவர்கள், சைவப்புலவர் திருமதி சிவானந்தஜோதி ஞானப்பிரகாசம் அவர்கள், இசை ஆசிரியர் திருமதி பத்மலோஜினி குணராஜசிங்கம் அவர்கள்,சைவப்புலவர் திருமதி விஜயலக்சுமி அவர்கள்,ஆசிரியர் சிவத்திரு காண்டீபன் அவர்கள்,செந்தமிழாகம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அருட்சுனைஞர் உயிரொளிச்சிவம் பிரதாப் ஐயா அவர்கள், மற்றும் செல்வஜோதி ஐயா ஆகியோர் மங்கள விளக்கை ஏற்றி வைத்தனர்.

மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து நந்திக்கொடி மற்றும் ஆதீனக்கொடி ஏற்றும் நிகழ்வுகள் ஆரம்பமானது. அன்றைய தினம் சிவன் மலை வாயிலில் அமைக்கப்பெற்ற நான்கரை அடி உயரமுள்ள ஆதிசக்தி அபிராமி பெருமானுக்கு எண்ணெய்க் காப்பு இடுதல் நிகழ்வும் இடம் பெற்றது.

சிவன்மலைக்கு வருகை தந்துள்ள இலங்கை தேசியக்கல்வி நிறுவகத்தின் விரிவுரையாளர் கலாநிதி பொன் ஜெயரூபன் அவர்கள் நந்திக்கொடியையும், ஆதீனத்தின் முதற்குரு மகாசந்நிதானம் தவத்திரு அகத்தியர் அடிகளார் ஆதீனக்கொடியையும் ஏற்றி வைத்தனர்.

பின்னர் 108 கலசங்கள் வைத்து,108 லிங்கப்பெருமான்களுக்கும் வேள்விப் பூசைகள் ஆரம்பமாகின. முதற்குரு மகாசந்நிதானம் தவத்திரு அகத்தியர் அடிகளார் தலைமையில் , இளைய பட்டம் தவத்திரு திருமூலர் தம்பிரான் அடிகளார் ,செந்தமிழாகம அருட்சுனைஞர் உயிரொளிச்சிவம் பிரதாப் ஐயா அவர்கள், செந்தமிழாகம அருட்சுனைஞர் ஜெகநாதன் ஐயா அவர்கள், செந்தமிழாகம அருட்சுனைஞர் சனுசன் ஐயா உட்பட பலர் வேள்வி பூசைகளை இயற்றி வைத்தனர்.

மூன்று வேள்விப்பீடங்கள் அமைத்து செய்யப்பட்ட வேள்விப் பூசையை பெண்களும் பங்கு பற்றி செய்தமை பெண்களுக்கான ஆன்மீக அங்கீகாரத்தை வழங்கியது பார்த்த அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. முதற்குரு மாகாசந்நிதானம் தவத்திரு அகத்தியர் அடிகளாரின் உயர்ந்த எண்ணப்பிரதிபலிப்பே பெண்களும் வேள்விப் பூசையில் பங்கு கொள்ள வைத்தமை குறிப்பிடத்தக்கது.

வேள்விப் பூசைகளைத் தொடர்ந்து ஆண்களும் பெண்களுமாக 108 கலசங்களை சுமந்து கொண்டு 108 லிங்கப்பெருமான்களுக்கும் நன்னீராட்டு செய்வதற்கு சிவன் மலையை நோக்கிச் சென்றனர். அங்கு கம்பீரமாகவும் ஒருங்கிணைந்த மாபெரும் சக்தியாகவும் காட்சி தந்த லிங்கப்பெருமான்களுக்கு ஒவ்வொருவரும் நன்னீராட்டு செய்து பிறவிப்பெரும்பயனுக்கு சக்தி சேர்த்தனர்.

தொடர்ந்து மாலை 7 00 மணிக்கு முதலாவது இரவுப் பூசைகள் ஆரம்பமானது. தொடந்து அதிகாலை வரையும் நான்கு இரவுப்பூசைகளும் சிறப்புற நடைபெற்றன.

மேற்படி மகாசிவனிரவு நிகழ்வுகள் அனைத்தும் தென்கயிலை ஆதீனம் நேரலை ஒளிபரப்புச் செய்து இலங்கையிலும் உலகெங்கிலும் உள்ள சிவனடியார்களை சிவன் மலைப் பக்கம் திருப்பி 108 லிங்கங்களை தரிசிக்க அரிய வாய்ப்பை வழங்கியமை ஆத்தமார்த்தமான செயற்பாடாகும்.

இவ்வேளையில் நேரலை ஒளிபரப்பிற்கு ஆதரவு நல்கிய பிரான்ஸ் அப்பா சிவனே நிறுவனத்தாருக்கும் , கனடா கொலம்பியா குறுப் நிறுவனத்தாருக்கும் , கொழும்பு வத்சலா ரேட் சென்ரர் நிறுவனத்தாருக்கும் அத்துடன் நேரலை ஒளிபரப்பை பொறுப்பேற்றுக்கொண்ட திரு.ஆனந்த ரமணனுக்கும் அவரது கமரா குழுவினருக்கும் தென்கயிலை ஆதீனம் தனது வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறது.

கடந்த மகாசிவனிரவு நிகழ்வுகள் நேரலை ஒளிபரப்பு செய்தமையால் இலங்கையில் 108 லிங்கப்பெருமான்கள் ஒருங்கிணைந்த மாபெரும் சக்தியாகத் திரண்டிருக்கும் மலையாக திருகோணமலை தென்கயிலை ஆதீனம் சிவன் மலை இடம் பிடித்துள்ளது. அன்றிலிருந்து இன்று வரை தொடர்ந்து பல பிரதேசங்களில் இருந்தும் சிவன் மலையை நோக்கி சிவபக்தர்கள் வருகை தந்து சிவலிங்கப்பெருமான்களை வழிபட்டுச் செல்ல ஆரம்பித்துள்ளனர்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாசி மாதமும் அதன் சிறப்புக்களும்

**மழை நீங்கி பகலவன் வெளிப்பட்டாலும் வானம் மேகத்தினால் மாசு படிந்திருப்பதால் மாசிஎன அழைக்கப்படுகின்றது.மாசூஇ மாசி எனப்படும்.மாசிபனி மூசி பெய்யும் என்பது பழமொழி. பனிக்குளிர் நிறைந்த மாசிமாதத்திலே சிவனாருக்கு சிறப்புத் தரும் இராத்திரியாம் சிவராத்திரி விரதமும் மாசிமகத் திருநாளும் அனுஷ்டிக்கப்படுகின்றன.**

## சிவராத்திரி

சக்திக்கு ஒன்பது இராத்திரி அது நவராத்திரி. சிவனுக்கு ஒரு இராத்திரி சிவராத்திரி. சிவனுடைய ராத்திரி, சிவமாணராத்திரி, சிவனை அர்ச்சிக்கும் இராத்திரி, சிவனுக்கு இன்பமான இராத்திரி எனபலவகைப் பொருளைத்தரும். இவ்விரதம் பற்றிய ஐதீகங்கள் பலவுள்ளன. ஒருசமயம் உமாதேவியார் விளையாட்டடாக சிவபெருமானுக்கு பின் புறமாக வந்து அவரது கண்களைப் பொத்திவிடுகிறார். எங்கும் பேரிருள் பரவியது. இந்நிலையில் தேவர்கள் சிவபூசை செய்த இரவே சிவராத்திரி எனக் கூறப்படுகின்றது. இன்னும் ஓர் இடத்தில் ஊழிக்கால முடிவில் உயிர்கள் எல்லாம் சிவனிடத்தே ஒடுங்கி உலகங்கள் அழிந்தன. அந்த இரவுப்பொழுதிலே உமாதேவியார் இறைவனை நோக்கி பிரார்த்தனை செய்தார்.அப்போது இறைவன் மீண்டும் உலகினையும் உயிரினையும் படைத்தார். உமையவள் இறைவனிடம் இவ்விரதம் இருப்போர் யாவராயினும் அனைத்து நலன்களையும் பெற்று மோட்சம் அடைய அருள்க என வேண்டினார். இறைவனும் அவ்வாறே அருளினார். செருக்குற்ற பிரமனும்,திருமாலும்



திருமதி.ஹேமலோஜினி குமரன்
அறநெறிப்பிரிவு – உதவிப் பணிப்பாளர்
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாமே பெரியவர் எனமோதிக் கொண்ட போது சிவன் சோதிப்பி ழம்பாக தோன்றி அதன் அடி, முடித் தேடிச் செய்தார். அடி, முடி தேடி தோற்ற இருவரும் தமது ஆணவ இருள் அகன்ற இரவே சிவராத்திரி எனவும் கூறப்படுகின்றது. ஆலகாலவிஷம் உண்ட சிவனுக்கு அந்த நஞ்சு கெடுதல் விளைவிக்காதிருக்க தேவர்கள் இரவு முழுவதும் கண்விழித்துப் பூசை செய் தனர்.அந்த இரவே சிவராத்திரி என அழைக்கப்பட்டது.

சிவராத்திரி ஐந்து வகைப்படும். ஒரு ஆண்டில் உள்ள 24 சதுர்த்தசி இரவு களிலும் செய்யப்படும ;சிவபூசை நித் திய சிவராத்திரி எனப்படும். ஐதமாத கிருஷ்ணபட்ச பிரதமைவரையுள்ள 13 பிரதமை நாட்களிலும் செய்யப்படும் பூஜை பட்சசிவராத்திரி எனப்படும். மாசிகிருஷ்ண சதுரத்;தசி,பங்குனிமு தல் திருதிகை,சித்திரைகிருஷ்ண அஷ் டகம் முதலியவை மாத சிவராத்திரி எனப்படும். திங்கட்கிழமை முழுவதும் அமாவாசையாக வந்தால் யோக சி வராத்திரி ஆகும். முடசிமாத தேய் பிறை சதுரத்;தசி நள்ளிரவில் சிவன் லிங்கமாக தோன்றிய இரவே மகாசிவ ராத்திரி எனப்படும்.

வருடம் முழுவதும் பல சிவராத்தி ரிகள் வந்தாலும் மாசிமாதம் வரும் தேய்பிறை சதுர்த்தசி நாளையே மகா சிவராத்திரி விரதமே. எல்லா சிவராத்தி ரிகளிலும் சிறப்பானது என புராணங் கள் கூறுகின்றன.இந்நாளின் மூன்றாம் காலத்தில் ஈசனை வழிபட்டால் எத்த கையப் பாவங்கள் செய்திருந்தாலும் அது நம்மைவிட்டு விலகிப் போகும் என்பது ஐதீகம்.

சிவராத்திரியின்; முதல் நாளன்று ஒருவேளை உணவு உண்டு சுகபோ கங்களை தவிர்த்து மனதார சிவனை நினைத்து வழிபடவேண்டும். சிவராத் திரியன்று அதிகாலையில் எழுந்து நீராடி, சூரியன் உதயத்தின் போது காலையில் செய்யவேண்டிய பூஜை களை செய்து முடித்து சிவாலயங்க ளுக்குச் சென்று தரிசனம் செய்யலாம். காலை முதலே சிவநாம ஜபம் செய்ய வேண்டும். முடலை மீண்டும் குளித்து வழிபடவேண்டும்.அன்றைய நாளில் நான்கு காலமும் பூஜைகளைச் செய் யவேண்டும்.தனியாகவீட்டில் ஷணிக (தற்காலிக)லிங்கம் கொண்டுவழிபா டுசெய்ய இயலாதவர்கள் ,ஆலயத்



துக்குச் சென்று நான்கு கால பூஜைக ளையும் கண்டு வணங்கலாம்.

சிவராத்திரி உபவாசம் என்பது நிய தி. உபவாசம் என்ற சொல்லுக்கு சமீ பமாக இருத்தல் என்பது பொருள். ஆகவே உடலாலும் மனதாலும் சி வசிந்தனையுடன் இருக்க வேண்டும். பகலில் தூங்கக் கூடாது. சிவசிந்தனை யுடன் கண்விழித்திருந்து நான்கு யாம வழிபாடு செய்ய வேண்டும். இரவு முழுவதும் சிவபுராண உபன்யாசம் ஒரு சில கோயில்களில் நடைபெறு கிறது. ஆதைக் கேட்கலாம் அல்லது வீட்டிலேயே தேவாரம், திருவாசகம், சிவபுராணம்,சிவ ஸ்தோத்திரங்கள் முதலானவற்றைப் படிப்பதோ அல் லது யாரையாவது படிக்கச் சொல்லி கேட்கலாம்.அமைதியாக சிவமந்திரங் களை சொல்லியும் தியானிக்கலாம். சிவாலயங்களில் நடைபெறும் நான் குயாம அபிசேக ஆராதனைகளுக்கு அவரவர் வசதிக்கேற்ப பொருள்களை கொடுத்து உதவவேண்டும். அடுத்த நாள் காலையில் தீர்த்தமாடி, சுவாமித ரிசனம் செய்து அடியார்களுடன் உண வருந்தி (பாரணைசெய்து) விரதத்தை நிறைவு செய்தல் வேண்டும். கைபேசி களில் விளையாடுவது, திரைப்படங் கள் பார்ப்பது, தொலைக்காட்சியில் பக்திபடம், பாடல்கள் போன்ற ஆன்மீ கநிகழ்ச்சிகள் என்றாலும் அதனையும் பார்த்தல் கூடாது.

ஒவ்வொரு காலத்துக்கும் வழிப டவேண்டிய மூர்த்தங்கள், பூஜைப் பொருள்கள், நைவேத்தியங்கள் ஆகி யனவற்றை ஆகமங்களில் வகுத்திருக் கிறார்கள். ஒவ்வொரு காலத்துக்கான பூஜை தரிசனத்துக்கும் ஒவ்வொரு விசேஷித்த பலன் உண்டு.

சிவபூஜை விதி தவறாமல், நான்கு சாமங்களிற்கும், சாமத்திற்கு ஒருமுறை யாகப் பூஜை செய்யவேண்டும்.

முதல் ஜாமத்தில் பால்,தயிர்,கோச லம்,கோமயம் என்னும் இவ்வைந்தும் கலந்தபஞ்சகவ்யத்தில் அபிஷேகம் செய்துவில்வமும் சாத்தி,தாமரைமல ரால் அர்ச்சிக்கவேண்டும்.அச்சமயம் பயத்தம் பருப்புசேர்ந்தபொங்கல் நிவேதித்து தூப தீபஆராதனைகள் செய்து, இருக்குவேதம் ஓதி இருகை கூப்பிஅர்க்கியம் கொடுத்து அஷ்டாங்க மாகவணங்கிவழிபடல் வேண்டும்.

இரண்டாம் ஜாமத்தில்பஞ்சாமிருதத் தால் அபிஷேகம் செய்துசந்தனத்து டன் தாமரைமலரும் சாத்திதுளசியால் அர்ச்சித்துபாயசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிவேதித்து யஜுர் வேதம் ஓதிவணங்கவேண்டும்.

மூன்றாம் ஜாமத்தில் தேனால் அபிஷேகம் செய்து,அரைத்தபச்சைக் கற்பூரத்துடன் சாதிமுல்லைமலர் சாத்தி,முக்கிளை கூடியவில்வதளத்தால் அர்ச்சித்துஎள்,அன்னம் நிவேதித்துசாம வேதம் ஓதிவழிபடல் வேண்டும்.

இவ்வாறுநான்கு ஜாமத்தும் நித்திரைநீங்கிப் பூசித்துமறுநாள் அதிகாலையில் புனிதநீராடிஅநுஷ்டானம் இயற்றிதமதுதீட்சாகுருவைத் தியானித்துதக்கவாறுதானம் கொடுத்து சூரியன் உதித்து ஆறு நாளிகைக்கும் பாரணைசெய்யவேண்டும்.இவ்வாறு 24 வருடம் விரதம் நோற்றுப் பின்



நான்காம் ஜாமத்தில் கருப்பஞ் சாற்றினால் அபிஷேகித்துஅரைத்தகுங்குமப் பூவுடன் நந்தியாவட்டைமலரும் சாத்திநீலோற்பலமலரால் அர்ச்சித்து சுத்தஅன்னம் நிவேதித்துஅதர்வண வேதம் ஓதிவழிபடல் வேண்டும்.

சுணீவராத்திரிவிரதத்தின் சிறப்பை உணர்த்தகதையொன்றுஉள்ளது. காட்டுக்குவேட்டைக்குச் சென்றவேடனை புலி துரத்தியது.பயத்தினால் ஓடியவேடன் ஒருமரத்தின் மேல் ஏறிக்கொண்டான்.புலியும் அம் அரத்தின் கீழ் அசையாதுநின்றது.தான் நித்திரைசெய்தால் கீழேவிழுந்துவிடுவேன் என்றபயத்தில் இரவுமுழுவதும் வேடன் நித்திரைகொள்ளாமல் அம் மரத்தில் உள்ள இலைகளைஒவ்வொன்றாய் ஒடித்துப் போட்டான்.காலையில் பார்த்தபோது புலியைக் காணவில்லை.அவன் இருந்த மரம் ஒருவில்வமரம்.அதன் அடியில் சிவலிங்கமொன்றுகாணப்பட்டது.முதல் நாள் இரவுசிவராத்திரிஎன்பதும் வேடனுக்குத் தெரியாது.அவனைஅறியாமல் அவன் ஒடித்துப் போட்டவில்வம் இலைஅர்ச்சனையானது.இதனால் அவன் சிவகதிஅடைந்தான்.அறியாமல் கண்விழித்துசிவலிங்கத்தின் மேல் வில்வம் இலைகளைபோட்டதற்கே வேடனுக்குசிவகதிகிடைத்ததுஎன்றால்,அறிந்துநாம் செய்யும் விரதத்தின் மகிமைஅளப்பெரியது.

கோதானம்,பூதானம்,சுவர்ணதானம் முதலியனகொடுத்துவிரதத்தைப் பூர்த்திசெய்வோர் சிவகதிசேர்வர்.

**மாசிமகம்**

மாசிமாதத்தில் மகநட்சத்திரம் பூரணையுடன் கூடிவரும் நாள் மாசிமகம் எனப்படும்.உமாதேவியார் மாசிமாதமகநட்சத்திரத்தில்தான் தட்சனின் மகள் தட்சாயினியாக இவதரித்தார் என்பதால் மிகவும் புண்ணியநாளகவும் பெண்களிற்குரியவிரதநாளாகவும் போற்றப்படுகின்றது.பாதாளத்திலிருந்தபூமியைவிஷ்ணு பெருமான் வராகஅவதாரமெடுத்துவெளிக்கொணர்ந்தநாளும் மாசிமகநாள் என்று கூறப்படுகின்றது.மாசிமகம் அன்றுபுண்ணியநதிகளில் நீராடல் மிகவிஷேசமாககருதப்படுகின்றது.



தமிழ் நாட்டில் பன்னிரண்டு ஆண்டுகளிற்கொருமுறைமகாமகம் என்றவிழாமிகவிஷேசமாககொண்டாடப்படுகின்றது.மாசிமகதினமன்று கும்பகோணத்திலுள்ளமகாமகுளத்தில் நீராடநாட்டின் பலபாகங்களிலிருந்தும் மக்கள் கும்பகோணத்திற்குவருவார்கள்.காசியில் பிறந்தோர் பாவம் கும்பகோணத்தில் போகும்.கும்பகோணத்தில் பிறந்தோர் பாவம் மகாமகத்தில் நீராடினால் போகும் என்றுபுராணங்கள் கூறுகின்றன.ஈரேழுபதினான்குலோகத்தில் வசிப்பவர்களும் இக் குளத்தில் நீராடவருவதாகவும் கங்கை,யமுனை,சரஸ்வதி,நர்மதை,சிந்து,காவேரி,கோதாவாரி,சரயூ,பொருநைஆகியநதிகளும் கன்னிகளாக இங்குவந்துதங்கள் பாவங்களைப் போக்கநீராடுகிறார்கள்.இக் குளத்தில் ஸ்நானம் செய்தால் கங்காதீரத்தில் நூறு வருடம் வசித்து மூன்றுகாலம் சங்கா ஸ்நானம் செய்த பலன் கிடைக்கும் என்றுசொல்லப்படுகின்றது.

இம் மாசிமக நன்நாளை கடலாட்டு விழாவாகவும் கொண்டாடப்பட்டு வருகின்றது. விக்கிரமசோழன் என்னும் அரசன் மாசிமகமன்று கடலாட்டுவிழா நிகழ்த்தி கடற்கரையில் ஒருமண்டபம் அமைத்து இறைவனை எழுந்தருளிவித்து மகிழ்ந்தான் என்ற செய்தியை கல்வெட்டில் காணப்படுகின்றது. சம்மந்தர் மாசி மகசிறப்பை பின்வருமாறு பாடுகின்றார்.

‘‘மடலார்ந்ததெங்கின் மயிலையார் மாசிக்
கடலாட்டுக் கண்டான் கபாலிச்சரமமர்ந்தான்
ஆடல் ஆணேறுஊரும் அடிகள் அடிபரவி
நடமாடல் காணாதேபோதியோபூம்பாவாய்’’

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் மேலான சமயம் சைவ சமயமே



**சென்ற மாத தொடர்ச்சி...**

**தமிழர்கள்** யார்? இவர்கள் எவ்விடத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள்? இவர்களின் தோற்றக்காலம் எது இவர்கள் தோன்றிய காலத்தில் இருந்து இன்றுவரை என்ன செய்திருக்கின்றார்கள் என்ற வினாக்களோடு இவற்றை ஆராய்ந்து பார்த்தல் நன்று.

இந்துதருமம் உலகிலேயே மிகப் பழையதும் மனிதர்கள் காலத்திற்கு முந்தையதும் என்றாலும், 'இந்து' என்ற பெயர் அண்மையதே. எப்படி இந்தியா எனும் பெயர் அண்மையதோ, அதேபோல் இந்து என்ற பெயரும் அண்மையதே. அண்மையதே தவிர, இந்து எனும் பெயர் அந்நியது அல்ல. பண்டைய பாரதநாட்டில், யோகி, யோகினி, பக்தன், சன்யாசி, சாம்கியவாதி, வேதாந்தினி, முனி, பண்டிதன், சுவாமி, சித்தன், சைவன், வைணவன், பௌத்தன் என்ற பெயர்கள் நிலவியிருந்தனவே தவிர இந்து என்ற பெயர் அப்போது இல்லை. ஆதியும் அந்தமும் இல்லா எல்லாருக்கும் உடமையான, சராசரத்தின் எல்லாப் பொருள்களும் கட்டுப்பட்டு செயல்படும் அறநெறிக்கு அண்டத்தின் ஒரு புள்ளியான பூலோகத்தில் குடியிருக்கும் மானிடர்கள் வைத்த பெயரே இந்து தர்மம்.




**கலாநிதி பொன் ஜெயரூபன்**
**விரிவுரையாளர்,**
**தேசிய கல்வி நிறுவகம்,**
**இலங்கை.**
PhD, ME.d, BA, PGDE(Merit),National Diploma in Teaching (Merit),Dip.in.Sp.Edu,Dip.in.HR
Lecturer / Project Leader
Department of Religions & Value Education
National Institute of Education
Maharagama


## ஈழத்தில் சைவசமயம்

ஈழத்தில் கி.மு முற்பட்ட காலத்திலேயே சைவசமயம் இருந்திருக்கின்றது. இலங்கை வரலாற்றைக் குறிப்பிடும் மகாவம்சம், தீபவம்சம் முதலியன தரும் செய்திகளின் அடிப்படையில் கி.மு 6ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே. பல சைவ ஆலயங்கள் இருந்தமையையும் பிராமணர்களின் செல்வாக்கு மேலோங்கி இருந்தமையையும் பண்டைய மன்னர்கள் சிவன் என்ற பெயரை தமது பெயரோடு இணைத்து முந்து சிவன், மூத்த சிவன் எனப் பெயர் வைத்தனர் என்பதும் தெளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகப் புலப்படுகின்றது. இந்த இடத்தில் திருவாதவூரடிகள் புராணம் குறிப்பிடும் செய்தி ஒன்றும் நோக்கத்தக்கது. ஈழ மன்னன் ஒருவனும் சில புத்த குருமாரும் சிதம்பரம் சென்று சைவசமயம் பொய் என்றும் புத்த சமயம் மெய் என்றும் முழங்க அவர்களோடு மாணிக்கவாசகர் வாதம் செய்து அவர்களை வெற்றி கண்டு எல்லோரையும் சைவர் ஆக்கினார். இச்செய்தியை திருவாதவூரடிகள் புராணத்தின் புத்தரை வாதில் வென்ற சருக்கம் சிறப்பாகக் குறிப்பிடுகின்றது. இவ்வாறு சைவனான மன்னன் இரண்டாம் சேனன் என இலங்கை வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுவர். இப்பகுதியில் வரும் பாடல்கள்

நீறும் ஐந்தெழுத்தும் புனைந்து சைவன் ஆயினன் என்றும், சைவ மன்னன் என்றும் புத்தரும் சைவம் ஆயினர் என்றும் குறிப்பிட்டு இருப்பது ஈழத்திலும் சைவசமயம் இருந்தமையைச் சான்று படுத்துகின்றது.

ஈழநாட்டின் பூர்விகக் குடிகள் இயக்கர் நாகர் இவர்கள் வழிபட்ட கடவுள் சிவன். திருக்கேதீஸ்வரம் இவர்களது பிரதான ஆலயம் இங்கு வாழ்ந்தவர்களான மாதுவட்டா, விசுவகர்மா,மயன்,குபேரன், இராவணன், மண்டோதரி அனைவரும் சிவபக்தர்கள்.

இலங்கையில் இராவணனின் மனைவியான மண்டோதரி மனதிலே தியானித்ததும் சிவபெருமான் காட்சி கொடுத்தார் என திருவாசகக் குயிற்பத்திலே மாணிக்கவாசகர்,

ஆர்கலிசூழ் தென்னிலங்கை யழகமர்வண்டோதரிக்கு
பேரருள் இன்பமளித்த பெருந்துறைமேய பிரான் என்றும்
திருவார்த்தையிலே,

''உந்து திரைக்கடலைக் கடந்தன்று
ஓங்கு மதிலிலங்கையதனிற்
பந்தனை மெல்விரலாட்கருளும்
பரிசறிவார் எம்பிரான்''

என்றும் பாடி இருப்பதும் ஞான சம்பந்தர்

''வண்டமரோதி மடந்தை பேணின
பண்டை இராவணன் பாடியுயீந்தன்''

என்றும் குறிப்பிடுகின்றார்

''இதிகாசங்களிலே வருகின்ற முக்கிய பாத்திரம்

இராவணனும் சகோதரர்களும் இவர்களுக்கு அவர்களது பெற்றோர்கள் முறையே

| | | |
|---|---|---|
| இராவணனுக்கு | - | சிவதாசன் |
| கும்பகர்ணன் | - | பரமன் |
| விபீடன் | - | பசுபதி |
| சூர்ப்பனகை | - | உமையம்மை |

எனவே பெயரிட்டனர் என அகத்தியர் இலங்கை என்ற நூலில், திரு.வ நாகநாதர் அவர்கள் கூறியிருப்பது நோக்கத்தக்கது.

போர்த்துக்கேய வரலாற்றாசிரியரான குவிறோஸ் என்பவர் தான் எழுதிய இலங்கைச் சரித்திரம் பற்றிய நூலில் கி.மு 1300 ஆம் ஆண்டில் திருக்கோணேஸ்வரம் கட்டப்பட்டதற்கான கல்வெட்டு உண்டு என்கின்றார்.

விஜயன் இலங்கைக்கு வருவதற்கு முன்னரும் வந்ததன் பின்னரும் இந்த நாட்டில் சைவசமயமே செழிப்புற்று இருந்தது என வண. வலபொல இரா குல என்பவர் தனது இலங்கையில் பௌத்த வரலாறு என்ற நூலில் குறிப்பிடுகின்றார்.

திரு.ஜே.டபிள்யூ ரெனற் என்பவர் எழுதிய இலங்கைச் சரித்திர நூலில் இலங்கையில் ஆதியில் குடியேறியவர்கள் சைவர்களே எனக் குறிப்பிடுகின்றார்.

சேர் வில்லியம் ஜோன்ஸ் என்பவர் எமது எண்ணத்துக்கு எட்டாத காலந்தொடக்கம் ஈழத்தில் சைவசமய மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள் எனக் குறிப்பிடுகின்றார். விசயன் இலங்கைக்கு வந்து பழைய சிவாலயங்களைத் திருத்தியதோடு புதிய ஆலயங்களை அமைத்தான் என யாழ் வைபவமாலை குறிப்பிடுவதும். உருகுணைப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு கல்வெட்டு சிவநகர் என்ற பெயரைக் குறிப்பிடுவதில் இருந்தும் ஈழத்தில் புராதமான சமயம் சைவம் என்பது தெளிவாகின்றது.



அனுராதபுர காலத்துக்கு உரியவை என கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்கள், சிவ உருவங்கள் ஆலயங்கள் என்பனவும், பொலனறுவைக் காலத்துக்குரிய சோழர் கலைப்பாணியும் கல்வெட்டுக்களும் மலையகத்தில் நிலவிய நாயக்கர் அரசும். குளக்கோட்டன் உக்கிர சிங்கன் முதலிய மன்னர்களின் ஆட்சியும் யாழ்ப்பாணத்தில் 4 நூற்றாண்டுகளாக இருந்த தமிழ் மன்னர்களின் ஆட்சியும்,ஈழத்தில் சைவசமயம் புராதன காலத்தில் இருந்தமையைக் காட்டுகின்றது.

ஈழத்தின் சைவத்தின் தொன்மையைக் கருதியே திருமூலர் சிவபூமி என அழைத்தார் போலும் 19ஆம் நூற்றாண்டில் சைவசமயத்திற்கு தொண்டாற்றிய ஆறுமுக நாவலரை சைவத்தின் காவலன் என்றும் சைவப்பாதுகாவலன் என்றும் சைவத்தின் தந்தை எனவும் போற்றுவதில் இருந்தும்

இன்றுவரை ஈழத்து தமிழ் மக்கள் மத்தியில் சைவபோசனம், சைவப்பரம்பரை சைவர்கள், சைவமாப்பிளை, சைவக் குருக்கள், சைவப்பாடசாலை, சைவச் சுடலை, சைவக்கோயில், சைவசமயம் சிவகோத்திரம், சிவாலயம் முதலிய சொற்களும், தமிழர் அல்லாத ஏனையவர்கள் தென் இலங்கைப் பகுதியில் இருக்கும் தமிழரை அழைக்கும் இடத்து சைவர் என அழைப்பதும் வழக்கமாக இருக்கின்றது. இதில் இருந்து சைவ மரபில் இருந்து எம்மக்கள் இன்னும் மாறவில்லை என்பது தெளிவாகின்றது.

எனவே ஈழத்து தமிழ் மக்களின் சமய வாழ்வியல் தொடர்பாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுத்து நோக்கும் இடத்து ஈழத்தில் புராதன காலந்தொடக்கம் இருந்து வந்தது சைவசமயம் என்பது மிகவும் ஆணித்தரமாக குறிப்பிடமுடிகின்றது.

## இந்து மதம்

இந்து மதம் என்றால் என்ன இந்துமதம் எப்போது தோன்றியது. இந்து மதம் எனப் பெயர் வைத்தவர்கள் யார். இந்துக்கள் என்போர் யார், இந்து என்பது ஒரு மதமா அல்லது மதப்பிரிவா எனப் பல வினாக்கள் எம்மத்தியில் எழுகின்றன. இந்து மதம் என்பதை பிரித்து எழுதினால் இந்து + மதம் என பிரிபடும். இந்து என்பது வேறு சொல் மதம்என்பது வேறு சொல். இந்து என்ற சொல் எந்த அகராதியிலும் சமயம் ஃ மதம் என்ற பொருளில் வரவில்லை. இந்து என்பது சந்திரன், மிருகசீரிட நட்சத்திரம், கரடி, கற்பூரமரம், கௌரி பாடானம் என்னும் கருத்துக்களிலே வருகின்றது. இப்படி வரும் இந்து என்பதோடு மதம் என்ற சொல்லைச் சேர்த்துப் புனையப்பட்டதே இந்து மதமாகும். இம்மதப்பிரிவுக்குச் சைவசமயத்தைப் போல புராதனத் தன்மையோ வரலாற்று முக்கியத்துவங்களோ இல்லை.

கி.பி 10ஆம் நூற்றாண்டின் பின் வட இந்தியாவில் இஸ்லாமியர்களும், ஆங்கிலேயர்களும் படை எடுத்து தமது ஆதிக்கத்தை நிலை நாட்டிய பின்னரே இந்து மதம் என சொற்பிரயோகம் தோற்றம் பெற்றது.

வட இந்தியாவிலே தோற்றம் பெற்ற வேதங்களிலும் சரி, இதிகாசங்களிலும் சரி, புராணங்கள், உபநிடதங்கள், ஆகமங்கள் என்பனவற்றிலும் சரி இந்து மதம் என்ற சொற்பிரயோகமோ அல்லது இந்து என்பது ஒரு மதம் என்றோ சொல்லப்படவில்லை.

இந்து என்பது ஹிந்து என்ற சொல்லின் திரிபு ஹிந்து என்பது ஹிந்தி என்ற மொழியில் இருந்து பிறந்ததென்பர். வட இந்தியாவில் சமஸ்கிருதமொழி வலுவிழந்து போக வந்த புதிய ஹிந்தி வட இந்தியாவிற்குள் படை எடுத்து வந்த அந்நியர்கள் ஹிந்தி மொழி பேசிய நாட்டை ஹிந்தி என அழைத்து அதுமருவி இந்தி எனப் பெயர் பெற்று இந்து என வந்தது என்பர் ஒரு சாரார்.

இந்தியாவின் வட மேற்கே பாயும் நதியின் பெயர் சிந்துநதி. சிந்துநதியின் பெயரின் அடிச்சொல் சிந்து. (சிந்து என்பது, ஆறு, இருவாட்சி மரம், கடல், 56 நாடுகளில் ஒன்று, முச்சீரடி, யானை, வரிக்கூத்து, 18 மொழிகளில் ஒன்று எனப் பல பொருள்படும்.) இந்தியாவின் மீது மேற்கொள்ளப்பட்ட படை எடுப்புக்கள் சிந்து நதியைக் கடந்தே வந்தன. சிந்து நதியைக் கடந்து வந்தவர்கள் சிந்து நாடு என நாட்டையும் இம்மக்கள் பின்பற்றிய மதக் கொள்கையை சிந்து மதம் எனவும் முதலில் அழைத்தனர். அது அவர்களால் உச்சரிக்க முடியாது போக இந்து நாடு எனச் சிந்து நாட்டையும் இந்து மதம் என சிந்து மதத்தையும் உரைத்தனர். என்கின்றனர் இன்னொரு சாரார்.

சிவனுக்கு இந்து சிகாமணி, இந்து சேகரன் என்ற பெயர்கள் உண்டு. இதனால் சி



வன் இந்து மதம் சம்பந்தமானவர் என்பர் சிலர். இங்கு இந்து என்பது சமயத்தை அல்லாது சந்திரனைக் குறிப்பிடுகின்றது என்பதை நோக்க வேண்டும். சந்திரனை இந்து என இந்தின் இளம் பிறை என்று திருமந்திரமும்,இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த கூத்து என்று பெரியபுராணமும்,இந்து மௌலி; அன்நான் என்று கம்பராமாயணமும் குறிப்பிடுவதை நோக்குமிடத்து இவை சந்திரனை முடியில் சூடிய சிவன் என்னும் பொருளில் வந்துள்ளன. அந்த வகையிலே தான் இந்து சிகாமணி என்பதும், இந்து சேகரன் என்பதும் இந்துவான சந்திரனைச் சூடியமையால் ஏற்பட்ட பெயர்களே ஒழிய மதத்தால் வந்த பெயர்கள் அன்று.

தமிழகத்தை சேர்ந்த திராவிட பற்றாளர்கள். இந்து என்பது எமது நாடும் அல்ல. எமது மதமும் அல்ல எமது மொழியுமல்ல. இவை திட்டமிட்டு எமது பண்பாட்டை அழிப்பதற்காக எம்மீது திணிக்கப்பட்டவை என்பர்.

டி.சி.குகசாமி என்ற தமிழ் அறிஞர் 1799 இல் வில்லியம் ஜோர்ஜ் என்பவராலே இந்திய சட்டம், இந்திய மதம் என்பன தோற்றுவிக்கப்பட்டன என்றும் இந்திய மதம் என்பதே இந்து மதம் எனப் பெயர் பெற்றது என்கின்றார்.

காஞ்சிப் பெரியவர் சங்கராச்சாரியார் தெய்வத்தின் குரல் என்ற நூலின் 266 ஆம் பக்கத்தில் வெள்ளைக்காரன் நமக்கு இந்து என பெயரிட்டான். அதனால் நாம் பிழைத்தோம் என்கின்றார்.

இந்து நாகரிகம் என்ற நூலை எழுதிய வித்துவான் சொக்கலிங்கம் அவர்கள் இந்துமதம் என்பது தமிழ்ச்சொல் அல்ல என்றும் அது பாரசீகர்களால் இந்திய மதங்களுக்கு சொல்லப்பட்டது என்றும் குறிப்பிடுவர்.

பாரசீகர்கள் அதாவது ஈரான் ஈரானியர்கள் இந்தியாவை இந்துகுஷ் என்றனர். அவர்களும் அவர்களின் பின் வந்த ஆங்கிலேயர்களும் தமது சமயங்களைப் பரப்ப பல்வேறுபட்ட முயற்சிகளில் ஈடுபட்டனர். அக்கால வட இந்தியாவில் சைவ சமயம் பெருந்தொகையான மக்களால் பின்பற்றப்பட்டு இருந்தாலும் சிறுபான்மையாக சமணம், பௌத்தம், வைணவம், காபாலிகம், பைரவம் முதலிய பல மதங்களும் செல்வாக்குப் பெற்றிருந்தன. இந்தியா வந்தஇஸ்லாமியர் மற்றும் ஐரோப்பியர்கள் தமது சமயங்களைப் பின்பற்றாது இந்திய நாட்டில் ஏற்கனவே இருந்த இச்சமயங்களைப் பின்பற்றியோரை இந்துக்கள் என அழைத்தனர். அதனால் பெருந்தொகையானவர்கள் சைவர்கள் என்பதால் சைவசமயம் இந்து மதம் எனப் பெயர் பெற்றிருக்கலாம்.

இஸ்லாமியருக்கு முன் வட இந்தியாவை அரசாண்ட ஹர்சவர்த்தனன் சைவமயத்தவன் சிவனை வழிபட்டதால் நீலலோகிதன் என்ற சிறப்பு நாமத்தையும் உடையவன். இவன் காலம் கி.பி 6ஆம் நூற்றாண்டு இவரின் பின்னர் ஸ்லாமியர்களின் படை எடுப்புக்கள் பல நடைபெற்றன. இதன் பின் வட இந்தியாவில் அரசாட்சி செய்த அரச பரம்பரையினர் இரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜபுத்திரர் என்ற இனத்தவர்கள். இவர்களை இஸ்லாமியர்கள் இந்து மன்னர்கள் என அழைத்தனர்.

வட இந்திய மன்னர்களால் வெட்டப்பட்ட கல்வெட்டுக்களில் இந்து மதம் என்ற சொற்பதம் இல்லை அசோகனைக் குறிக்கும் கல்வெட்டுக்கள் முன்னர் இவன் சைவன் எனவும் பின்னர் பௌத் தன் என்றுமே குறிப்பிடுகின்றன. குப்த மன்னர்களைக் குறிக்கும்



கல்வெட்டுக்கள் இவர்கள் சைவர்கள் அல்லது வைணவர்கள் என்றே குறிப்பிடுகின்றன. ஆனால் கி.பி 15ஆம் நூற்றாண்டுக்குப் பின் எழுந்த இலக்கியங்களும் குறிப்புக்களுமே இந்துமதம் என்ற சொற்பிரயோகத்தைக் குறிப்பிடுகின்றன.

கி.பி 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இராஜாராம் மோகன்ராய் அவர்கள் சீர்திருத்த இயக்கம் ஒன்றை ஆரம்பித்து இந்தியாவில் இருக்கின்ற எல்லா மதத்தினதும் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய முற்பட்டார் அவரே இந்துசமயம் என சைவத்தை குறிப்பிடும் முதல் இந்தியர் என நான் கருதுகின்றேன்.

நவீன மொழியிலாளர்கள் உலகில் தோன்றிய மொழிகளை சில மொழிக் குடும்பங்களாக வகுத்துள்ளார்கள் அதில் ஒன்று இந்தோ ஐரோப்பிய மொழிக்குடும்பம் என்பது. இதில் இந்தோ என்பது வட இந்தியாவில் பேசப்பட்ட சமஸ்கிருதம் ஹிந்தி முதலான வையையும் ஐரோப்பிய என்பது ஐரோப்பிய நாடுகளில் பேசப் பட்ட மொழிகளையும் இணைத்து குறிப்பிடுகின்றன. இந்த இடத் தில் நோக்க வேண்டி உள்ளது ஒன்று உண்டு. வட இந்தியாவில் பேசிய மொழிகள் என்பதால் வட இந்தியாவில் பேசிய மொழிகள் எல்லாவற்றையும் இணைத்தே இந்தோ மொழி என்கின்றனர். அதில் சமஸ்கிருதம் பேசியவர் ஒரு சாரர், பாளி மொழி பேசிய வர் ஒரு சாரார். குஜராத்திய மொழி பேசியவர் ஒரு சாரர். வங்க மொழி பேசியவர் ஒரு சாரார் என பல பிரிவுகள் உண்டு. அதே போலத்தான் இந்தியாவில் பின்பற்றப்பட்ட மதம் என இந்து மதத்தை இஸ்லாமியர்களும் ஐரோப்பியர்களும் அறிமுகப்படுத்தி யதும் அதற்குள் சைவம், சமணம், வைணவம் என பல மதங்களும் உள்ளடங்கும்.

இந்தோ என்பதற்குள் ஏன் தமிழ்மொழியும் அது சார்ந்த திராவிட மொழிகளும் உள்ளடங்கவில்லை. அவையும் இந்திய மொழிகள் தானே. என்ற கேள்வி எழுகின்றது. இதற்கு விடை காணில் வட இந்தியாவில் இருந்த இந்து என்று மொழி, மதம் என்ப வற்றைக் குறிக்கும் சொற்பிரயோகம் கி.பி 1800இல் அல்லது அதற்கு சற்று பின் ஃ முன் தான் தமிழகத்திற்கு வந்து சேர்ந் திருக்க வேண்டும். அதற்கு முன்னரே கால்ட்வெல் தமிழ்மொ ழியை திராவிட மொழி என்றும் தமிழர் வாழ்ந்த பகுதியை திராவிட நாடு எனவும் தமிழர் பின்பற்றிய சமயத்தை திரா விட சமயம் என்றும் நிறுவிவிட்டார். மொழியில் இந்தோ என்பதில் சேராத தமிழர்ள் ஏன் சமயம் என்பதில் சேர வேண் டும்? தனித்துவமான மொழி கொண்டது போல தனித்துவ மான சமயத்தைக் கொண்ட தமிழ் மக்கள் இந்துக்கள் அல்ல சைவர்களே என்பது முடிவாகின்றது.

தமிழை வளர்த்த சமயங்கள் என்ற வரிசையில் சைவம், வைணவம், சமணம், பௌத்தம் என்ற மதங்கள் உள்ளடங்கும். இதில் நீங்கள் நினைக்கக்கூடும் இவை எல்லாம் சேர்ந்தமதம் தானே இந்து மதம் என முன்னர் குறிப்பிட்டீர்கள் ஆகையால் தமி ழர்களை இந்துக்கள் என்று சொல்லலாம் தானே.

இது எப்படி என்றால், தமிழில் எழுந்த சமண பௌத்தம் சார்ந்த இலக்கியங்கள் எல்லாம் தம் சமயக் கருத்தை கூறமுற் படும் இடத்து, எதிர்பார்த்தோ எதிர்பாராதோ சைவசமயக் கருத்துக்களையே குறிப்பிடுகின்றன. சமணரான இளங்கோ வடிகள் இயற்றிய காப்பியம் சிலப்பதிகாரம். இதில் சைவச மயக் கதைகள் ஏராளமாக வந்து சிவபெருமான் ஆடிய 11 வகையான நடனங்களையும் குறிப்பிட்டு சைவ வாழ்வி யலை நிரூபிக்கின்றார்.

பௌத்தரான மதுரைக் கூல வாணிகர் சீத்தலைச் சாத்தனார். தான் இயற்றிய மணிமேகலையில் பௌத்த மத அறக்கருத்துக்க ளைச் சைவப்பண்பாட்டுக்கு அமைய குறிப்பிடுகின்றார். ஆங்கில நாட்டில் இருந்து இங்கு வந்த அறிஞர்கள் எல்லாரும் சைவச்சா யல் கொண்ட கிறிஸ்தவ இலக்கியங்களையே பாடி உள்ளனர். இங்கு நடைபெறும் பிறமதம் சார்ந்த விழாக்களுக்கும் சைவசம யத்தவர்களின் விழாக்களுக்கும் நெருக்கமான தொடர்பு இருக்கின் றது. ஆகையால் சைவம் தவிர்ந்த ஏனைய மதங்கள் வட இந்தியா வில் இருந்து தமிழ் மக்கள் வாழ்வியலில் இணைந்தனவே அன்றி அவை தமிழ் மக்களின் பூர்விக மதங்கள் அல்ல என்பது முடிந்த முடிபு.

இன்று வரை சைவசமயத்தின் முழுமுதற் கடவுள் சிவபெருமான் எனக் குறிப்பிடும் நாம் இந்து மதத்தின் முழுமுதற்கடவுள் சிவன் என்று குறிப்பிடுவதில்லை. அப்படியாயின் இந்து மதத்தின் முழுமு தற் கடவுள் யார் - நீ யாதொரு தெய்வங்கொண்டாலும் முடிவு மாதொருபாகன் எனக் கொள்ளும் சைவ சித்தாந்த தத்துவத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கும் நாம். சைவசமயத்தின் முழுமுதற்கடவுளை ஏன் இந்து மதத்தின் முழுமுதற்கடவுள் என சொல்ல வேண்டும் என்பது என்னிடம் எழும் வினா. இது காலத்தில் தேவை.

## முடிவுரை

பண்டைய தமிழ் மக்கள் மத்தியில் பல சமயக்கோட்பாடுகள் நிலவி இருந்தன. இன்றைய தமிழர் சமண பௌத்த ஜைன மதத் தாக்கங்களில் இருந்து விடுபட்டு, ஸ்லாம், கிறிஸ்தவம் முதலிய மதங்களைப் பின்பற்றுகின்றார்கள். இதில் பாருங்கள் கிறிஸ்தவ சமயத்தைப் பின்பற்றுகின்ற தமிழர்கள் சமயத்தின் பெயரால் கிறிஸ்தவர்கள் என அழைக்கப்படுகின்றார்கள். அவர்களின் பல சமயப் பிரிவுகளும் ஒன்று சேர்ந்த ஐரோப்பிய மதம் என்ற சொற்பெயரால் அழைக்கப்படவில்லை.

அதேபோல தமிழ்பேசும் ஸ்லாமியர்கள் சமயத்தின் பெயரால் ஸ்லாமியர்கள் என்றே அழைக்கப்படுகின்றார்கள் அவர்கள் அராபிய மதத்தவர் என்றோ அல்லது வேறு பெயர்கள் சொல்லியோ அழைக்கப்படவில்லை. அதே போல சிங்கள மொழி பேசுகின்ற பௌத்த மக்கள் மதத்தின் பெயரால் பௌத்தர்கள் என்றே அழைக்கப்படுகின்றார்கள். அவர்கள் எல்லாம் தமது தாய்ச் சமயத்தின் பெயரால் அழைக்கப்பட நாம் மட்டும் ஏன் எமது தாய்ச் சமயமான சைவசமயம் என்ற பெயரை விட்டு இந்துக்கள் என்ற பெயரைக் கொள்ள வேண்டும்.

இந்து மதம் என்ற அடைக்குள் உட்படுத்தப்பட்ட இந்திய மதங்களில் தமிழர் மத்தியில் இன்று சைவசமயம் மட்டுமே இருக்கின்றது. சைவசமய ஆலயங்களே புகழ்பூத்து விளங்குகின்றன. சைவப்பண்டிகைகளே கொண்டாடப்படுகின்றன. ஆகையால் இந்து என்ற பதத்துக்குள் அடங்கும் எல்லாவற்றையும் கைவிட்டு நிற்கும் தமிழர்களை ஏன் இந்துக்கள் என்று கூற வேண்டும் தமிழர்கள் இந்துக்கள் அல்ல அவர்கள் சைவர்களே எனக் கூறுவதோடு,

இவற்றை தக்கபடி நிறுவுவதற்கு சான்றுகளாக இருக்கின்றன. ஆகையால் தமிழ் மக்கள் சைவர்கள் என்பது நின்று நிலை பெற வேண்டும்.

சனாதனதர்மம், சைவசமயம் என்பனவே தமிழரின் சமயமான சைவத்தின் பெயர்கள். இந்து மதம் என்பதற்குள் தமிழர் மட்டுமன்றி இந்திய நாட்டில் இருக்கும் அனைவரும் உள்வேண்டப்படுவர். அமெரிக்க நாட்டவர் இந்தியா மீது படை எடுத்து வந்தால் இப்போது இந்திய மதமான இந்து மதத்தில் அடங்காத ஸ்லாமியர்களையும் ஐரோப்பிய கிறிஸ்தவர்களையும் இந்து மதத்தவர்களாகவே கருதுவார்களே ஒழிய தனி மதத்தவராக கருதார். காரணம் அவை இந்தியாவில் ஐந்து நூற்றாண்டுக்கு மேல் நிலைபெற்று இருக்கின்ற மதங்கள்.




எனவே இந்து மதம் என்பது தனக்கென்ற ஒரு வரையறையை கொள்ளாது தன்னோடு வந்து சேர்வனவற்றை சேர்க்கும் தன்மையது. காலத்துக்குக் காலம் மாறும் இயல்புடையது. பழமை புராதனம் என்பன இல்லாதது பலராலும் தொகுக்கப்பட்டது.

சைவசமயம் என்பது தொடக்கமும் முடிவும் இல்லாதது அநாதியானது ஒப்பற்றது. வாழ்வதற்கு நல்வழிகாட்டுவது தனக்கென்ற தனித்துவமான தலைவனைக் கொண்டது. எனவே சிவவழிபாடு தமிழ் மக்களின் புராதன வழிபாடு இற்றை வரை தமிழ் மக்கள் அவ்வழிபாட்டை கைவிடாது பேணி வருவதாலும், திருவாதிரை முதலிய சிவ விரத நாட்களை சிறப்பு நாட்களாக கொண்டாடுவதாலும் தமிழ் மக்கள் சைவர்களே. தமிழர்கள் சைவசமயத்தவர்களே என்பதை தெளிவாகக் கூறிக் கொள்ளமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து சித்தர் பரம்பரையில் (தேரடிச்சித்தர்) செல்லப்பா சுவாமிகள்






துன்னையூர்
சித்தாந்தரத்தினம்
த.தயாராபரன்

## அறிமுகம்

**நீடித்த** தியானத்தின் மூலமும் இறைவழிபாட்டின் மூலமும் மக்கள் பணி மூலமும் ஞானத்தையும் அருள்வாக்கினையும் பெற்றுச் சித்துக்கள் புரிபவர்கள் சித்தர்கள் எனப் போற்றப்படுகின்றனர்.

சித்தர் கடவுளைக் கண்டு தெளிந்தவர்களைக் கருதப்படுகின்றனர். சித்தர்கள் பதிணென் சித்தர்கள் என்று கூறப்பட்டாலும் பலநூற்றுக்கணக்கான சித்தர்கள் இருந்தனர் என்பதே உண்மையானதாகும்.

அந்த வகையில் அற்புதங்களையும் சித்துக்களையும் செய்த பலநூற்றுக்கணக்கான சித்தர்களையும் ஞானிகளையும் யோகிகளையும் தமிழகமும் ஈழத்தமிழகமும் காலங்காலமாக பெற்றுவருகின்றன. பக்தர்களுக்கும் சித்தர்களுக்கும் உள்ளவேறுபாடு பற்றிய பாடல் ஒன்று பின்வருமாறு குறிப்பிடுகின்றது.


கடவுளை காணமுயல்கிறவர்கள் பக்தர்கள் கடவுளைக் கண்டு தெளிந்தவர்கள் சித்தர்கள். எனவே பிறவிப் பெருங்கடலில் சித்தி அடைந்தவர்கள் பொதுவாக சித்தர்கள் என அமைக்கப்படுகின்றனர். மேலும் சித்தர்கள் சாதி, பிரதேசம், பிறப்பு, சமயம், இனம், பால், அந்தஸ்து போன்றவற்றிற்கு அற்பாற்பட்ட ஒருநிலையில் வாழ்ந்த போதிலும் மெய்பொருளைக் கண்டறிவதே இவர்களின் குறிக்கோளாக விளங்கியது.

தின்னப் பொசிப்பு உள்ளவர்களுக்கு திண்ணக் கப்பிலை தேனடா என்பது செல்லப்பா சுவாமிகளின் அருள்வாக்கில் இருந்து வந்த விடயம். பத்தொன்பதாம் நூற்றாண்டில் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த வல்லிபுரம் எனும் வேளாளன் நல்லூரரைச் சேர்ந்த பொன்னம்மா என்னும் பெண்ணை திருமணம் செய்து வயலில் சிறுகுடிசை அமைத்து வேளாண்மை செய்து சீரும் சிறப்புமாக வாழ்ந்து வந்தனர். அவர்களின் தவப்பயனாக இரு ஆண்பிள்ளைகளும் இரு பெண்பிள்ளைகளும் பிறந்தனர். அவர்களின் ஒருவன் தான் செல்லப்பா சுவாமிகள். செல்லப்பா கல்வியை கசடறக் கற்று அரசாங்க உத்தியோகம் பார்த்தார். நல்லூர் ஆலயமுன் தென்கிழக்கு மூலையில் இவர்களது குடிசை இருந்தபடியால் நல்லூர் கந்தசுவாமியரை தரிசிக்கின்ற சந்தர்ப்பம் இவருக்குண்டானது. அடங்கன்முறை, திருவாசகம், வராகிமாலை, பன்னிருதிருமுறை, கிணிப்பாட்டு, முருகன் பாடல்கள், பாராயணத்தில் செல்லப்பா சுவாமிகள் ஈடுபடலானார். அவரது போக்கு மாறியது. உத்தியோகத்தை தூக்கியெறிந்தார்.விசர்க்கோலம் பூண்டு தன்னைக் காட்டிக் கொள்ளாமல் பெருஞானியானார். பரம்பொருளை நிர்க்குணப்பிரமமாய் அனுபவிக்கும் நிலை சாதனையால் உயர்ந்த படியால் உள்ளவர்களிற்கே அமையும். கி.பி 1910ம் ஆண்டில் நல்லைக்கந்தன் ஆலயத்து நேரடியில் யோகர்சுவாமிக்கு தீட்சை உப தேசம் செய்தருளினார்.

ஊரிலான் குணங்குறியிலான் செயலினானுரைக்கும் பேரிலாருமுன்னிலையான் பின்னியலான் பிறிதோர் சாளிவான் வரல் போக்கினான். மேலோன் தனக்கு நேரிலோனுயிர்க் கடவுள் யென்னுள்ளே நின்றான்.

என்ற கந்தபுராணப் பாடல் நோக்குதற்குரியன. உண்மையான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஞானி தன்னைக் காட்டிக்கொள்ளாமல் வாழ்ந்து பின் தனது சீடன் மூலம் உலகிற்குக் காட்டிக் கொடள்வார். அதேபோல செல்லப்பா சுவாமிகளும் சீடர் யோகர்சுவாமிகள் மூலம் தன்னை உலகிற்கு எடுத்துக் காட்டினார்.

யோகர் சுவாமிகள் தமது குருநாதரின் அகத்தோற்றத்தையும் குணாதிசயங்களையும் பின்வருமாறு நற்சிந்தனையில் கூறுகின்றார். சிரித்து நல்லூர் தெரிவிர்திரிபவர் வெறித்த பார்வையில் வேடம் விரும்பியவர். கறுத்தமேனியர் கந்தைத்துணியினை பாதிச்சாமத்தின் பின்பள்ளி கொள்பவர் வீதியில் செல்லும் வீணைர்கள் தங்கையை போதிக்கும் படி வேண்டியே கோலமொன்றும் விரும்பிலன்கும்பிடச் சாலவன்புடன் நான் வரும் பக்தரைக்காலனெனக்கருத்துடன் கருத்து டன் சீறுவான்.

உல்லாசமான நடையுடையோனே பித்தரென்று பிறர் பேசும் திறந்தான் புகழ்ச்சியும் இகழ்ச்சியும் ஒன்றாக கொள்பவன் சிங்காரமான நடையோடு சிரிப்பினையுடான் ஆரறிவாரென்று அடிக்கடி செ ால்லுவான் தேரடிப்படியில் சிங்கரமாயிக்கிடப்பான் பேரறிவாளன் எனப்பிறறெவருமோ வறியார் பித்தனென்றும் கோள் பேசுவார் ஏசு வார். சாதி சமயம் எனும் சங்கடத்துக்குள்ளாகான் சேதியொன்றும் சொல்வதகில்வான் சின்னத்தங்கம் சித்தப் பிரமையொன்பார் (எல்லோரும்) நீதி அநீதி என்னும் நிலைமையொன்றும் இல்லாதான் மாதிரிகள் ஒன்றும் செய்யான். சின்னத்தங்கம் (மத்தனை போல் திரிவிளையாடி) ஆறுதலாய்யிருமென்பான் ஆணவத்தைத் நீ க்குமென்பவன் மாறுபாடாய் பேசிடுவேன்- சின்னத்தங்கம் மதியிழந்தான் என்பாரடி சிவபெருமானே செல்லப்பராக வந்து நல்லூரில் ஆன்மாக்களுக்கு அருள் செய்வதற்காக நடனமாடினார் என்பதனை வரும்பாடலில் அறியமுடிகின்றது. காட்டிலே காளியுடன் கூத்தாடும் கண்ணுதலோன் நாட்டிலே ஞானகுருவாய் நயந்து வ ந்து மீட்டினவன் விரையான் மாரடியை மாட்சி மைசேர் நல்லைத்தேர் மாணடியிற்கண்டேனே.

மாலயனுந்தேடியறியா மலரடிகள் சோலை வருட குருவாய்க் குவ லயத்திலே போந்து சாலப் பெரும்பகையைத் தாணீக்கியான்டானை ஞாலம் நல்லைத் தேரடியிற் கண்டேன். இவ்வாறு பெருமை வாய்ந்த செல்லப்பா சுவாமிகளின் குடிசை

மா,பலா, வாழை, பலாமரம் சூழ்ந்த சூழலில் இருந்தன. அந்தச்சூழலில் குடிசையில் வாழ்ந்த சுவாமிகளிற்கு பணிவிடை செய்யும் பாக்கியம் அவரின் உறவினரான செல்லப்பா சுவாமிகளின் பேரன்மார்களின் தந்தையாருக்கு கிடைத்தது. சுவாமிகள் அவரை சிறு, சிறு வேலைகளிற்கு ஏவுவார் உதாரணமாக வைத்திய சம்பந்தமான குடிநீர் மூலிகைகள் நீண்டதூரம் சென்று எடுத்துவா என்பார். அதனை சிலவேளை வேண்டாம் கொண்டு போ என்று கூறுவாராம். கடைசி நேரத்தில் சமாதியாக இரண்டு நாட்களுக்கு முன்னர் இங்கேவா எனக்கு சுகமில்லை உடம்பெல்லாம் நோகுது பரியாரியார் வீடு களிற்கு செல்வதில் பயனில்லை நான் வைத்தியம் சொல்கிறேன் நீ செய்வியா? என்று கேட்டாராம். தந்தையார் அதற்கு உடன்படவே வளவிலுள்ள பொச்சுமட்டைகளை பொறுக்கி தணலை மூட்டு. அதில் ஒரு பொச்சு மட்டையை எடுத்து தணலில் பிறத்தி மட்டையை பிடித்து சூடாக்கி ஒத்தனம் உடம்பிற்கு கொடு என்றாராம். அவர் கட்டளைப்படி தந்தையார் செய்ய இதல்லவோ வைத்தியம் சு கமாகிவிட்டது என்றார். அடுத்தநாள் அவரது கொட்டிலில் நித்தம் வந்துபடுக்கம் ஒருவருக்கு சொன்னாராம். இன்று இரவு வருவாயா? இங்கு அதிசயம் நடக்கும் என்றார். அன்று அவர் அங்கு வரவில்லை. அடுத்தநாள் வந்து பார்த்தபோது சுவாமிகள் நடராசர் வடிவத்தில் ஒரு காலைத்தூக்கி அபய வரதகோலத்தில் சமாதிநிலையில் அவரது உடம்பு விறைத்தபடி இருந்ததாம் சுவாமிகளின் கட்டளைப்படி எமது தந்தையார் சடையர் சபாரத்தினம் அவர்கள் அவரது தீர்க்கடன் நீ ர்கடன் களினைச் செய்தார். அன்றைய 1915ம் பங்குனி மாத அச்சு வினி நட்சத்திரத்தைக் கொண்டு சுவாமிகளின் குருபூசை அவரது நூறு ஆண்டுகளாக பக்திபூர்வமாக சிறப்பாக அமைதியாக நடைபெற்று வருகிறது.

நல்லூர்த்தேரடியில் வீற்றிருந்த செல்லப்பாசுவாமிகள் நான்கு மகா வாக்கியங்களை அருளினானா.

**ஒரு பொல்லாப்பும் இல்லை**
**முழுவதும் உண்மை**
**எப்பவோ முடிந்த காரியம்**
**யாமறியோம்**

யோகர்சுவாமிகள் அருளிய நற்சிந்தனையில் இம்மகா வாக்கியங்கள் நூற்றுக்கணக்கான இடங்களில் பொறிக்கப்பெற்றுள்ளன. இந்த மகாவாக்கியங்களில் மாபாடியமே என்ற யோகர் சுவாமிகள் அருளிய நற்சிந்தனைப் பாடல் ஆகும். முழுது முண்மையென முன்செ ன்னமொழி எழுதிக்காட்டிட என்னாலிசையுமோ எனவும் செல்ல முடியாதென தங்கமே தங்கம் செல்லப்பன் திருவாக்குத்தங்கமே தங்கம் எனவும் கூறியிருக்கின்றார்.

முன்னைய காலங்களில் சுவாமிகள் பாவித்த அடங்கன் முறை, கிளிப்பாட்டு, சங்கு ஆகியவற்றை நினைவாக வைத்து குருபூசை நடைபெற்று வருகின்றது. அன்றைய தினம் நினைவாலயபூசை முடிந்த கையோடு சுவாமிகள் தவமிருந்த நேரடியிலும் பூசை நூறு ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றது. செல்லப்பா சுவாமிகளின் பேரன்மாரின் தந்தையாரால் 1915ஆம் ஆண்டில் இருந்து முப்பதெட்டு வருடங்கள் செய்துவந்தார். அவருக்கு உதவியாக கொழும்புத்துறை, விதானையார் கணக்காளர் நவரத்தினம், கல்வி அதிகாரி திருமதி.நவரத் தினம் சுருட்டு தொழில் அதிபர் வை.சி.குமாரசாமி குடும்பம் ஆகிய நான்கு பேரும் உதவியாக இருந்தனர். 1954ம் ஆண்டிலிருந்து எனது தமையனார் கனகரத்தினம் அவர்களும் அடியேனும் செய்து வருகின்றோம். நானும் அண்ணாவும் சிறுவர்களாக இருந்த நேரத்தில் எமது தந்தையாருடன் யோகர்சுவாமிகளை சந்திக்க கொழும்புத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றை ஆச்சிரமத்திற்கு சென்றோம் நாங்கள் தங்கச்சங்கிலி அணிந்து சென்றோம். சுவாமிகள் எங்களைக் கண்டவுடன் இங்கே ஏன் வந்தீர்கள் என்ற தந்தையாரைப் பார்த்து அங்கே தான் எல்லாம் இருக்கு என்று தந்தையாரைப்பார்த்து என்று தகாத வார்த்தைப் பிரயோகத்துடன் எங்களைப் பார்த்து அணிந்திருக்கும் லாடன்களை கழட்டிக் கொள் என்று சொல்லி சந்தோசமாக அனுப்பிவைத்தார் சிவயோகர் சுவாமிகள் சமாதியுடைய சிலநாட்கள் முன்னர்களில் வந்து நல்லூரைக்கும்பிட்டு நினைவாலயப் படலையில் சுவரிலிருந்த படியே நான் வைத்தியரை தேடி வந்தேன் கண்டு விட்டேன் என்று கூற எங்களுடன் நின்ற எமது தாயார் அவர்களை உள்ளிற்கு வாருங்கள் என்று அழைக்க நான் வரத் தேவையில்லை பிள்ளைகள் நலமாய் இருப்பார்கள் என்றும் உனக்கு பல்லும் போச்சு தலையும் நரைக்க போகுது என்றார்.

கைதடி பொறியியலாளரான நாகலிங்கம் அவர்கள் மரக்கம்புகளுடன் கொட்டிலாய் இருந்த நினைவாலயத்தை கற்தூண்கள் நிறுத்தி நிலத்திற்கும் சீமெந்தினால் தரை போட்டு நிலவேலையும் செய்தார். அதன் பிற்பாடு 1983இல் சுவாமிகளின் நினைவாலயத்தை கொட்டிலிருந்து கல் மண்டபமாக சுப்பிரமணிய சுவாமிகளின் நிதியுதவியுடன் புதிதாக அமைக்கப்பட்டன.

சுவாமிகளின் நூறாவது குருபூசை தினத்தில் மாற்றம் செய்ய வேண்டும் என்று எமது மனதில் தோன்றியது அதில் நினைவாலயத்தில் இருந்தது போல படத்தை வழிபாடு செய்வதா? சுவாமிகளின் ஐம்பொன்னாலான திருவுரு பிரதிட்டை செய்வதா? என்று சிந்தித்தோம். குல தெய்வமான நல்லூர் கந்தனில் திருவுளச்சீட்டு (பூக்கட்டிப்பார்த்தல்) மூலம் நல்ல நாளில் கேட்டோம்

திருவுருவிற்கான விடை கிடைத்தது. அதன்படி 22.03.2015 இல் சுவாமிகளின் திருவுரு பிரதிட்டை நல்லூர் சிவாச்சாரியார் வைகுந்தக்குருக்கள் மூலம் சிறப்பாக நடைபெற்றது. மேலும் நூறாவது ஆண்டு சிறப்பு மலரும் வெளியிடப்பட்டன. மேலும் ச.கனகரத்தினம், ச.கனகசபாபதி, செல்லப்பா சுவாமிகளின் பேரன்மார்) எழுதிய வரலாற்றுத் தொகுப்பு கட்டுரையில் பெறப்பட்டன. செல்லப்பா சுவாமிகள் ஒருநாள் தவம் கலைந்து நல்லூர் கோயிலுக்கு வந்தார். அப்போது அவருக்குப்பசி எடுத்து தனக்கு விருப்பமான அடியார் ஒருவர் வீட்டிலேயே போய் உணவு கேட்டார். பிற்பகல் நான்கு மணி அப்போது வீட்டில் உணவு இல்லை. அந்தஅடியார் சுவாமி உணவு முடிந்து விட்டது. இதோ காய் பிஞ்சு எல்லாம் இருக்கின்றன. என் மனைவி உடனே திருவமுது செய்விப்பார் தங்களை என்றார். அப்போது அந்த அம்மையாருக்குக் காய்ச்சல் இதனைத்தான் அகக்கண்களால் உணர்ந்துவிட்டார். சுவாமிகள் நல்லது அரிசி காய் பிஞ்சை அப்படியே தா நான் சமைப்பேன் உன்பத்தினிக்கு நாளை சுகம் வரும் என்றார். அரிசி காய் பிஞ்சைப் பெற்ற செல்லப்பா சுவாமிகள் நேரே நல்லூர் கந்தன் கோயில் கிழக்கு வாசலுக்கு வந்தார். இரண்டு முறை ஒரு குடுவையில் அரிசியை கிள்ளிப்போட்டார். அடுப்பை நன்கு எரித்தார். அடுப்பு எரியும் போது காய் பிஞ்சுகளைப் பாகஞ் செய்தார். அவிசுவைப்பதே சுவாமிகளின் நோக்கம் அடுப்பு நன்கு எரிந்து கொண்டிருப்பது. நெருப்புச்சுடர் நான்கு பக்கமும் வீசியது. அவிசு எரிந்து போகாமல் அடுப்பைச் சுற்றித் தணித்து விட்டார். நல்ல மனம் குடுவையிலிருந்து வந்தது. பசிமேல் வீடடினால் அவரின் வாயிலிருந்து உமிழ்நீர் சுரந்து அது கடை வாய்ப்பக்கத்தால் வழிந்தது. சுவாமிக்கு இது பிடிக்கவில்லை. தன் மீது அவருக்கு கோபம் வந்துவிட்டது. உடனே ஏய் வயிறே நீ என்ன செய்கிறாய்? இந்தக்கட்டையை இப்படி ஆட்டலாமா?



வயிற்றுப்பசி முருகநாகத்தை இல்லாமற் செய்து விட்டதே எனப்புலம்பினார். பின்னர் குடுவையைப் பார்த்தார். ஏய்குடுவையே நீ எனக்கு இன்று நல்ல பாடம் படிப்பித்தாய் என்றார். சிறிது வேளை தியானத்தில் ஆழ்ந்தார் புலம்பினார். அழுதார். தனக்குத்தானே புலன் அடங்கவில்லை என்ற கவலை. அங்மீகு ஒரு நெருப்பு இங்கே ஒரு நெருப்பு. எனினும் மீண்டும் மௌனம் நிலவியது. அங்கே குடவை கொதிக்கிறது. இங்கே குடவை கொதிக்கிறது என்று கூறினார். விறகுக்கட்டயை எடுத்துக் குடுவையை உடைத்தார். மீண்டும் மௌனமாக இருந்தார். இந்த வேடிக்கையைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர் சிலர். பார் விசர் செல்லப்பாவின் கூத்தை பசி என்று மனிதன் சமைத்து பின்னர் விறகுக்கட்டையால் பானையை உடைத்து விட்டது. அவிசு அடுப்பிலே அப்படியே சிந்திக்கிடக்கிறது. இந்தப் பைத்தித்துக்குத்தான் தலுமம். பிச்சை போடுவது பிழை என்றார். இவை சுவாமியின் காதிலே பட்டனவோ என்னவோ தெரியாது அவர் மீண்டும் தியானத்தில் ஆழ்ந்து விட்டார்.

நல்லது செல்லப்பா சுவாமிகள் கூறியவற்றை இங்கு ஆராயலாம்.

அங்கே ஒரு நெருப்பு இங்கே ஒரு நெருப்பு அங்கே ஒரு நெருப்பு என்பது அடுப்பில் எரிகின்ற நெருப்பு. இங்கே ஒரு நெருப்பு என்பது வயிற்றுப்பசி. இது சென்னானிப்பசி உதராக்கின் என்பார். வடமொழியாளர். அதாவது வயிற்று நெருப்பு என்பது பொருள்.

அங்கே குடுவை கொதிக்கின்றது அடுப்பிலே இருந்து கொண்டு குடுவை கொதிக்கின்றது இங்கே வயிறு என்கின்ற குடுவை கொதிக்கின்றது. என்பது பொருள் அந்தக்குடுவை கொதித்தல் உணவு கிடைக்கும் இந்தக்குடுவை கொதித்தால் என்ன பயன்? சிவத்தியானமே இல்லாது போய்விடும். இதுதான் செல்லப்பா சுவாமிகளின் ஏக்கம் அந்த ஏக்கத்தினால் அவர் மீண்டும் தியானத்தில் ஆழ்ந்து விடுவார். இது இப்படி இருக்க சுவாமியினது சீடருடைய மனைவியின் காய்ச்சல் உடனே நின்றுவிட்டது. உடலைச் சுத்தம் செய்த அந்த அம்மையாக ஏமீதூ ஓர் எண்ணத்தில் உந்தப்பட்டார். உடனே பிட்டு அவித்து அரையலும் தயாரித்தார். சுத்தமான பெட்டியில் பிட்டையும் அரையலையும் கணவனும் மனைவியும் எடுத்துச் சென்றார். தாங்கள் குருவிடம் இவர்களைக் காணமற்கண்ட சுவாமி கண்ணைத்திறந்தார். பிட்டை வாங்கி அன்புடன் உண்ணத் தொடங்கினார். அந்த அடுப்பையும் உடைத்த குடுவையையும் பார்த்த அந்தச் சீடர் எதுவும் பேசவில்லை குருபக்தி அப்படி.

டேய் என்ன பார்க்கிறாய் குடுவை உடைந்து போய்விட்டது. உனக்கு ஆச்சரியமாக இருக்கிறதா? செல்லப்பா சுவாமிகளின் போக்கு இப்படித் தான் என்று நினைக்கிறாய் என்றார் சாப்பாடும் முடிந்து விட்டது. எழுந்து போய் சுவாமிகிணற்றிலே வாயைக் கழுவினார். மீண்டும் அமைதி நிலவியது. சுவாமி பேசினார். அந்தப் பானையும் உடையும் இந்தப்பானையும் உடையும் என்றார் தொடர்ந்து பேசினார். மகனே கேள்! அது மண்ணால் செய்த பானையும் இந்த உடம்பாலான பானையும் ஒருநாள் உடையும் தானே! என்று அறிவுரை வழங்கினார்.

**(தொடரும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ சித்தாந்த வாழ்வியல் செல் நெறியில் நல்லிணக்கம்– ஒரு நோக்கு



## அறிமுகம்

**இந்தியாவில்** தோற்றம் பெற்ற சைவசித்தாந்த சைவம், காஷ்மீர சைவம், வீரசைவம் முதலிய மூன்று பெரும் சைவப்பிரிவுளுள் முதன்மையானதாய், இந்திய தத்துவங்கள் அனைத்திற்கும் இறுதி நிலைப்பட்டதாய், சிறந்த முறையியல் சார் அமைப்பைக் கொண்டதாய் சைவசித்தாந்த தத்துவம் விளங்குகின்றது. இது பதி, பசு, பாசம் எனும் முப்பொருள் உண்மையைக்கூறி திரிபதார்த்த நிச்சயமாய்,சைவத்தின் முடிந்த முடிபாய், சைவ வாழ்வுக்கு வழி காட்டும் தத்துவமாய், ஆன்ம ஈடேற்றத்திற்கு அடிப்படையான கொள்கையாய் அமைந்து காணப்படுகிறது.

சைவசித்தாந்தம் தனக்கான தோற்ற வேரினை வேதகாலத்திலிருந்து கொண்டிருந்தாலும் கூட தெளிவான கருத்தமைவுகளை செழிப்பாக பன்னிரு திருமுறைகளிலே இலக்கிய நயத்தோடு கொண்டு விளங்குகின்றது. அதனைத் தொடர்ந்து சோழ மன்னர் ஆட்சிக்




கு.தவசீலன்
முதுதத்துவ மாணிப் பட்ட ஆய்வாளர்
உயர் பட்டப்படிப்புகள் பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
(kumarasamythavaseelan@gmail.com)


காலத்தில் சந்தான குரவர்களால் வரைந்து வழங்கப்பட்ட மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கும் சைவசித்தாந்த சட்டங்களாக அமைந்து ஓர் முழுமை பெற்ற தருக்கியல் அமைப்பிற்குட்பட்ட தத்துவமாயும் இன்று வரை ஒரு நடைமுறை வாழ்க்கைத் தத்துவமாகவும், தமிழ் பேசும் மக்களது தத்துவமாய் நிலைத்து நிற்கிறது.

இத்தகைய சைவசித்தாந்தம் குறிப்பிடும் வாழ்வியலானதுஒவ்வொரு ஆன்மாவும் முக்தி என்கின்ற இறுதி இலக்கை அடைவதற்கு இட்டுச் செல்கின்ற அதேவேளை அன்பு, கருணை, பக்தி,பொறுமை,தர்மம்,சமரசம், பொறை முதலிய நல்லிணக்கத்தோடு வாழ்வதற்குரிய உத்திகளையும் தன்னகத்தே கட்டமைத்துள்ளமையினால், சைவசித்தாந்த வாழ்வியல் செல்நெறியானது மனிதன் உடல், உள, ஆன்மீக ரீதியாக ஒருமைப்படுவதற்குரிய நல்லிணக்க சிந்தனைகளையும் கொண்டு காணப்படுகிறதா? என்கின்ற பிரச்சினை எழுகிறது. ஆகவே அதற்கு தீர்வு காணுகின்ற வகையில் சைவசித்தாந்த வாழ்வியல் செல்நெறியானது எவ்வாறு நல்லிணக்க சிந்தனைகளைத் தன்னகத்தே கட்டமைத்துள்ளது என்பதனை ஆராந்து இளம் சமுதாயத்தினருக்கு அது பற்றிய அறிவையும் தெளிவையும் ஏற்படுத்தி அதன்வழி வாழ வழிகாட்டும்நோக்கோடு சைவசித்தாந்த அடிப்படை நூல்களை மாத்திரம் ஆய்வு எல்லையாகக் கொண்டு ஒப்பிட்டு ஆய்வு முறைமை, வரலாற்றியல் ஆய்வு முறைமை, விபரண ஆய்வு முறைமை என்னும் ஆய்வுமுறையியல்களூடாக இவ்வாய்வு முன்னெடுக்கப்படுகிறது. இவ்வாய்வுப் பெறுகையானது சமகாலத்தில் மக்கள் இன, மத,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமூக, உடல், உள, ரீதியாக ஒருமைப்பட்டு நல்லிணக்கத்தின் வழி வாழ பெரிதும் வழிகாட்டும்.

சைவசித்தாந்தமானது அன்பை நிலை நிறுத்தி சைவ வாழ்வியல் முறைமைகளை எடுத்துக் கூறுவதால் தத்துவம் மட்டும் அல்லாது அது ஒரு வாழ்க்கை முறையுமாகும். இந்த வாழ்வியலானது பூரணத்தை நோக்கிய பயணம். எனவே தான் ஆத்மார்த்த கிரியைகளை பற்றிக் கூறுவதாய், அன்பு மயமானதாய் அமைந்து காணப்படுகிறது.இது சாதாரண சிந்தனையின் வெளிப்பாடு அன்று. அது உண்மையை உணர்ந்த அனுபூதிமான்களுடைய அனுபவ உண்மைகளை அடிப்படையாகக் கொண்டது. சித்தாந்தம் அனுபவ உண்மையைச் சொல்ல சைவம் அதனை வாழ்வாக்குகின்றமையால் சித்தாந்தசைவம் என்றும் சொல்லப்படுகிறது.சைவசித்தாந்தம் முற்றுமுழுதாக மனித வாழ்வைப் பூரணப்படுத்துகின்ற நல்லிணக்கத்தை ஏற்படுத்த உதவும் பெரும் நெறி ஆகும். வையத்து வாழ்வாங்கு வாழும் வகையையும் அந்த வாழ்வினால் அடைகின்ற பேரின்ப நிலையையும் எடுத்துச் சொல்கிறது.

இந்திய மெய்யியல்கள் அனைத்தும் வாழ்வியலுக்குரியனவாகவும், தத்துவமாகவும் நல்லிணக்க சிந்தனைகளைத் தம்மகத்தே கொண்டதாகவும் கட்டமைத்திருக்கின்றன. ஒருவருடன் இணங்கி வாழ்தல், சமூகத்துடன் இணங்கி வாழ்தல், விட்டுக்கொடுத்தல், புரிந்துணர்வு என்பனவே நல்லிணக்கம் எனப்படும். இத்தகைய நல்லிணக்க சிந்தனைகளின் வழி சைவசித்தாந்த வாழ்வியலும் மனிதன் உடல்,உள, ஆன்மீக ரீதியாக ஒருமைப்பட்டு அல்லது ஒன்றுபட்டு இணங்கி சாந்தியுடன் இருத்தல் அல்லது சாந்தி பெறலே இணக்கம் என்று கூறுகிறது. அந்தவகையில் தனிமனிதன் ஒவ்வொருவரும் தங்களுக்குள் இணங்கி இணக்கத்துடன் இருப்பதாலே குடும்பத்திலும் சமூகத்திலும் நாட்டிலும் இணக்கத்தினை ஏற்படுத்த முடியும் என்கின்ற சிந்தனையை எமக்கு அது உள்ளார்ந்தமாய் வழங்குகின்றது. அது பற்றிய ஆராய்ச்சியை முன்னெடுப்பதாக இவ்வாய்வுப்புலம் அமைகிறது.

சைவசித்தாந்த வாழ்வியல் செல்நெறியும் நல்லிணக்கமும்

**அன்பும் நல்லிணக்கமும்**

சைவசித்தாந்த வாழ்வியலானது நல்லிணக்கப் பண்புகளான அன்பு, கொடை, புரிந்துணர்வு, தானம், இரக்கம், தியாகம் முதலிய சிந்தனைகளை கொண்டிருப்பதனை அதனது அடிப்படை நூல்களிலே காணமுடிகிறது. அன்பு இருக்கின்ற இடத்தில் தான் இணக்கம் ஏற்படும் என்ற கொள்கையின் பொருளாக அன்பைப் பதிப்பொருளாக மேலான பொருளாக சித்தாந்தம் சொல்லுகின்றது. இது பற்றி திருமந்திரம் கூறுகையில்


''அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலர்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலர்
அன்பே சிவமாவது யாரும் அறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே''1

என்கிறது.எனவே இறைவனிடம் உள்ள அன்பு பேரன்பு; ஆன்மாவிடம் உள்ள அன்பு சிற்றன்பு; இந்த அன்பு உள்ள மனதில் தான் இறைவன் உறைகின்றான். ஆகவே எமது சிற்றன்பு பேரன்பாக மாற வேண்டும் என்பதனைத் திருநாவுக்கரசர்,

''மெய்மையாம் உழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்மையாம் களையை வாங்கிப்
பொறை எனும் நீரைப் பாய்ச்சித்
தம்மை உள்நோக்கிக் கண்டு
தகவு என்னும் வேலியிட்டுச் செம்மையுள்
நிற்பராகில் சிவகதி விளையும் அன்றே''2

என்று கூறுகின்றது. மேலும் உள்ளமே பெருங்கோயில் அத்தகைய உள்ளம் தூய்மையானதாக இருக்க வேண்டும். அந்த இடத்தில் அன்பு நிறையும் இதனால் இணக்கம் ஏற்படும் என்ற திருமந்திரச் சிந்தனையின் வழி இறைவன் அன்புள்ள தூய்மையான உள்ளத்திலே உறைகின்றான். அவன் வேண்டுவது எந்தவிதமுமான மலருமல்ல தூய்மையான மலராகிய அந்த உள்ளத்தையே விபுலானந்தர்,.. வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல உள்ளக்கமலமடிஉத்தமனார் வேண்டுவது3என்று கூறுகிறார்.

அறம் என்பது அன்பின் வழிப்பட்ட செயல் ஆகும். அன்பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிப்பட்டது வாய்மை ஆகும். இவ்வாறு தர்மம்,அகிம்சை, சாந்தி என அது கட்டமைக்கப்பட்டுள்ளது. அதனையே திருக்குறள்

''அறத்திற்கே அன்பு சார்பு என்ப
அறியார்
மறத்திற்கும் அஃதுவே துணை'' 4

என்று கூறுகிறது. மீளாத வெற்றிக்கு அன்பே காரணமாகும். இதனை மாணிக்க வாசகர் கூறுகையில் புன்னெறி அதனில் செல்லும் போக்கினை விலக்கி எனக் கூறுகின்றார். உலகியல் இணக்கத்தின் மூலம் ஆன்ம இணக்கத்தை வழிப்படுத்துவதாய் சைவசித்தாந்த ஆன்மீக வாழ்வுஅமைந்து அதன் வழி நல்லிணக்கத்தை ஏற்படுத்துகின்றது. அந்த வகையில் நிபந்தனை அற்ற அன்பில் வாழ்தல் ஆன்மீகம் எனப்படும். அன்பு, இரக்கம், கருணை, அழகு பெரும் ஆர்வம் இவற்றை உடைமையாகக் கொள்ளுதல் ஆன்மீகம் ஆகும்.

உயிர்கள் மீது செய்யும் அன்பே உண்மையான வழிபாடாகும். அன்பின் வடிவாகத் திகழும் மக்கள் ஈசனுக்குரியவர் எனப்படுவர். ஏனெனில் வழிபட வேண்டிய இறைவன் உயிர்களிடத்தில் தான் குடிகொள்கின்றான். இதனை,

''ஈசனுக்கு அன்பில்லார் அடியவர்க்கு அன்பில்லார்
எவ்வுயிர்க்கும் அன்பில்லார் தமக்கும் அன்பில்லார்'' 5

எனும் சித்தியார் பாடல் பிற உயிர்களிடத்தும் கருணை கொள்ள வேண்டியதன் அவசியத்தைக் கூறுகிறது. ஒருவன் தான் வாழ வேண்டுமெனில் பிறரை வாழவைத்தல் வேண்டும். ஒவ்வொரு உயிரிலும் இறைவனே எழுந்தருளி இருக்கிறான் என்று உணர்ந்து அவ்வுயிரைச் சிவமாகக் கண்டு வழிபட வேண்டுமென்பதனை சித்தாந்த வாழ்வியல் கூறுவதன் ஊடாக நல்ல எண்ணத்தை விதைக்கிறது.

உயிர்களின் புலால் போர்த்த உடலே இறைவன் எழுந்தருளி உள்ள ஆலயம். இதனையே சைவசித்தாந்தம் தேகோ தேவாலயம் என்று கூறுகிறது. உயிர்கள் உடலுக்குச் செய்யும் தீங்கானது சிவாலயத்துக்கு செய்யும் இறை அபராதமாகும். உள்ளம் பெருங் கோயில் ஊனுடம்பு ஆலயம்6 எனத் திருமூலரும் காயமே கோயிலாக கடிமனம் அடிமையாக7 என அப்பரும் கூறுவது இறைவன் உயிர்களை இடமாகக் கொண்டுள்ளான் எனும் உண்மை புலனாகிறது. சிவனுக்கு அக பூசனை செய்து வழிபடுதலே இறைவன் எழுந்தருளும் தத்துவ தாமரையாக ஹிருதயத்தை சிவாகமங்கள் கூறுகின்றன.

## இல்லறமும் நல்லிணக்கமும்

சைவசித்தாந்த வாழ்வியலானது இல்லற நிலையில் துணைவியாருடன் இணங்கி நடத்தலுக்கான கடமைகளையும் கூறுகின்றது. அந்தவகையில் அங்குரார்ப்பணம், பிதிர் காரியம், அம்மி மிதித்தல், அருந்ததி பார்த்தல், கர்ப்ப தானம், அன்னப்பிரசன்னம் என்பன செய்வதனூடாக நல்ல இணக்கம் ஏற்படும் என்பதனை சித்தாந்த வாழ்வியல் எடுத்துக்கூறுகிறது.மேலும் பஞ்ச யக்சங்களைச் செய்ய வேண்டும் என்பதனையும் சித்தாந்தம் எடுத்துக் கூறுகிறது. இதன் மூலம் தேவர், பிதிர், பிரம்மம்,



பூதம் என்பவற்றுடன் இணங்கி வாழ்தல் முதலிய விடயங்களையும் கூறுகின்றது. ஒவ்வொரு தனிமனிதனும் தன்னுடைய உண்மை நிலையை உணர்ந்து சேவை புரியும் போது இணக்கம் ஏற்படுகிறது. அதாவதுமனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம் என்ற வரிகள் மூலம் புலப்படுத்தப்படுகிறது.

நன்றி உணர்வின் வழி நல்லிணக்கத்திற்கு தக்க எடுத்துக்காட்டாக சித்தாந்த இல்லற வாழ்வியல் அமைந்து காணப்படுகிறது. இதனைத் திருவள்ளுவர்

''எந்நன்றி கொன்றார்க்கும்
உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ட மகற்கு''8

என்று எடுத்துக் கூறுகின்றார். நாம் செய்யும் காரியங்கள் சொல்லாலும்,செயலாலும் மனத்தாலும் செய்யப்படுவன. அதனால் நன்மையும் - புண்ணியம், தீமையும் - பாவமும் விளைகின்றன. எனவே நற்செயல்களைத் தேர்ந்தெடுத்து நல்லன செய்வதே மனிதத் தன்மைக்கு உகந்தது. இக்கருத்தினை வலியுறுத்துவதே சமயமாகும். எனவே இல்லற வாழ்வும் சமய வாழ்வும் வெவ்வேறு அல்ல. அவை ஒன்றோடு ஒன்று இணைந்தது என்பதே சைவசித்தாந்தத்தின் கொள்கையுமாகும். அதனால் தான் அவரவர்களின் தன்மைகளிற்கு ஏற்ப இல்லறத்தில் இருந்து கொண்டே சமய நெறிகளையும் அநுட்டிக்குமாறு வகை செய்யப்பட்டுள்ளனவாம். அவரவர்களின் தன்மைகளுக்கு ஒவ்வாத நெறிகளை அனுட்டிப்பதன் காரணமாக பல நெறிகள் தோன்றுவது இயல்பாயினும் எல்லா நெறிகளின் முடிவுகளும் ஒன்றே என்னும் பெரு நோக்குடன் சிறப்பாக நான்கு நெறிகளை சைவசித்தாந்தம் ஏற்றுக் கொள்ளுகிறது. அந்த நான்கு நெறிகளும் ஒன்றுக்கொன்று இயல்பாகவே இணைந்து உள்ளதாம். அவற்றை அனுட்டிப்போர் உள்ளங்களில் அன்பும் அருளும் இடம்பெற்று நற்காரியங்களையே செய்வதற்கு ஊக்குவிப்பதால் அவர்களிடம் தன்னலம் குறைந்து பொது நலமே தழைத்தோங்குமாம்.

அன்பும், அறமும் செம்மையான முறையில் இணைந்து செயல்படும் பொழுது தான் உள்ளத்தில் ஒளி ஏற்படும். அதனால் தான் இல்லற தர்மத்தை

''அன்பும் அறனும் உடைத்தாயின்
இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது'' 9

என ஏற்றிக் கூறிய வள்ளுவர் அன்பையும் அறத்தையும் இல்லறத்தைத் தாங்கும் இரு தூண்களாக அமைத்துள்ளார் என்பது அறியக்கூடியதாகவுள்ளது. மேலும் இறை அருள் சார்பு இன்றி ஆன்மீக விழிப்புணர்ச்சியின்றி இணக்கம்,சாந்தி, சமாதானம் என்பது எட்டப்படுவதில்லை. ஒருவன் உடலை வளர்ப்பதனாலும், உளத்தை வளர்ப்பதாலும் சாந்தியையும் சமாதானத்தையும் பெறமுடியாது. உடல், உள, ஆன்மீக ரீதியான விளக்கமும் அதன் வழி வந்த இணக்கமும் பேர் அமைதிக்கு வழி வகுக்கும்.

## தியானமும் நல்லிணக்கமும்

சைவசித்தாந்த வாழ்வியலானது தியானத்திற்கு முன்னுரிமை கொடுத்து அதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வழி மனம் அமைதியடையவும் நல்ல சிந்தனைகளை மனதில் வளர்க்கவும் அடிப்படையாக இருக்கிறது. இதனால் மனதில் இருக்கும் பகை, குரோதம் என்பன அகன்று நல்ல இணக்கம் ஏற்படும்.தனிமனித மனம் அமைதி அடையாமல் இருப்பதற்குக் காரணம் நான், எனது, தான், தனது என்ற எல்லைக்குட்படுத்தப் பட்ட மனநிலையே உலகில் வேற்றுமைக்கும் அதன் காரணமான அமைதி இன்மைக்கும் காரணம் ஆகின்றன. இதற்கு ஆணவமலத் தின் இயல்பான அறியாமையே காரணம் என்பதனை சித்தாந்தம் சுட்டுகின்றது. சித்தாந்தம் கூறும் வாழ்க்கைக்கு ஏற்ற விதத்தில் வாழ்ந்தால் மனதில் அமைதி ஏற்படும். அதன்வழி உண்மையான முக்தியை அடையலாம். எனவே இறைவனுடன் இணங்குவதன் மூலம் என்றும் ஆனந்தமான நிலையை அடையலாம் என்று கூறு கின்றது. இதனையே மானிக்கவாசகர் அவன் அருளாளே அவன் தாள் வணங்கி10என்கிறார். எனவே முதலில் இறைவனுடன் இணங்க வேண்டும். இதற்கு சித்தாந்த வாழ்வியல் வழிவகுக்கும். அதற்கேற்ப நாற்பாதங்களை படிமுறை வளர்ச்சியாக சித்தாந்தம் எடுத்துக் கூறுகிறது. அதனை முறையாகக் கடைப்பிடிப்பதன் மூலம் இறைவனை அடையலாம். எனவே சித்தாந்த வாழ்விய லானது ஒருவன் தன்னில் இணங்கி வாழவும் குடும்பத்தாருடன் இணங்கி வாழவுமான மார்க்கத்தினைக் கூறி நிற்கின்றது. அந்த வகையில் சித்தாந்த வாழ்வியல் ஒருவனை வாழ்வாங்கு வாழச் செய்கின்றது.

## ஒரு தெய்வக் கோட்பாடும் நல்லிணக்கமும்

சைவசித்தாந்தத்திலே பல கடவுளர்கள் பற்றிய செய்திகள், குறிப்புக்கள் பதிவாகி இருந்தாலும் ஒரு கடவுள் கொள்கையே முதன்மை பெற்று விளங்குகின்றது. இந்தக் கொள்கை வலுப்பெறு கின்றபோது நல்லிணக்கம் ஏற்படுவதோடு சமூக நல்லிணக்கமும் ஏற்பட ஏதுவாக அமைந்து இருக்கின்றது. இதனை,

> ''யாதொரு தெய்வம் கொண்டிர்அத்தெய்வமாகி
> அங்கே மாதொரு பாகனார் தான் வருவார்''11
> ''அறுவகைச்சமயத்தவருக்கு அவ்வப்பொருளாய்''12

என்று சிவஞானசித்தியாரும்கூறியிருப்பது சைவசித்தாந்த ஒருமைக் கோட்பாட்டிற்கும், சமய சமரசத்திற்கும்,சமயப் பொறைக்கும்,சமுதாய நல்லிணக்கத்திற்கும் அடிப்படையாக அமைகின்றதோடுஅனைத்துச் சமயங்களும் சிவனாலே தோற்று விக்கப்பட்டன என்றும் ஆன்மாக்களின் பக்குவத்திற்கு தக்கவகை யில் அவை உருவாக்கப்பட்டன என்றும் உயிர்களின் பக்குவத் திற்கேற்ப பன்முறையாகிய சமயநெறியில் நின்று இறுதியில் சை வத்துறை அடைந்து ஞானத்தால் சிவத்தை அடையலாம் என்கி றது.

ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற கொள்கை சைவசித்தாந் தத்தின் சமூக நல்லிணக்கத்தை பிரதிபலிப்பதாகக் காணப்படுகின் றது. உலகத்தில் உள்ள மக்கள் எல்லோரும் ஒரே குலம் என்று எண்ணுகின்ற திருமந்திரச் சிந்தனையானது சமுதாயத்தில் சமய, சமூக நல்லிணக்கத்திற்கு பெரிதும் காரணமாக அமைந்துவிடுகிறது. உலகில் காணப்படும் சமயங்கள் அனைத்தும் மனித குல மேம்பாடு எனும் ஒரு இலக்கினை அடிப்படையாகக் கொண்டு செயலாற்று கின்ற அவையனைத்தும் நிறைவான வாழ்வினை வாழ்ந்து இறுதி யில் வீட்டு நெறிக்கு வழிவகை செய்கின்றன. இவ்வுண்மையினை

> ''வேறுபடும் சமயம் எல்லாம் புகுந்து பார்க்கின்
> விளங்கு பரம் பொருளே நின் விளையாட்டு அல்லால்
> மாறுபடும் கருத்து இல்லை முடிவில் மோன
> வாரிதியில் நதித்திரள் போல் விளங்கிற்று''13

எனத் தாயுமான சுவாமிகள் கூறுகிறார். அதாவது நதிகள் பல வாக இருப்பினும் அவை கடலிலையே சங்கமிக்கின்றன. அது போல சமயங்கள் பலவாக இருப்பினும் அவை கூறும் பரம்பொ ருள் ஒன்றே தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவ ருக்கும் இறைவா போற்றி14 என மாணிக்கவாசகர் இதனைக் கூறியுள்ளார்.சைவசித்தாந்தம் எல்லா சமயங்களையும் தம்முள் உள்வாங்கிக் கொண்டு உயர்ந்து நிற்கும் ஒரு பெரு விருட்சமாகிய நிழலில் உலகிலுள்ள எவ்வுயிரும் இளைப்பாறலாம். அதற்கு தடையில்லை. சாக்கிய நாயனார் போன்ற வேற்று மதத்தவரும், சிலந்தி, குரங்கு முதலிய உயிரினங்களும் சிவனை வழிபட்டு முத்தி யடைந்த வரலாறு இதற்குண்டு. இங்கு பேதம் என்பது ஒவ்வொரு வருடைய பக்குவத்திற்கேற்ப சொல்லப்படுகிறதே தவிர உண்மை ஞானம் பெற்ற அறிஞர்க்கு எல்லாம் ஒன்றே என்பது சித்தாந்த வாழ்வு சுட்டும் நல்லிணக்கமாகும்.

## சமரசமும் நல்லிணக்கமும்

சாதி மறுப்பு இன்றி எல்லோரும் ஒன்றாக வாழ வேண்டுமென் பதே சித்தாந்த வாழ்வியல் எடுத்தியம்புகிறது. ஓர் உடம்பிலி ருந்தே நான்கு வர்ணங்களும் தோன்றின எனின் பாதம், தொடை, தோல், தலை என அனைத்தும் இணைந்த முழுமையே மனிதன். அதுபோல நான்கு சாதியினரும் இணைந்ததே ஒரு சமுதாயத் தின் முழுமை எனும் கருத்துப்பட இது அமைந்துள்ளது. உடலில் கால் தலையையோ, தலை காலையோ வெறுக்க முடியாது. அவை வேறுபடுவதும் இல்லை. அவை முழுமையும் இணைந்தே செயற்படும். அதுபோன்றே சாதி அமைப்பு தொழில் முறையின் அடிப்படையில் உருவாகியுள்ளது. பிறப்பால் எல்லோரும் சமமானவர்களே. ஒருவருடைய பண்பாலே இவர் தாழ்ந்தவர் இவர் உயர்ந்தவர் என்று கொள்கிறார். பிறப்பால் பிராமணனான ஒருவன் தனது தாழ்ந்த பண்பால் சூத்திரனாகவும் சூத்திரனான ஒருவன் தனது உயர்ந்த பண்பால் பிராமணனாகவும் கருதப்படு வான். வேதங்களில் ஞானகாண்டமாகிய உபநிடதங்களில் இந்த உண்மை பேசப்படுகிறது.15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



''சாதி அமைப்பு வழிபாட்டுக்குத் தடையில்லை. என்பதை முண்டக உபநிடதம்
சாண்டாளனேனுஞ் சிவனென்றும் மொழியைச் செப்புவானாயின்
அவனோடு பேசுக, அவனோடு வசிக்க, அவனோடு உண்க''16

எனக் கூறுவதாக பிரமசூத்திர உரையில் செந்தில்நாதையரும், முதுமொழி வெண்பாவில் சிவஞானமுனிவரும் கூறியுள்ளனர்.திருநாவுக்கரசரும்அனைவரும் ஒன்று என்பதை வலியுறுத்தி

''சாத்திரம் பல பேசும் சாழக்கர் காள் கோத்திரமும்
குலமும் கொண்டு என் செய்வீர்
பாத்திரம் சிவன் என்று பணிந்திரேல் மாத்திரைக்குள்
அருளும் மான் பேறாரே''17

## பாரதியார்

''ஜாதி மதங்களைப் பாரோம் உயர் கன்மம் இத்தேகத்தில் எய்தினராயின்
வேதியராயினும் ஒன்றே அன்றி வேறு
குலத்தினராயினும் ஒன்றே''18

என்று கூறுவது இதற்குத் தக்க சான்றாகும்.

## பொறுமையும் நல்லிணக்கமும்

சிற்றறிவுடைய உயிர்கள் தமது அறியாமையினால் எண்ணற்ற தவறுகளைச் செய்கின்றன. ஒருவர் செய்யும் தவறான அல்லது பிழையான செயலை பிறர் பொறுத்துக் கொள்ளுதல் வேண்டும். ஏனெனில் ஒருவரின் பிழையினை இன்னொருவர் மிகையாக எடுத்துக்கொள்வதன் மூலம் அவர்களுக்கிடையே பகை என்னும் முளை உருவாகக்கூடும். இதனைத் தவிர்த்துவிடும் பட்சத்தில் நல்லிணக்கம் உருவாகும்.19 அப்பரடிகள் பிழை பொறுக்கும் மாண்பினை,

''பிழைத்தனகள் எத்தனையும் பொறுத்தாயன்றோ''20
''பிழைத்ததெலாம் பொறுத்தருள் செய் பெரியோய்''21
''பிழை எலாம் நீக்கி ஆள்வார்''22
உன்பால் அன்பர் பிழை பொறுத்தி என்பதுவும் பெரியோய்
நின்றன் கடனன்றே பேரருள் உன்பாலதன்றே23

என எடுத்தாண்டிருக்கின்றார். சமண சமயம் புகுந்திருந்த நாவுக்கரசர் சைவத்திற்கு மீண்டும் சைவனாக மாறிய சந்தர்ப்பத்தில் ஏற்பட்ட மனக்குற்றத்தினால் இறைவனை நோக்கி தன்பிழை பொறுக்குமாறு வேண்டியிருப்பதாக நினைக்கத் தோன்றினும் இங்கு அச்செயற்பாட்டினை உயர்ந்த நல்லிணக்கமாகவே கொள்ள முடிகின்றது.

## தர்மமும் நல்லிணக்கமும்

தர்மங்கள் செய்வதன் மூலமும் நல்லிணக்கம் ஏற்படுவதனையும் சைவசித்தாந்தம் தர்மம் ரட்சிதோ ரட்ஷிததி.. என்கிறது. தானம் கொடுக்க வேண்டும் என்ற செய்தியும் காணப்படுகின்றது. இதனைத் திருமந்திரம்

''யாவர்க்குமாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி
யாவர்க்கமாம் உண்ணும் போது ஒரு வாயுறை''24

என்று கூறுகின்றது. மற்றும் உண்மை பேச வேண்டும். தாய் தந்தையரை தெய்வமாகப் போற்ற வேண்டும். குருவைத் தெய்வமாகப் போற்ற வேண்டும் என சைவசித்தாந்த வாழ்வியல் எடுத்துக் கூறுகின்றது. அதாவது தர்மம் சர, தத்துவம் சர, மாத்திரு தேவோபவ, பித்துரு தேவோபவ, அதிதி தேவோபவ, ஆச்சாரிய தேவோ பவ, என்று சைவசித்தாந்த அடிப்படை நூலான உபநிடதங்களிலே காணப்படுகின்றன.25இச்செல்நெறியிலே சம்பந்தரும் அன்புள்ள மாமனும் மாமியும் நீ26என்று பாடி உறவு நிலைகளிற்கிடையிலான அன்பின் வழி நல்லிணக்கத்திற்கு வலுச் சேர்த்திருக்கின்றமையானது இதற்குத்தக்க எடுத்துக்காட்டுக்கள்



ஆகும். எனவே உபநிடதங்களில் கருத்தைத் சைவசித்தாந்தம் தெளிவுபடுத்துவதால் வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தத்திறன் என்று கூறப்படுகின்றது.

## அடியார் வழிபாடும் நல்லிணக்கமும்

சிவனடியார்களையும் தெய்வமாகக் கண்டு வழிபட வேண்டும் என்று சைவசித்தாந்த வாழ்வியல் எமக்கு எடுத்துக் கூறுவதன் மூலம் அடியவர்களுக்கும் எமக்கும் இடையிலே ஒரு இணக்கப்பாட்டை ஏற்படுத்தி மனதில் நல்லிணக்க சிந்தனைகளை விதைக்க முற்படுவதனைக் காணலாம். இதனை சிவஞானபோதம்

''செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீ, அன்பரோடு மரீ,
மாலற நேயமும் மலிந்தவர் தோற்றமும்
ஆலயம் தானும் அறன் எனத் தொழுமே''27

என்ற செய்யுள் தெளிவுபடுத்தி நிற்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கன்மமும் நல்லிணக்கமும்

சைவசித்தாந்தமானது கன்மம், கன்ம மறுபிறப்பு பற்றிக் கூறி நல்ல செயல் செய்பவன் நல்லபிறவியையும் தீய செயல் செய்பவன் கீழான பிறவியையும் அடைவான் என்று கூறி கன்மக் கோட்பாட்டைக் கட்டமைத்திருப்பதன் வழி மக்கள் மனம், மொழி, மெய்களால்நல்ல செயல்களை மட்டும் செய்வதால்சமூகத்திலும், ஆன்மீகத்திலும் நல்ல இணக்கம் ஏற்படுவதற்கும் நல்ல சிந்தனை அவர்களுடைய மனதில் முளை விடுவதற்கும் சித்தாந்த வாழ்வியல் அடிப்படையாக இருக்கிறது.

## முடிவுரை

மேற்படி ஆய்வின் வழி சைவசித்தாந்த வாழ்வியல் செல்நெறியானது அன்பு, கருணை, சமரசம், பொறுமை, தர்மம், பக்தி, காதல் முதலிய நல்லிணக்க உத்திகளைக் கொண்டு காணப்படுகின்ற அதே வேளை பல நதிகள் இருந்தாலும் இறுதியாகக் கடலைச் சென்றடைவதைப் போல பல்வேறு தத்துவங்கள் தோன்றிவெவ்வேறு விடயங்களைக் கூறினாலும் இறுதியாகச் சென்று அடைகின்ற இடம் ஒன்றுதான் என்கின்ற சைவசித்தாந்த வாழ்வியல் செல்நெறியின் வழி ஒவ்வொரு மனிதனும் இன, மத, சமூக, உடல், உள ரீதியாக ஒருமைப்பட்டு நல்லிணக்கப்படுவதற்குரிய சிந்தனைகளைத் தன்னகத்தே கட்டமைத்து, அது அனைவரையும் வாழ்வாங்கு வாழச் செய்து நல்வழிப்படுத்துகின்ற வாழ்வியல் கோட்பாடு மாத்திரம் அல்லாது நல்லிணக்கக் கோட்பாடாகவும் விளங்குகின்றது என்பது தெளிவாகின்றது.

## அடிக்குறிப்புகள்

1.மணிவாசகன், (2009),திருமந்திரம், சாரதா பதிப்பகம், சென்னை, ப.257.
2.அப்பர் தேவாரம், 4:76:2.
3.**www.jothie49.blogspot.com**
4.பரிமேலழகர் உரை, (2002),திருக்குறள், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, ப.20.
5.திருவிளங்கம், மு., (2010),சிவஞானசித்தியார் சுபக்கம், சிவதொண்டன் சபை, யாழ்ப்பாணம், பா.323.
6.மணிவாசகன், (2009), மு. கு. நூ., பா.1823.
7.திருநாவுக்கரசு சுவாமிகள், (2000),திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய தேவாரம், சைவ நூல் அறக்கட்டளை, சென்னை, ப.459.
8.பரிமேலழகர் உரை, (2002), மு. கு. நூ., ப.46.
9.மேலது, ப.20.
10.சுவாமி சித்பவானந்தர், (1992),திருவாசகம், ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம், திருச்சி, திருத்தௌ;ளேணம், பா.17-18.
11.திருவிளங்கம், மு., (2010), மு. கு. நூ., பா.115.
12.மேலது, ப.3.
13.சிவதொண்டன், (ஆ.இ),தாயுமானசுவாமிகள் பாடல் (பொழிப்புரை), சிவதொண்டன் நிலையம், செங்கலடி, பா.25.
14.மாணிக்கவாசக சுவாமிகள், (1999),திருவாசகம், சைவசித்தாந்தப் பெருமன்றம், சென்னை, ப.14.
15.ஜெயந்திரன், இ., (2016),சைவசமய நோக்கில் சமய சமுதாய ஒருமைப்பாடு (கட்டுரை), சைவமாநாட்டு மலர், இந்துநாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், ப.646.
16.செந்திநாதையர், (2005),பிரமசூத்திர சிவாத்துவித சைவ பாடியம், தெய்வச்சேக்கிழார் சைவசித்தாந்தப் பாடசாலை, தஞ்சாவூர், ப.180.
17.திருநாவுக்கரசு சுவாமிகள், (2000), மு. கு. நூ., ப.267.
18.மகாகவி பாரதியார், (1958),மகாகவி பாரதியார் கவிதைகள், அருணா பதிப்பகம், ப.17.
19.ரமணராஜா, சி., (2016),திருநாவுக்கரசு நாயனார் தேவாரங்கள் புலப்படுத்தும் சமுதாய மதிப்புக்கள் (கட்டுரை), முகாமைத்துவ பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், ப.266.
20.அப்பர் தேவாரம், 6:95:8.
21.மேலது, 4:90:6.
22.மேலது, 5:49:8.
23.மேலது, 6:25:7.
24.மணிவாசகன், (2009),மு. கு. நூ., ப.252.
25.**www.brahminsnet.com** தைதிரேய உபநிடதம்.
26.சம்பந்தர் தேவாரம், பா.930.
27.வேதநாதன், மா., (2009),சிவஞானபோதச் சிற்றுரையும் விளக்கமும், சைவசித்தாந்த ஆய்வு நிறுவனம், ப.101.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவசின்னங்களில் விபூதியின் மகிமை



**சிவ** சின்னங்களாக விபூதி உருத்திராக்கம்பஞ்சாட்சரமந்திரம் என்பனவிளங்குகின்றன.சைவசமயி அகச் சின்னமாக திருவைந்தெழுத்தையும் புறச்சின்னமாகவிபூதிஇ உருத்திராக்கத்தையும் கொள்கின்றான்.அதிலேதிருநீறுமுக்கிய இடம் வகிக்கின்றது இதற்குவி பூதி என்றபெயரும் உண்டு. விபூதி என்ற சொல்லுக்குமேலானசெல்வம் என்பது பொருளாகும். தீட்சை பெற்ற அனைவரும் திரிபுண்டரமாகவும் ஏனையோர் உத்தூளனமாகவும் தரிப்பர். விபூதியின் மேலான தன்மையினை மறுபெயர்கள் எடுத்தியம்புகின்றன.

**திருநீறு- வினைகளைநீறாக்குதல்.**
**பற்பம் - இருவினையொப்பினைஅருளுவதாய் இருப்பதால்.**
**பசிதம் - திருவருளைகைகூடவைப்பதால்.**
**சாரம் - மலஅழுக்குகளைநீக்குவதால்.**
**இரட்சை-ஆன்மாக்களைகாப்பதால்.**
**ஷாரம் - தடைகளைஅறுப்பதால்.**

விபூதிக்கு ஐம்பத்தினான்கு இயல்புகள் கூறப்படுகின்றன.35விபூதியானதுகற்பம், அநுற்பம், உபகற்பம் ஆகிய மூன்றுவகையாகஆக்கப்படுகின்றது. கற்பமாவதுபசுவின் சாணத்தைநிலத்தில் விழவிடாதுதாமரை இலையில் பெற்றுசுத்தமாகபுனித இடத்தில் சாணத்தில் மேலே உள்ளவழுக்களை நீக்கி உருண்டையாக செய்துகாயவைத்து இதற்கெனவளர்க்கப்பட்ட சிவாக்கினியிற் இட்டு பக்குவமாக எடுத்தல். இதுஉத்தமம் ஆகும்.

உபகற்பமாவது கிரியைகைகள் ஏதுமின்றிமக்களால் தயாரித்துஎடுக்கப்படுவது இதனைவிடஅரசு, ஆல், ஆத்திஆகிய மூன்றினுள் எடுக்கும் விபூதி இது திருமந்திர நூலின்கண் காணப்படுவதால் சைவமும் நாமும் எனும்




**சிவஶ்ரீ தெ.தயமுகன் சர்மா**
**(இந்து தர்மாசிரியர், Diploma in teaching Hinduism merit 1st rank)**
ஆசிரியர்– மட்/புனித சிசிலியா பெண்கள் கல்லூரி (தே.பாடசாலை)
ஆலய குரு– எருவில் பாரதிபுரம் சிவன் ஆலயம், மகிழூர் ஶ்ரீ வீரையடி விநாயகர் ஆலயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நூலில் கூறப்பட்டுள்ளது. அநுகற்பமாவதுநிலத்தில் விழுந்தசாணத்தைகோமயமிட்டுபிசைந்துஉருண்டைசெய்துகாயவைத்துசிவாக்கினியிலிட்டுஎடுத்தலாகும். இதுமத்திமம்.

விபூதி உத்தூளனம் திரிபுண்டரம் எனும் முறையில் பூசப்படுகின்றது. உத்தூளனமுறையில் சாம்பற்பூச்சி பரவிப்பூசுதல் எனவழங்கப்படுகின்றது. சிவத்தியானத்துடன் நெற்றியில் ஓங்காரமாகபரவிப்பூசுவதுடன் தொப்பூளிலிருந்துகழுத்துவரையிலும் (இரு கைகளில்) மணிக்கட்டிலிருந்துதோள் வரையும் விபூதியால் சிறுகோடு இழுத்தலும் உத்தூளனமாகும்.

திரிபுண்டரமாவது புனிதநீரால் குழைந்த திருநீற்றை ஈசாநாயநம என்று சிரசிலும் இதற்புருஷாய நம என்று நெற்றியிலும்,அகோரரயநம என்று மார்பிலும் இவாம தேவாயநம என்று தொப்பூலிலும் இசத்தியோசாதாயநமஎன்றுவலதுமுழந்தாள் இடதுமுழந்தாள் வலதுமணிக்கட்டு இடதுமணிக்கட்டுவல



துமுழங்கை இடதுமுழங்கைவலதுமணிக்கட்டு இடதுமணிக்கட்டுவலதுவிலா இடதுவிலா முதுகு கழுத்துஎன்னும் இடங்களில் திரிபுண்டராகஅதாவது மூன்றுவிரல்களையும் அகாரஉகாரமகாரமாககொண்டுதரித்தல் வேண்டும்.

எவ்வகையான நிறமுடைய விபூதியினை அணிய எனநாம் நோக்கு வோமானால் வெண்மையான விபூதியைதரித்தல் வேண்டும். அதனை தரிப்பதால் நன்மை உண்டு. ஏனைய நிறமானகருநிற விபூதியைத் தரித்தால் நோய் உண்டாகும். செந்நிறவிபூதியினைதரித்தால் கீர்த்தியைப் போக்கும் எனகாமிக ஆகமத்தில் கூறப்பட்டுள்ளது.

விபூதிகட்டாயம் அணியவேண்டும் என்பதனை நீறில்லா நெற்றிபாழ் என்று ஔவையார் கூறியுள்ளார். இத்தகைய விபூதியின் சிறப்பினை பற்றி சம்பந்தர் பெருமான் திருநீற்றுப் பதிகத்திலே பஞ்சாட்சரப் பொருளைதன்னுள் அடக்கி வைத்திருப்பதால் மந்திரமாவது நீறு என்றும், தேவர்களை விட சிறப்பு பெற்றதனால் வானவர் மேலது நீறுஎனவும் வேதத்திற் கூறிய உண்மையானபொருள் என்பதனால் வேதத்தில் உள்ளது நீறுஎனவும் ஞானத்தை தருவதவதனால் போதந்தருவது நீறு எனவும் இயாவராலும் துதிக்கப்படும் பெருமை உடையதனால் பரவவினியது நீறுஎன்றும், மெய்யன் போடுநினைப்பவர்களுக்குபத்தியைவளரச் செய்வதனால் பத்திதருவதுநீறுஎனவும் ஆணவமலத்தால் உண்டாகும் ஆசையைக் கெடுப்பதால் பெருந்தவத்தோர்களுக்கு எல்லாம் ஆசை கெடுப்பதுநீறுஎனவும்இ மோட்சத்தைகொடுப்பதால் முத்திதருவதுநீறுஎனவும் இவ்வாறுபலவாறாகவிபூதியின் சிறப்பினைஎடுத்தியம்புகின்றார்.

*மந்திரமாவதுநீறுவானவர் மேலதுநீறு*
*சுந்தரமாவதுநீறுதுதிக்கப் படுவதுநீறு*
*தந்திரமாவதுநீறுசமயத்தில் உள்ளதுநீறு*
*செந்துவர்வாயுமைபங்கள் திருவாலவாயன் திருநீறே*
*என்றுபாடியுள்ளார்.*

மேலும் சிவபெருமான் தமதுஉடம்பெல்லாம் பூசிக்கொள்வது திருநீறுஆகும் என்பதனைதோடுடையசெவியன் விடையேறி ஓர் தூவெண்மதி சூடிக் காடுடையசுடலைப் பொடிபூசியென்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







உள்ளம் கவர்கள்வன்என்றும் பவளம் போல் மேனியில் பால்
வெண்ணீறுஎன்றும் வெண்ணீற்றான்என்றும் திருமுறைப்
பாடல்களில் வருவதன் மூலம் அறியலாம். மேலும் திருமூலரும் சி
வபெருமான் பூசுகின்றகாவல் பொருந்தியதிருநீற்றைவாங்கிஎவ்
விததீவினையும் எவ்விததீவினையும் வராதுசிவனடிசேர்வதுஉறு
திஎன்றுகீழ்வருமாறுபாடுகின்றார்.

கங்காளன் பூசும் கவசத்திருநீற்றை
மங்காமற் பூசிமகிழ்வரேயாமாகில்
தங்காவினைகளும் சாரும் சிவகதி
சிங்காரமானதிருவடிசேர்வரே

எனவே இத்தகையசிறப்புப் பெற்றதிருநீற்றின் பெருமைக்
கதையினைவிளக்கபலகதைகள் உண்டு. உதாரணமாகபாண்டி
யமன்னனின் வெப்புநோய் தீர்க்கசம்பந்தர் திருநீற்றுப் பதிகம்
பாடியவரலாறு, அப்பரின் சூலைநோய் நீக்கப் பெற்றவரலாறு
முக்கியமானதாகும் அந்தவகையில் அப்பரின் சூலைநோய்
நீங்கியவரலாற்றைசுருக்கமாகநோக்குவோம்.

திலகவதியின் வேண்டுதலின் படி இறைவர் தருமசேனருக்கு
சூலைநோய் கொடுத்துஅருளினர் எனவேநோய்தாங்கமுடியா
மல் திலகவதியாரிடம் ஓடிவந்தபோதுதிருவதிகைப் பெருமான்
ஆலத்திற்குதருமசேனரைக் கூட்டிச் சென்றுபஞ்சாட்சரமந்திரம்
கூறிவிபூதிகொடுக்கஅந்த சூலைநோய் நீங்கப் பெற்றார். தருமசே
னர் மீண்டும் சைவசமயம் திரும்பினார். இதனைதிருநாவுக்கரசர்
புராணம் திலகவதியார் திருநீறுகொடுப்பபெருவாழ்வுவந்ததென
எனப் பாடுகின்றார்.

எனவே இத்தயைகசிறப்புப் பெற்றதிருநீற்றைவடக்கு, கிழக்குமு
கமாககினும் இருந்துநிலத்திலேசிந்தாதவண்ணம் அண்ணாந்துசிவ
சிவஎன்று கூறிஅணியவேண்டும். குரு சிவனடியார் முதலியோர்
திருநீறுதந்தால் அமைதியாகஅடக்கத்துடன் அவர்களைவணங்கி
இருகைகளையும் நீட்டிவாங்கிஅணியவேண்டும். மேலும்
சந்தியாகாலம் மற்றும் நித்திரைக்குமுன் பின் ஏனைய கருமங்க
ளைசெய்யும் முன்னும் விபூதிஅணிதல் கட்டாயமாகும். விபூதி
அணிவதன் மூலம் நோய்க்கிருமிகள் தொற்றாதுஎனவிஞ்ஞானி
கள் கண்டுபிடித்தமையும் விபூதியின் சிறப்பே ஆகும். எனவே
விபூதியின் சிறப்பினைஉணர்ந்துமுறையாகஅணிந்துஏனை
யோரையும் அணியச் செய்துசைவசமயப் பண்பாட்டினைப்
பேணிப்பாதுகாப்போம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிந்துவெளியில் நடராஜர் வழிபாடு நிலவியதா?

**சிந்துவெளி** காலமக்கள் நிறைந்த கலைநுணுக்கம் உடையவர்களாக காணப்பட்டனர். அவர்களிடமிருந்து இசைக்கலை, சிற்பக்கலை, விக்கிரகவார்ப்புக்கலை, ஓவியக் கலை, நடனக்கலை என்பன காணப்பட்டதற்கான சான்றுகளை தொல்பொருள் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். அதன்படி சிந்துவெளியின் தொல்பொருள் சான்று ஒன்று நடராஜரின் வழிபாட்டுத் தொன்மையினையும் தமிழரின் தேவரடியார் கலாச்சாரத்தினையும் உணர்த்துகின்றது. என கூறும் சுந்தரம் எனும் அறிஞர் இது ஆராய்ச்சிக்கு உரியது என்கிறார். இதனை நோக்குமிடத்து இங்கே கண்டெடுக்கப்பட்ட நடனமாதுவின் வெண்கலப் படிமமானது பெண்மைக்குரிய இலட்சணங்களுடனும் இடதுகையில் வளையல்கள் அணிந்தவாறும் காணப்படுகின்றது. இதனை அவதானித்த றோவான்ட் எனும் ஆய்வாளர் இந்த நடனக் கோலமானது சிவனின் நடராஜர் கோலத்தின் அடிப்படையில் உருவானது என்கிறார். இதனைக் காணுமிடத்து சிந்துவெளிமக்கள் சிவமூர்த்தங்களை வணங்கியிருக்கலாம் என்பதில் ஐயமில்லை.






ஆசிரியர்
**பு.பிரியதர்ஷன்**
DIPT (Hinduism)


இதுவரை நாங்கள் சிவனின் பெயர்களையும் உடலமைப்பின் வடிவங்களையும் கொண்டே சிவனை ஊசித்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொண்டிருக்கின்றோம். உண்மையில் சிவன் எப்படி இருப்பார்? அவரைக் கண்டவர்கள் எப்படி கூறினார்கள்? இன்று காணும் சிவவடிவம் தோற்றப்பொலிவு உண்மையின் விம்பமா? வாருங்கள் காண்போம்.

''சிவனோடுஒக்கும் தேடினும் இல்லை
அவனோடுஒப்பார் இங்குயாவரும் இல்லை''
''தன்னைஒப்பாய் ஒன்றும் இல்லாததலைமகன்''

என்னும் திருமந்திர மொழியானது இறைவனின் உயர்ந்த பண்பினை எடுத்தியம்புகின்றது. இங்கு நாம் சிந்துவெளியின் சிவவழிபாட்டினை கண்டோம். தொடர்ந்து சங்ககால சிவத்தான்மையை எடுத்து நோக்கினால் சங்ககாலமக்கள் சிவனை தனிப்பெரும் தெய்வமாக வழிபட்டிருக்கவில்லை ஆனால் சிவனது பெயர்கள் ஆங்காங்கு குறிப்பிடப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றது அதன்படி கறைமிடற்றண்ணல் நீலமேனிவாலிளை பாகத்தொருவன்என்னும் பெயர்களானவை மாத்திரமே காணப்பட்டன ஆனால் கொற்றவை முருகன் இந்திரன் வருணன் ஆகிய தெய்வங்களிற்கு அருவுருப வழிபாடு காணப்பட்டது. இப்படியாக காணப்பட்ட சங்ககால சிவ வழிபாடானது உருண்டேடி சங்கமருவியகாலத்திலே பெரும் பிரவாகமெடுக்கின்றதனை நாம் காணமுடியும். அதன்படி காரைக்கால் அம்மையார் என்னும் சிவனடியாரால் சைவத்தின் சிவன் மெல்ல மெல்ல உருவப்பொலிவெடுக்கின்ற தன்மையை அம்மையார் அருளிச்செய்த திருவிரட்டைமணிமாலை அற்புதத்திருவந்தாதி திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம் என்பனவற்றில் காணலாம் அதிலும் அற்புதத் திருவந்தாதியின் வடிவமைப்பானது ஆரம்பம் தொடக்கம் முற்றுப் பெறும் வரை சிவனின் வடிவத்தை ஊகிப்பதாகவும் தான் கண்ட எம்பெருமானின் வடிவத்தை மக்களுக்கு விருந்து வைப்பதாயும் அமையும்.

''அன்றுந் திருவுருவங் காணாதேஆட்பட்டேன்
இன்றுந் திருவுருவங் காண்கிலேன் - என்றுந்தான்
எவ்வுருவேநும்பிரான் என்பார்கட் கென்னுரைக்கேன்
எவ்வுருவேநின்னுருவேமேது''
-அற்புதத் திருவந்தாதி-

என்று ஆரம்பித்த பக்தி வெள்ளமானது பல்லவர் காலத்திலே கரைபுரண்டேடி இன்று நாம் காணும் சிவனை உருவமாக்கியது. என்றால் மிகையில்லை அதன்படி சிவனிற்கு உருவநாமபேதங்களை வழங்கியவர்களுள் தேவாரமுதலிகளான திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தர் சுந்தரர் ஆகியோர் முக்கியம் பெறுகின்றனர். திருஞனசம்பந்தரின் முதற்பதிகத்திலேயே சிவனின் அங்க இலட்சணங்களை காணலாம்

தோடுடைய செவியன் விடையேறியோர்
தொடர்ச்சியாக
முற்றலாமையிளநாகமோடேன
முளைக்கொம் பாவைபூண்டு
வற்றலோடு கலனார்ப்பலி தேர்ந்தென
துள்ளங் கவர்கள்வன்
கற்றல் கேட்டலுடையயார் பெரியார்கழல்
கையால் தொழு தேத்தப்
பெற்ற மூத்த பிரமாபுரமேவிய
பெம்மானிவனன்றே

என்கிறார் ஞானசம்பந்தர் இப்படி நாயன்மார்கள் மனக்கண்ணால் கண்டதாக வழங்கப்பட்ட தோற்றப் பொலிவுகளே பிற்காலத்து சிற்பிகளாலும் சித்திர கலைஞர்களாலும் வடிவமைக்கப்பட்டது. அதன்படி நோக்குமிடத்து நாங்கள் இன்று காணும் பெரும்பாலான சிவவடிவஓவியங்கள் இரவிவர்மன் என்பவரின் ஓவியசாயலை தழுவியவையே இவற்றை வைத்து நேக்குமிடத்து மாணிக்கவாசகர் திருவாசகத்திலே கூறியதுவே உண்மையின் சாரம் எனலாம். அப்படி அவர் கூறியதானது



'தென்னாடுடையசிவனேபோற்றி
எந்நாட்டவர்க்கும் இறடிவா போற்றி'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னாட்டிலே இவன் பெயர் சிவன் எல்லா நாட்ட வர்க்கும் இறைவன் அவன் எல்லா வேதங்ளையும் ஆகமங்க ளையும் அருளியவன் அதற்கு சான்றுபகர்வதாக

**மன்னுமாமலை மகேந்திரமதனில் சொன்னவாகமம்**
**வேதமோடாகமம் மெய்யாமிறைவ நூல்**

என்பனவற்றைக் கொள்ளலாம்.ஆக எம்பெருமான் வேத ஆகமங்களில் என்ன கூறியுள்ளான் என்பதை நோக்குவது அவசியமாகின்றது.

### ஒன்று

**'ஏகம் த் விப்ராபகுதாவதந்தி'**

இப்பிரபஞ்சத்தின் இறைவன் ஒருவனே அவனை பல என்கிறார்கள் அறியாதோர் அது பொய்யே என்கின்றான். இதனையே நாம் மாணிக்கவாசகரின் கூற்றாக கண்டோம். மேலும் கூறவடிளையும் பெருமான்

அஹம் பிரம்மாஸ்மி

நானே பிரம்மம் இங்கு நான் என்பது எல்லா உயிரியையும் சுட்டும் என்கின்றனர் அறிஞர் பெருமக்கள்.கடவுள்என்ப தன் விளக்கமும் இதனுடைய விளக்கமும் ஒன்றென்பது பெரியோர் கூற்று ஒவ்வொரு உயிரியும் தனக்குள்ளிருக்கும் பிரம்மத்தை உணர முடியாதவிடத்து மலபந்தத்திலிருந்து நீ ங்க முடியாது மலபந்தத்தைவிட்டு நீங்க முடியாதவரை எல் லையில்லா ஆனந்தமாகிய வீடுபேற்றை அடைய முடியாது. இவை இப்படிக் கூற மகேந்திர மலையில் அருளப்பட்ட ஆக மங்கள் என்ன கூறுகின்றன. ஏன நோக்கினால் சிவபெருமா னின் பேரருளால் அருளப்பட்ட சிவாக மங்களானவை பிறவி எனப்படும் கர்ம வினைப் பிணியைப் பாக்கி எல்லையில்லா பேரானந்தமாகிய பெருமானின் திருவடியை அடைந்து நிலையான இன்பத்திற்கு வழிகாட்டுபவை இச் செந்தமிழ்ச் சிவாகமங்களாகும் இவை இருபத்தியெட்டு என்கிறார் திரு மூலர் . மாணிக்கவாசகரானவர் இவை சித்தர்களின் சைவக் கொள்கையினை எமக்கு விளக்குவதாகவும் உள்ளன என்று கூறுகிறார்.

ஈறான கன்னிகுமரியே காவிரி
வேறாநவ தீர்த்தமிக்குள்ள வெற்பேழன்
பேறானவே தாகமே பிறத்தலான்
முடறாத தென்திசைவையகஞ் சுத்தமே
**-திருமூலர்-**

ஆய்வாளர்களின் ஆய்வின்படி கி.பி 4 -கிபி 5 நூற்றாண் டுகாலப்பகுதியே திருமூலர் காலமாக கூறப்படுகின்ற வேளை திருமூலரானவர் வேதங்களும் ஆகமங்களும் தென்திசை பிறந்ததென்றும் வளர்ந்தது எனவும் கூறுவதோடுதான் நந்தியெம்பெருமானிடம் எட்டாவது சீடனாக இருந்து ஆக மம் கற்றதாக கூறுவதானது வழமையான வரலாற்றாசிரிய ரின் திட்டமிட்ட சொதப்பல்களில் ஒன்று எனத் தெளிவாகப் புலப்படுகின்றது.

நந்திஅருள் பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோகமாமுனி
மன்றுதொழுத பதஞ்சலிவியாக் ரமர்
என்று இவர் என்னோடு எண்மரும் ஆமே.
**-திருமூலர்-**

இவ்வாறான நிலையில் ஆகமங்கள் எத்தனை? அவை எத னைக்கூற விளைகின்றன என நோக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரதங்களும் அதன் நியமங்களும்



**விரதங்கள்** எமது சமய வாழ்க்கையை வளம்பெறச் செய்கின்றன. அத்துடன் ஐம்புல ஆசைகளை அடக்குவதற்காக உணவுகளை மட்டுப்படுத்தி எண்ணங்களை கட்டுப்படுத்துவதுமாகும். உடல் சுகத்தை தியாகம்செய்யும்போது உள்ளமும் தானாகக் கட்டுப்பட்டுவிடும். விரதம் என்றால் சங்கல்பத்துடனும், உபவாசம் முதலிய நியமங்களுடனும் கூடச்செய்யும் செயல்பாடாகும். மக்களின் கலாசாரத்தை, பண்பாட்டை, நாகரீகத்தை வெளிப்படுத்திக் காட்டுவதுடன், அதிக நியமமின்றி உற்சவமாகச் செய்வதுடன் பண்டிகைகள் சமயத் தொடர்புடையதாய், சமூகநலன் பேணுவதாய், கூட்டுறவை வளர்ப்பதாய், மக்கள் வாழ்வில் இன்பம் பொங்குவதற்கும், துன்பம் நீங்குவதற்கும் கொண்டாடப்படுபவை. கொண்டாட்டம் விதிமுறைப்படி ஒழுகி உடற்சுத்தம், சந்தியாவந்தனம் செய்து, விரதத்தின் பெயரைச் சொல்லி அனுட்டிப்பது விரதமாகும்.




சைவப்புலவர்,
சைவசித்தாந்த பண்டிதர்,
சித்தாந்தரத்தினம்,
திருமதி.சிவானந்தஜோதி ஞானசூரியம்– M.A
25/9, மாரியம்மன்கோயில் வீதி,
கல்லடி, மட்டக்களப்பு.
மின்னஞ்சல்: gpranujaa@yahoo.com
0771768830


இதில் வார விரதங்களாக பங்குனித் திங்கள், கார்த்திகைத் திங்கள்(சோமவாரம்), ஆடிச் செவ்வாய், ஆவணி ஞாயிறு, புரட்டாதிச் சனி, ஐப்பசி வெள்ளி என்பனவாம். திதி விரதங்களாக பௌர்ணமி, அமாவாசை, சதுர்த்தி, ஏகாதசி, திரயோதசி(பிரதோசம்), சதுர்த்தசி என்பனவாம். நட்சத்திர விரதங்களாக தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்தரம், வைகாசிவிசாகம், ஆனிஉத்தரம், ஆடிப்பூரம், ஆவணிஓணம் என்பனவாகும். இதைவிட விசேட நட்சத்திர விரதமாக சித்திரைச் சித்திரை, சித்திரைப் பரணி, ஐப்பசி உத்தரம், கார்த்திகைக் கார்த்திகை, மார்கழித் திருவாதிரை என வரும். தேவை கருதி வேண்டுவது காம்ய விரதமாகும். தன் நலன் கருதாது உலக நன்மைக்காக செய்வது நிஷ்காமிய விரதமாகும்.

தமிழர் ஆண்டுப் பிறப்பு முதலாவதாக அமைந்ததும் சித்திரை மாதத்தில்தான். இது இளவேனிற்காலமாகும். சூரியன் மேட ராசிக்குள் பிரவேசிக்கும் முதல் நாளாகும்.

இனி தை மாதமிருந்து மார்கழி மதம் வரையான காலத்தை நோக்குவோம்.

## தை மாதம்:

சூரியன் தைமாதம் முதலாம் திகதி தனு இராசியிலிருந்து மகர ராசிக்குள் பிரவேசிப்பதே மகரசங்கிராந்தியாகும். சூரியன் வடக்குநோக்கிச் செல்லுங் காலம் உத்தராயண காலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எனப்படும். உலகிற்கு ஒளி கொடுக்கும் சூரியபகவானுக்கு சைவசமயத்தவர்கள் நன்றிக்கடன் செலுத்துமுகமாக பொங்கல் படைத்து வழிபாடாற்றுவர். இன்நாள் உழவர் திருநாள் என்றும், சூரியப்பொங்கல் என்றும் கூறப்படும். பொங்கலுக்கு முதல்நாள் மன அழுக்கை நீக்கும் நினைவுடன் கழிவுப் பொருட்களை நீக்கி வீட்டை சுத்தம் செய்வது போகிப் பண்டிகை எனப்படும். அடுத்து ஆன்மீகப் பெரங்கலாக எம்முள் உள்ள ஐம்பொறிகளையும் அடக்கி சிவானந்தம் என்னும் ஆன்மீக உணர்வு பொங்கி இன்புற்றிருப்தாகும். மாட்டுப் பொங்கல் அல்லது பட்டிப் பொங்கல் என்பது பொங்கலுக்கு மறுநாளாகும். மாடு என்றால் செல்வம் என்பதாகும். உழுவதற்கு துணையான கால்நடைகளுக்கு நன்றிசெலுத்தும் நாளாகும். பசுவிலே தேவர்களும், பல்கோடி தெய்வங்களும், வேதங்களும் நிறைந்திருப்பதாக சாத்திரங்கள் கூறுகின்றன. பசுவைக் குளிப்பாட்டி கழுத்தில், கொம்பில் மாலை அணிவித்து, சந்தணம் குங்குமம் சாத்தி, பொங்கல் செய்து கால்நடைகளுக்கு கொடுத்து மகிழ்ந்து, அன்று அவைகளுக்கு ஓய்வு கொடுப்பார்கள். காளை மாடுகளை வாலிப வயதுடையவர்கள் உயிரைத் திரணமாக மதித்து பாய்ந்து அடக்கி பிரம்மபிரயத்தனம் செய்வர். அப்படி அடக்குபவனையே தமிழ் மகள் மாலையிடுவாள். இந்நிகழ்வை ஜல்லிக்கட்டு, கொல்லேறு தழுவுதல், மஞ்சி விரட்டு என்பர். அடுத்து காணும் பொங்கல் என்று கூறுவது, தரணியில் தம்மைப்போல் மற்றவர்களும் வாழ்கின்றனரா என விரும்பி அறிவதே இதுமாட்டுப் பொங்கலுக்கு அடுத்தநாள் இடம்பெறும். உற்றார்களுக்கும், அற்றார்களுக்கும், அலந்தார்க்கும் உதவும் காட்சி விழாவாகும். உயர்ந்தோர் தாழ்ந்தோர் என இல்லாது ஒருவரை ஒருவர் கண்டு சுகம் அளவளாவும் அருமை நாளாகும்.

## தைப்பூசம்

தைமாத பௌர்ணமியும் நட்சத்திரமும் இணைந்து வரும் நாள் தைப்பூசமாகும். அன்று இறைவன் உலகைப் படைத்ததாகவும், இதை உணர்த்த எல்லாக் கோயில்களிலும் தெப்போற்சவம் நடைபெறுகின்றது என வேத நூல்கள் கூறுகின்றன. இத்தினத்தில் முருகப்பெருமான் சிவசக்தி ஒளியில் ஐக்கியமான தென்பதால் திருச்செந்தூர், பழனி ஆலயங்களில் பூசத்திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்பெறும். சிவன் உமாதேவியாருடன் இந்நாளில் திருப்பரங்குன்றத்தில் காட்சிகொடுத்தருளினார். இத்தினத்தில் அகத்திய முனிவரின் வணக்கத்திற்காக இடும்பன் காவடி சுமந்து பொதிகைமலை சென்றதும் முருகனின் திருவிளையாட்டால் திசை திரும்பி திருவாவிநன்குடியில் இறக்கியதும் இத் தைப்ச நாளிலே யாகும். வியாக்கிரபாதருக்கும், பதஞ்சலி முனிவருக்கும் தில்லையில் ஆனந்தத் தாண்டவத்தைக் காட்டியதும், கபாலீஸ்வரத்தில் சம்பந்தர் பூம்பாவையை எழுப்ப பதிகம் பாடியதும் இத்தினத்தில்தான். நெற்கதிர்களை அறுவடைசெய்து பொங்கலிட்டு புதிர் உண்டு மகிழ்வதும், குழந்தைகளுக்கு பாற்சோறு ஊட்டி, ஏடு தொடங்குதல், காது குத்துதல், புதுப்பயிர் நடுதல், பொன்னுருக்குதல் எனப் பல சுபகாரியங்கள் செய்யும் மங்களகரமான நன்நாளும் இன்நாளிலேயாகும்.

இத் தை மாதத்தில் வரும் நல் விரதங்களாக வயிரவ விரதம், வீரபத்திர விரதம், சூல விரதம் போன்றவவை உள்ளன.

**வயிரவ விரதம்:** வைரவப்பெருமானைக் குறித்து அனுட்டிப்பதாகும். சித்திரைப் பரணி, ஐப்பசிப் பரணிகளும் வயிரவ விரதமாகும். இது அனைத்து அஷ்டமிகளிலும் அனுட்டிக்கப்படுவது. செவ்வாய்க் கிழமைகளில் வரும் அஷ்டமி சிறப்புவாய்ந்தது. இவ்விரதம் 21 முறை அனுட்டிக்கவேண்டும். இவர் வாகனமாகிய நாய்க்கு இலையில் உணவளித்து விரதத்தை நிறைவுசெய்யலாம். இவ்விரதத்தின் பயனாக துன்பத்திலிருந்து தப்பிக்கத் தெரியாமல் தடுமாறுபவர்களுக்கு தீர்வு கிடைக்கும். கால பைரவருக்கு முந்திரிப் பருப்பு வைத்து வணங்கினால் திருமணம் விரைவில் நடைபெறும் என நம்பப்படுகிறது.

**வீரபத்திர விரதம்:** இது தை மாதத்தில் வரும் மங்கள வாரமாகிய செவ்வாய்க் கிழமைகளில் அனுட்டிப்பது. இதன் நோக்கம் வாழ்வு நிறைவாக அமையும் என்பதேயாம்.

சூலவிரதம்: இது தை மாத அமாவாசையில் அனுட்டிப்பது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இது இச்சா, ஞானா, கிரியா சக்திகளை குறிப்பன. இவை இறைவனின் சக்திகளாகும். இவ்விரதகாலத்தில், அதிகாலை யில் எழுந்து குளித்து வேறு ஆடை மாற்றி சிவ வழிபாட்டில் இருக்கவேண்டும். 64 சிவமுகூர்த்தங்களின் நாமமும், சிவ அஸ்ட்டோத்திர நாம வழியும் கூறி வழிபாடாற்றி ஒரு நேர உணவு அருந்தலாம். இரவில் உணவு உண்பதைத் தவிர்க்க வேண்டும். இம்மாதத்தில் வரும் நாயன்மார்களின் குருசை தினங்களையும் நினைவுகூருதல் சிறப்பாகும்.

## மாசிமாதம்:

பிறவிக் கடலில் வீழ்ந்து துன்பத்தில் அமிழ்ந்து வருந்தும் உலக மக்களை இறைவன் இன்பவெள்ளமெனும் அருட்க டலில் திளைக்கச்செய்யும் திருவருட் குறிப்பு இம்மாதத்தின் சிறப்பாகும். அந்த வகையில், மாசிமகம், மகாசிவராத்திரி, சங்கடஹரசதுர்த்தி, காரடை நோன்பு, போன்ற விரதங்கள் மேன்மைப்படுத்தப்படுகின்றன. மாசிமகம்: மாசி மாதத்தில் வரும் மக நட்சத்திரம் கூடிய நாள் மாசிமகம் எனப்படும். பௌர்ணமித் திதியுடன் பொருந்தி வந்தால் சிறப்புடைய நாளாக விரதம் அனுட்டிக்கப்படும். 12 ராசிகள் உள்ள தால் 12 வருடத்திற்கு ஒருமுறை சிங்கராசியில் வியாழனும் சந்திரனும் சேர்ந்திருக்க கும்பராசியில் ஞாயிறு இருக் கும்பொழுது வரும் புண்ணிய காலம் மகா மகம் அல்லது மாமாங்கம் என அழைக்கப்படுகிறது. இதை கடலாட்டு விழா பு;கர விழா என்பர். சம்பந்தர், மணிவாசகர், பாடல்களு டன், கல்வெட்டுப் பாடல்களும் சான்று பகர்கின்றன. இது கோலாகலமாக கும்பகோணத்தில் கொண்டாடப்படுகின்றது. பிரமனுடைய அமுத கலசம் பிரளய காலத்தில் கும்பகோணத் தையடைந்து நகராமல் இருக்க இறைவன் வேடவடிவத் தில் அம்புகொண்டு குடத்தை உடைக்க அக்கலச குடத்திலி ருந்து அமுதம் பரவி மகாமகக்குளமாகவும், பொற்றாமரைக் குளமாகவும், பரவியது. இறைவனே கும்பம் இருக்கும் இடம் சென்று அம்மண்ணை எடுத்து லிங்கம் பிடித்ததால் கும் பேஸ்வரராகும். அதனால் அவருக்கு அபிசேகம் நடைபெறு வதில்லை. இந்நாளில் விரதமிருந்து செய்த பாவங்களைப் போக்கும் புண்ணியத்தலமாகும். இதில் அதிகும்பேஸ்வரர் போன்ற 12 சிவன் கோவில்கள். கும்பகோண சிறப்பை அளிக்கின்றன். இலங்கையில் பாலாவி, கீரிமலை, மாணிக்க கங்கை, கிண்ணியா வெந்நீரூற்று முதலியவற்றிலும் பாடல் பெற்ற தலங்களிலும், தீர்த்தமாடி விரத நிறைவு செய்யலாம். அன்று 9 நதிகளில் நீராடிய பலனும் கிடைக்கும்.

முருகப் பெருமான் சிவபெருமானுக்கு பிரணவப் பொருளை மாசிமக நாளில் உபதேசம் செய்தார். அம்பிகை தாமரையில் வலம்புரிச் சங்கில் யமுனையில் இருக்க தக்கன் எடுத்து தாட் சாயினி எனப் பெயரிட்டு வளர்த்த நாளும் அன்றுதான். குழந்தைச் செல்வம் இல்லாதோர் விரதமிருந்து நீராடினால் கிடைக்கும் என்பது ஐதீகம்.

வருண பகவானின் பிரமகத்தி தோத்தை சிவன் மகநட்சத் திர தினத்தில் நீக்கியதாலும், நதியிலோ, ஆற்றிலோ, கிணற் றிலோ சிவசிந்தனையுடன் நீராடினால் பாவங்கள் நீங்கும். என்பது வருணபகவான் வாக்காகும். குருபகவான் பிரம னிடம் புஷ்கரத்தை வேண்டியதும், 12 ஆண்டுகளுக்கொரு முறை மகாகமத் தினத்தன்று கொடுத்தார். மகாமகக்குளத்தில் புட்கர தீர்த்தமும் கலந்து மக்களின் பாவத்தைப் போக்குகின் றது. இத்தினத்தில் பல ஆலயங்களில் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். எனவே இறைவன் புகழ் பாடி விரதமிருந்து தீர்த்தமாடி தானதர்மம் செய்து வாழ்வது என்பது சைவக் கடைமையாகும்.

## சிவராத்திரி விரதம்.:

உயிர்கள் ஒடுங்கிநிற்கும் காலம் ராத்திரியாகும். மாசிமாத கிருஷ்ணபட்ச சதுர்த்தசியில் வருவது மகா சிவராத்திரி. இது நித்திய, பட்ச, மாத, யோக, மகா என ஐந்துவகைப்படும். உல கிலுள்ள எல்லா சிவலிங்கங்களிலும் நள்ளிரவில் சிவபெரு மான் தோன்றுகின்றார். இத்தினத்தில் இறைவனால் அல்லது சிவனால் சிருஷ்டிக்கப்பட்ட எல்லா ஜீவராசிகளும் விழித்தி ருக்கவேண்டும் என்பது விரத நிர்ணய விதி. அன்று நான்கு சாமத்திலும் விதிமுறையின்படி சாத்தும் மலர், நைவேத்தியம்



ஓதும் வேதம் தீப தூப ஆராதனை சிக்கும் முறை போன்றன சிவராத்திரி புராண உற்பவச் சருக்கத்தில் கூறப்பட்டுள்ளது. உபவாசம் இருந்து பஞ்சாட்சர ஜெபம், சிவபுராணம் படித் தல் கேட்டல், சிவபரத்துவக் கதைகள் கூறுதல் கேட்டல் போன்றன செய்தல், அத்துடன் நித்திரை விழித்திருந்து பால், தயிர், நெய், கோசலம், கோமயம் போன்ற பஞ்சகௌ யத்தால் அபிஷேகம் செய்து ,வில்வார்ச்சனையும் செய்து சிவனைப் சிக்கவேண்டும். மறுநாள் அதிகாலை புனிதநீராடி அனுட்டானம் செய்து தானம் கொடுத்து சூரியன் உதித்து ஆறு நாளிகைக்குள் பாரணை செய்தல் வேண்டும். அச்ச மயத்தில் விருந்தோம்பல் செய்வதும் உத்தமம். இந்நாள் சிவாலய தரிசனம் செய்யவும் சிவதீட்டி பெறவும் சிறந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாளாகும்.சிவராத்திரியைப் பற்றிக் கூறும் புராணக் கதைகள் பல உள்ளன.அவற்றுள் பிரமா விஷ்ணு கர்வம் அடக்கிய கதையும், அங்குசன் என்னும் வேடன் இரவு முழுவதும் வில்வத்தால் அர்ச்சித்த கதையும்,கூறப்படுகின்றன. அந்தவகையில் சிவமகா புராணம், கந்தபுராணம், சிவராத்திரி புராணம், லிங்க புராணம் போன்றவற்றில் சிவனின் பரத்துவம் பற்றிக் கூறப்படுகிறது. இத்தினத்தில் விழித்திருக்க இயலாதோர் லிங்கோற்பவ காலம் வரையேனும் விழித்திருக்கவேண்டும். பாலர், விருத்தர், நோயாளிகள் விலக்குப் பெறலாம்.

**சங்கடகர சதுர்த்தி:** மாசிமாத தேய்பிறை சதுர்த்தி செவ்வாய் கிழமையோடு கூடி வரும்போது மாதந்தோறும் அனுட்டிக்கும் விரதமாகும். இதில் மதிய உணவு உண்டு வினாயகர் அகவல், வினாயகர் கவசம் பாராயணம் பண்ணி இரவில் பால், பழம், பலகாரம் அருந்தி நிறைவுசெய்யலாம்.

காரடை நோன்பு மாசி மாதம் நிறைவடைந்து பங்குனி மாதம் ஆரம்பிக்கும்போது அதாவது மாசியும் பங்குனியும் சேரும் நாளில் பெண்களால் அனுட்டிக்கப்படும் விரதமாகும். கார்காலம் விளைந்த நெல்லை குற்றி அதனுடன் காராமணி என்னும் பயறு கலந்த அடை தயாரித்து இறைவனுக்குப் படைப்பது காரடை நோன்பு அல்லது காரடையான நோன்பு எனப்படும். திருமண நிட்சயதார்த்தம் முடிந்த பெண்கள் பிறந்த வீட்டிலும்; புகுந்த வீட்டிலும் சமாதானமாக இருக்க அனுட்டிப்பது.

## பங்குனி மாதம்:

அனைவரையும் ஒன்றுபடுத்தி இன்புற்றிருக்க பணியாற்றி பிணி போக்கும் நன்மாதமாகும். இருமை நீங்கி ஒருமையுற்ற திருமண மாதம் எனவும் கூறப்படுகிறது. இம்மாதத்தில் சிறப்புப் பொருந்தியது பங்குனி உத்தர விழாவாகும்.பங்குனி உத்தரம்: பங்குனிமாத உத்தர நட்சத்திரம் பௌர்ணமியோடு சேர்ந்து கன்னிராசியில் வருகின்ற நாள் பங்குனி உத்தர நாளாக சிறப்புப்பெறுகிறது. எல்லா சிவன் கோவில்களிலும், முருகன் கோவில்களிலும் பங்குனி உத்தர விழா சிறப்பாக நடைபெறும். அன்று விரதமிருந்து இரவு பழம், பாயாசம் உண்பது நன்று. இயலாதோர் ஒருபொழுது உணவருந்தி விரதம் அனுட்டிக்கலாம்.

இந் நன்நாளில் பல தெய்வீக சம்பவங்கள் நடந்தேறிய புராணக் கதைகள் பல உள்ளன.

1. சுந்தரமூர்த்திநாயனார் திருவாரூரில் பொன் வேண்டி செங்கற்களை பொன் கற்களாக மாறியதும்,தம்மையே புகழ்ந்து,,.. எனும் பாடல் பாடியதும் இந்நாளிலே.
2. மதுரை மீனாட்சிஅ ம்மன் சுந்தரேசப் பெருமானை திருமணம் புரிந்ததும் அந்நாளே. அதனால்தான் இவ்விரதம் கல்யாணசுந்தர விரதம் என்றும் அழைக்கப்படும்.
3. இராமபிரான் சீதாதேவியைத் திருமணம்புரிந்தது இப்பங்குனி உத்தர நாளிலேயாகும்.
4. கிருஷ்ணபரமாத்மா அருச்சுனனுக்கு கீதா உபதேசம் பண்ணியதும் இதே நாளிலேயே.
5. முருகனுக்கும் பிள்ளையாருக்கும் இடையில் வந்த மாம்பழக்கதையில் மயிலில் உலகைச் சுற்றி மாம்பழம் கிடைக்காமல் கோபித்துக்கொண்டு பழனிமலையில் அமர்ந்த நாளும் இதுவே.
6. பழனி மலையில் பங்குனி உத்தரத்தில் விசேட அன்னதானமும் இடம்பெறும். பழனிப் பஞ்சாமிர்தம் அன்று விசேடமாகும்.
7. சுந்தரவல்லி, அமிர்தவல்லி முருகனைத் திருமணம் செய்து கொண்டதும் இந்நாளிலேயே.
8. மணலில் இலிங்கம் அமைத்து வழிபட்டு காஞ்சி காமாட்சி ஏகாம்பரநாதரைத் திருமணம் செய்ததும் இந் நாளிலேயே.
9. மன்மதனை சிவன் எரித்ததும், ரதி(மனைவி) வேண்ட அனங்கனாக அவனை அளித்ததும் இத்தினத்திலே யாகும்.
10. ஹரிஹர புத்திரராக ஐயனார் அவதரித்ததும் இன் நாளே.
11. திருமண வயதுப் பெண்களும் ஆண்களும் திருமணம் செய்யும் நன்நாளுமாகும்.
12. பிராமணத் தம்பதியினரிடம் மஞ்சள், குங்குமம், பணம் தட்டில் பெற்று நல்லாசிபெற்று வாழும் நாளாகும். இத்தினத்தில் விரதம் அனுட்டிப்பவர்கள் கணவனின் அனுமதியுடன் விதிமுறைப்படி அனுட்டித்து ஒருபொழுது உணவுடன் விரதத்தை நிறைவுசெய்யலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சித்திரை மாதம் :

தமிழர் ஆண்டுப் பிறப்பும் சித்திரை மாதப் பிறப்பும் ஒன்றாகவே இடம்பெறும். மாதத்தில் சித்திரை சிறந்ததாகவும், முதலாவதாகவும் அமைந்துள்ளது. இம்மாதத்தில் மல்லிகை, முல்லை, பழங்கள், யக்னம்,யாகம், உபநயனம், விவாகம், முதலிய வைதிக காரியங்கள் செய்வதற்கு உகந்த மாலமாகும். இதில் சித்திரை வருடப் பிறப்பு, சித்திரைத் திருவோணம், சித்திரா பௌர்ணமி, சித்திரகுப்த விரதம், ஸ்ரீ ராமநவமி விரதம்,குருவார விரதம்,சுக்கிர வார விரதம், இந்திர விழா,பிரதோவிரதம் போன்றன அனுட்டிக்கப்படுகின்றன. சித்திரை வருடப்பிறப்பு: இலங்கை வாழ் சைவ இந்து மக்களும், பௌத்த சிங்கள மக்களும் ஒருமித்துக் கொண்டாடும் தனிச் சிறப்பப் பெற்றது சித்திரை வருடப் பிறப்பு. இது இலங்கையில் தேசிய விழாவாகும். பலவிதமான பட்சணங்களுடன் விருந்தினர்களை உபசரித்தல், புத்தாடை அணிதல், பெரியோரை வணங்கி ஆசிபெறுதல், பொங்கல் பொங்குதல், ஆகியன இரு மக்களிடையேயும் ஒரே மாதிரியாகக் கைக்கொள்ளப் பட்டுவருகின்றன. எல்லாத் தெய்வங்களின் நிம்பிக்கையுடன் வாழ்வர். நோய் தீரவும், தோநிவர்த்திக்காகவும் முகுலிகைகள் சேர்த்த மருத்துந-ரை தலையிலும் உடம்பிலும் தடவி முதலில் நீராடுவது வழக்கம். தாழம், தாமரைப், மாதுளம், துளசி, வில்வம், வேம்பு, அறுகு, பால், கோரோசனை, கோசலம், கோமயம், பச்சைக்கற்ரம், குங்குமப், மஞ்சள், மிளகு, திப்பிலி, சங்கு, வி;ஞுகிராந்தி, சீதேவியார் செங்கழுநீர் போன்ற மருத்துவக் குணம் கொண்டவற்றை சுத்த ஜலமிட்டு நன்க கொதிக் கவைத்து ஆறிய கடயமே மருந்துநீர். இதை கோவில்களில் பெறலாம். அன்று புத்தாடை அணிந்து சூரியனை வணங்கி கொயில் சென்று அந்த சுபவேளையில் கைவிசீட்டம் பெற்றுக் கொள்ளுதல் நல்ல பண்பாகும். சுப நேரம் பார்த்து மாதா பிதா ஆசீர்வாதம், வியாபாரம், புதுக்கணக்கு,பாடசாலை செல்லுதல், தேசிய விளையாட்டு, விதைப்பு, பயிர் நாட்டல், உறவினரைச் சந்தித்தல், போன்றன நல்ல பண்பை வளர்க்கின்றன.

## சித்திரைத் திருவோணம்:

நடராஜப்பெருமானுக்கு ஒரு வருடத்தில் செய்யப்படும் ஆறு(6) அபிகங்களில் வருடம் பிறந்து முதல் செய்யப் படும் அபிகம் சித்திரைத் திருவோணத்தில் செய்யப்படுவதால் சிறப்புப் பெறுகின்றது. சித்திரா பௌர்ணமி: சித்திரை நட்சத்திரம் கூடிய ரணையே சித்திரா பௌர்ணமியாகும். மக்கள் உள்ளங்களில் மகிழ்வு பொங்குவதனால் சித்திரைக் கஞ்சி சமைத்து உண்பது வழக்கம். மாதம் தோறும் பூரணை விரதம் அனுஸ்டிக்கமுடியாதவர்கள் சித்திரா பௌர்ணமியிலாவது இறந்த தாயாரையும் உலகமாதாவாகிய பராசக்தியையும் நினைந்து விரதம் அனுஸ்டீக்க வேணடும். முருகன் வள்;ளி தெய்வானையுடன் திருத்தணிகையில் அமரந்ததும் சித்திரா பௌர்ணமியேயாகும் .இதனால் முருகன்ஆலயங்களில் கல்யாணத்திருவிழா நடைபெறும். இத்தினத்தில் இராமபிரானுக்கு அயோத்தியில் பட்டாபிசேகம் நடைபெற்றதும் இந்நாளே.மாங்கனிக்கதையில் சிவனையும் உமையையும் பிள்ளையார் வலம் வந்து தாயிற்சிறந்த கோயில் இல்லை என எண்ணியது இத்தினத்திலேதான்.இதனால் தாயை நினைந்து பூரணை விரதம் அனுட்டித்து பிதிர்கடன் செய்வதால் அவர்களுடைய சந்ததியை விருத்தியடையச்செய்யும். .முருகன் பிறப்பிற்குகாரணமான காமன் எரிந்ததை நினைந்து, காமன் பண்டிகையும் கொண்டாடப்படுகிறது.

## சித்திரகுப்த விரதம்:

சித்திரைமாத சித்திரை நட்சத்திரத்தில், பிரமாவின் உடலிலிருந்து சித்திரபுத்திர நாயனார் அவதரித்தமையைக் குறித்து அனுட்டிக்கப்படும் விரதமாகும். இத்தினத்தில் ஆலயங்களில் சித்திரபுத்திர நாயனாரின் கதை படிக்க விரதகாரர்கள் பயபக்தியாக கேட்டுக்கொண்டிருப்பார்கள். இவர் இயமதர்மராசாவின் உதவியாளர். ஜீவாத்துமாக்களின் பாவ புண்ணியங்களைக் கணக்கிடுபவர். சிவனின் சித்திரகூடத்தில் வரைந்த சித்திரத்தைப் பார்த்து உமாதேவியார் சித்திரத்துப் புத்திரனே வருக என்று அழைக்க ஏடும் எழுத்தாணியும் கொண்டு தோன்றியதால் சித்திரபுத்திரன். சிவனின் ஆணைப் படி காமதேனு வயிற்றில் உதித்து சூரியகுமாரனாக விளங்கியவராவார். இவர் உடலியக்கப் பிராணனை பிரித்தெடுக்கும் உரிமையுள்ளதாலும், பசி பட்டினி இல்லாமல் நாடு செழிப்பதாலும், பெண்கள் இவ்விரதத்தை அதிகமாக அனுட்டிப்பார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கள். அன்று அன்னதானம், கஞ்சி, பொங்கல், அபிஷேகமும், சந்தோசப்படுத்தும் முகமாகச் செய்வார்கள்.

சித்திரகுப்தனின் மனைவி காணாம்பிகாதேவி இவ்விரதம் அனுட்டிப்பவர்களை வாழ்நாளில் பிணி காணாமல் போகும் என அவரின் அதி தேவதை கேதுவிடம் வேண்டியது இவ்வி ரத மகிமையேயாகும்.

## ஸ்ரீராமநவமி விரதம்:

சித்திரைமாத பூர்வபட்ச திதியில் ஆரம்பித்து நவமி திதிவரை பிடிக்கும் விரதம் ஸ்ரீ ராமநவமி விரதமாகும். ஸ்ரீ ராம விக்கி ரகம் ஒன்றை பூசையறையில் வைத்து மனதால் தியானித்து உபவாசம் அனுட்டித்து இரவு உணவு உண்ணலாம். அன்று சக்திவாய்ந்த சக்திவாய்ந்த ராம மந்திரம் சொல்லி அன்ன தானம் செய்தல் வேண்டும். இராமகாவியத்தில் இராவணன் அழிவால், பிதா கட்டளையை மீறாமை புத்திரன் கடமை என வும், கணவனே கண்கண்ட தெய்வம் என்று சீதை காட்டில் இன்னல்கள் அனுபவித்தமையும், இராமனைத் துதித்து கற் பில் சிறந்டமையையும் உலகிற்கு உணர்த்தும் விரதமாகும்.

## குருவாரவிரதம் :

பிரதி வியாழக்கிழமை தோறும் கிரகதோசம் நீங்குவதற்காக தட்சணாமூர்த்தியை வழிபடுவது குருவாரவிரதமாகும். வியா ழபகவானுக்கு மஞ்சள் பட்டுடுத்தி மஞ்ச்ள்பூக்களால் அர்ச்ச னை செய்தல். தட்சணாமூர்த்திக்கும் வியாழபகவானுக்கும் அபிஷேகம் செய்து தயிர்சாதம் கடலை நிவேதித்து பின் தானம் செய்வது வழமை. குருதோசம் உள்ளவர்களும் புத்திரப்பேறு இல்லாதவர்களும் இவ்விரதம் அனுட்டித்தால் சிறப்பாகும்.

## சுக்கிரவாரவிரதம்

சித்திரைமாத வளர்பிறையைத் தொடர்ந்துவரும் வெள்ளிக் கிழமைகளில் தேவியைக்குறித்து அனுட்டிப்பதாகும். இது பக லில் ஒரு பொழுது உணவுண்டு அனுட்டிக்கலாம்

**தொடரும்...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமயமும் அறிவியலும்

**தமிழர்கள்** இந்து சமய(வைதீக) நெறிகளைப் பின்பற்றுபவை பொதுவாக பிராமணர்க்கான கொடைகள், வேள்விகள், சடங்குகள் செய்வதன் மூலம் இவ்வுலகில் எல்லா விதமான வெற்றிகளையும் பெற்றுவிடலாம், வீடுபேற்றை அடைந்து(மறுமை) விடமுடியும் என்ற அதீத நம்பிக்கையில் தமது காலத்தைக் கடத்துகின்றனர். ஆனால் ஒரு பொதுமகன் கடைப்பிடிக்க வேண்டிய நேர்மை, வாய்மை, மன ஒருமைப்பாடு, புலனடக்கம் போன்ற ஒழுக்கநெறிகளை அவ்வளவாக இந்துமதம் வலியுறுத்தவில்லை. இந்நடைமுறைகளால் பலன், பயனுண்டா என்பதை நடுவு




கலைவல்லார் (கலாபூசணம்)
நா. வை. குமரிவேந்தன்
(மகேந்திரராசா)
நிறுவநர் இலங்கைக்
குமரித் தமிழ்ப் பணிமன்றம்
மின்பொறியியல்
கண்காணிப்பாளர் (ஓய்வு)
கிளிநொச்சி.


கூறமுடியாததே. உண்ணா நோன்பு இருப்பதால் உணவு செரிப்புஉறுப்புக்கள் சீரடைகின்றது. சட்(ஷ்)டி இருந்தால் அகப் பையில் வரும் என முருக நோன்பின் சிறப்பை பலரும் அறிந்திருக்கின்றனர். அதாவது பல ஆண்டுகளாய் குழந்தைப் பேறு கிடைக்காதவர்களுக்கு குழந்தை கிடைக்க வாய்பிருக்கிறது என்பதை இது சுட்டும். இந்த நோன்பானது திருமணம் ஆகிய இருபாலாருக்கும் உரியதாகும். ஆனால் இன்று திருமணம் ஆகாதவர்களும், 60வது வயதைத் தாண்டியவர்களும் இந்நோன்பைக் கைக்கொள்கின்றனர், ஏன் என்பது புரியாத புதிராகவே உள்ளது.

கோயில் திருவிழாவின் போது கோயிலில் குடிகொண்டிருக்கும் பெருமானை வீதிவலம் கொண்டுவரும் போது அடியழிப்பு என்ற ஒருநிகழ்வு பெண்களால் அரங்கேற்றப் படுகிறது. இப்பயிற்சியின் மூலம் பெண்களின் இடுப்பு விரிவடைகின்றது. இப்பயிற்சியானது மகப்பேற்றுக் காலத்தில் இவர்களுக்கு உதவுகின்றது. பொதுவாக தொல் பழங்காலத்தில் தவத்தார், சித்தர்கள் திருநீறு பூசுவதையும்,கோயில்வீதி சுற்றி உருளுவதையும்,உருத்திராட்சம் காய்மாலை அணிவதையும் வழக்கமாகக் கொண்டருந்தனர். இவை இன்றுவரை தொடர்கின்றது. இத்திருநீறு ஆனது ஒருவர் நீராடிய பின் உடலின் குளிர் ஏறும் பொருத்துக்களான நெற்றி, கழுத்து,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தோள்ப்பட்டை, கை, இடுப்பு விலாவின் பின்புறம் போன்ற இடங்களில் பூசி(தீட்சை) நீர்ப்பிடிப்பை எடுத்துவிடுகின் றன. நீர்ப்பிடிப்பின் மூலம் ஏற்படக்கூடிய நோய்களில் இருந்து உடல் பாதுகாக்கப்படுகிறது.தமிழர்கள் நடுவில் இக்குறியிடும் வழக்கிற்கு(தீட்சை) கட்டுப்பாடு பிராமணர் களால் விதிக்கப்பட்டு இருக்கிறது. இப்பழக்கமானது குறிப் பாக அவுத்திரேலியத் தொல்குடியினரிடம் இன்றுவரை செறிந்து காணப்படுகின்றது. இவர்கள் உடல் முழுவதுமே வெள்ளைக் கோடிட்டு நடனமும் ஆடுகின்றனர்.

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் எனத் தொன்று தொட்டு மரபுவழியாகக் கூறப்படுகின்றதே ஏன்? கோயிலின் படிமம்(இறைவன்) எழுந்தருளி இருக்கும் கரு வறையின் வெளிப்புற உச்சியில் ஒரு மாழை(உலோகம் )யிலான கலசமொன்றை வைத்து அதைச் செப்புப் பட்டி யினால் தொடுத்து கருவறையில் இருக்கும் படிமத்தை நீரினால், இளநீரினால், பாலினால் குளிப்பாட்டும் பொழுது அவை வெளியேறி வெளியில் விழும் இடத்தில் புவித்தொ டுப்பைச் செய்கின்றனரே ஏன்? கோயிலின் வெளிவாசலில் வானளாவ எழுப்பப்படும் கோபுரத்தின் உச்சியில் மாழையி லாக கலசங்களை வைத்து இவற்றைச் செப்புத் தகட்டினால் புவிக்குத் தொடுக்கின்றனரே ஏன்? இக்கலசங்களின் முனை களை மிகக் கூராக ஆக்கி வானை நோக்கி அமைத்து உள்ள னரே ஏன்? கோடையில் நடைபெறும் கோயில் திருவிழாக் காலங்களில் கொடிக் கம்பங்கள் நடப்பட்டு, கொடிச் சீலை யுடன் செப்புக் கம்பி சுற்றப்பட்டு கம்பத்தின் உச்சியிலிருந்து கம்பம் நடப்பட்டுள்ள பீடம்வரை தொடுக்கப்படுகின்றதே ஏன்? ஒரு திருக்கோயிலில் இறை படிமத்தை நிலை நிறுத்த (பிரதிச்டை)சுண்ணம்(பல மூலிகைப் பொருட்கள் கலந்து) இடித்து குடமுழுக்கு(கும்பாபிசேகம்) செய்கிறார்களே ஏன்? கோயில்களில் ஒவ்வொருநாளும் மூன்று வேளையும் படிமத் திற்கு முழுக்கிட்டு வழிபாடு(பூசனை) செய்கிறார்களே ஏன்? முழுக்கிட்ட பால், இளநீர், நீர் கருவறையால் வெளிவரும் போது அடியவர்கள் அதைக் கையில் ஏந்தி வாயிலிட்டு, கண்ணில் பூசி,தலையில் தடவுகின்றனரே ஏன்?காவடி ஆட் டங்களும் நடைபெறுகின்றனவே ஏன்? 12ஆண்டுகளின் பின் மீண்டும் கோயில்களில் குடமுழுக்குச் செய்கின்றனர் எதற்காக என்பதை எப்போதாவது பகுத்தறிவோடு சிந்தித்து பார்த்து இருக்கின்றோமா? இல்லையே! ஏன்? எல்லோரும் செய்கின்றனர், இதில் ஆராய என்ன இருக்கிறது என நினைத்துக் கொண்டு நாமும் செயற்படுகின்றோம். தேடலும் ஆய்வும் தான் எம் அறியாமை போக்கும் அருமருந்தாகும். இதில் பொதிந்து கிடப்பது பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல் தமிழரின் அறிவியல்,மருத்துவம், கட்டிட தொழில்நுட்பச் செய்திகளும் செயற்பாடுகளுமாகும். இவை எல்லாம் எம்மவரிடம் இருந்து 3700 ஆண்டுகளுக்கு முன் சிந்துவெளியில் புகுந்த வைதிகவேத ஆரியரும், 700ஆண் டுகளுக்கு முன் உள்ளிட்ட அராபியரும், 500ஆண்டுகளுக்கு முன் புகுந்த ஐரோப்பியரும் நிலத்தில் தவழும் மழலையராக, விலங்காண்டிகளாக, கொள்ளையராகவும், கொலைகாரரா கவுமே உள்ளிட்டு; தமிழனிடம் இருந்தவற்றை தட்டிப் பறித் துத் தமதாக்கிக் கொண்டு இன்று தமிழனில் சவாரி செய்கின் றனர்.

கும்ப(மாசி)த் திங்கள் மடங்க(ஆவணி)ற் திங்கள் வரை யான காலப்பகுதி கோடை காலமாகக் கொள்ளப்படுகின் றது. ஆனாலும் மீன(பங்குனி)த் திங்கள் தொடக்கம் கடக (ஆடி)த் திங்கள் வரையுமான காலப்பகுதி வெய்யிலோ கொடுமையென்னும் அளவிற்கு தாங்க முடியாத வெம்மை. இக்காலப் பகுதியிலே மிதமிஞ்சிய வெப்பத்தின் காரணமாய் அம்மை, சின்னமுத்து, பறவைக் காச்சல், பொக்கிளிப்பான், கண்நோய், கூவைக்கட்டு போன்ற பல உயிர்கொல்லித் தொற்றுநோய்கள் தோன்றுகின்றன. எனவேதான் மேழ(சி த்திடி)த் திங்களில் பிள்ளை பிறந்தால் அக்குடி கெடும் என்ற னர் நம்முன்னோர். இது எப்படி?

பொதுவாகத் தமிழர்கள் கடக(ஆடி)த் திங்களில் திருமண இணைப்புக்களை மேற்கொள்வதில்லை. ஏனெனில் இம் மாதத்தில் திருமணமானால் இவர்களுக்கு பத்துத் திங்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்தான் குழந்தை கிடைக்க வாய்ப்புண்டு. இன்றுபோல் அன்று கருக்கலைப்பின் மூலம் உயிர்க்கொலை செய்து இனவழிப்புச் செய்யும் கொடூரர்கள் இருந்திருக்கவில்லை. ஒவ்வோர் மனித உயிரையும் தம்முயிராகவே எண்ணினர். மீன(பங்குனி)த் திங்கள் உத்தர நாளையொட்டி ஞாயிறு(சூரியன்) நில நடுக்கோட்டிற்கு வருகின்றது. பகலிரவு சமவேளையாகவும்,ஞாயிறு தலையுச்சிக்கு நேராய் புவிக்கு மிக அண்மித்தும் வருவதால் ஆண்டின் மீயுயர் வெப்பநிலைக் கொடுமை இக்காலப் பகுதியிலேயே காணப்படுகின்றது. இதனால் இக்காலப் பகுதியில் பிறக்கும் குழந்தை, பெற்றெடுக்கும் தாய் பெலவீனர்களாய் காணப்படுவதால் வெப்ப மிகுதியால் தோன்றும் தொற்று நோய்கள் இவர்களைப் பற்றிக் கொள்கின்றது. இதன் காரணமாய் மரணங்கள் கூட ஏற்பட்டு இருக்கலாம். இதனால் இந்நோய் அயலவரை, ஏன் அந்த ஊரையே சுடுகாடாக்கி இருக்கலாம். எனவே தான் மீன உத்தரத்தன்று சிவனுடைய நெற்றிக் கண்ணில் இருந்து தீப்பொறியாக முருகன் தோன்றி காமனை(இக்காம இச்சை தானே ஒரு ஊரே சுடுகாடாகக் காரணமென்பதால்) அழித்ததாகக் கதை கூறுகின்றது. மக்களை வெம்மையினால் ஏற்படக்கூடிய நோய்களில் இருந்து காப்பாற்றவே இக்கதை கூறப்பட்டு இருக்க வேண்டும்.

மேற்குறித்த கோடை காலமாகிய மீனம் தொடக்கம் கடகம் வரையிலான காலப்பகுதியில் கடும் வெப்பத்தின் காரணமாய் வரட்சி ஏற்பட்டு நிலநீர் ஆவியாகி வான்பரப்பில் முகில் கூட்டமாகிறது. இதன் காரணமாய் முகில் ஒன்றோடொன்று மோதி இடிமின்னல் உருவாகி புவியதிரும் வகையில் இடிக்கிறது. இந்நிகழ்வின் போது அதிஉயர் மின்அழுத்தம் உருவாகி முகிலிடையே மின்னலாகி புவியைத் தாக்குகின்றது. இதனால் மக்கள், அவர்களின் இருப்பிடங்கள் எரிக்கப்படுகின்றது, உயிரிழப்புக்களும் ஏற்படுகின்றன. இவை இன்றும் தொடரும் நிகழ்வுகள். இவ்விடர்கள், உயிர் இழப்புக்களில் இருந்து மக்களைக் காப்பாற்ற கோயிற் கோபுரங்களை உயரக் கட்டி இடிதாங்கிகளாக மாழைகளில் கூர்முனையோடு கலசங்களை உருவாக்கி அங்கே நிலை நிறுத்தினர். இக்கூர் முனைகள் முகில்களுக்கு இடையே தோன்றும் உயர் மின் அழுத்தத்தை செயலிழக்கச் செய்து, செப்புப் பட்டியினூடாக ஒழுக்கு மின்னோட்டத்தை புவிக்குக் கடத்துகிறது. இதுவும் கலசம் ஈரப்பற்று உடையதாய் இருந்தால் மட்டுமே இச்செயற்பாடு கைகூடும். இதற்காகவே இக்கலசங்கள் வரகுத் தவச(தானிய)த்தினால் நிரப்பப்பட்டு குடமுழுக்கக் காலத்தில் நிலைப்படுத்தப் படுகின்றன.. இவ்வரகானது 12(பன்னிரண்டு) ஆண்டுகளுக்கு ஈரப்பற்றைத் தன்னகத்தே கொண்டிருக்குமாம். குடமுழுக்கின் போது (12ஆண்டுக்கொரு முறை) மாற்றப்படும். புவித்தொடுப்பு ஈரப்பற்று உடையதாய் இருந்தால் மட்டுமே மின் கடத்தப்பட்டு மக்களின் உயிரிழப்புக்கள் தவிர்க்கப் படலாம். இதன் காரணமாகவே அதிகமான கோயில் திருவிழாக்கள் கோடைகாலத்தில் நடத்தப்பெறுகின்றன. கொடிக் கம்பமும் இச்செயற்பாடு நோக்கியதே. மாரிகாலத்தை விட கோடை கால மின்னல் இடிகளே கூடிய இடரைத் தருவதாகும்.

கோயில் கருவறையில் குடமுழுக்கின் போது படிமத்தை நிலைநிறுத்த எண் மருந்துகளான (அட்டபந்தனம்) கொம்பரக்கு, சுக்காங்கல் தூள், குங்கிலியம், கற்காலி, செம்பஞ்சு, சாதிலிங்கம், தேன்மெழுகு, எருமை வெண்ணெய் போன்ற மூலிகை மருத்துவப் பொருட்களை இடித்துச் சுண்ணமாக்கி பிசைந்து பீடத்தில் இட்டு படிமத்தை நிலை நிறுத்துகின்றனர்.

இது பாடல் வழியாகவும் வெளிப்படுத்தப்படும்
கொம்பரக்கு சுக்கான்தூள் குங்குலியம் கற்காலி
செம்பஞ்சு சாதிலிங்கம் தேன்மொழுகு - தம்பழுது
நீக்கெருமை வெண்ணெயை கூட்டியதை நன்கிடித்து
ஆக்கல் அட்ட பந்தனம் ஆம்.
இன்னொரு பாடலில்
சுக்கான் தூள் சர்க்கரை தொல்பேயன் நற்கனியும்
ஒக்கக் கலந்தமைத்தல் உற்றதரி பந்தனம் ஆம்.

இம்மூன்று மருந்துகளும் கலந்த கலவையை திரிபந்தனம் எனக் கூறப்படுகின்றது. இதைத் தவிர்க்க முடியாத நேரத்தில் பயன்படுத்த முடியும். ஆனால் எண்மருந்தே சிறந்ததென்பர்.

பால், இளநீர், தண்ணீர், பழம், நவமணி, போன்ற 16 வகைப் பொருட்களை தனித்தனியாக குடங்களில் இட்டு அவற்றுள் நீர் நிரப்பி தெய்வப் படிமத்திற்கு குளிப்பாட்டும் போது அவை படிம மூலிகைச் சுண்ணத்துடன் வேதியல் தாக்கம்(**chemical reaction**)உற்று வடிந்து கருவறையால் வெளிச்சென்று கருவறை வெளிப்புற உச்சியில் பொருத்தப்பட்டு இருக்கும் கலசத்தின் புவித்தொடுப்பு இடத்தில்(மண்ணில்) விழுந்து அப்பகுதியை ஈரப்பற்று உடையதாய் ஆக்குவதோடு, அந்நீரைக் கையில் எடுத்து வாயிலிட்டு, கண்ணில் ஒற்றித், தலையில் பூசுகின்றனர் அடியவர்கள். இது அவர்களின் நோய் தீர்க்கும் அருமருந்தாக கொண்டு தீர்த்தம்(தீர் தம்) என்கின்றனர். அத்தோடு மின்னொழுக்கு இடரும் இதனால் தீர்க்கப்படுகிறது. இவையெல்லாம் பண்டைத் தமிழனின் அறிவியல் சார்ந்த செயற்பாடுகளே ஆகும். தொல்தமிழரான தொடக்ககால மாந்தவியலாளர்கள் மாந்த அன்பின்(நேயம்) மேலீட்டால், உயிர் இரக்கத்தினால் ஒவ்வொரு உயிரையும் பாதுகாப்பதற்கு அன்று அவன் கண்ட அறிவியலை எப்படி மெய்யியலாக்கி பிறப்பு என்பது எமக்காகவும், பிறருக்காகவும் வாழத்தான் என்பதை எழுத்தறியாக் காலத்திலேயே இவ்வளவு ஆற்றல் அவனிடம் குடிகொண்டு இருந்ததை உறுதி செய்துள்ளனர் என்பதைக் காணும்போது மனம் கொள்ளையின்பம் கொள்கின்றது.

மனித உடலும் வெளி மருத்துவ செயற்பாடுகள் இல்லாமலேயே தன்குறைகளைத் தானே சீர்செய்யும் வகையில் பிறப்பெடு:த்து இருக்கின்றது. உடலில் ஏற்படும் காயங்கள் முறிவுகள் தானாகவே எந்த மருந்தும் இல்லாமல் இயல்பாய் குணமாவதை நேரடியாகக் காணக் கூடியதாய் உள்ளது. அன்றைய போர் முறைகளில் வர்ம அல்லது மர்மப் போர்கலை கையாளப்பட்டு இருப்பதை அறிய முடிகின்றது. எதிரியின் உடலில் சில குறிப்பிட்ட இடங்களில் ஒரு குறிப்பிட்ட முறையில் தாக்கினால் அதை அவன் தடுக்க முடியாது சுருண்டு விழுவானாம். இன்றைய கராட்டி முறையும்கூட இதைத் தழுவியதாகவே கொள்ளப்படலாம். மனித உடல் பூராகவும் ஏராளமான நாடிப் பின்னல்டள் அமைந்துள்ளன. இந்த நாடிகள் சந்திக்கும் இடங்களை வர்ம அல்லது மர்மப் புள்ளிகள் என்கின்றனர். இச்சந்திகள் அல்லது நடுவங்கள் உடலின் சில முதன்மை உறுப்புக்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பு பட்டுள்ளன. இதைதொல் பழங்காலந் தொட்டே ஒருங்கு(யோக) நெறியாளர்கள், சித்தர்கள் அறிந்து வைத் துள்ளனர். அந்த அடிப்படையிலே தான் இன்றைய அறிவி யல் வளர்ந்துள்ளது என்பதை யாராலும் மறுக்கமுடியாது. இவையெல்லாம் வந்தேறிய வைதீக வேத ஆரியர்களாலும் (வடவர்கள்), அராபிய, ஐரோப்பியர்களாலும் தமிழனிடம் இருந்து தட்டிப் பறிக்கப்பட்டவை. இவர்கள் தமிழ் மண் ணில் கொள்ளைக்காரராகவும், கொலைகாரராகவும் விலங் காண்டி(காட்டுமிராண்டி)களாக உள்ளிட்டனர் என்பதை இருக்குவேதப் பாடல்கள் வெளிப்படுத்தும்.

இன்றைய மருத்துவர்கள் பிணியாளரின் இந்நடுவங்களை நுனிவிரல்களால் சில தடவைகள் அழுத்தியோ, ஊசியினால் குத்தியோ, அல்லது சில காந்தக் கருவியினால் தட்டியோ அப்புள்ளிகளை ஊக்குவிக்கின்றனர். இதனால் இந்நடுவங் களுடன் தொடர்புடைய உறுப்புக்கள் புத்துணர்ச்சி பெற்று சிறப்பாக இயங்கத் தொடங்குகின்றன. அன்றைய ஒருங்கு (யோக) நெறியாளர்கள், சித்தர்கள் தாமரை இருக்கை( பத்மாசனம் அல்லது சுகாசனம்)யில் அமர்ந்து கொண்டும், கழுத்தில், தோள்பட்டையில்(புயம்), மணிக்கட்டுக்களில், தலையில் உருத்திராட்சம் காய் மாலைகளையும் அணிந்து கொண்டு இருப்பதையும் காணமுடியும். அத்தோடு தமது கட்டைவிரல் பெருவிரலால் உருத்திராட்சம் விதைகளை உருட்டிக் கொண்டும் இருப்பவர்களாகவும் காட்சி அளிப்பர். இவ்விதைகள் நேப்பாளம், பர்மா போன்ற இடங்களிலும் மைசூர்(எருமைநாடு) காட்டுப் பகுதிகளிலும் பெறப்படு கின்றதாம். இதில் மைசூரில் இருந்து பெறப்படுபவை தரம் குறைந்தவை என்கின்றனர்.

இவ் உருத்திராட்சம் விதைகள் ஒழுங்கு அற்றவைகளா கவே காணப்படுகின்றன(மேடு பள்ளம்). இவற்றை அணி யும்போது இவ்விதைகள் நாடி நடுவங்களை அழுத்துவதும், கழுத்தில் மாலையாகக் கிடக்கின்ற விதைகள் கழுத்து, நெஞ் சிலுள்ள நாடி நடுவங்களை அழுத்துவதாலும் அதனுடன் தொடர்பு உடைய உடல் உறுப்புக்கள் திறம்பட செயற்படு கின்றன என்கின்றனர். விரல்களில் உருட்டும் போதும் விரல் உள்நுனிகளில் உள்ள நடுவங்கள் அழுத்தப்படுகையிலும் உடலுறுப்புக்கள் அனைத்தும் புத்துணர்ச்சி பெற்று திறம் பட இயங்குகின்றனவாம். பண்டைய நாட்களில் பல் துறைகளிலும் விற்பன்னராய்(முதல்நூல், வழிநூல், சார் புநூல்களை துறைபோகக் கற்றவர்கள்) இருந்த அறிஞர் பெருமக்கள்(ஐந்திரர்) தமது தகுதியை வெளிப்படுத்த இவ் உருத்திராட்சம் காய்மாலையை, முப்புரிநூலை தமது இரண் டாம் பிறப்பாகக் கொண்டு மார்பிலே அணிகின்றனர் என அருங்கலைச்செப்பு என்ற நூல் கூறுவதாக அயோத்திதாச பண்டிதர் கூறுவார்.இங்கு இரண்டாம் பிறப்பென்றது குழ வி(சேய்) தன்தாயின் கருப்பையில் அதன் தொப்பூழ்கொடி ஊடாகவே மூச்சு இடப் புறமார்பு வழியாக ஏறி கண்புரவ நடுவமான மூக்கின் முனையைத் தாண்டி தலையுச்சிக்கு செ ன்று பிடரிவழியாக வலதுபுற முதுகின்வழி இறங்கித் தொப் பூழில் சேரும். தொப்பூழ்கொடி இடது வலது மார்பைச் சுற்றி இருப்பதையே இப்பூநூல் குறிப்பதாக சான்றோர் கூறுவர். தாயின் வயிற்றில் இருந்து பிறப்பது முதல் பிறப்பென்றும், ஐந்திரர் தகுதியைப் பெறுவது இரண்டாம் பிறப்பென்றும் கொண்டதால் முதற் பிறப்பை நினைவு கூறுமுகமாகவே இம் முப்புரி நூலை அணிந்தனராம் என்பர்.

கட்டைவிரலின் நுனிப் பகுதியில்மூளை, பீனியல் சுரப்பி, கார்னியல் நாடி(**brain,pineal gland,carnial nerve**) யுடன்தொடர்புடைய வர்மப் புள்ளிகள் காணப்படுவதால் இவை புத்தூக்கம் பெறுகின்றன. அதேபோல் அடுத்த விர லின் நுனிகள் கண், காது மற்றும் முதன்மை நாடிகளின் வர்மப் புள்ளிகள் காணப்படுவதால் உருத்திராட்சம் விதை களை குறிப்பிட்ட எண்ணிக்கையில் உருட்டும் போது புத்துணர்ச்சி பெற்று செயற்படுகின்றனவாம். ஒரு ஒருங்கு (யோக) நெறியாளர் அல்லது சடங்கு செய்யும் பூசாரிகள் தங்கள் விரல்களின் உள்நுனிகளை கட்டை விரலின் உள் நுனியால் தொடுவதையும், இசை வாணர்களும் இச்செயற் பாடுகளை இடையறாது செய்வதன் நோக்கம் தம்முடலில் எந்தச் சோர்வும் இல்லாது வர்மப் புள்ளிகளை ஊக்கப் படுத் துவதன் மூலம் உடலில் உள்ள சுரப்புக்களை செயற்படுத்தி புத்தூக்கம் கொடுப்பதற்கே ஆகும். அதாவது மூளை,பீனி யல், பிட்யூட்டரி(**brain,pineal,pituitary**)சுரப்புக்களை திறம்பட இயக்க வைப்பதற்கே.

உள்ளங்கைகளை அடிக்கடி உரஞ்சும் போதும், கைகூப்பி வணங்கும் போதும் உள்ளங்கைகளில் உள்ள வர்மப் புள்ளி கள் உடலில் எல்லா உறுப்புக்களுக்குமான சுரப்புக்களையும் இயங்க வைக்கின்ற செயற்பாடுகளே இவையாகும். திருக் கோயில்களுக்குச் சென்றால் பலரும்(ஆண்கள்) முகம் குப்புறப் படுத்து கால்,விரல்கள், முழங்கால்,வயிறு,மார் பு,முகம்,தாடைகள்,உள்ளங்கை போன்ற எட்டு உறுப் புக்களும் ஒழுங்கற்ற தரையில் படும்படியாக தெய்வத் தொழுகை(அட்டாங்க) செய்வதன் மூலம் தமது வர்மப் புள்ளிகளைப் புத்தூக்கம் பெறச் செய்து உடலுக்குத் தேவை யான சுரப்புக்களை சுரக்க வைக்கின்றனர். இவைமாத்திர மா? தெய்வ உலா கோயிலைச் சுற்றி உள்வீதி, வெளிவீதி யில் நடைபெறும்போது பலரும் கரடு முரடான அத்தரையில் கால்நடையாக நடந்தும், உருண்டும் செல்வதைக் காண முடியும். இவை உள்ளங்காலில், உடலில்உள்ள வர்மப் புள்ளிகளைத் தூண்டி உடலை புத்துணர்ச்சி பெறவும், அரத் தக் குழாய்களில் ஏற்படும் கொழுப்புக் கட்டிகளை கரைத்து நெஞ்சடைப்பு நோயில் இருந்து பாதுகாப்பதற்குமாகும். திருமணமான பெண்களும் அடியழித்தல் என்ற சடங்கை தெய்வத்தைச் சுமந்து செல்பவர்களில் பின் தவழ்ந்து செ ன்று அவர்களின் அடிகளை அழிப்பர். இதன் மூலம் பெண் களின் இடுப்பு விரிவடைவதாகவும் மகப்பேற்று காலத்தில் இலகுவாக நலமுடன் மகப்பேறு நடைபெற வழிவகுக்கும். இவையெல்லாம் உடல்நலம் சார்ந்ததும், அறிவியலின் முற் றும் முதிர்ந்த பட்டறிவின் வெளிப்பாடுமாகும். நெற்றியில் பொட்டிடும் இடத்தில்தான் மன ஆற்றலைத் தூண்டுகின்ற வர்மப் புள்ளி இருக்கிறது. தலைவாரி(சீப்பு) கொண்டு தலை மயிரை இடது, வலது, நடு உச்சி என்று பிரித்து வாருகின்ற போது தலையில் உள்ள வர்மப் புள்ளிகள் தூண்டப் பெற்று பல சுரப்புக்களும் சுரப்பதால் மனம் செம்மைப் படுகின்றது. இன்றும் முள்ளுகளைக் கொண்ட இறப்பர் காலணிகளைப் பலரும் அணிவது தூண்டப்படாதுள்ள வர்மப் புள்ளிகளைத் தூண்டுவதற்கே ஆகும். இம் மருத்துவ முறைகளை இன்று அ.ஃகழுத்த (**Acu pressure**)மருத்துவம், குத்தூசி(**Acu-punture**)மருத்துவமெனக் கூறுகின்றனர்.

மனிதனுடைய முள்ளந்தண்டு ஒரு நீண்ட எலும்பாய் இல் லாமல் 33தனித்தனி வளையங்களைக் கொண்ட கோர்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பட்ட கயிறுபோன்ற தண்டுவடமாகும்(**spinal cord**). இவ்வளையங்களும் ஒன்றுக் கொன்று வேறுபட்டவையா கவே காணப்படுகின்றன.கழுத்து, மார்பு, வயிற்றில் வெவ் வேறு வடிவத்திலும், அதன் கீழ்நுனி(குண்டிப்பகுதி) ஒரு முக்கோணம் போலவும் உள்ளது. உடலில் நடைபெறும் எல்லாவிதமான செயற்பாட்டிற்கும் பொறுப்பான மூளை சிலவற்றைத் தண்டுவடத்தின் மூலம் செயற்படுத்துகின்றது. அத்தோடு இத்தண்டுவடத்திற்க உடலின் மற்றெல்லா உறுப் புக்களுடனுமான தொடர்பும் காணப்படுகின்றது. வெகுகா லத்திற்கு முன்னரே ஒருங்கு(யோக) நெறி, சித்தர்களும் இன்றைய கருவிகளைக் கண்டுபிடிக்க முன்னரே அரியபல உண்மைகளைக் கண்டறிந்து, சிந்தித்து, ஆராய்ந்து வெளிப் படுத்தி உள்ளனர். இந்தப் பேரண்டமும், மனிதனும் ஐம்பெ ரும் பூதங்களால்(நிலம்,நீர்,வான்,காற்று,தீ) ஆக்கப்பட்ட வை. ஆனால் இவற்றில் இருந்து வேறு பட்டு மனம் என்ற ஆறாவது குணத்தைப் பெற்றிருக்கின்றான்.

தண்டுவடத்தின் கீழ்நுனியில் இருந்து கழுத்து வரையி லான ஐந்து பகுதிகளில் கீழ் முக்கோண எலும்புப் பகுதி(**coc-cygeal**), 2)மேல் முக்கோணப் பகுதி(**sacral**)இ 3)கீழ் முது குப் பகுதி(**lumbar**) 4) முதுகுப் பகுதி(**dorsal**) 5)கழுத்துப் பகுதி(**cervical**) ஆகியவைக்கு அருகில் தான் முதன்மை யான நாளமில்லாச் சுரப்பிகளான கோணாட்சு(**konads**). விதைப்பை(**overies**) கருப்பை(**adrenal**)இஅட்ரினல் (**thymus**) தைமசு(**thyroid**)இகேடயச்சுரப்பி(வாலசழ னை) அமைந்துள்ளன.இதன் நடுவங்களை மெய்யியலாக மண்,நீர்,தீ,காற்று,வான் என ஐம்பூதங்களைச் சுட்டுகின் றது. இவற்றையே ஒருங்(யோக) நெறி மரபில் மூலாதாரம், சுவாதிச்டானம்,மணிபூரம், அனாகதம், விசுத்தி என ஒருங்கு நெறிச் சக்கரங்கள் என்கின்றனர். நெற்றியின் இரு இமைப் புருவங்களுக்கு நடுவில் மூக்கின் மேற்பகுதி முடியும் இடத்தில் அமைந்துள்ள பிட்யூட்டிரிக்கு நேரே அமைந்திருப்பது ஆக் ஞை(மனவாற்றல்) என்றும்,தலையில் கைப்போதலமசு, பினியல் ஆகிய சுரப்பிகள் அமைந்துள்ள மூளையை சகசு ஏரம் (**sahasraram**) மீமிகு மகிழ்ச்சியின் இருக்கை என் றும் போற்றுகின்றனர். இவையெல்லாம் அறிவாற்றல் மிகு தமிழ் ஒருங்கு(யோக) நெறியாளர்களால் ஆய்ந்தறிந்து வெளிப்படுத்தப் பட்வையாய் இருந்தும் இவை வடமொழி யாளர்களால் வடமொழியில் மொழிமாற்றம் செய்யப்பட்ட பின் மூலங்கள் அழிக்கப் பட்டதையே இப்பெயர்கள் சுட்டு கின்றன. இவை தற்குறித் தமிழரின் ஒத்துழைப்பு இல்லாமல் செயற்படுத்தி இருக்கமுடியாது.

பண்டை ஒருங்கு(யோக) நெறியாளர்களும், சித்தர்களும் மூளை, தண்டுவடம்(முள்ளந்தண்டு), நெஞ்சான்குலை( இதயம்) போன்றவற்றிற்கு முதன்மை கொடுக்காது கண் ணுக்குப் புலப்படாத நாடிகள் பற்றியும், ஒருங்கு(யோக) ச் சக்கரங்கள் பற்றியுமே ஆய்ந்து விளக்கம் அளித்துள்ள னர் எனலாம். உடலின் நரம்புக் கலங்களில் இருந்து பிரிந்து செல்லும் இழைகளுக்கு நாடிகளாக ஆயிரக்கணக் கில் குறுக்கும் நெடுக்குமான நாடிப் பின்னல்கள் அமைந் துள்ளதை காணலாம். நரம்புகளை(**nerve**) ப்போல நாளங்கள் கண்பார்வைக்குத் துலங்காதவை.ஆனால் இந்நாடிகளின் இயக்கங்களைக் கண்டறிந்து விளக்கிய வர்கள் சித்தர்களே. இந்நாடிகள்தான் எண்ணங்களையும், உணர்வுகளையும் உடலின் ஒருபகுதில் இருந்து இன்னொரு பகுதிக்கும், மூளைக்கும் மின் துடிப்புக்களாக கொண்டு செல் கின்றனவாம். குண்டலினி ஆற்றலும்கூட மூலாதாரத்தில் இருந்து கொண்டு நாடிகளின் மூலமே செயற்படுகின்றதாம். நாடிகளுக்கும் உடல் உள நலத்திற்கும் நெருங்கிய தொடர் புண்டு(சித்த மருத்துவம்).

இத்தகையநாடிகள் 72000மேல் உடலில் காணப்பட் டாலும் இதில் குறிப்பாக 10 நாடிகளே முதன்மை ஆன வைகளாகக் கொள்ளப்படுகின்றன. குறிப்பாக இடகலை, பிங்கலை, சுழுமுனை, திருமகள்(இலட்சுமி), கலைமகள்(ச ரசுவதி), மேதா, காந்தாரி, அலம்புடை, சங்கினி, குகு போன் றனவே. தண்டுவடத்தின் ஊடாக தலையில் இருந்து குண்டி வரை செல்லும் ஒரு நுண்ணிய நரம்புக் குழாயே சுழுமுனை எனப்படுகின்றது. இதன் கீழ்நுனியை குண்டலினிக் கமலம் அல்லது மூலாதாரம் எனப்படுகிறது. இச்சுழுமுனை நாடியி லிருந்து இடதுபுறமாக இடகலையும், வலதுபுறமாகப் பின்க லையுமான நாடிகள் மூலாதாரத்தி;ல் தொடங்கி நெற்றிப் பகுதியிலுள்ள ஆக்ஞை வரை ஒரே பக்கமாகச் செல்லாது வலது இடது என மாறிமாறி வளைந்து சுவாதிச்டானம், மணிபூரம் ஆகிய சக்கரங்களை சுற்றிக்கொண்டு ஆக்ஞை வரை சென்று இடகலை இடது நாசியிலும், பிங்கலை வலது நாசியிலும் நிற்கின்றன. இதன்வழியே உயிராற்றல் ஆகிய மூச்சுக்காற்று(சுவாசம்) உள்ளே செல்வதும் வெளியே வரு வதுமாக உள்ளது. இச்சுழுமுனை நாடியினுள்ளே வேறு நாடிகள் காணப்படுவதாகவும், ஆற்றல் மிகுந்த புதிய நாடி யான பிரம்ம நாடி கீழ்முனையில் இருந்து சகசுராரம் வரை செல்வதாகவம் கூறப்படுகின்றது. இதன்மூலம் குண்டலினி ஆற்றல் சக்கரங்களை ஊடுருவி சகசுராரத்தை அடைவதா கவும் , இதுவே அரச(இராச)வீதி என்றும் ஒருங்குநெறி நூல்களில் கூறப்படுகின்றதாம். இங்கு இடகலை, பிங்கலை நாடி மனிதப் பிறவி எல்லாவற்றிலும் செயற்படும். ஆனால் சுழுமுனை நாடி ஒருங்குநெறிப் பயிற்சி உள்ளவரிடமே இயங்கும் என்பர்.

இடகலை, இடது நாசி மூச்சுக் காற்று(சுவாசம்), அமிர்த நாடி இயக்கம் ஞானேந்திரியங்களின் வழிபட்டு தெய்வ சிந் தனை, அன்பு, தியாகம் போன்ற உயர் பண்புகளை ஊக்கு விக்கும் என்றும், பிங்கலை, வலதுநாசி மூச்சுக் காற்று, நச்சு இயக்கம் கன்மேந்திரியங்களின வழிப்பட்டு தன்னலம், சூது, பொறாமை, கோபம் போன்ற கீழ்த்தர உணர்வுகளைத் தூண் டும் என்பர். இதன் காரணமாக உடலில் நச்சுச் சுரப்புக்கள் தோன்றி உடல் நலக்குறைபாட்டை ஏற்ப்படுத்துகின்றது. அதேநேரம் இடகலை(அமிர்த)நாடி செயற்பாட்டினால் நம் பிக்கை, திடம்(தைரியம்), பற்று, அன்பு, மகிழ்ச்சி, நடுநிலை உணர்வு, இணைந்துபோதல் போன்ற பண்புகளும் வெளிப் படுகின்றதாம். முதலில் மனிதனுக்குத் தோன்றும் எண்ணம் நான், எனது என்பதுதான். சிறு குழந்தைகள், பிள்ளைக ளை(2 -10வயதிற் குட்பட்ட)நோக்கிப் பார்த்தால் இவ்வுண் மையைப் புரிந்து கொள்ள முடியும். இதன் சுரப்பிலிருந்தே நாம் எமது எண்ணம் உருவாக பெற்றோர், ஆசிரியர்கள் பிள்ளைகளை வழிநடத்த வேண்டும்.ஐந்தில் வளையாவிட் டால் ஐம்பதில் வளையாதென்பதை உணர்ந்து செயற்பட வேண்டும். இதற்கு சிறந்த ஒரேவழி சிறுவயதில் இருந்தே ஒருங்கு(யோக) நெறியையும், தியானத்தையும் பழகத் தொடங்கினால் நச்சு நாடி(பிங்கலை) இயக்கத்தை தடுத்து இடகலையை ஊக்குவிக்க முடியும். இது நாம், எமது என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையை உருவாக்கும்.

மனிதனின் மூளை, நெஞ்சாங்குலை(இதயம்), மூச்சுக்காற்று(சுவாசம்) போன்ற பெரிய உறுப்புக்களை விட பலசிறிய சுரப்புக்கள் முதன்மையான பங்களிப்பை உடலுக்கு வழங்குகின்றன. இதில் நாளம் உள்ளவை, நாளமில்லாதவை என இருபிரிவுகள் காணப்படும். இவற்றில் வேதியல் நீர்மங்களும்(**chemical liquids**)இ சுரப்புக்களும் சுரக்கின்றன. நாளமுள்ள சுரப்புக்கள் தனித்த பைகளில் இந்நீர்மங்களை சேகரித்து வைத்து தேவைக்கு ஏற்றவிதத்தில் அரத்தத்தில் அல்லது வெளியில் விடுகின்றன. நாளமில்லா சுரப்புக்களில் உற்பத்தியாகும் நீர்மங்கள் நேரடியாகவே அரத்தத்தில் கலந்து விடுகின்றன. இவை மிகச்சிறிய நுண்ணியதாக இருந்தாலும் விளைவுகள் நம்ப முடியாத ஆற்றல் உடையவையாகக் கொள்ளப்படுகின்றன. இவை ஒன்றை ஒன்று சார்ந்தும், எதிர்த்தும், சேர்ந்தும் செயற்படுகின்றனவாம்.

பீனியல் சுரப்பி(**pineal gland**)இ மூளையின் கீழ்ப்பகுதியில் காணப்படுவது. எல்லாச் சுரப்பிகளையும் விட மேன்மை பொருந்தியது. இதை அருட்சுரப்பி,தலைமைச் சுரப்பி, மூன்றாம் கண் என்றும் சிறப்பாகக் கூறப்படுகிறது. இது உடலையும் உள்ளத்தையும் இணைக்கும் இணைப்பு. இச்சுரப்பி மூளையின் அடியில் இரு அரைக் கோளங்களுக் குநடுவில் 100-200 மில்லிகிராம் எடையுள்ள ஒரு சிறிய கொண்டற் கடலை போன்ற தோற்றத்தில் புதைந்து கிடக்கிறது. இது பைன் மரவடிவில் கூம்பு போல் இருப்பதால் இப்பெயர் வழங்கப்பட்டு உள்ளது. முதலில் மருத்துவர்களால் இது கண்டறியப்படவில்லை. பிட்யூட்டரியையே முதன்மையான சுரப்பியாகக் கொண்டு இருந்தனர். தற்போது இப்பீனியல் சுரப்பியே மீசிறந்ததென ஏற்றுக் கொண்டுள்ளனர். கடுகு சிறிது காரம் பெரிது என்பதுபோல பிறப்பில் இருந்து இறப்புவரை மிகச் சுறுசுறுப்பாகச் செயற்படுகிறது. இதன் அமைப்பு வெளிப் பார்வைக்கு கண்போன்றே காட்சி தருவதாம். வெளிப்புறமாக ஒரு பளிங்கு போன்ற வில்லையும் அதனுள் விட்ரியசு அங்கம் எனப்படும் ஒளிபுகும் தன்மையுள்ளயெல்லியும் நிறைந்துள்ளதாம். அத்தோடு ஒளிக்கூருணர்வு கொண்ட கலங்கள் நிறைந்த விழித்திரையும்,அரத்த நாளப்படலங்களும், தனி நரம்பும் உள்ளதென்பர். பெருமூளையில் காணப்படும் அசுட்ரோ சைட்டுக்கள் இதிலும் காணப்படுவதாகக் கூறப்படுகின்றது. உடல் வளர்ச்சித் தரத்தை, நீர்- உப்புச் சமநிலை, சர்க்கரை அளவு, குருதியமைப்பு,உணவுச் செரிமானம்,பாலுறுப்புக்களின் வளர்ச்சி, நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்தும். இச்சுரப்பை ஆழ்ந்த தியானம், குண்டலினி யோகநெறிகளால் தூண்ட முடியுமென்பர்.

பிட்யூட்டரிசுரப்பி இரண்டு கண்புருவங்களுக்கு இடையில் மூக்கின் அடிப்பகுதி சந்திக்கும் இடத்திற்குப் பின்னால் உள்நாக்கிற்கு மேலே மூளையின் அடிப்புறத்தில் கைப்போதாலமசில் ஒரு சிறுகாம்பில் பட்டாணிக் கடலையளவில் தொங்கிக் கொண்டிருக்கிறது. இதன் எடை 0.5கிராம் ஆனாலும் அதில் நீரின்பங்கு 85 விழுக்காடாகும்.இச்சுரப்பிக்குச் சிறிது மேலே ஒரு சிறுகாம்பில் பீனியல் சுரப்பி உள்ளதாம். இன்று மூன்றாம் கண் என்பது பீனியல் சுரப்பிக்கும், நெற்றிக் கண்ணென பிட்யூட்டரி சுரப்பிக்கும் வழங்கப்படுகின்றது. இச்சுரப்பி ஒருநாளில் ஒரு மில்லியனின் ஒரு பங்கு கிராம் மட்டுமே என்றாலும் உலகில் உள்ள சிக்கலான பொருட்களில் இதுவும் ஒன்றென்கின்றனர். இது மற்றைய சுரப்பிகளைத் தன்கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றதாம். இச்சுரப்பியின் செயற்றிறன் காரணமாகவே ஒருவன் திறமைசாலியாக இருப்பதும், மூடனாக இருப்பதற்கும் காரணமென்பர். இளமை, முதுமை, குள்ளம், நெட்டை, குழந்தை கிடைப்பதற்கும் இச் சுரப்பி மனம் வைத்தால் மட்டுமே முடியுமாம்.உடலில் ஏற்படும் காயம், முறிவு போன்றவற்றையும் இதுவே சீர்செய்கின்றது. ஆனால் மனிதனால் இதற்கு நன்றியாய் இருப்பதைத் தவிர வேறெந்த எந்த உதவியையும் செய்யமுடியாது என்றும் கூறப்படுகிறது.

கேடயச் சுரப்பி இது கழுத்தில் குரல்வளைக்குச் சற்றுக்கீழே வண்ணாத்திப் பூச்சி போன்ற வடிவத்தில்(தேனடை) காற்றுக் குழாயில் ஒட்டிக் கொண்டிருக்கிறது. 20கிராம் எடையுள்ளது. ஒருநாளில் 2.8மில்லியன் கிராமின் ஒரு பங்கையே சுரக்கின்றது. வாழ்வின் வேகத்தை தீர்மானிக்கின்றது. சுரப்புக் குறைந்தால் மூடர்நிலை, கூடினால் இயல்பு நிலையில் மாறுபாடாம். பரா தைறொயிட் உடலுக்கான ஆற்றலைக் கூட்டவே இச்சுரப்பு பயன்படுகின்றது. இது செயற்பட அயடீன் ஊட்டம் தேவை என்பதால் கடலுப்பு இத்தேவையை நிறைவு செய்கின்றது.


தைமசு சுரப்பி இது மார்புக் கூட்டின் உள்ளே இரண்டு மூச்சுப் பைகளுக்கிடையில் நடுமார்பு எலும்பின் மேல்பக்கமாக(அனாகதம்) உள்ளது. உடலை நோய் நுண்ணுயிரிகளிடம் இருந்து பாதுகாப்பதே அதன் முதன்மைப் பணியாகக் கொண்டுள்ளதாம். ஒருநாட்டின் பாதுகாப்பு முறைமைகளை விட இதன்பணி மேன்மை ஆனது என்கின்றனர். உடலெலும்பின் நடுவில் உள்ள மச்சை வெண்ணணுக்களைஉற்பத்தி செய்து தைமசு சுரப்பியில் வந்து முதிர்ச்சி பெற்று வெவ்வேறு பணியிடங்களுக்கு அனுப்பப்படுகின்றன. மாற்று உறுப்புப் பண்டுவத்தின்போது இவ்வுறுப்பு செயலிழக்க செய்யப்படுகிறதாம். இல்லையேல் இச்சுரப்பு உடலில் உள் வந்த உறுப்பை எதிரியாகப் நினைத்து ஒதுங்கி விடுமாம்.

அட்ரினல் சுரப்பி இது அமைந்துள்ள இடம் மணிபூரம் என்பர். சிறுநீரகங்களின் மேல் முனையில் அட்ரினல் கார்டெசு, அட்ரினல் மெடுல்லா என இரு சுரப்பிகள் இருக்கின்றன. அட்ரினல் கார்டெசு பற்றாக் குறையினால் களைப்பு, சோர்வு, உணவில் விருப்பமின்மை, ஊக்கமின்மை போன்ற உடல் வாயிலான தாக்கங்கள் ஏற்படலாம். மெடுல்லா மனவெழுச்சி உண்டாகும் வேளைகளில் மட்டும் சுரக்கிறது. வன்மையாகச் செயற்படும் விதத்தில் உடலின் மொத்த ஆற்றலையும் ஒன்று திரட்டும் தன்மைகொண்டதாம்.

இப்படியாக உடலின் ஒழுங்கான செயற்பாட்டிற்கு நாடிகள், நாளங்கள் பல்வேறு சுரப்புக்கள் அவை எப்படியாகச் செயற்படுகின்றன, அவற்றின் அமைப்பு, செயற்பாடு, தொல் மாந்தரின் அறிவியல் எப்படி எழுத்தறியாக் காலத்தில் சமயச் சடங்குகளாக மாறி மாந்தப் பிறவிக்கு எப்படி எல்லாம் உதவியதைக் கண்டோம். இவற்றை இன்னும் ஆழமாக புரிந்து உணர்ந்து கொள்வதற்கு ஒருங்கு(யோக) நெறி பற்றிய நெறிமுறைகளை தெரிந்து கொள்வதன் வாயிலாக உடல் உள அமைதியை, நோயற்ற வாழ்வை ஏற்படுத்த முடியும்.

அந்நெறி இந்நெறி என்னாது அட்டாங்கத்து
நன்நெறி சென்று சமாதியிலே நின்மின்
அந்நெறி செல்வார்க்கு ஞானத்தில் ஏகலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




புன்நெறி யாகத்தில் போக்கில்லை ஆகுமே.

என ஒருங்கு(யோக) நெறியை முன்னிலைப்படுத்தி மூவா யிரம் தமிழ் தந்த திருமூல நாயனாரின் கூற்றை சேக்கிழாரின் பெரியதொன்மத்தின் பத்தாம் திருமறை ஆகிய திருமந்திரம் அறுதியிட்டுக் கூறுகின்றது. அதாவது மனத்தை குழப்பும் வகையில் அந்தநெறி, இந்தநெறி என்று அலையாது எட் டுப்படிகளை(அட்டாங்க) உடைய நன்நெறியை கைக் கொண்டு சமாதியில் நின்றால் அருளை (ஞானத்தை)பெ றலாம், யாகம் போன்ற வேள்வி நெறிகளால் எப்பயனும் இல்லை என்பதே இப்பாடலின் பொருளாகும்.

மனிதனின் நல்வாழ்விற்கான வழிமுறைகள் பலவற்றையும் எல்லாவகையான தமிழர் இலக்கியங்களும் சுட்டிக் காட் டுவதை காணலாம். உயிர் உய்வடைய மனம் கருவியாக அமையும் நிலை, மனத்தின் அமைப்பு, அதன் செயற்பாடு, அதன் ஆற்றல் பற்றிய சமய நூல்கள், மெய்யியல் (தத்துவ )நூல்கள் விரிவாக விளக்கம் தருகின்றன. சமயச் சான்றோர் களின் பற்று(பக்தி) இலக்கியங்கள், அருளுரைகள் மனதை நன்னெறிப் படுத்தும் வழிமுறைகளையே சுட்டி நிற்கின்றன. தமிழ் நாட்டின் அருளாளர்களான ஒருங்கு(யோக) நெறி யாளர்களும், சித்தர்களுமான தமிழ் மெய்யியலாளர்கள் மனித உடல் இயங்கியல் பற்றியும், உடலுக்கும் உளமாகிய மனத்திற்கும் உள்ள தொடர்புகளை அறிந்து, சிந்தித்து, ஆய்ந்து அரியபலஉண்மைகளையும், நுண்மைகளையும் உள்ளடக்கி உள்ளதையும் கண்கூடாகக் காணமுடியும்.

மாந்தர் எந்தெந்த நெறிமுறைகளை கைக்கொண்டு எத் தகைய வாழ்க்கையை வாழ்ந்தால் இவ்வுலகில் சிறப்புற வாழலாம், இறந்தபின் மீண்டும் பிறவாத நிலையை எப்படி அடையலாம் என்பதையும் தீர்க்கமாக வெளிப்படுத்தி உள்ள னர். அத்தகைய வழிகளில் முதன்மையானதும், தலையாய துமாய் இருப்பது ஒருங்கு(யோக) நெறி மட்டுமேயாகும். இதற்கும் திருமூலர் கூறும் முதற்படி ஆசை அல்லது பற்றை அறுங்கள் என்பதுதான்.

ஆசை அறுமின் ஆசை அறுமின்
ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்
ஆசைப் படப்படஆய்வரும் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந் மாமே -- என்பார்.
இதை உலக மெய்யியல் தந்த வள்ளுவனார்
பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை
பற்றுக பற்று விடற்கு -- என்பார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலரும் ஆசையை விடு என்கின்றனரே ஒழிய எப்படி அதைச் செயற்படுத்துவது என்று யாரும் கூறுவாரில்லை.

உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் சிறப்பான வாழ்வை வாழமுடியும். இறந்த பின்னும் மீண்டும் பிறவாத தெய்வ நிலையை அடைய முடியும் என்பதை அறிவுறுத்தி அதற்குரிய வழிமுறைகள் என்ன, என்னவெனக் கூறுவதுதான் அரச ஒருங்கு(இராசயோக) நெறியாகும். இந்தியப் பண்பாட்டிற்கு தமிழர் தந்தகொடையே இசை,நாடகம்,யோகம்நெறி,பற்றுநெறி என்பார் எசு.கே.சட்டர்யீ என்பார். யோகநெறிகள் எனப் பலரும் பலநடை முறைகள் கூறுகின்றனர். ஆனால் இவற்றில் பற்றுயோகம், கர்ம யோகம்,ஞானயோகம், இராசயோகம் போன்ற நெறிகளே முதன்மை ஆனவையாகக் கூறப்படுகின்றது. இவற்றில் முதல் மூன்றும் இராசயோக நெறியுள் அடங்குவதால் அரச ஒருங்கு (இராசயோக) நெறியையே உயர்வானதாக அனைவரும் கொள்வர். இவற்றை முதலில் கைக்கொண்டு நெறிப்படுத்தியவர்கள் தமிழ் நாட்டுத் தமிழ்ச் சித்தர்களே ஆவர். குறிப்பாக பதஞ்சலி என்ற தமிழ் முனிவரே இதை ஒழுங்கு படுத்தி முறைப்படுத்தியதால், இது பதஞ்சலி யோக நெறி என்றும் வழங்கப்படுகின்றது. இக்கலை தமிழ் நாட்டிற்கே சொந்தமானது. ஆனாலும் வைதீகவேத ஆரியரின் அடுத்துக் கெடுப்பால் யோகநெறி நூல்கள் தமிழில் இல்லாது அழிக்கப்பட்டு வடமொழியில் மட்டும் உலாவருகிறது. இவர்கள் இன்றுவரை தமிழ், தமிழரென்றால் கெடுப்புச் செயற்பாடுகள்தான். தமிழ்மொழி இந்நாள்வரை கோயில், இன்பியல், துன்பியலுக்கான வீட்டுமொழி ஆகவில்லையே! இதைவிடத் தாழ்வு தமிழனுக்கு வேறு உண்டா?

இயம நியமமே எண்ணிலா ஆதனம்
நயமுறு பிராணாயாமம் பிரத்தியாகாரம்
சயமிகு தாரணை தியானம் சமாதி
அயமுறு அட்டாங்க மாவது மாமே -------- திருமூலர் திருமந்திரம்.

தீதுநீக்கல்(இயமம்):-- கொல்லாமை, வாய்மை, களவாடாமை, நெறிதவறாமை, கொடை(தானம்) பெறாமை போன்ற பலவும்.

நல்லனசெய்தல்(நியமம்):-- அற, அறிவு, ஒழுக்க நூல்களைக் கற்று அதன்படி ஒழுகல்.

இருக்கை(ஆதனம்-ஆசனம்):-- உடலைச் சமநிலையில் நேராக நிறுத்தல்.

மூச்சு(பிராணாயாமம்):-- உயிராற்றலை அடக்கல், கட்டுப்படுத்தல், மூச்சுப் பயிற்சி.

புலனடக்கம்(பிரத்தியாகாரம்):-- ஐம்பொறிகளால் உண்டாகும் ஐம்புல இச்சைகளையும், உலக சுகங்களில் இருந்து விடுபடல்.

ஒருமுகப்படுத்தல்(தாரணை):-- மனத்தை ஒருநிலைப்படுத்தி ,ஓரிடத்தில் குவித்தல்.

சிந்தனை(தியானம்):-- ஒன்றுபற்றி ஆழ்ந்த இடையறாச் சிந்தனை.

அடக்க(சமாதி)நிலை:-- மெய்மறந்த உயர்ந்த நினைவு நிலை

இவற்றைத் திருமந்திரப் பாடல்கள் 554, 556, 559, 561, 563 என்பன விரிவுபடக் கூறும். இவ் எட்டுப்படிச் செயற்பாடுகளையும் உற்றுநோக்கிச் சிந்தித்தால் இது ஒருஊறுநிலைச் செயற்பாடாய் காணமுடியும். ஒன்றிலுருந்துதான் அடுத்த நிலைக்குச் செல்ல முடியும். தீயதை அகற்றினால் தான் நல்லதைச் செய்ய முடியும். இம்மமைதி நிலை உள்ளத்தில் உண்டாகும்போது இருக்கைகளை இலகுவாகச் செய்ய முடியும். இருக்கைகள் புத்துணர்ச்சியையும், புத்தூக்கத்தையும் தரும். இந்நிலையில் மூச்சைக் கட்டுப்படுத்தி தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க இம்மூச்சுப் பயிற்சி(பிராணாயாமம்)பெரிதும் உதவும். இதன்வெற்றி என்பது ஐம்புலன் அடக்கத்தில் தங்கியுள்ளது. ஐம்புலக் கட்டுபாடு உடலில் குடிகொள்ளும் போது ஒருமுகச் சிந்தனை உருவாகி தியானமாகிச் சமாதிநிலையை அடைய முடியும். இந்நிலை தொடர்ந்த பயிற்சியின் ஊடாகப் பெறப்படும். பொதுவாக இருக்கையைச் செய்யத் தொடங்கும் போது இறைபோற்றியை அல்லது 1, 2, 3,.என தன்னால் அந்த இருக்கையை செய்ய முடிந்தவரை சரியான முறையில் எண்ணுக் கணக்கை மனதில் எடுத்துச் செல்லும் போது(தவறுவிடாது) வேறொரு சிந்தனை குறுக்கிட முடியாது. இது ஐம்புலன் அடக்கத்திற்கும், மனதை ஒருநிலைப் படுத்தவும் உதவி புரிகின்றது. இவை பயிற்சியின் ஊடாகக் கண்ட உண்மைகள். இங்கு மூச்சுப் பயிற்சியும், ஐம்புலனடக்கத் தியானமும் முன்னிலை வகிக்கின்றது. பொதுவாக ஒருவரின் உடல் உள ஆற்றலின் வெளிப்பாடு இவை மூலமே வெளிப் படுத்தப்படும். இவ்வெளிப்படுத்தல் ஏனைய நிலைகளின் செயற்பாடு இல்லாமல் முழுமை பெறமுடியாது என்பதை மனம்கொள்ள வேண்டும். உடற் பயிற்சி மூலம் தசைகளை முறுகச் செய்து உடலின் கட்டழகுத் தோற்றத்திற்கு மெருகூட்டலாம் ஆனால் ஒருங்கு(யோக)நெறி உடல்,உள, நாடி,நாளங்களை ஒழுங்காகச் செயற்பட வைத்து மூளை, நெஞ்சாங்குலை(இதயம்),ஈரல், பித்தப்பை, சிறுநீரகம், சுரப்பிகளை சீராக இயங்கச் செய்து மாந்தனின் உடல், உள மேம்பாட்டிற்கு நோயில்லாப் பெருவாழ்விற்கு வழிசமைக்கின்றது. குறிப்பாக மூச்சுப் பயிற்சி, குண்டலினி பற்றி சற்று விரிவாகத் தெரிந்து கொள்ளவது நலம் பயப்பதாய் இருக்கும். மூச்சுப்பயிற்சி(பிராணாயாமம்) உடலில் உள்ள ஆற்றலை(சக்தி) அடக்கி ஆள்வதும் உடலில் செயற்படும் இயக்கமாகத் தோன்றுவதும், எண்ணற்ற ஆற்றலாக வெளிப்படுவதும் ஆகும். இது உயிரைக் கட்டுப்படுத்தி உள அமைதியை,மன ஆறுதலை, விடுதலையை, மரணமில்லாப் பெருவாழ்வை பெற உதவுகின்றது.இப் பயிற்சியின் போது கண்களைமூடி காற்றை உள்ளிழுத்து வெளிவிட வேண்டும். அப்பொழுது ஓம், ஓம் என்றோ, ஆமென், ஆமென் என்றோ வாயில் முணுமுணுத்துக் கொள்ளலாம்.

மூச்சை மூக்கின் துளைவழி உள்ளிழுத்தல் 16 மாத்திரை அளவு பூரகம் என்றும்,

மூச்சை மூக்கின் துளைவழி வெளிவிடல் 32மாத்திரை அளவு இரேசகம் என்றும்,

உள்ளிழுத்த மூச்சை உடலுள் அடக்குதல் 64 மாத்திரை அளவு கும்பகம்என்று பெயரிட்டு,

இந்நேர அளவுகளில் பயிற்சியைத் தொடரலாம் என்றும் தனது திருமந்திரவழி செப்புவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறுதல் பூரகம் ஈரெட்டு வாமத்தால்
ஆறுதல் கும்பகம் அறுபத்து நாலதில்
ஊறுதல் முப்பத்தி ரெண்டதி ரேசகம்
மாறுதல் ஒன்றின கண் வஞ்சகமாமே --- (திரும.568)

எனக் கூறும். திருமந்திரங்கள் 567, 569, 571, 575, 576. என்பனவும் மூச்சுப் பயிற்சி விரிவாக விளம்புகின்றன. மேற்குறித்த பனுவலின் வழி பயிற்றப்பட்டவர்கள் காலனை உதைத்து விரட்டுவராம். இப்பயிற்சி நெறி குண்டலினி ஆற்றலைப் பெறவும் உந்து ஆற்றலாய் உள்ளது.

குண்டலினி ஆற்றலானது சுழுமுனை(சுஷும்னா) நாடிவழி மலவாசலுக்கு 2அங்குலம் மேல் (மூலாதாரம்)தொடங்கி மேல்நோக்கி எழுந்து ஆறு நடுவங்களை(மையங்களை)த் தாண்டி ஏழாவது

நடுவத்தில் நிலை கொள்ளும் என்பர்.

குண்டலினி ஆற்றலைப் பெற்றவர்கள் (திருமந்.569) என்றும் இளமையையும், காற்றைப்போல் விண்ணிடை பறக்கும் ஆற்றலையும் பெறுவராம். திருமந்.576 இன்படி இவ்வுடலிலே குடிபுகுந்த இரு மங்கையராகிய இடகலை, பிங்கலை(நாடிகள்) என்பர் மூக்கு வாயிலாக 12அங்குலம் ஓடிஓடி மீள்வாராம். இதில் 8அங்குலம் தாம் எடுத்துக் கொண்டு4அங்குல மூச்சை வீணேபோக்காமல் 568இல் குறிப்பிட்டபடி கூட்டிக் கொண்டால் இறைநிலை அடையலாம் என்பார் திருமூல நாயனார்.

| நடுவம் | அமைப்பு | சுரப்பி | மெய்யியல் | பயன் |
|---|---|---|---|---|
| மூலாதாரம் | மலவாசலுக்கு 2அங்.மேல் | டெசுடெசு (விதைப்பை) | நிலம் நல்வாழ்வு,வாக்கு | வன்மை |
| சுவாதிட்டானம் | பாலுறுப்பு (யுனைஇந்திரி) | ஓவறிசு(கருப்பை) | நீர் | புலன் அடக்கல் |
| மணிபூரம் | தொப்பூழ்கொடி(நாபி) | அட்ரினல் | நெருப்பு | உடல்நிலை அறிதல், நோய் நீங்கல் |
| அனாகதம் | நெஞ்சாங்குலை (இதயம்) | தைமசு | காற்று | வாக்குவன்மை, புரியாதவை புரிதல் |
| விசுக்தி | நாவின்அடி (தொண்டை) | கேடயச்சுரப்பி | வான் | மூதறிஞன், சுகதுக்க பாகுபாடு நீங்கல் |
| ஆக்ஞை | கண்புருவ நடுவம் | பிட்யூட்டரி(நெற்றிகண்) | மனம் | தெய்வீகநிலை,ஒளி |
| சகச்ராரம் | தலை | பீனியல்(3ம் கண்) | ஐம்பூதம் | சமாதிநிலை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆன்மீகச் சஞ்சிகை
# சிவஒளி
## மின்னிதழ்– ஒளி 09,
## தைமாதம் 2021
## வாசகர் பார்வையில்


தமிழர்களின் மேலான
சமயம் சைவ சமயமே

**சிவஒளி**அட்டைப்படத்திலுள்ள,மலேசியா பத்துக் கோவில் முகப்பில் அமைக்கப்பட்டுள்ள முருகப்பெருமான் அடியார்களுக்குஅருள்பாலிக்கும் திருவுருவக்; காட்சி இவ்விதழுக்கு தெய்வீகமணம் ஊட்டுகின்றது. அத்துடன் சிவஒளி வாகர்களுக்கு இனியதைப்பொங்கல் வாழ்த்துக் கூறும் தமிழர் பண்பாடும் தென்படுகிறது. அட்டையின் முன் பக்கத்திலேயே வாசகரைக் கவரத்தக்க தலைப்புக்களாக கீழடிஆய்வு, சித்தரின் சீனத் தொடர்பு, யாள காட்டுப்பகுதியில் 2000 ஆண்டுக்கு முற்பட்ட சிவநகரம், தர்மாசிரியர் பரீட்சைவழிகாட்டி என தலைப்புக்களைத் தந்திருக்கும் இதழ் அமைப்பு உத்தி,சிவ - ஒளியைக் கல்விசார் இதழ் தரத்திற்கு உயர்த்தியுள்ளது. மேலும் உள்ளடக்கப் பக்கம் நன்கு ஒழுங்குபடுத்தப்பட்டு சமயம், வரலாறு, பண்பாடு,கலை இலக்கியம் எனவகைப்படுத்தி,அவ்வப் பகுதிக்குரிய கட்டுரைகளை நிரைப்படுத்தி அவற்றை எழுதியவரின் பெயர்,கட்டுரைகளின் பக்க எண்கள் எனத் தந்துள்ளமை, வாசகரைக் கவரத்தக்கதாக உள்ளது. இப்பண்புகள் யாவும் சிவஒளி இதழ் அமைப்பின் சிறப்பை வெளிப்படுத்துகின்றன.



பேராசிரியர்
**பாலசுந்தரம் இளையதம்பி**
தமிழ்த்துறைத் தலைவர்
அண்ணாமலை கனடா
வளாகம்.
ரொறன்ரோ.

இதழில் முதலாவதாகஒளியில் ஒளியாகி -- உயிரின் உயிராகி எனச் சிவதத்துவ அடிப்படையிலான தலைப்பில் எழுதப்பட்டுள்ள கட்டுரை இவ்விதழுக்கு உயிரூட்டுகிறது. யாதும் ஊரேயாவரும் கேளிர்என்பது பண்டைத் தமிழின் உலகு தழுவிய பண்பாட்டு நோக்கு. அதுவே மானுட அறமுமாகும் .சைவம் எந்தமதத்தவரையும் மனம் நோகச் செய்வதில்லை. எல்லோரையும் அரவணைத்து,எல்லா மதத்தவரையும் சமமாகவே மதிக்கிறது. ஒவ்வொரு மதத்தினரும் தத்தம் மதத்தைப் போற்றும் உரிமையும் கடமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







யும் உடையவராவர். ஆனால் பிறமதத்தவர்களைப் புண்படுத்தவோ அல்லது மதமாற்றம் செய்வதற்கோ,அறத்திற்கு எதிரான மறச் செயலர்களில் ஈடுபடுவதற்கோ எந்தமதத்தினருக்கும் உரிமை இல்லை என்பதைப் பகுத்தறிவாளர் அறிவர் என்ற கருத்து இக்கட்டுரையில் அமைந்திருத்தல் காலமும் சமூகமும் பொருந்த அமைந்த பொருண்மையாகும். புலம்பெயர்ந்து வாழும் தமிழர் தத்தம்நாடுகளில் கோயில் வழிபாட்டுடன் சிறந்து வாழ்கின்றனர் என்பது மகிழ்ச்சி தருவதாகும். அதேவேளைஅவர்கள் தாயகம் நோக்கியசமய-சமூகப்பணிகளில் ஈடுபடவேண்டிய காலத்தின் தேவையை சிவஒளி ஆசிரியர் இக்கட்டுரையில் வேண்டுகோளாக வாசகர்களுக்கு விடுத்திருக்கும் செய்தி கூர்ந்து நோக்கத்தக்கது.

தென்கயிலைஆதீனம் ஈழத்தில் மேற்கொண்டுவரும் மானுடம் தழுவியபணிகளின் தொடர்ச்சியாகப் போசாக்குக் குறைவுடன் வாழும் 1200 தாயகச் சிறுவர்களுக்குப் போசாக்கு உணவு வழங்கும் திட்டம் பற்றியும், அதனோடு தொடர்புடைய செயற்பாடுகள் பற்றியும் புகைப்படங்களுடன் தரப்பட்டுள்ளகட்டுரைச் செய்திகள் வாசகர் நெஞ்சைத் தொடுவனவாகும்.

இதழின் சமயம் என்ற பிரிவில் தைமாதநிகழ்வாக தைப்பொங்கல் மகத்துவம் பற்றியகட்டுரை இளையதலைமுறையினரின் படங்களுடன் வெளியிடப்பட்டுள்ளமை இளையோரைச் சமயநடைமுறைகளின்பால் ஈடுபடுத்தும் நோக்குடையது என்பதைச் சிறப்பாகக் குறிப்பிடவேண்டும். அதனைத் தொடர்ந்து,சைவத்தின் சிறப்பு,அதன் தொன்மை வரலாற்றுப் பெருமை என்பனவற்றை தக்கசான்றுகளுடன் எடுத்து விளக்கும் கட்டுரை இடம்பெறுகிறது. சிந்துவெளியில் கி.மு. 5000 ஆண்டுக்கு முற்பட்டகாலத்தில் நிலவிய சிவவழிபாடுபற்றிக் கூறி, அவ்வழிபாடு உலகின் பலநாடுகளிலும் இடம் பெற்றிருந்தமையைச் சான்றுகளுடன் எழுதபட்டுள்ள இக்கட்டுரை சிவஒளி இதழுக்குச் சிறப்புச் சேர்த்துள்ளது. அத்துடன் தடம் புரண்டு மாற்றுச் சமயத்திற்கு மாறும் சைவத்தமிழரைச் சிந்திக்கவைப்பதாகவும் அமைந்துள்ளது.

தாயகத்தில் சாவகச்சேரிநகர் மையத்தில் 12ஆம் நூற்றாண்டில் சோழமன்னர் அமைத்தவாரிவானேசர் சிவன் கோயில் போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்டமைவரலாறாகும். அக்கோயில் இப்போதுமீளமைக்கப்பட்டுச்,சிறந்தமுறையில் வழிபாட்டுத்தலமாகஅமைந்துள்ளது. அதுபற்றியசெய்திகளைக்கொண்டமைந்தகட்டுரைசைவசமயிகளுக்குமிக்கமகிழ்ச்சிதருவதாகும். அடுத்துசைவசித்தாந்தத்தில் குருலிங்கசங்கமவழிபாடுஎன்றகட்டுரைசிவலிங்கவழிபாட்டின் தத்துவங்களைநன்குவிளக்குவதாகும். உருவம்,அருவம் என்பனபற்றிய விளக்கங்களைச்சைவச் சான்றோர் கூற்றுக்களிலிருந்துசான்றுகாட்டிவிளக்கியிருத்தல் பாராட்டுக்குரியது.

தமிழின் தொன்மைவரலாறுபற்றியதரவுகள் அண்மைக்காலமாகதமிழகத்திலும் ஈழத்திலும் நடைபெற்றுவரும் அகழ்வாய்வுகளால் நிறுவப்பட்டுவருகின்றன. அவ்வகையில் தமிழரின் தொன்மைஆய்வுத் தளமேகீழடிஎன்றகட்டுரை கூறும் தரவுக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ளையும் வரலாற்றுண்மைகளையும் தமிழர் அனைவரும் படித்த றியவேண்டியகாலக்கட்டத்தில் நாம் வாழ்கிறோம் என்றவகையில் இக்கட்டுரைமுதன்மைபெறுகின்றது.

தொடர்ந்துஅமைந்துள்ளசித்தர்கள் பற்றியகட்டுரைதமிழரின் பண்பாட்டுவரலாற்றுடன் தொடர்புடையதாகும். கி. பி. 6ஆம் நூற்றாண்டிலேதமிழ்நாட்டைச் சேர்ந்ததமிழ்ப் புத்தமதத் துறவி போதிதருமர்என்பவர் சீனாவுக்;குச் சென்றுவர்மக்கலைபயிற் றுவித்தசெய்தியைஏழாம் அறிவு:என்றதிரைப்படத்தின் வழியாகப்பொதுமக்கள் அறிந்திருப்பார்கள். ஆனால் சங்ககாலம் முதலாகத் தமிழர்கள் சீனாவுக்குச் சென்றிருக்கிறார்கள்; அவர்களுக்குமருத்துவக்கலைபோதித்திருக்கிறார்கள்.அதுபோன்றே சீனமருத்தவமுறைகளைஅங்குசென்றசித்தர்களும் அறிந்து வந்துதமிழகத்தில் மருத்துவப்பணிசெய்துள்ளார்கள் என்பதை இக்கட்டுரைஅறியத்தருகிறது.

சித்தர் பாரம்பரியத்தில் ஈழத்திலும் சித்தர்கள் வாழ்ந்துள்ளனர். 20ஆம் நூற்றாண்டில் சித்தானைக்குட்டிச் சித்தர்,குடைச்சாமியார்,யோகர் சுவாமிகள்,தேரடிச்சித்தர்செல்லப்பா,நவநாதசித்தர் என இருபதுக்கும் மேற்பட்டசித்தர்களின் பெயர்கள்அறியப்படுகின்றன. இப்பின்னணியில்,மானிடகுல இராவணனாரின் சமாதியைமனிதகுலசித்தர் காலாங்கிநாதசித்தர் தரிசித்தார் என்றதலைப்பில் அமைந்தகட்டுரைவாசிக்கப்படவேண்டியதாகும்.

அனுராதபுரம்,பொலன்னறுவைஆகியபழைய இராசதானிப் பகுதிகளில் தமிழர் குடியிருப்புகளும்; சைவஆலயங்களும் நிலைபெற்றிருந்து,காலப்போக்கில் அழிந்துவி;ட்டஃ அழிக்கப்;பட்டசெய்தியும்ஈழ வரலாறாகும். ஆனால் அண்மைக் காலமாகசிவஒளி மூலம் அங்குஅழிநிலையிற் காணப்படும் சைவஆலயங்கள் பற்றித் தேடித்தேடிஆராய்ந்துகண்டுபிடித்து மக்களுக்குஅறியப்படுத்தும்அறிஞர்களைதமிழினம் போற்றவேண்டும்.அவ்வகையில் இவ்விதழில்அனுராதபுரம் புனிதநகரில் பழைமைவாய்ந்தகாளிகோயில்என்றதலைப்பிலுள்ளகட்டுரையும்வரலாற்றுமுதன்மைபெறுகிறது. ஈழவரலாற்றில் சோழர் ஆட்சிக்காலம் சைவத்திற்கும் தமிழுக்கும் பொற்காலமாகும். அக்காலத்தில் பொலன்னறுவையைத் தலைநகராக்கி,சிவாலயங்கள் அமைத்துச் சைவத்தையும் தமிழ்ப் பண்பாட்டையும் நிலைபெறச் செய்தமைபற்றியதவல்களைக் கொண்டதாகபொலன்னறுவைக் காலசைவசமயம் பற்றியகட்டுரைமிக்கபயனுடையபலதகவல்களைக் கொண்டுள்ளது.

ஈழத்தில் இந்துதருமாசிரியர் கல்விகற்பிக்கப்பட்டுவருதல் நல்லதொருசெய்தியாகும். அக்கற்கைநெறிபயிலும் மாணவருக்கும் பயன்படத்தக்கவகையில் எழுதப்பட்டுவரும் கட்டுரைத் தொடரில் சமயஞானிகளும் பெரியார்களும்என்றகட்டுரைசமயப் பெரியார்கள் பற்றியதகவல்களைக் கொண்டுள்ளது.

தமிழர் சித்தமருத்துவக்கலையைப் பேணிவந்துள்ளனர். அறிவியற் புலத்தில் தமிழகத்திலும் ஈழத்திலும் உள்;ள பல்கலைக்கழகங்களில் சித்தமருத்துவக் கல்விகற்பிக்கப்பட்டுவருகிறது. அத்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஒரு வலிமையான தலைநிமிர்ந்த சமூகத்தை உருவாக்க தாய் மொழிக் கல்வி அவசியம்

பெற்ற தாயைவிட சிறந்தது தாய்மொழியாகும். எந்நாட்டவராக இருப்பினும் அவரவர் தாய் மொழியிலேயே கல்வி கற்பதுதான் மிகச் சிறந்ததாகும். 'தாய் மொழி கண் போன்றது பிற மொழி கண்ணாடி போன்றது' என்பது பொன்மொழி. கண்ணாடிகளுக்காக கண்ணை இழக்காமல் வாழ்வது குறித்து வளரும் தலைமுறைக்கு வழிகாட்டுவோம்.


துறையில்எழுதப்பட்டுள்ளசித்தமருத்துவமும் விஞ்ஞானமும் உணவுமுறைகளும்என்றகட்டுரைநடைமுறைவாழ்க்கைக்குப் பயன்தரும் பலதகவல்களைக் கொண்டுள்ளது.

சைவசமயத்தின் தொடக்கவரலாறுகாண்பதுஅரியதொருபொருண்மையாகும். அவ்வகையில் சைவத்தின் தொன்மை,அதன் பாரம்பரியசமயநடைமுறைகள் அதன் தோற்றக்களமாகியகுமரிக்கண்டம் பற்றியபலவிடயங்களைஉள்ளடக்கியதாகஅமைந்தஅர்த்தமுள்ளசைவம்என்றகட்டுரையைநான் பெரிதும் விரும்பிப் படித்தேன். குமரிக்கண்டத்தில் தோற்றம்பெற்று வளர்ச்சிபெற்றதமிழர் நாகரிகம்,காலப்போக்கில் ஆழிப்பேரலைகளால் அழிக்கப்பட்டதும்,எஞ்சியோர் வடக்குநோக்கியும் மேற்குநோக்கியும் புலம்பெயர்ந்துசென்றுநாகரிகங்களைத் தோற்றுவித்தனர் என்பதும்உலகவரலாற்றுச்செய்திகளாகும்.

ஈழத்தில் சைவப்பணியும் சமூகப்பணியும் ஆற்றியபெருந்தகை தங்கம்மாஅப்பாக்குட்டிஅவர்களைநினைவுகொள்ளும் வகையில் எழுதப்பட்டதுபோன்று,ஈழத்தில் வாழ்ந்த ஏனைய சைவப் பெரியார்கள் பற்றியகட்டுரைகளும் சிவஒளியில் இடம்பெற வேண்டும் என்பதுஎனதுவிருப்பமும் வேண்டப்படுவதுமாகும்.

சிவஒளியைமின்னிதழாகஉருவம் அமைத்து,உலகெங்கும் பரவச் செய்தமையும் சிவனருளேஆகும். அதற்குரியபணிகளை மேற்கொண்டுவருவோருக்கு இறையருளும் கைகூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கடந்த சிவஒளி மின்னிதழ்களையும் ஆன்மீகச் செய்திகளையும் பார்வையிட

# சிவஒளி இணையத்திற்கு செல்க....

# http://sivaoli.com/

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தானெனை ஆண்டவன்

# மறைந்தும் மறையாதவர்கள் வித்தவான் வேந்தனார்

## வித்துவான் வேந்தனார் பற்றி....

**வித்துவான்** க.வேந்தனார் (நவம்பர் 5, 1918 செப்டம்பர் 18, 1966) யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த மரபுவழித் தமிழ்ப் புலமையாளர்க ளுள் ஒருவர். இவர் சிறந்த தமிழ றிஞராய், தமிழ்ப் பற்றாளனாய், ஆசிரியராய், கவிஞராய், சொற்பொ ழிவாளராய் வாழ்ந்தவர். பத்துப் பாட்டு முதல் பாரதியார் பாடல்கள் வரை ஆராய்ந்து தெளிந்த கட்டுரை கள் எழுதியவர்.



வேந்தனார் யாழ்ப்பாணத்து வேல ணையைப் பிறப்பிடமாகக் கொண் டவர். கனகசபைப்பிள்ளை, தையல் முத்து அம்மையார் ஆகியோருக்குத் தனியொரு குழந்தயாகப் பிறந்தார். ஆசிரியரான சோ. இளமுருகனாரின் வழிகாட்டலால் பதினாறாவது வய தில் நாகேந்திரம்பிள்ளை எனத் தனது பெற்றோர் சூட்டிய பெயரினை வேந் தனார் எனச் சுத்தமான தமிழ்ப் பெய ராக மாற்றிக் கொண்டார்.

இளமையில் பயில்கின்ற பொழுதே இந்துசாதனம், ஈழகேசரி போன்ற இதழ்களில் இலக்கிய, சமய கட்டு ரைகளை வரைந்ததோடு பின்பு வீர கேசரி, தினகரன், ஈழநாடு, சுதந்திரன் ஆகிய ஏடுகளில் ஆய்வு கட்டுரைகள் வழங்கியிருந்தார்.

சிலப்பதிகாரம், மணிமேகலை, கம் பராமாயணம் முதலான தமிழ் இலக்கி யத்தில் இவருக்கிருந்த தேர்ச்சி காரண மாக பண்டித வகுப்புக்களுக்கும் பிற வகுப்புக்களுக்கும் மேற்படி நூல்க ளைப் படிப்பிக்கும் பொறுப்பை வித் துவானிடமே புலமையாளர்கள் ஒப்ப டைத்திருந்தனர். அவரின் பாடம் செ ால்லும் ஆற்றலின் ஒரு முகத்தினை கம்பராமாயண அயோத்தியா காண் டத்து மந்தரை சூழ்ச்சிப்படலம், கைகேயி சூழ்வினைப் படலம் என்ப வற்றிற்கு அவர் எழுதிய உரைவாயி லாக இன்றும் காணமுடியும். நீண்ட காலக் கற்பித்தல் அனுபவத்துடன் எழுதப்பட்ட இப் பாடநூல் இன் றும் மாணவர்களால் படிக்கப்பட்டு வருகின்றது.

### தானெனை ஆண்டவன்

இறைவன் அருட்பெருங்கடல். ஆரு யிர்களின் அல்லலை அறுத்து ஆட் கொண்டருளும் தண்ணளியாளன். ஆருயிர்கள் ஆணவப் பிணிப்பினால் தாம் அடையவேண்டிய பேரின்பப் பெருவாழ்வை மறந்து, பிறந்தும் இறந்தும் பெருந் துன்பமடைகின் றன. ஆருயிர்களின் பிறப்பிறப்புத் துன்பங்களைப்போக்கி ஆட்கொண் டருளும் பேரருட் குணத்தை இயல் பாகவே உடையவனாய் இறைவன் விளங்குகிறான். அல்லற்பட்டு ஆற் றாது தம்மையே புகலென அடைந்த ஆருயிர்களை ஆட்கொண்டருளும் பேராளன் இறைவனே என்பதை உணர்ந்த அன்பர்கள் அவனை ஆண் டவன் என அழைத்து ஆவி உருகு வார்கள்.

ஆருயிர்களின் அல்லல்களை அறுத்து ஆண்டருளும் ஆண்டவ னாகிய இறைவனுக்கு ஆருயிர் கள் என்றும் அடியவர்கள். மீளா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அடிமை உமக்கே ஆளாய் என ஆண்டவனை ஆருயிர்கள் அனைத்தும் அல்லும் பகலும் சொல்லிப் பரவித் தொழுதற்கே உரியன. அன்னையினும் இனியோனாய்த் தம்மை ஆதரித்தும் அருள் ஈந்தும் பொல்லா வினைகளைப் போக்கி ஆட்கொண்டருளும் எல்லாம் வல்ல இறைவனின் இன்னருளை எண்ணி வியந்து நெஞ்சம் நெக்குருகும் இன்பம், சிந்தையில் தேனூறித் தித்திக்கும் இன்பம், ஆனந்த வெள்ளத்துள் அமிழ்ந்தி விருந்தயரும் இன்பம். திருஞனசம்பந்தப் பெருமான் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டவர். தோணிபுரத்தில் எழுந்தருளிய பெரியநாயகர் என்னும் இறைவனும் பெரியநாயகி என்னும் இறைவியம் காட்சிகொடுத்துத் தம்மையாள் கருணையைக் கவுணியர் கோனாகிய திருஞானசம்பந்தப் பெருமான் எண்ணி எண்ணி இதயம் நெக்குருகுகிறார். தாம் பொய்கைக் கரையில் நின்று அம்மே, அப்பா என அழைத்து அழுதபொழுது, தோணியப்பராகிய இறைவன் உலக அன்னையாராகிய உமாதேவியாரோடு எழுந்தருளித் தம்மை ஆட்கொண்ட அருட்செயலைஅவரால் மறக்கவே முடியவில்லை.

தோளிற் சுமந்து தம்மையே ஆரா வேட்கையுடன் வளர்த்த தம் அருமைத் தந்தையார் ஆர் ஊட்டிய பாலை உண்டாய் எடா என்று அதட்டிக் கேட்டுச் சினந்தபொழுது, அம்மையப்பர் கோலத்துடன் எழுந்தருளித் தம்மை ஆட்கொண்ட ஆண்டவனை அவரால் மறக்க முடியுமா? செந்தாமரை மலர்போன்ற பொற்கிண்ணத்தில் பாலைக் கறந்து தமக்கு ஊட்டியருளிய பெரியநாயகியார் என்னும் உமையம்மையாரை நினைக்கிறார். அவர் பாலைக் கறந்து ஊட்டிய அன்புடன் பால்கறந்த பொற்கிண்ணத்தின் அழகையும் நினைக்கிறார். உலகுயிர்கள் அனைத்துக்கும் அன்னையாராகிய உமாதேவியார் பொற்கிண்ணத்தில் கறந்தூட்டிய பாலைப் பொல்லாதது - இழிந்தது எனக் கூறித் தம்மைச் சினந்த தம் தந்தையாரையும் நினைக்கிறார். தந்தையாரால் சினந்து வெறுத்துரைக்கப்பட்ட பொழுதும் தமக்குற்ற துணையாய் எழுந்தருளிக் காட்சி கொடுத்தாண்ட இறைவனையும் நினைக்கிறார்.

**‘போதையார் பொற்கிண்ணத்து அடிசில்பொல் லாதெனத் தாதையார் முனிவுறத் தானெனை ஆண்டவன்’**

என்பது திருஞானசம்பந்தப் பெருமானின் அன்பும் வியப்பும் கலந்த குழந்தைக்குரல். இந்தக் குரலிலே கிடந்து அலைமோதுகின்ற ஞான வெள்ளத்தின் அகலத்தையும் ஆழத்தையும் எழுச்சியையும் யாரால் அறிய முடியும்.

## போதையார் பொற்கிண்ணம்

திருஞானசம்பந்தப் பெருமானின் குழந்தை உள்ளத்தை அம்மையார் திருமுலைப்பாலைக் கறந்து ஊட்டிய பொற்கிண்ணத்தின் எழில் கவர்ந்துவிட்டது. பூவைப்போல அழகான கிண்ணம். பொன் தூய்மையானது. தீயில் இட்டு உருக்க உருக்க மாசு நீங்கி ஒளி கூடிக் கூடி விளங்குவது. திருவருள் வழிப்பட்ட மெய்யடியார்களின் உள்ளமும் பொன்போன்றது. அந்த உள்ளம் இறைவனின் திருவருளால் மலமாசு நீங்கி ஒளியுடையதாக விளங்கும். திருவருள் பதிந்த உள்ளத்திலே சிவஞானம் நிறையும். போதையார் பொற்கிண்ணமாகிய திருஞானசம்பந்தப் பெருமானின் திருவுள்ளத்திலே சிவஞானம் நிறைந்து நிலவுவது போலவே, மலமாசு நீங்கிய ஆருயிர்கள் என்னும் மெய்யடியார்களின் உள்ளத்திலும் திருவருள் பதியும். உலக நுகர்ச்சிகளில் ஊறித் திருவருளை மறந்த உள்ளத்தில் சிவஞானம் பதியாது. அந்த உள்ளத்தைத் திருவருளால் தூய்மைப்படுத்தவேண்டும். அவனருளாலே அவன் தாள் வணங்கவேண்டும்.

## அடிசில்:

பொற்கிண்ணத்து அடிசில் என்றது சிவஞானத்தைக் குறிக்கும். அம்மையார் பாலாகக் கறந்து ஊட்டிய சிவஞானத்தையே சம்பந்தப் பெருமான் அடிசில் எனக் குறித்துள்ளார். ஞானபோனகர் எனச் சேக்கிழார் பெருமானும் திருஞானசம்பந்தப் பெருமானைப் போற்றி உரைத்த பொருளுரையை நோக்குக. சிவனருள் பதிந்த திருஞானசம்பந்தரின் திருவுள்ளத்திலே சிவஞானம் நிறைந்துவிட்டது என்பதைப் போதை ஆர் பொற்கிண்ணத்து அடிசில் என்னும் தொடர் குறிப்பாக உணர்த்துகின்றது.

## பொல்லாது என:

திருஞானசம்பந்தப் பெருமான் ஞானப் பாலை உண்ட நற்செய்தியை - திருவருட் செயலைச் சிவபாதவிருதயர் உணர்ந்திலர். அவர் திருஞானசம்பந்தர்மேல் மிக்க அன்புடையவர். சைவம் வாழ ஒரு தெய்வக் குழந்தை வேண்டுமென இறைவனிடம் இரந்து தவங்கிடந்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்தப் பெருமானைத் தம் மைந்தனாகப்பெற்ற தவத்திருவும் சால்பும் நிரம்பியவர். ஆனால், சிவனருட்செயலைத் தெளிந்துகொள்ளும் திருவருட்பேறு வாய்ந்திலர். ஆரோ தாழ்ந்த குலத்தவர் கொடுத்த பாலைத் தம் மைந்தன் அருந்திவிட்டானேயென்று எண்ணி ஆறாச் சினங்கொண்டார். திருவருட் செயலை அறியாது சீறினார். சிறு கோல்கொண்டு தம் மைந்தனைத் தாக்க முற்பட்டார். இவரின் செயலை எண்ணிய சம்பந்தர் வியப்படைந்தார். திருவருட் செயலைத் தெளியும் பேறு தம் தந்தையாரிடம் இல்லை என்பதை எண்ணினார். உமையம்மையார் அளித் ஞானப்பாலை உண்டு நிற்கும் என்னை, ஊரார் அளித்த பாலை உண்டேனென உறுக்கி அடிக்க முனைந்தாரே என்னருமைத் தந்தையார். இவருக்கு யான் ஞனப்பால் அருந்தி ஞானம் பெற்ற உண்மையை எங்ஙனம் உணர்த்துவேன் என்று ஏங்கினார். இதனால் திருவருளை முன்னிட்டு நிற்கும் அன்பர்களின் செயல்களுக்கும், உலகியலை முன்னிட்டு நிற்கும் மாசுடையாரின் செயல்களுக்கும் உள்ள வேறுபாட்டை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

### தாதையார் முனிவுற:

உலகியலில் அன்னை தந்தையராக எமக்கு அமைந்தவர்கள் வினைவழிப் பட்டவர்கள். அவர்கள் தாம் ஆற்றிய நல்வினை தீவினை என்னும் இருவினைப் பயன்களையும் நுகர்பவர்கள். திருவருளை மறந்து வாழத் தலைப்படுவார்களானால் அவர்களுக்குத் திருவருட்செயல் புலனாகாது. சண்டேசுர நாயனாரின் தந்தையாராகிய எச்சதத்தன் போலவும் பிரகலாதனின் தந்தையாராகிய இரணியன் போலவும் திருவருளை மறந்து தீமை புரியவும் தொடங்குவார்கள். உலகுயிர்கள் அனைத்துக்கும் தந்தையும் தாயுமாக விளங்குகின்ற இறைவன் அருளே உருவானவன். வினையில் நீங்கி விளங்கிய அறிவுடையவன். தாயிற் சிறந்த தயாவான தத்துவன். அவனை ஆருயிர்களாகிய நாம் மறந்தாலும் அவன் என்றும் எம்மை மறக்கவே மாட்டான். பால்நினைந் தூட்டும் சாயினும் சாலப் பரிவுடையவன். எம்மை ஈன்று புரந்த உலகியல் தாயும் தங்தையும் எமக்குத் தீமை புரிய முனைந்தாலும் அதனையும் தடுத்து எம்மைக் காப்பவன்.



திருஞானசம்பந்தப் பெருமான் தம் தங்தையாராகிய சிவபாதவிருதயர் தம்மை வெறுத்து முனிந்தபோது, இறைவனாகிய தந்தையார், அம்மையப்பர் கோலத்துடன் தம்முன் எழுந்தருளிக் காட்சிகொடு;த்தாண்ட அருட் செயலை எண்ணி உருகுகின்றார். பெற்று வளர்த்த தந்தையாரினும் பார்க்க உற்ற துணையாக என்றும் உள்ளவன் இறைவனாகிய தந்தையாரே என்பதைத் தெளிந்தார்.

### தான் எனை ஆண்டவன்

தந்தையார் சினந்த நேரத்தில், தோடுடைய செவியனாய் விண்மேல் எழுந்தருளி, தூய முன்றாம் பிறை நிலவை அணிந்து, திருமேனியில் திருவெண்ணீற்றைப் பூசிய திருக்கோலத்துடன் காட்சி கொடுத்தார். தந்தையார் சினந்தாலும் நீ அஞ்சவேண்டாமென அடைக்கலம் கொடுத்து ஆட்கொண்டார். தந்தையினும் இனிய தண்ணளியாளன் ஆகிய இறைவனைச் சம்பந்தர் கண்டுகளித்தார். தன்னைச் சினந்துரைத்த தந்தையாருக்கும் சுட்டிறந்த தூய முழுமுதற் சிவத்தின் திருவருட் கோலத்தைச் சுட்டிக்காட்டினார். அவர் கண்டிலர். மைந்தன் திருவருள் வழிகாட்டிச் சிவஞானம் பெற்றுவிட்டான் என உய்த்துணர்ந்தார். தங்தையார் முனியவும் தன்னை ஆண்ட பெருங்கருணைத் தடங்கடலாகிய இறைவனின் இனிய திருக்கோலக் காட்சியை எண்ணி வியந்து ஏத்துகின்றார்.

**'காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்
பேதையாள் அவளொடும் பெருந்தகை இருந்ததே'**

எனத் தாதையார் முனிந்த நேரத்தில் காட்சிகொடுத்த கோலத்தை மீண்டும் சொல்லித் தொழுகின்றார். நினைந்து நினைந்து நெஞ்சம் நெகிழ்கின்றார்.

### காதையார் குழையினன்;

உலக அன்னையாராகிய உமாதேவியார் ஞானப்பால் ஊட்டியருளியதை நினைந்து முதலில் தோடுடைய செவியன் என அம்மையாரின் தோடணிந்த செவியை இடப்பாகத்தில் உடையவனாய் இறைவன் இடபத்தில் எழுந்தருளிய கோலத்தைக் குறித்தார். இச் செய்யுளில் அம்மையை ஏவிப் பால் ஊட்டுவித்த அப்பனாகிய இறைவன் குழை (கடுக்கன்) அணிந்த செவியை முதலில் நினைத்துக் கூறுகின்றார். தாம் அழுத குரலை அருளே உருவமாகிய உமையம்மையாரே முதலில் கேட்டாரென்றும், அதன் பின்பே இறைவன் கேட்டு அம்மையாரை ஏவி ஞானப் பாலை ஊட்டுவித்தாரென்றும், திருஞானசம்பந்தப் பெருமான் எமக்கு உணர்த்துகின்றார். திருவருள் காட்டவே ஆருயிர்கள் இறைவனைக் காண்கின்றன என்னும் உண்மையும் புலனாதல் காண்க.

பேதையாள் அவளொடும்
பெருந்தகை இருந்ததே

இறைவன் ஆருயிர்களுக்கு உலகின்ப நுகர்ச்சியாகிய போகத்தையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பேரின்ப நுகர்ச்சியாகிய வீட்டினையும் அம்மையப்பர் கோலமாக வீற்றிருந்தே அருள்கின்றான்.*

*ஆண்மையும் பெண்மையும் கலந்த அருட்கோலம் இல்லறவாழ்வின் ஏற்றத்தையும் உணர்த்துகிறது. பெண்ணினல்லாளொடு பெருந்தகை ஒன்றுபட்டு விளங்குவது போலவே, இல்லறத்தில் காதலிருவர் கருத்து ஒருமித்து ஆதரவு பட்ட நிலையும் அமையவேண்டும். அன்பு தனித்து*



*வாழாது, இரு பொருள்களை ஒன்றாகக் கலந்து வைப்பதே அன்பின் செயலாகும். ஆருயிரும் ஆண்டவனாகிய இறைவனும் இரண்டறக் கலந்து நிற்கும் அத்துவித நிலையின் நிலைக்களம் இல்லறமேயாகும்.*

*இல்லறத்தில் தலைவனிடம் தலைவி தன்னை முற்றும் ஒப்புவித்து அவன் தன்மையாகவே நின்று இன்ப நுகர்ச்சி அடைதல் போலவே, ஆருயிர்களும் ஆண்டவனிடம் தம்மை முற்றும் ஒப்புவித்து, அவனடி நீழலில் உறைந்து பேரின்ப நுகர்ச்சி கூடும் என்க. போக வாழ்வின் நுகர்ச்சியே வீட்டை எய்துவிக்கும் வழியாகும் என்பதை உணர்த்தவே பேதையாள் அவளொடும் பெருந்தகை இருந்ததே என்றார். பேதையாளொடு எழுந்தருளியிருந்த பெருந்தகையாகிய இறைவன் தந்தையினும் இனியோன் என்பதால், அவன் ஆருயிர்கட்கு அருள் ஈந்து ஆட்கொள்ளும் போதெல்லாம் அம்மையுடன் உடனாய் வீற்றிருப்பான் என்பதும், அங்ஙனம் அம்மையுடன் உடனாய் வீற்றிருந்து உலகுயிர்கட்கெல்லாம் போகம் ஈன்ற புண்ணியன் ஆதல் பற்றியே பெருந்தகை எனப் புகழ்ந்து போற்றப்பட்டான் என்பதும் புலனாகும்.*

**போதையார் பொற்கிண்ணத் தடிசில்பொல் லாதென**
**தாதையார் முனிவுறத் தானெனை ஆண்டவன்**
**காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்**
**பேதையாள் அவளொடும் பெருந்தகை இருந்ததே**

*போது - பூ, ஆர் - உவமஉருபு, அடிசில் - உணவு (ஞானபோனகம்), குழை - ஆண்கள் காதில் அணிவது, பெருந்தகை - பெருந்தன்மை வாய்ந்தவன்*

**நன்றி: தன்னேர் இலாத தமிழ் 2010, மித்ர வெளியீடு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சிவஒளிக் கடவுள் போற்றி!

சைவமும் தமிழும் வேதச்
சங்கிதை மரபும் ஆதி
மெய்வதம் உலகம் முற்றும்
வெஞ்சுடர் பிரபஞ் சத்தும்
கைவரும் புனிதர் சித்தர்
கடவுளார் பள்ளி தோறும்
தைவர மனிதம் காத்தோர்
தாங்கிய மறையொன் றாமே!

நாவலர் மகிமை காட்டும்
நாயனர் இறைமை ஊட்டும்
தேவரம் வாச கத்தும்
தோன்றிய சிவனே கூட்டும்
பாவரம் பனுவல் தோறும்
பரம்பொருள் வடிவம் கூறும்
தாவரம் உயிரி னங்கள்
சார்ந்ததும் அறமென் றாகும்!

பரம்பொருள் வடிவம்
கோர்த்துப்
பக்குவம் அடிமை யாக்கும்
வரம்பொருள் வயப்ப டுத்தும்
வகையிலே சிவன்பே[று]
றாக்கும்
நரம்பெலாம் ஆண வத்தின்
நடிப்பெலாந் கடிந்து பார்க்கும்
இருந்துணை அடைகின் றாயோ
இறைவனுன் னருகில் நிற்பான் !
இறைவநீ உருகி ஏற்கும்
என்னைநீ அடைவை தாமோ?
நிறைதரும் கைலா சத்தின்
நெஞ்சமாய் நிறைவை யாமோ?
துறைதரு பாகாய் வந்தேன்
துய்ப்பதும் இழக்க லாமோ?
கறையிலாப் பெருநெஞ் சத்தே
கயிலையின் கடவு ளானே !

பர்வதம் தன்னில் வாழும்
பத்திர நாதா போற்றும்
தர்மதை யுருக்கும் அன்பின்



ஞானக்கவி தேசபாரதி தீவகம்
**வே.இராசலிங்கம்**
கனடா

சங்கமம் அருள்செய் வார்க்குச்
சர்வமும் அளிக்கும் நேயா
சங்கரி ஈசா கேண்மின்
தர்மமும் அறமும் உன்றன்
தத்துவம் கயிலை அன்றோ?

நோயிலே வருந்து வோர்க்கு
நேர்த்தியே வழங்கும் தேவா
காயமே கோயி லார்க்குக்
கடிமணம் அருளும் நேசா
தாயென இருக்கும் மண்ணின்
தகைமையும் நெறியும் வீசும்
தூயவா நறைசெய் வாயே
சோதனை வேண்டாம் ஐயா!

கற்பனை கடந்த சோதிக்
கருணையே உலக மாகிச்
சொற்பதம் கயிலை ஆகிச்
சுகம்தர வினைகள் மாயும்
நற்பதம் அளிக்கும் தென்னன்
நாயகம் ஈச னார்க்குப்
பொற்பதம் துதிசெய் தேனே
தேயவா அருள்செய் வாயே !

மானச ரோவர் நீரின்
மகத்துவம் மறையே ஆர்க்கும்
தானமும் தவமும் வேரின்
தத்துவம் இறையே ஆக்கும்
கானமும் கைலை நோக்கும்
கன்னலும் இசையை வார்க்கும்
மோனமும் முடிச்சும் தொன்மை
முற்றமும் கயிலை யாமே!

சிவஒளி ஈச னார்க்குச்
சிதம்பர ஈச னார்க்கு
நவஒளி ஈச னார்க்கு
நம்அண்ணா ஈச னார்க்கு
கவர்மலை ஈச னார்க்கு
காளத்தி ஈச னார்க்கு
தவகிரி அனைத்தும் பூமி
தரித்தஎம் ஈசா போற்றி !

தன்வயம் அறிந்த வர்க்குத்
தன்னுயிர் அறிந்த வர்க்;கு
மன்னுல கத்தி லெல்லாம்
மறைகழல் அறிந்த வர்க்குச்
சொன்னசொல் இறையி னார்க்குச்
சிந்துரம் அறிந்த வர்க்குக்
கன்னலும் தமிழும் போற்றும்
கடவுளே போற்றி போற்றி !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரது தொன்மை மிகு நாகரிக வரலாறு: சுவாமி விபுலாநந்திரின் ஆய்வுநோக்கு



பேராசிரியர்
**பாலசுந்தரம் இளையதம்பி**
தமிழ்த்துறைத் தலைவர்
அண்ணாமலை கனடா
வளாகம்.
ரொறன்ரோ.


**உலக மகக்கள்** அனைவரிடமும்காணப்படும் அகம்,புறம் என்ற இருநிலைகளில் அகத்தூய்மைநிலையேமனித இனத்திற்குமுதன்மையானது. அதன் வழியாகவேமானுடம் நிலைத்திருக்கிறது. மானுடத்தின் வழியாகப் பிறந்ததே மனிதநாகரிகம். மக்களைநெறிப்படுத்தவும்,உறவுகள்,குடும்பங்கள் சமூகங்கள் முதலியனஅமையவும்,மக்கள்இயங்குநிலைபெறவும் வழிசமைப்பதுமானுடஉணர்வேயாகும்.அதேவேளைமனிதன் புறநிலையில் உணவுதேடல். குடியிருப்புஅமைத்தல்,சமூகங்களிடையேதொடர்புகொள்ளல் தலைமைத்துவத்துவம் பெறுதல்,அரசு,நாடுஎன்றகோட்பாடுகள் உருவாகும்போதுபண்பாட்டுக் கோலங்களாகமிளிர்கின்றன. பண்பாடுஅகவளர்ச்சியையும் நாகரிகம் புறவளர்ச்சியையும் குறிக்கும் என'நாகரிகமும் பண்பாடும்' என்ற நூலாசிரியர் அ. தட்சிணாமூர்த்திகுறிப்பிடுவர் (2011:2)



தமிழர் நாகரிகம் தொன்மை வாய்ந்ததுஎன்பதில் எவருக்கும் ஐயப்பாடில்லை. ஆனால் அத்தொன்மைநிலை எங்கே;எவ்வாறு;நிலைபெற்றிருந்ததுஎன்பனதான் ஆராய்ந்துஅறியவேண்டியபொருண்மியம். ஐரோப்பியரின் வருகையால் தமிழினம் பல்வேறுநன்மைகளையும் காலச் சூழலுக்கேற்ற முன்னேற்றத்திற்குரியவழிகளையும் பெற்றுக்கொண்டது. ஆங்கிலேயரதுவருகையுடன் தமிழ்மொழியும் தமிழ்ப் பண்பாடும் ஆங்கிலேயஅறிஞர்களின் ஆய்வுக்குரிய முக்கியபொருண்மைகளாகக் கருதப்படலாயின. ரோபர்ட் கால்டுவெல்ஐயர், ஜி.யு.போப் பாதிரியார்,வீரமாமுனிவர் முதலியோர் தமிழ் மொழியினதும் தமிழ் இலக்கியப் பரப்பினதும் அருமை பெருமைகளைஆராய்ந்துதமிழினத்தின் தொன்மைச் சிறப்புக்களைப் பாரறியச் செய்தனர்.

1920களில் சேர்.ஜோன். மார்சல்,ஸ்பானியநாட்டைச் சேர்ந்தஎச்.ஹீராஸ் சுவாமிகள்,எல். இ. முக்கே (1935), ஸ்ருவாட் பிக்கொட் (1950),சேர் மோர்ட்டிமர் வீலர் (1953) முதலியோர் சிந்துவெளிநாகரிகத்தின் உற்பத்தியிடங்களாகிய ஹரப்பா,முகிஞ்சதாரோஆகிய இடங்களில் அகழ்வாய்வுமேற்கொண்டுதிராவிட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விபுலாநந்த அடிகளார்
(1892-1947)

இனத்தவரின் பண்பாட்டுத் தொன்;மைகளைவெளிப் படுத்திக் கொண்டிருந்தனர். திராவிடநாகரிகம் சுமார் கி.மு. 5000 ஆண்டுகளுக்குமுற்பட்டதடயங்களைக் கொண்டிருந்தசெய்திகள் அவர்களால் வெளிப்படுத் தப்பட்டன. ஐராவதம் மகாதேவன் சிந்துவெளியில் வழங்கியமொழிக்கும் தமிழ் மொழிக்கும் இடையிலா னஒற்றுமைகளைஆராய்ந்துஅவற்றிலேதமிழ் அடை யாளத்தைநிறுவியுள்ளார்.இத்தகையஆய்வுகள் நடைபெற்றுக்கொண்டிருந்தகாலத்தில் வாழ்ந்தசுவா மிவிபுலாநந்தர்,அக்காலப் பகுதியில் ஈழத்திலிருந்து இமயம் வரையும் பயணம் மேற்கொண்டவர். உலகின் பலபாகங்களிலும் ஏற்பட்டுவந்தவிளிப்புணர்ச்சி,கல் விவளர்ச்சி,அறிவியல் வளர்ச்சிமுதலானசமகாலநி கழ்வுகள்பற்றிச் சுவாமிகள் நன்கறிந்துஅவைபற்றி ஆய்வுக் கட்டுரைகளாகவும் சொற்பொழிவுகளாகவும் கருத்துக்களைவெளியிட்டுவந்தார்.

குமரிக் கண்டம் ஆழிப்பேரலைகளாற் காலத்திற்குக் காலம் முற்றாகஅழிந்தபோதுமிஞ்சியமக்கள் வடக்கு நோக்கியும் வடமேற்குநோக்கியும் கடல்வழியாகவும் தரையூடாகவும் புலப்பெயரந்துசென்றோரில் கடல் வழியாகச் சென்றமக்கள் சிந்துநதிப் பள்ளத்தாக்குப் பகுதியிற் குடியேறி,அங்குகாலப்போக்கில் திராவிட நாகரிகத்தைத் தோற்றுவித்தனர் எனஅறிஞர் கூறு வர். பலுக்கிஸ்தானத்தில் பண்டைநாளில் பிராஹுய் மொழியைப் பேசினர் என்பதைஅண்மைக் காலத் தில் திராவிடமொழிஆராய்ச்சியாளர் அறிந்து,அம் மொழியினைத் திராவிடமொழிக் குடும்பத்தைச் சே ர்ந்ததுஎனஅடையாளம் கண்டனர். அதுபோன் றேபுலம் பெயர்ந்தஒருபகுதியனர் தென்னிந்தியப் பகுதிக்குப் புலம்பெயர்ந்துநாடுகள் அமைத்து மூன் றாம் தமிழ்ச்சங்கமும் அமைத்துவாழ்ந்தனர் என் அறியப்படுகிறது. கீழடிஅகழாய்வுச்;சான்றுகள் இதனைச்சான்றுபடுத்துகின்றன. திராவிடர் தெற் கேஈழம்,வடக்கேசிந்துவெளி,மேற்கேபலுகிஸ்தான் வரைபரநதுவாழ்ந்துள்ளனர். இத்தகையதொருகருத் தினஅடித்தளத்திலிருந்துதான் சுவாமிவிபுலாநந்தர் திராவிடர் நாகரிகவரலாறு,திராவிடர் பரம்பல் முதலி யபொருண்மைகள் பற்றிஆராய்ந்துகட்டுரைகள் எழு தியும்,பல்கலைக்கழகங்களில் ஆய்வுரைநிகழ்த்தியும் தமிழரின் தொன்மைநாகரிகவரலாற்றையும் பண்பாட்டுப் பாரம்பரியத்தையும் விளக்ககமாகநிறு வலானார்.

இதனிடையே,பாபிலோனியநாகரிகமக்கள்ணீன் சுமேரியமொழிக்கும் திராவிடமொழிக்கும் இடையே யுள்ளதொடர்புகள் பற்றிமேல்நாட்டுமொழியியல் அறிஞர் பலர் ஆராய்ந்துள்ளனர். தமிழ் அறிஞர்க ளில் பேராசிரியர் ஆ. சதாசிவம் அவர்களும் இம் முயற்சியில் ஈடுபட்டு,அவர் எழுதிய **ProtoSumero Dravidian– The Common Origin of Sumerian and Dravidian Langues-2017** என்ற நூலும் குறிப்பிடத்தக்கது. பேராசிரியர் எச். ஹராஸ் சுவாமி கள்;திராவிடநாகரிகத்திற்கும் சுமேரியநாகரிகத்திற்கு மிடையேஒற்றுமைகண்டார். பாபிலோனியமக்கட் சாதியரானஅக்காதியரதுபண்பாட்டுக் கூறுகள் திரா விடப் பண்பாட்டுடன் ஒத்துக் காணப்படுகின்றன. பாபிலோனியாவிலுள்ளசால்டியாஎன்றநாட்டின் தலைநகர்'ஊர்'என்பதாகும். அங்குஒருவீட்டிலிருந்து 3000 ஆண்டுப் பழமைவாய்ந்ததென்னிந்தியத் தேக்கு மரத்துண்டுஒன்றுகிடைத்துள்ளதாகவும் அறியப்படுகி றது.

தமிழரின் பண்பாட்டுத் தோற்றம்,பரவல் என்பன பற்றியஆய்வுகளின் அடிப்படையில் சுவாமிவிபு லாநந்தர் தமிழ்ப் பண்பாட்டுவரலாற்றைசிந்துவெ ளிநாகரிகத் தளத்துடனும் பாபிலோனியநாகரிகத் தளத்துடனும்தொடர்புபடுத்தித் தமிழர் நாகரிகத்தின் தொன்மையைநிறுவும்வகையிலானகருத்துக்களை ஆய்வுக்கட்டுரைகளாகவெளியிட்டார். சுவாமிகளின் 'உலகபுராணம்'என்றகட்டுரைதமிழர் நாகரிகம்,பண் பாடுஎன்பனபற்றியஅரியதகவற் களஞ்சியமாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிகள் தன் கருத்தைவெளியிடும்போது பேரறிஞர்களின் கருத்துக்களைத் துணைச் சான்றுகளாகக் காட்டும் ஆய்வு உத்தியை நன்கு பயன்படுத்திக் கொள்வார். திராவிடர் தமிழ் எனவும்,அவர்கள் இந்தியாவிலிருந்து மத்தித்தரைக்கடல் நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து சென்று,திராவிடநாகரித்தைப் பரப்பினார்களெனவும் சுவாமிகள் கூறுவர். இதனைஉறுதிப்படுத்தும் வகையில் எச். ஹீராஸ் சுவாமிகள் கூற்று (**Rev. Herass Father: New Review:1941**)சான்றாகக் காட்டப்படுகிறது:

பழையதிராவிடமக்கள் இந்தியாவினின்றும் புறம்போந்துகுசுகூர்களிலே (அந்நியநாடுகளிலே) சிறப்பாகக் குடியேறுகிறார்கள். பெரோள் கூறியிருப்பதுபோலஉவணனும் ஓதக்கோனும் தலைவர்களாக இம்மக்களைஅழைத்துச் செல்கின்றனர். இந்தியாவிலேமுஹிஞ்சதரோவிலும் பிறநகரங்களிலும் இவர்கள் செங்கல்லினாலேவீடுகள் கட்டியதுபோலச் சுமேரியாவிலும் கட்டுகிறார்கள்அங்கிருந்து இவர்கள் சீரியாநாட்டிற்குச் சென்று ஹித்திய(**Hittite**)மன்னர் பரம்பரைக்கு அடிகோலுகின்றனர். பின்புமத்தித்தரைக் கடலோரத்திற்குடியேறிப் பாணிகள்என்றும்,பின்னாளிலே பீனீசியர்(**Phoenician**) என்றும் வழங்கப்பட்டகுலத்தினராய்ப் பழங்காலத்திலேபெருஞ்சிறப்போடுவிளங்கியவாணிகத்தொழிலை நடத்துகிறார்கள். பின்புகிரேக்க, இத்தாலியநாடுகளிலும் அணித்தானதீவுகளிலும் குடியேறியமீனவர்,எத்துருஸ்கர் என்னும் பெயரோடுவாழுகிறார்கள்.

எச்.ஹீராஸ்சுவாமிகள் ஆரியதிராவிடபக்கச்சார்பற்று,சிந்துவெளிநாகரிகஆராய்ச்சியிலீடுபட்டுத் தான் அறிந்தஉண்மைகளை (ஏப்ரல் 1937)என்றஆய்விதழில் வெளியிட்டிருந்தார். அவ்வாறுதிராவிடரின் பெருமையைஎடுத்துக் கூறியஅவருக்குஆரியர்வழிஅச்சுறுத்தல்கள் ஏற்பட்டதாகசுவாமிகள் குறிப்பிட்டுள்ளார். சிந்துநதிக்கரைமுகிஞ்சதரேர்.மக்கள் இசைநூலிலும் வானநூலிலும் அறிவுபெற்றிருந்தனர் என்று கூறும்சுவாமிவிபுலாநந்தர்,தம் கருத்துக்கு ஹீராஸ்சுவாமிகளின் கருத்தையும் துணையாகக் காட்டுவர். (சுவாமி விபுலாநந்தரின் ஆக்கங்கள்-3 பக்:215)




ஹீராஸ்சுவாமிகளின் கருத்துக்கள்,பழந்தமிழ் உரைகாரர் கூறும் முச்சங்கவரலாற்றுச் செய்திகள்,கடற்கோள்கள் பற்றிச்சிலப்பதிகாரம் கூறும்செய்திகள் அகியவற்றைநோக்கும்போது,முதலாம் சங்க இறுதிக் கடல்கோளின் பின்னர்; பாண்டியனதுஆட்சியிலிருந்ததமிழ்மக்களுள் ஒருபகுதியார் கடல்கடந்துபாரசீகக் கடல் வழியாகச் சென் று யூபிறாற்றஸ் ரைகிறிஸ் நதிக்கரையிலிருந்தநாட்டிற் குடியேறிஅதற்குச் சுமேரியாஎன்னும் பெயரிட்டுவழங்கினாரென்பதும்,மற்றொரு பகுதியார் வடதிசைக்கங்கையும் இமயமுங்கொண்டு,சிந்துவெளிக் கரையிலேதாம் குடியேறியநாட்டிற்குமீனாடுஎனப்பெயரிட்டு இணைக்கயல் பொறித்தகொடிகளையுடையராய் வாழ்ந்தனரென்பதும் புலனாகின்றன.

சுவாமிவிபுலாநந்தர் இலண்டன் பல்கலைக்கழகவிஞ்ஞானப் பட்டதாரிஆவார். அவர் மேற்கொண்ட இசைஆராய்ச்சிக்குவிஞ்ஞானஅறிவும் ஆய்வுகூடஅனுபங்களும் பக்கத் துணையாகஅமைந்தன. சுவாமிகள் இசைஆராய்ச்சிக்குப் பௌதிகத்தையும் கணிதத்தையும் நன்குபயன்படுத்தியிருக்கிறார் என்பதற்குயாழ் நூல் தக்கசான்றாகத்திகழ்கிறது. அத்துடன்அவரதுதனிப்பட்டஆளுமைகளும் அவரதுஆய்வுமுடிபுகளுக்குப்பக்கத்துணையாயின.

ஒருவருடையஆளுமைசமுதாயத்தினதும் காலத்தினதும் செல்வாக்குகளுக்குஆட்படுவது இயல்பே. அதேபோல் சிறந்தஆளுமைஉடையவர்களின் செல்வாக்குக்குஅவர்களதுகாலச் சமுதாயமும் ஆட்படுவதும் நியதியாகும். சுவாமிவிபுலாநந்தரைப் பொருத்தவரைஅவர்,தம் காலச் சமுதாயத்தின் அடிமைத்தனத்தையும் அறியாமையையும் ஒழித்து,மக்களின் எதிர்காலத்துக் குஒளியூட்டவிழைந்தார். அவரதுஆளுமைகள் சமுதாயத்திற்குப் புத்துயிரூட்டின. அவ்வகையில் அவர் மேற்கொண்டமுதற்செயற்பாடு,அனைவருக்கும் கல்விஎன்றகுறிக்கோள் கொண்டகல்விப் பணியாகும். சுமத்துவம்,சகோதரத்துவம், இன ஒற்றுமைமுதலானதுறைகளில் அவரதுபணிகள் அகன்றுஅமைந்தன. பெண் கல்வியும் தேசியநோக்கும் அவரின் புதியசிந்தனைத்தடம் பதித்தபணிகளாகஅமைந்தன.

மொழி, இலக்கியம்,பண்பாடு,வரலாறு,சமூகம்,தத்துவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியதுறைகளில் வளர்ச்சிகண்டதமிழியல் ஆய்வுவரலாற்றில் சுவாமிவிபுலாநந்தருக்குத் தனியானஓரிடமுண்டு. அறிவியலைத் தமிழியலுக்குஅறிமுகப்படுத்தித்,தமிழியல் ஆய்வுநெறியிற்செம்மைசான்றஆய்வுநெறிகள் (**Research Methodology**)எனப் புதியதொருசெயல்திறனைச்; சுவாமிகள் நிறுவினார். தான் எடுத்துக்கொண்டபொருளைமுழுமையாகவும் வரலாற்றுஅடிப்படையிலும்,ஒப்பியல் நோக்கிலும் அணுகும் ஆய்வுமுறைசுவாமிகளிடம் காணப்பட்டது. தமதுஆய்வுமுடிபுகளைமேலாய்வுக்குவிட்டுச்செல்வதும்,ஆய்வாளர்களைஆய்வுத்துறைகளுக்குநெறிப்படுத்துவதும் அவரதுஆராய்ச்சிஅணுகுமுறைகளின் செம்மையாகும்.

மேலைத்தேயமொழிகளில் நன்குவளர்ந்துள்ளஅறிவியற் செல்வங்களைஆராய்ந்தறிந்து,அவற்றைத் தமிழில் மொழியாக்கம் செய்துதரவேண்டும் என்றகுறிக்கோளுடையவராகச் சுவாமிவிபுலாநந்தர் செயற்பட்டார். திருவினாலும் அரசினாலும் மேம்பாடுற்றுப் பிறநாடுகள் பலவற்றிலும் தமது ஆணை செலுத்தி வருகின்றஆங்கிலராதிமேலைநாட்டவரதுசெல்வப் பெருக்கத்துக்குஉரியகாரணங்கள் எவை?எனஆராயமுற்பட்டுச் சுவாமிகள் எழுதியகட்டுரைகள்,உலகப் பண்பாட்டுவளர்ச்சிபற்றி; அவர்கண்டஉண்மைகளைவெளிப்படுத்துவனவாகஅமைகின்றன. ஆய்வாளர் ஒருவர்,ஒருபொருள் பற்றிஆராய்கிறார் என்றால்,அந்தஆய்வினால் நாடும் மக்களும் பயனடையவேண்டும் என்பதேசுவாமிகளின் கோட்பாடாயிற்று.

சுவாமிகள் மேலைநாட்டாரதுபண்பாடுபற்றிஆராய்ந்துபலகட்டுகைள் தமிழில் எழுதியுள்ளர். அவ்வாறுஎழுதியமைக்குரியகாரணத்தைஈபரந்த இப்பொருளைஆராயுங்கால் மேலைநாட்டாரதுஅரசியல் முறையும்,புலநெறிவழக்கமும்,கலைபயில்நிலைமையும்,பொருள்செயல்வகையும்,பிறவும் தெற்றெனப் புலப்படுவனவாம். அங்ஙனம் புலப்படவேமனத்தின்கண் ஊக்கம் மேலிட்டுஅவர் படைத்ததிருவையாமும் படைப்பதற்குமுயல்வோமாதலின்இவ்வாராய்ச்சி பெரிதும் பயனுடைத்தாமென்கஅவர் குறிப்பிடுதல் நோக்கத்தக்கது.

தாம்மேற்கொண்டபண்பாட்டியல் ஆய்வின் பயனாகப் பிறமொழிக் கருவூலங்களைக் கண்டறிந்துஅவற்றைத் தமிழிற் கொண்டுவருவதற்குரியபணிகளில் ஈடுபட்டார். பிறமொழிகளிளுள்ளசிறந்தஅறிவை நாம் பெற்றுஎமதுமொழியைவளம்படுத்துவதற்குஅம்மொழிகளிலுள்ளசிறந்த நூல்களைமொழிபெயர்த்தெடுத்தல் வேண்டும் என்பதைவற்புறுத்திவந்தார்.



உளவியல்,அறிவியல்,ஆட்சியில்,கணிதம்,சட்டம் முதலானபல்துறைசார்ந்த நூல்களிலுள்ளகலைச்சொற்களுக்குஒத்தசொற்களைத் தமிழில் ஆக்கிக்கொள்ள வேண்டும் எனவும்,அவ்வாறுகலைச்சொல்லாக்கம் செய்யும்போது சொற்சுருக்கம்,விளக்கம்,தமிழ் வடிவம்முதலானபண்புகள் மனதிற் கொள்ளப்பட வேண்டும் என்றகருத்துக்களையும் சுவாமிகள் வலியுறுத்திவரலானாடர்.

சுவாமிகள் தமிழ் இலக்கியங்களையும் மற்றும் கல்வெட்டுச் சான்றுகளையும் துணைக்கொண்டுபண்பாட்டுவரலாறு, இசைவரலாறுமுதலானஆய்வுகளில் ஈடுபட்டதோடு,மேற்குலகப் பண்பாட்டுவரலாறுபற்றியஆய்விலும் நாட்டம் கொண்டிருந்தார். அந்தஆய்வின் பயனாக ‘எகிப்தியநாகரிகம்’,‘ஆங்கிலவாணி’,‘மேற்றிசைச் செல்வம்’,‘நாகரிகவரலாறு’,யவனபுரத்துக் கலைச்செல்வம்’- ‘விஞ்ஞானதீபம்’முதலானஆய்வுக் கட்டுரைகளைத் தொடர்ச்சியாகஎழுதினார். இத்தகையபண்பாட்டுஒப்பீட்டுஆய்வின் பயனாகத் தமிழர் பண்பாட்டின் தொன்மையையும்,தமிழ்ப்பண்பாடுமத்தித்தரைக் கடற்பிரதேசங்களுக்குப் பரவியிருந்தமைபற்றியும்,அவர்களதுபண்பாடுகளுக்குத் தமிழர்பண்பாடுஎத்தகையபங்களிப்பினைச் செய்திருந்ததுஎன்பதுகுறித்தும் கட்டுரைகள் எழுதியும்,சொற்பொழிவுகள் நிகழ்த்தியும் வந்தார். அப்பொருள் பற்றிச் சுவாமிகள்; எழுதியகட்டுரைகளில் ‘தமிழர் நாகரிகத்தின் பழமை’,‘கடல் கடந்துநாகரிகத்தைப் பரப்பியமை’,‘தமிழ்மொழிவரலாறு’முதலியவைகுறிப்பிடத்தக்கவையாகும்.

திராவிடர்,அவர்களின் தொன்மைத் தளங்கள்,திராவிடருக்கும் தமிழருக்கும் உள்ளதொடர்பு,தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியின் தோற்றம் -வளர்ச்சிநிலைகள்,தமிழ் மொழிபரவியிருந்த இடங்கள்,தமிழ் மொழி பிற மொழிகளுக்குவழங்கியசொற்கள்,அவற்றின்வழிபெறப்படும் வரலாற்றுச் செய்திகள்முதலானபொருண்மைகள் பற்றிஅறிந்துகொள்வதற்கு' உலகபுராணம்' இ'மேற்றிசைச் செல்வங்கள்' முதலானகட்டுரைகள் துணையாகின்றன.

தமிழரதுநாகரிகம் மிகப் பழமைவாய்ந்தது. உலகசரித்திரத்திலேதமிழரேமுதன்முதல் நாகரிகவாழ்க்கைஎய்தியசாதியர:; அவர்கள் கடல் கடந்து சென்றுதமதுநாகரிகத்தைப் பலப்பலநாடுகளிலும் பரப்பினார்கள்;,வணிகத்துறையிலும்,கணிதநூல்,வானநூல் முதலியபலதுறைகளிலும் வல்லுநராய் விளங்கினார்கள் என்பனபற்றியவிடயங்களைச் சான்றுகளுடன் விளக்குவதாகஉலகபுராணம் என்றகட்டுரைஅமைகின்றது.

சேர்.எச்.எச். ஜான்சன்,எச். ஜி. உவெல்ஸ்,உவில்விறட்ஸ் காவென் பிளனற், ஹக்ஸ்லிமுதலியமேலைநாட்டுஅறிஞர்கள்,சுமேரியம்,அக்கேடியம்,பாபிலோனியம்,எகிப்தியம்,ஆசுரேயம் முதலியநாகரிகங்கள் பற்றிமுழுமையாகஆராய்ந்துஅவற்றின் வரலாற்றினைநிறுவியுள்ளனர். காலவரிசைஅடிப்படையில் தரப்;பட்டுள்ளமேற்குறிப்பிட்டநாகரிகங்களைநோக்கும்போதுஅவற்றின் முன்வரிசையில் சுமேரிய - அக்கேடியநாகரிகங்கள் காணப்படுகின்றன. அப்பழையநாகரிகங்களுக்கும் தமிழின் தொன்மைநாகரிகத்திற்;குமிடையேஒற்றுமைகள் காணப்படுவதைச் சுவாமிவிபுலாநந்தர் 'நாகரிகவரலாறு'என்றகட்டுரையில் ஆராய்ந்துவிளக்கியுள்ளார். யவனர்கள் தத்துவம்,எழுத்துக்கலைமுதலானவற்றில் மிகவும் முன்னேற்றம் அடைந்தவர்;களாக இருந்தனர்; என்பதைஅவர்களதுபண்பாட்டுவரலாறுவிளக்கிக் கூறுகின்றது. ஆயினும் யவனர் முதலானவர்கள் பரதகண்டத்திலிருந்துபலவிடயங்களைப் பெற்றுத் தமதுநாகரிகங்களைவளம்படுத்திக்கொண்டனர் என்றகருத்தைமேனாட்டுஅறிஞர்களின் கருத்துக்களைச் சான்றுகாட்டிவிளக்கியுள்ளார்.

கி. மு. 2750 ஆம் ஆண்டிற் பாரசீகவிரிகுடாமுதல் மத்தித்தரைக் கடல் வரையுள்ளபகுதியிற் சுமேரியசாம்பிராச்சியம் பரவியிருந்தது. அதன் தலைநகரமாகஎரேக் விளங்கிற்று. உலகில்முதன் முதலாகக் கட்டிடங்களையும் பட்டணங்களையும் தோற்றுவித்தவர்கள் சுமேரியர் ஆவர். இவர்கள் பேசியமொழிதிராவிடமொழிகளோடுமிகநெருங்கியதொடர்புடையவை. சுமேரியர் கோபுரத்தோடு கூடியகோயில்களைக் கட்டியிருந்தார்கள். நிப்பூர் என்னுமிடத்திலேதமது பிரதானதெய்வமாகிய'எல்-இல்'என்னும் சூரியக் கடவுளுக்குஒருகோயில் கட்டியிருந்தனர். இதுபற்றியஆய்வில் ஏற்கனவேஈடுபட்டிருந்தபிளனற், ஹக்ஸ்லிஎன்ற இரு அறிஞர்களின் ஆய்வுத் தரவுகளைத் துணைக்கொண்டுஎகிப்தியரும் திராவிடரும் ஒரேகுலமுறையில் வந்தவர்களாக இருத்தல் வேண்டும் என்றகருத்தைச் சுவாமிகள் முன்வைத்துள்ளார்.

ஒருகாலக்கட்டத்தில் மஞ்சள் நிறத்தையுடையமிகவும் சீர்திருத்தமுடையஒருசாதியார் இங்கிலாந்து,பிரான்சு, ஸ்பானியா,மத்தித்தரைக்கடற் பிரதேசங்கள்,எகிப்து, இந்தியா,சீனத்தின் பசுபிக்கரைப் பிரதேசம்,மெச்சிக்கோ,பெருஆகியநாடுகளில் பரவியிருந்தனர். அவர்கள் சூரியனையும் பாம்பையும், இந்தியாவில் வழங்கும் சுவஸ்திகாஎன்ற அடையாளத்தையும் சமயத்தோடுதொடர்புபடுத்தி வழிபட்டுவந்துள்ளனர். அவர்கள் கி. மு. 15,000 ஆண்டுகளுக்குமுற்பட்டவர்களாவர். அவர்களதுபண்பாட்டுக்குஉட்பட்டகிறீத்தீவில் 1920இல் கிடைத்தகல்வெட்டுக்களின் எழுத்துக்களைஆராய்ந்தஎச். எச். ஜான்ஸ்டன் என்றஅறிஞர்,அவ்வெழுத்துக்கள் கி.மு. 3000 ஆண்டுகளுக்குமுற்பட்டவைஎன்றும்,அக்கல்வெட்டுக்களில் எழுதப்பட்டமொழியும் திராவிடமொழிகளோடுதொடர்புகொண்டிருந்ததுஎன்றும் குறிப்பிட்டிருந்தார். அந்தஆய்வின்மூலம் பெறப்பட்டகருத்தினைச் சுவாமிவிபுலாநந்தர் தமிழ்ப் பண்பாட்டியலுடன் தொடர்புபடுத்திஆராய்ந்து கூறும் கருத்தினைநோக்கலாம்:

எகிப்தின் பிரதானநதியாகியநீலநதி,சுமேரியதலைநகராகியநிப்பூர்,கடவுட் பெயர்களாகியஎல்,வேல் என்பனதமிழ்மொழியாகவே இருக்கின்றன. பின்னும் யவனமொழிஎழுத்துக்களின் வடிவம்,தமிழ் எழுத்துக்களோடும் கிரந்தலிபியிலுள்ளஎழுத்துக்களோடும் தொடர்புடையதாகக் காணப்படுகிறதுஎன்றார்.

கி. மு. 2000இல் அமேரியர் இனத்துமுதலாம் முறாபிஎன்னும் அரசன் சுமேரியரைவென்றுபபிலோனியஅரசைத் தாபித்தான்.அவ்வரசுமிகவும் நாகரிகமுற்றுவிளங்கிற்றுஎன்பதை கி. பி. 1900இல் அப்பகுதியிற் கண்டறியப்;பட்டகற்சாசனத்தில் எழுதப்பட்டிருந்தபாபிலோனியர் வழங்கிய 282 பிரிவுகளைக்கொண்டசட்டப் புத்தகம் சான்றுபடுத்துகின்றது. பாபிலோனியநாகரிகம் கிரேக்கநாகரிகத்திற்குமுன்னோடியாகஅமைவதாயிற்று. அங்குகாணப்பட்டஎல்,வேல்,ஆசுர்,எயா (அயன்) முதலானசொற்கள் தமிழ்மொழியுடன் தொர்புடையனவாகக் காணப்படுதல் பற்றியும் சுவாமிகள் ஆராய்ந்துஎழுதியுள்ளார். சுமேரியம்,பாபிலோனியம்,கிரேக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலானநாகரிகங்களைஆராய்ந்தசுவாமிகள் கூறும் கருத்துதமிழினப் பற்றாளர்களைச் சிந்திக்கவைப்ப தாகும்:

எமதுதாய்நாடாகியபரதகண்டத்தின் நாகரிகமோ இவை எல்லாவற்றுக்கும் முற்பட்டது. செல்வச்செ ருக்கினால் அறிவுமுடுண்டுகிடக்கின்றமேற்றிசைப் பிரபுக்கள் இதனைஅறிந்தாலும் வெளியிடுவதில்லை. எனவேநம் நாட்டுப் பெருமைகளைநாமேகண்ட றிந்துவெளிப்படுத்தமுன்வரவேண்டும். அதற்குஉ டல்,பொருள்;,ஆவி மூன்றையும் தேசசேவைக்கே ஒப்புக்கொடுத்து,நமதுதேசத்தையும் மொழியையும் பெருமையடையச் செய்யவேண்டும்என்றார்.

**சேஸ்** (**Sayce:1887**)என்றஅறிஞர் 'ஹிப்பார்ட் செ ாற்பொழிவு' என்ற நூலிலேதென்னிந்தியாவுக்கும் சுமேரியாவுக்கும் இடையில் கி. மு. 4000 ஆண்டுக ளுக்குமேலாகவணிகத் தொடர்பு இருந்ததாகக் கூறு வர். அவர் தம் நூலிற் குறிப்பிடும் செய்திஃண்டுநோக் கத்தக்கது:

சுமேரியமன்னனின் தலைநகரமான'ஊர்'என்ற இடத்திற் சந்திரபகவானுக்குஎழுப்பியகோயிற் சி தைவுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்தியநாட் டுத் தேக்கமரத்தின் துண்டுஒன்றும் அச் சிதைவுகளிற் காணப்பட்டது. அதன் வயதுஎல்லை கி.மு.3000 ஆண்டுஎனக் கணிக்கப்படுவதால் அதற்குமுன்னரே தேக்குமரம் ஏற்றுமதியாயிற்று. 'ஊர்'என்றஅவ்வூர் கி.மு. 3000ஆண்டளவில்அழிந்தமையால் அதற்கும் பலஆண்டுகளுக்குமுன்னராகவேநாகரிகவளர்ச்சி கண்டிருக்கவேண்டும்.

சுவாமிவிபுலாநந்தர் தமிழர் நாகரிகம் கிரேக்கநாக ரிகத்திற்கும் முற்பட்டதுஎன்பதைது இத்தால் நிறுவி னார் எனலாம். பெரிப்புஸ் என்றஅறிஞர் தமிழர் பண்பாட்டுப் பழமையைமேலும் பல்லாயிரம் ஆண் டுகட்குமுற்பட்டதுஎன்பதைவருமாறுகுறிப்பிட் டுள்ளார்.

கிரேக்கமக்கள் அநாகரித்தினின்றும் விழித்தெழு வதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன்னபேஎ கிப்தும் பண்டைய இந்தியநாடுகளும் வணிகத்தொடர் புகொண்டிருந்தன. பாரசீகவளைகுடாவின் வடபால் இந்நாடுகள் ஒன்றோடொன்றுபண்டமாற்றுச் செய் துகொண்டன.

இச்செய்தி,பல நூற்றாண்டுகளுக்குமுன்னர் எழு தப்பட்டஎிரித்திரியக் கடலின் பெரிப்ளுஸ்(**Periplus of the Erithraean**)என்ற நூலிற் குறிப்பிடப்பட் டுள்ளது. பாபிலோனியர்களுடன் தமிழ் வணிகர் வர்த்தகத் தொடர்புகொண்டிருந்தமைக்குச் சான்று கள் கிடைத்துள்ளன. பாபிலோனியாவில் நிப்பூர் என்ற இடத்தில் முரஎன்பவரும் அவரதுமக்களும் நடத் திவந்தவணிகத்திலேநாணயங்கள் பயன்படுத்தப்பட் டுள்ளன. அவர்களதுவணிகத்திற் கணக்குப் பதியப் பட்டகளிமண்ணோடுகள் சிலவற்றிற் பாபிலோனியர் தமிழகவணிகருடன் கொண்டிருந்தபற்றுவரவுகள் குறிக்கப்பட்டுள்ளன. அதேகாலத்திலேதமிழ் வணிகர் பாபிலோனியநகரத்திற் குடியேறி,அங்கேயேதங் கித் தம் தொழிலைமேற்கொண்டுவந்தமைக்;கும் இவ் வேடுகள் சான்றுபகர்கின்றனஎனடாக்டர் கே.கே. பிள்ளை (2000:51) குறிப்பிட்டுள்ளமையும் சான் றாகும்.

தாவீதுமன்னனின் புதல்வன் சாலோமன் என்ப வனின் ஆட்சிக் காலத்தில் (கி.மு.1000) பெரும் பொருட்செலவில் எருசலேம் பட்டணத்தில் மிகப்பெ ரியதேவாலயம் ஒன்றுகட்டப்பட்டது. சாலோமன் தமிழகத்தாரோடுவணிகத்தொடர்புகொண்டிருந்தான் என்பதுபிறநாட்டார் குறிப்புக்களிலிருந்துஅறியப் படுகிறது. அவர்கள் பாய்மரக் கப்பல்களின் மூலம் இந்தியாவுக்குவந்துஏலம், இலவங்கம்,பட்டுத்து ணி,பொன்,வெள்ளி,யானைத்தந்தம்,மயில்தோகை, இரத்தினம் முதலானபொருட்களைப் பெற்றுச் சென்ற மைக்கானசான்றுகள் அறியப்படுகின்றன. அவர்கள துமொழிஎபிரேயம்என்றமொழியில்; அகில்,தோகை முதலானபலதமிழ்ச் சொற்கள் இடம்பெற்றுள்ளன. எனவேகிரேக்கநாகரிகம் வளர்ச்சியடைந்திருந்தபோ துதமிழரதுநாகரிகமும் வளர்ச்சிகண்டிருந்ததுஎன்ப தேசுவாமிவிபுலாநந்தரின் கருத்தும் ஆகும்.

பம்பாய் நகரப் பல்கலைக்கழகவரலாற்றுப் பேராசி யரர் எச். ஹ்கராஸ் சுவாமிகள் இத்தாலியநாட்டுமதகு ருஆவார். அவர் காய்தல் உவத்தலின்றிதனதுஆய்வுக் கருத்துக்களைவெளியிட்டிருந்தார். சி;ந்துவெளிநா கரிகம் திராவிடருக்கேஉரியதென்றும்,அம்மக்கள் மீனராசியையாழ் என்னும் பழந்தமிழ்ப் பெயரினால் வழங்கினர் என்றுகுறிப்பிட்டிருந்தார். எனவேசிந் துவெளிமக்கள் இசை நூலிலும் வானியல் நூலிலும் அறிவுபெற்றிருந்தமையையும் இச்சான்றுகள்காட் டுகின்றனஎன்றார். முகிஞ்சதாரோநாகரிகம் பழந் தமிழ் நாகரிகத்தோடும் யூபிறற்றஸ் - ரைகிறிஸ் நதிக்கரையிற்பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் விளங் கியசுமேரியநாகரிகத்தோடும் தொடர்புடையதுஎன் பதுஅறிஞர் கருத்தாகும். சுமேரியர் தமிழர் வழிவந்த வர்களேஎன்பதற்குப் பலசான்றுகள் உள்ளனஎனக் கூறி,அதற்குரியசான்றுகள் பலவற்றைத் சுவாமிவிபு லாநந்தர் தம் கட்டுரைகளிலேதந்துள்ளார்.

ஏச்.ஆர். ஹால் எழுதிய **The Ancient History of the Near East** என்ற நூலிலேதரப்பட்டகருத்துக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளின் சாரத்தையும் சுவாமிவுணீபுலாநந்தர் தனதுகட்டுரையிலேதந்துதம் கருத்துக்களைநிறுவியுள்ளமையைவருமாறுகாண்க:

சுமேரியரதுஉருவச் சாயல் அவர்களதுஓவியங்களாலேதெளிவாகப் புலப்படுகின்றது. பழையசுமேரியர் திராவிடகுலத்தார் என்றுசுமேரியஉருவங்களைக் கூர்ந்துநோக்குவார்க்கு இனிது புலப்படும். ....; தென்னிந்தியரின் உருவத் தோற்றமேபழைய சுமேரியரின் உருவத் தோற்றம். பழையசுமேரியர் இந்தியாவிலிருந்துதரைவழியாகவும் பாரசீரகக் கடல் வழியாகவும் சுமேருநாட்டிற் குடியேறினார்களென்றுஎண்ண இடமுண்டு. இவர்கள் குடியேறிய புது நாட்டிற்குக் கொண்டுவந்தநாகரிகம் சிந்துநதிக்கரையிலேவளர்ச்சியெய்தியிருக்கலாம் . இவர்கள் சிந்துநதிக்கரையிலிருந்துசுமேருநாட்டிற்குவரும்வழியிலேஏலம் (**ELAM**)என்னும் நாட்டிலேதமதுநாகரிகத்தைப் பரப்பினார்கள்.(சுவாமிகளின் ஆக்கங்கள். தொகுதி:3:210-211)

இதுவரைகுறிப்பிடப்பட்டதரவுகளிலிருந்து,19ஆம் 20ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்தமேனாட்டுஅறிஞர்கள் பாபிலோனியநாகரிகம்,திராவிடநாகரிகம் என்பனபற்றிஎழுதிய நூல்கள் அனைத்திலும் சிந்துவெளிதிராவிடநாகரிகமேஉலகநாகரிகத்தின்அடிப்படையாகஅமைவதும்,திராவிடக் குடியேற்றம் மேற்குலகநாடுகளில் இடம்பெற்றிருந்தனஎன்பதும் பெறப்படுகின்றன. பின்னாட்களில் பிராமணிய மயப்பட்டஆட்சிவழிச் செல்வாக்கும் மேலைத்தேயத்தாரின் மேலாண்மைப் போக்கும் உண்மைகள் மறைக்கப்படுவதற்குக் காரணமாயினமைகாலத்தின் வாய்ப்பாயிற்றுஎன்பதைச்சுவாமிகளேஉணர்ந்துவருமாறுஎழுதினார்.

பண்பாட்டுவரலாற்று நூல்கள் தமிழ் மொழியிலேதோன்றவேண்டும். தமிழ் மக்கள் அவற்றைச்; சிந்தனையோடுபடிக்கவேண்டும். இளமாணவர்களுக்குக் கல்விபயிற்றும் போதகாசிரியர்கள் தமிழ்க் குலத்தாரின் இளமையையும் செழுமையையும் ஆராய்ந்துஉணர்ந்துமாணவர்க்குஅறிவுறுத்துவாராக. (விபுலாநந்தரின் ஆக்கங்கள் தொகுதி 3-217)

தமிழர் வரலாறுதிட்டமிட்டேதிரிபுபடுத்தப்பட்டும் மறைக்கப்பட்டும் வந்துள்ளன. எனவேமாணவருக்குவிளங்கும் வகையிலேதமிழரின் வரலாறுஎழுதப்படவேண்டியதேவையைசுவாமிகள் இங்குகுறிப்பிட்டுள்டர் எனலாம். மேலும் சுவாமிகள் குறிப்பிடுவதைநோக்கலாம்:

'பழமையைப் பேணிஅவற்றிலேபுதியஆய்வுகளை மேற்கொள்ளுதல் நமதுதலையாயகடமையாகும். கடல்வாய்ப் பட்டனவும்,காலத்தின் மாறுதலினால் மறைந்துபோயினவுமாகிய நூல்கள் மிகப்பல. அந்நூற் பெயர்களைக்கூறிப் பழமைபாராட்டுவதோடு அமைந்திருப்போமா? இல்லை. முன்னிருந்தகலைச் செல்வத்தைமீண்டும் பெறுவதற்குமுயல்வோம். அத்தகையமுயற்சிநமதுநாட்டுக்குஆக்கமளிக்கும். நாடகம், இசை,சிற்பநூல்,சித்திரநூல்,விஞ்ஞானநூல்,வைத்தியநூல்,சோதிடநூல்,கணிதம்,உளநூல்,நாணயநூல்,அரசியல்நூல்,தேசசரித்திரநூல்,சட்டநூல் என்னும் இத்துறைகளிலுள்ளபழைய நூல்களைப் புதுக்கிப் பதிப்பித்தல், புதுநூல்கள் ஆக்கித்தருதல் என்பனதமிழர் தம் கடனாகும். அங்ஙனம் செய்வாராயின் தமிழ்க் கல்வி இன்னும் பலதுறைகளிற் சென்று விருத்திஅடையும்.

எனக் கூறும் சுவாமிகள் தமிழர் நாகரிகவரலாற்றிலும் பண்பாட்டுப் பெருமையிலும் எத்தகூடுபாடும் அக்கறையும் கொண்டிருந்தார் என்பதுபுலனாகின்றது.

உடலுறுதிபயக்கும் மருத்துவக்கலைதமிழிலேநிறைந்துகிடக்கின்றது. உடற்கட்டினியல்பு,நோயினியல்பு, நோய் தணிக்கும் மருந்தினியல்பு,என்பவற்றைத் தமிழறிஞர் நன்குணர்ந்து நூலியற்றிவைத்தாராதலினால், இந்நாளிலும,; தமிழ் மொழியாளராகியசித்தவைத்தியம் வல்லோர் பிறமொழிவைத்தியராலேதீர்த்தற்கரியகருங்குட்டம்,வெண்குட்டம்,கயரோகம்,நீரிழிவுஎன்றின்னவற்றைஎளிதிற் குணப்படுத்திவருகிறனர். இத்தகையவைத்திய நூல்களைச் செவ்விதிற் பதிப்பித்துஉலகிற்குஉதவுதல் அத் துறையில் வல்லஅறிஞர்மேற் பொறுத்தகடனாகும்என்றும் சுவாமிகள் வற்புறுத்தினார்.

இனி,நாள்மீன்,கோள்மீன் என்றின்னவற்றினது சஞ்சரிப்பு, சூரிய சந்திரரது இயக்கம் என்பவற்றையெல்லாம் கணித்தறிந்துநிச்சயித்தற்குரியகணிதநூல்கள் தமிழில் இருந்தனஎன்பதற்குப் புறநானூறு,பரிபாடல்,சிலப்பதிகாரம்,சீவகசிந்தாமணிமுதலானதமிழ் நூல்களுள்ளேகாணப்படும் கணிதநூல் முடிபுகள் சான்றுபகர்கின்றன. இவற்றைஆராய்துதொகுதிநூலுருவில் வெளிக்கொண்டுவருதல் தமிழன்னைக்குச் செய்யும் பெருந்தொண்டாகும்என்றும் சுவாமிகள் ஆய்வுநெறிகளைச் சுட்டிக்காட்டியுள்ளதையும் அவ்வத்துறையைச் சேர்ந்ததமிழ் அறிஞர்கள் கருத்திற் கொள்வார்கள் எனஎதிர்பார்ப்போம்.

**முற்றும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மன்னன் எல்லாளனின் பலம்வாய்ந்த விஜித்தநகரக் கோட்டை

**இலங்கையை ஆட்சி செய்த மன்னர்களில் மிகவும் பலம் வாய்ந்த கோட்டையைக் கட்டிய இரண்டு மன்னர்களில் ஒருவன் எல்லாளன்**



எல்லாள மன்னனின் கோட்டையின் பிரதான வாயில் இருமலைகளுக்கிடையில் அமைந்திருந்த இடம்

**2000 வருடங்களுக்கு** முன்பு இலங்கையை 44 வருடங்கள் ஆட்சி செய்த தமிழ் மன்னன் எல்லாளனின் சுவடுகளைத் தேடி இலங்கையின் முதலாவது தலைநகரான அனுராதபுரத்துக்குச் சென்றேன். அங்கு எல்லாள மன்னனின் சுவடுகள் காணப்பட்ட சில இடங்களுக்குச் சென்று ஆராய்ந்த பின் அங்கிருந்து திரும்பும் வழியில் எல்லாள மன்னனின் முக்கிய அடையாச் சின்னமொன்று இருக்கும் இடத்திற்கும் சென்று ஆய்வுகளை நடத்தவேண்டும் என முடிவு செய்தேன். அந்த அடையாளச் சின்னம் தான் விஜித்தநகரக் கோட்டை. எல்லாள மன்னனின் 32 ஆண்டுகளில் மிகவும் பலம் வாய்ந்த கோட்டை.

விஜித்தநகரம் தற்போது விஜித்தபுர என அழைக்கப் படுகிறது. கல்குளம், திரப்பனை, மருதங்கடவளை, தோணியாகல் ஆகிய இடங்கள் ஊடாக தம்புள்ளைக்கு செல்லும் வீதியில் தோணியாகல் வரை சென்று அங்கிருந்து விஜித்தபுரத்திற்கு செல்ல வேண்டும். செல்லும் வழியில் தோணியாகல, இஹலகம ஆகிய சந்திகளில் இருந்த வழிப்பிள்ளையாரையும் வணங்கிச் சென்றேன்.

அனுராதபுரம், பொலநறுவை ஆகிய மாவட்டங்களைக் கொண்ட வடமத்திய மாகாணத்தில் சந்தி சந்திக்கு வழிப் பிள்ளையார் கோயில்களைக் காணலாம்.



என்.கே.எஸ்.
திருச்செல்வம்
வரலாற்று ஆய்வாளர்
இலங்கை
nksthirugmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனெனில் நமது பிள்ளையார் தான் வடமத்திய மாகாணத்தின் காவல் தெய்வம். இலங்கையில் வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய ஏழு மாகாணங்களிலும் சிங்கள மக்கள் பெரும்பான்மை யாக வாழ் கிறார்கள். இவ்வேழு மாகாணங் களிலும் ஏழு வெவ்வேறு காவல் தெய்வங்களை சிங்கள மக்கள் வழி படுகின்றனர் என்பது குறிப்பி டத்தக்கது.

இஹளகம சந்தியில் இருந்து மேலும் சிறிது தூரம் முன்னோக் கிச் சென்ற போது பிரசித்தி பெற்ற யோத எல கால்வாய் காணப்பட் டது. தாதுசேனன் மன்னன் கட் டிய கலாவெவ குளத்தில் அதி வட முனையில் இருந்து, வடமேற்குப் பக்கமாக நீரை எடுத்துச் செல்லும் பண்டைய கால்வாயே யோத எல என்றழைக்கப்படுகிறது. இலங் கையை ஆண்ட தாதுசேன மன்ன னால் பொ.ஆ. 459 ஆம் ஆண்டு இக்கால்வாய் வெட்டப்பட்டது. கலாவெவ குளத்திலிருந்து அனு ராதபுரத்தில் உள்ள திஸ்ஸா வாவி குளத்திற்கு நீரைக் கொண்டு செல் வத ற்காக 87 கி.மீ நீளத்திற்கு இக் கால்வாய் வெட்டப்பட்டது.

கால்வாயைக் கடந்து சிறிது தூரம் சென்றதும் நான் தேடிவந்த விஜித்தபுரியை அடைந்தேன். விஜித்தபுரி கலாவெவ குளத்தின் வடபகுதியில் அமைந்துள்ள ஓர் சி றிய ஊர். அங்கு பிரசித்தி பெற்ற இடம் விஜித்தபுர ரஜமகா விகாரை எனும் பௌத்த வழிபாட்டுத் தல மாகும்.

அவ்விடத்தை நான் வந்து சேரும் போது நேரம் சரியாக மாலை 4.20 மணி. இருள் சூழ்வதற்கு இன்னும் இரண்டு மணித்தியாலங்களே உள்ளன. அதற்குள் எல்லாள மன்னனின் கோட்டையை முழுமையாக ஆராய்ந்து விட வேண்டும் எனும் ஆர்வத்தோடு விகாரையின் முன்பக்கம் இருந்த வாகன தரிப் பிடத்தில் நின்று கொண்டிருந்த சிலரிடம் விசாரித்தேன். அவர்கள் விஜித்தபுரி கோட்டை இருந்த இடம் இதுதான் என்று விகாரை வளாகத்தைக் காட்டினர்.



வாகனத் தரிப்பிடத்தில் ஓர் பண்டைய கட்டிட இடிபாடு காணப்பட்டது. செவ்வக வடி வில் கருங்கல்லில் அமைக்கப் பட்ட கட்டிடத்தின் அத்திவாரமும், நிறுத்தி வைக்கப்பட்ட சில தூண் களும், உடைந்து கீழே விழுந்த நிலையில் சில தூண்களின் துண் டுகளும் அவ்விடத்தில் காணப் பட்டன. அவற்றைப் பார்த்ததும் கோட்டை இருந்த இடம் இதுவா கத்தான் இருக்கும் என்பதை யூகித் துக் கொண்டேன்.

பிரதான வாயில் வழியாக விகாரை வளாகத்திற்குள் நுழைந் தேன். அங்கு பௌத்த தூபி, சிலை மனை, சிறிய விஷ்ணு கோயில், பிக்குகள் விடுதி, அரச மரம் ஆகி யவை மட்டுமே காணப்பட்டன. இவை எல்லாமே அண்மையில் அமைக்கப்பட்ட புதிய கட்டிடங் களாகத் தெரிந்தன.

**வைரவர் சிற்பம் கிடைக்கப்பெற்ற கட்டிட இடிபாடு**

விகாரை வளாகத்தின் பின் பக்கம் மட்டும் ஓர் பண்டைய கட்டிடத்தின் சிதைவுகள் காணப் பட்டன. சதுர வடிவில் மூன்று அடி உயரமான கருங்கல் அத்தி வாரமும், வாசல் படியும், நிறுத்தி வைக்கப்பட்ட சில தூண்கள் மட் டுமே அவ்விடத்தில் காணப்பட் டன. இவற்றின் அருகில் இருந்த தூபியின் முன் பக்கம் இரண்டு காவற்கல் சிற்பங்கள் காணப்பட் டன. இவை ஓர் முனிவரின் வடி வம் போல் தெரிந்தது. வேறு ஒரு இடத் தில் நாக சிற்பமும், வைரவர் சிற்பமும், மேலும் ஆங்காங்கே நிறுத்தி வைக்கப்பட்ட சில தூண் களும் காணப்பட்டன. இவை யாவும் எல்லாள மன்னனின் கோட்டையின் உள்ளே இருந்த கட்டிடத்தின் சுவடுகளாகும். விகாரை வளாகம் முழுவதும் சுற்றி வந்தேன். ஆனால் நான் தேடி வந்த எல்லாளனின் கோட்டை இடிபாடுகளை எங்கு தேடி யும் காணக் கிடைக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோட்டை இருந்தமைக் கான எந்த சுவடுகளையும் காணவில்லை. அதற்குள் நேரம் 6 மணியை நெருங்கி விட்டது.

**பழமை வாய்ந்த நாக சிற்பத்தின் உடைந்த துண்டுகள்**

இருப்பினும் நம்பிக்கையோடு அங்கிருந்த பிக்கு விடம் கேட்டேன். விஜித்தபுரி கோட்டை இவ்விடத் தில் தான் இருந்த தாக அறிந்தேன். ஆனால் அதன் இடிபாடுகள் எதையும் காணவில்லையே, அவை எங்கே உள்ளன எனக் கேட்டேன். அப்போது பிக்கு கோட்டை இங்கு தான் இருந்தது, ஆனால் அவை பற் றிய விபரங்களை பெரிய சாதுவிடம் தான் கேட்க வேண்டும் எனக் கூறினார். உடனே நான் அவரை பார்க்க முடியுமா எனக் கேட்டபோது, அவர் பிர தம விகாராதிபதி இருக்கும் ஆவாச கெயவுக்கு என் னைக் கூட்டிச் சென்றார். அங்கே பிரதம பிக்குவை வணங்கி, அவரிடம் என்னை அறிமுகப் படுத்திக் கொண்டு விஜித்தபுரி கோட்டை பற்றிக் கேட்டேன். அவர் கோட்டை பற்றிய சில விபரங்களைக் கூறி னார்.

எல்லாளனின் விஜித்தநகரக் கோட்டை போரின் போதே முற்றாக அழிந்து விட்டது. மன்னன் துட்டகை னுனு நான்கு மாதங்கள் கடும் போர் புரிந்தே இந்தக் கோட்டை யைக் கைப்பற்றினான். அவ்வளவு பலம் வாய்ந்த கோட்டை. மன்னன் போரின் போது தனது வாளைக் கூர்மையாக்க பயன்படுத்திய சாணைக்கல் இன்றும் உள்ளது. துட்ட கைமுனு இக்கோட்டை யைக் கைப்பற்றிய பின் இவ் விடத்தில் ஓர் தூபியைக் கட்டினான். அதன் பின்பு அந்தத் தூபி பராக்கிரமபாகு மன்னனால் புனரமைக்கப்பட்டது. அதன் பின்பு 19 ஆம் நூற்றண்டிலேயே இப்போதுள்ள ஏனைய கட் டிடங்கள் கட்டப்பட்டன. ஆனால் கோட்டையின் வாசல் மட்டும் எஞ்சியுள்ளது எனக் கூறி, வாருங்கள் காட்டுகிறேன் என்று என்னை முன் பக்கம் அழைத் துச் சென்றார். மகிழ்ச்சியும் ஆவலும் அதிகரித்த நிலை யில் கோட்டை வாசலைப் பார்க்க பிரதம பிக்குவோடு வெளியே வந்தேன். அவர் விகாரை வாசல் பக்கத் தைக் காட்டி, அதோ அதுதான் கோட்டை வாசல் என் றார். பிக்கு காட்டிய பக்கம் பார்த்த போது ஆச்சரியம் அடைந்தேன்.

அது பாதையின் அடுத்த பக்கம் அமைந்திருந்த இரட்டை மலைகள். ஒரே அளவிலான இரண்டு மலை களுக்கும் இடையில் ஓர் பிளவு போன்ற அடிவாரம் காணப்பட்டது. அப்பிளவு தான் கிழக்குக் கோட்டை வாசலாகப் பயன் படுத்தப்பட்டுள்ளது. இம் மலைகள் ஒவ்வொன்றும் சுமார் 400 மீற்றர் நீளமும் 100 மீற்றர் அகலமும் கொண்ட சிறிய மலைகளாகும்.

தமிழர் பாரம்பரியத்தின் முக்கிய புராதன சின்னங் களில் ஒன்றுதான் இந்த விஜித்தநகரக் கோட்டை. இக்கோட்டை பொ.ஆ.மு. 145101 வரையான 44 வருட காலப்பகுதியில் இலங்கை முழுவதையும் ஆட்சி செய்த தமிழ் மன்னன் எல்லாளனின் பலம் வாய்ந்த, மிக முக்கிய கோட்டையாக விளங்கியது.

விஜித்த நகரக் கோட்டையில் நான்கு பக்கங் களிலும் நான்கு வாசல்கள் இருந்தன. இவற்றில் பிரதான வாசலாக இந்த இரு மலைகளுக்கிடையி லான கிழக்கு வாசலே விளங்கியுள்ளது. இதைத் தவிர தெற்கு வாசலும் முக்கிய வாசலாக இருந்து ள்ளது. கிழக்குப் பக்கம் மலைகள் அரணாக இருந்துள்ள அதே வேளை, ஏனைய மூன்று பக்கங்களிலும் மூன்று அகழி கள் அரண்களாக அமைக்கப்பட்டிருந்தன. இவற்றின் உள்ளே கற்களைக் கொண்டு 18 முழ உயரமான கோட்டைச் சுவர் கட்டப் பட்டிருந்தது. நான்கு வாசல் களிலும் பலமான இரும்புக் கதவுகள் அமைந்து வாசல் கள் பாதுகாக்கப் பட்டிருந்தன. கோட்டை வாசல்க ளில் காவற் கோபுரங்கள் இருந்தன.

எல்லாள மன்னனின் பல கோட்டைகள் மகாவலி கங்கைக் கரையிலேயே அமைந்திருந்தன. இக்கோட் டைகளை துட்ட கைமுனுவின் படைகள் கைப்பற்றிய பின் அதிலிருந்து தப்பிய எல்லாளனின் தமிழ்ப் படை யினர் விஜித்த நகர கோட்டைக்கே வந்து சேர்ந்தனர்.

துட்டகைமுனுவின் பத்து ராட்சத படைத் தளபதிக ளில் வேலுசுமணன் என்பவன் விஜித்த நகரக் கோட் டையின் கிழக்கு வாசலில் குதிரைப் படையுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்று எல்லாளனின் தமிழர் படையுடன் போர் புரிந்தான். கந்துலன், நந்த மித்திரன், சூரநிமலன் ஆகிய ராட்சத தளபதிகள் தெற்கு வாசலிலும், மகாசேனன், கோதன், தேரபுத்திரன் ஆகியோர் ஏனைய வாசல்களிலும் நின்று தமிழர்களுடன் போர் புரிந்தனர். இவ்வாறு நான்கு மாதங்கள் போரிட்ட பின்பே எல்லாள மன்னனின் விஜித்த நகர் கோட்டையை துட்டகைமு



னுவின் படைகளால் கைப்பற்ற முடிந்தது.

மகாவம்சத்தில் இக்கோட்டை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. எல்லாள மன்னனின் 32 கோட்டைகளில் 32 வது கோட்டையே விஜித்தநகரக் கோட்டை எனவும், ரோகனை இராச்சியத்தில் இருந்து படைதிரட்டி வந்த துட்டகைமுனுவின் படைகள் 31 கோட்டைளைக் கைப்பற்றிய பின், விஜித்த நகருக்கு வந்து 4 மாதங்கள் போராடிய பின்பே இக்கோட்டையைக் கைப் பற்றி, பின்பு இங்கிருந்து அனுராதபுரம் சென்றதாகவும் மகா வம்சம் கூறுகிறது.

விஜித்த நகரக் கோட்டையை துட்டகாமினியின் படைகள் முற்றுகையிட்ட போது தான் எல்லாளன் இந்தியாவிற்கு ஓலை அனுப்பி தன் மருமகனான பாலுகனுக்கு யுத்தம் பற்றிய செய்தியைத் தெரிவித்தான்.

**வைரவர் அல்லது முனிவரின் சிற்பம்**

இங்கு புராதன தமிழர், சைவ பாரம்பரிய எச்சங்கள் சில இன்றும் இங்கு காணப் படுகின்றன. இங்குள்ள விஹாரையில் காணப்படும் வைரவர் சிற்பம் இவற்றில் ஒன்றாகும். பௌத்த விஹாரைகள் எதிலும் காணக் கிடைக்காத இச்சிற்பம் எல்லாள மன்னன் காலத்தில் இங்கிருந்த வழிபாட்டுத் தலமொன்றின் சின்னமாக இருக்கலாம் என நம்பப்படுகிறது. மிகத் தொன்மை வாய்ந்த உருவ அமைப்பைக் கொண்ட இந்த சிற்பம் ஓர் முனிவரின் சிற்பம் எனவும் கூறப்படுகின்றது.

**வாள் சாணை பிடித்த கல்**



துட்டகைமுனு எல்லாளனின் படைகளுடன் போர் செய்ய பயன்படுத்திய வாளைத் தீட்டி கூர்மைப் படுத்திய கருங்கல் ஒன்றும் இங்கிருக்கும் விஹாரையில் காணப் படுகிறது. இது கட்டு கே கல என அழைக்கப்படுகிறது.

**பண்டைய விஷ்ணு கோயிலின் இன்றைய தோற்றம்**

விஜித்தபுர ரஜமஹாவிகாரையில் ஓர் பழமை வாய்ந்த விஷ்ணு கோயிலும் காணப்படுகிறது. இது புராண ஸ்ரீ விஷ்ணு தேவாலய என அழைக்கப்படுகிறது. இருப்பினும் இதன் காலம் என்னவென்று சரியாகத் தெரியவில்லை. விஷ்ணு கோயிலின் வாசல்




படிக்கல், கைப்பிடி வரிசை மற்றும் கோயிலின் முன் பக்கம் காணப்படும் இரண்டு கற்தூண்கள் போன்றவை இதன் தொன்மையைக் காட்டு கின்றன. இவற்றைத் தவிர விகாரை வளவில் சிதைந்த சில நாக சிற்பங்களும் காணப்படுகின்றன.

இலங்கையை ஆட்சி செய்த மன்னர்களில் மிகவும் பலம் வாய்ந்த கோட்டையைக் கட்டி 44 வருடங்கள் நீதி வழுவாத ஆட்சியை நடத்திய ஒரே மன்னன் எல்லாளன் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிடகுல இராவணனாரின் சமாதியை, மனிதகுல சித்தர் காலாங்கிநாதர் தரிசித்துள்ளார் – 07



இலிங்க பூமியிலிருந்து தமிழ்நிதி அருணா செல்லத்துரை

**புராதன** காலத்தில் இந்தியாவும் இலங்கையும் ஒன்றாக இருந்தன. இராவண மகாராசா தென்னிந்தியாவில் தேக்கன் பிரிவையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தார். முதலாவது கடல்கோள் இடம்பெற்றபோது இந்திய - இலங்கை நிலப்பரப்புகள் தனித்தனியாக பிரிக்கப்பட்டன. தென்னிந்திய நிலப்பரப்புகளையும் சேர்த்து ஆட்சி செய்த இராவண மகாராசா அங்கிருந்து வெளியேறியுள்ளார். இதற்கு ஒட்டக்கூத்தர் என்ற புலவரின் இராம காதையில் உள்ளவை ஆதாரங்களாகின்றன.

**முதலாவது கடல்கோள் :** ஒன்றாகவிருந்த இந்திய-இலங்கை நிலப்பரப்புகள் கடலால் பிரிக்கப்பட்டமை வரலாற்றின் காலக்கணிப்புகளில் முக்கிய இடம் பிடிக்கிறது. முதன்முறையாக திடீரென ஏற்பட்ட கடல்கொந்தளிப்புக் காரணமாக தென்னிந்தியாவின் தென்முனையும் இலங்கை நிலப்பரப்பும் இரண்டாகப் பிரிக்கப்பட்டன. இந்தக் கடல்கோள் அழிவுபற்றி, புராணங்களிலும் காவியங்களிலும் ஆங்கில வரலாறுகளிலும் பல விதமான விடயங்கள் கூறப்பட்டுள்ளன.



ஆங்கிலேயர் எழுதிய வரலாற்றுத் தகவல்களில், இந்தியாவையும் இலங்கையையும் பிரித்த கடல்பகுதி ஒரு ஆற்றின் அகலமாக இருந்தது என்றும் இதன் பெயர் தாமிரபரணி ஆறு என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு முதலாவது கடல்கோள் இடம்பெற்ற பின்னர், கி.மு.1810 களிலே வட இந்தியாவில் விஷ்ணுவை வழிபட்ட இராமர், கடல் கடந்து இலங்கைமீது படையெடுத்தார் என்று ஆங்கில வரலாறுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வழிபாடுகள் :** இலங்கையும் இந்தியாவும் ஒன்றாயிருந்தபோது லங்கா என்ற தென்பகுதியில் ஆட்சி செய்த சுமாலி என்ற அரசனிடமிருந்து குவேரன் ஆட்சியைக் கைப்பற்றியதும், இயக்கர் குல இராவணனார் லங்காவிலிருந்த ஆள்புலத்தை தென்னிந்தியாவிற்கு மாற்றியிருந்தார் என்பது ஒட்டக்கூத்தரின் ராமகாதையில் உள்ள வரலாற்றின் மூலம் தெளிவாகிறது.

ஒட்டக் கூத்தரின் இராமகாதையின்படி, இலிங்க வழிபாடு செய்து வந்த இராவணனார் அவருடைய இராஜதானியில் இருந்து, வி;ணுவால் துரத்தப்பட்டார் என்ற புராணக் குறிப்பு காணப்படுகிறது. விஷ்ணு என்று குறிப்பிடப்படுவது விஷ்ணுவை வழிபட்ட வைஷ்ணவர்கள் என்றே பொருள்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**இலிங்க வழிபாடு :** இராவண மகாராசா இலிங்க வழிபாட்டில் சிறந்தவராக இருந்த காரணத்தால், விஷ்ணு (வைஷ்ணவம்) சமயத்தைச் சார்ந்தவரால் துரத்தப்பட்டார் என்ற விடயமே புராணமாக மாற்றப்பட்டுள்ளது என்ற கருத்து முன்வைக்கப்படுகிறது.

இராவணனார் லிங்கத்தின் ஊடாக முழுமுதற் கடவுளான இறைவனை நினைந்து தியானம் செய்தது இலிங்க தியானம் என்பர். சித்திரச் சுடரொளி ஆசிரியர் திரு. செல்லப்பா அவர்கள் இதனை பின்வருமாறு விளக்கிக் கூறியுள்ளார். 'இளம்பிறையை சுட்டும் விரல் (சிவ)லிங்கம், பரம்பொருளைச் சுட்டிக் காட்டும் வழிகாட்டியாகும். விரலுக்கு தத்துவஞான விளக்கம் தேவையில்லை. (சிவ) லிங்கத்திற்கு அற்புதமான தத்துவ ஞானவிளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. விளக்கத்துடன் தியானிக்கும்போது கூடிய பலனுண்டு. இலிங்கம் என்பது குறியாகும். சிவலிங்கம் சிவத்தையும் சக்தியையும் குறிக்கும் அடையாளமாகும். சிவனுக்கு யோனி அடையாளமிடல் பொருந்தாது' என்று, 'இராப்பகலற்ற இடத்தே அறிதுயில்' (ஆநன வையவழைண) என்ற நூலில் திரு செல்லப்பா அவர்கள் இலிங்கம்பற்றி தெளிவுபடுத்தியுள்ளார்.

இதனால்தான் இராவண மகாராசா இலிங்க வழிபாட்டின் முன்னோடி என்றும் அதன் மூலம் இறைவனை அடைவதற்கு தியானத்தை வழியாகக் கைக்கொண்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. அருவமாக இருக்கும் இறைவனை வணங்குவதற்கு இலிங்கம் ஒரு ஊடகமாக அல்லது வழிகாட்டியாக இருந்தது என்பதே இதன் பொருளாகும். ஆகவே சைவத்தின் ஆரம்பத்தில் அருவ வழிபாடே இருந்துள்ளது என்ற கூற்று ஏற்றுக் கொள்ளக் கூடியது.

இலிங்க ஆலயங்களின் மூலஸ்தானத்தில், இலிங்கம் பிரதி;டை செய்யப்பட்டிருந்தாலும் அதற்கு முன்னாலுள்ள சிலைகள் சிற்பங்கள் மற்றும் திரைச் சீலைகள் போன்றவற்றில் நடராஜப் பெருமானின் உருவம் வரையப்பட்டு தொங்க விடப்பட்டிருப்பது புராணங்களின் விளைவாகும். கலியுகத்தில் வாழும் மனிதர்களின் வழிபாட்டில்; ஏற்பட்ட மாற்றங்களையே இவை குறிக்கின்றன. இதன் மூலம் அருவ வழிபாடு, கலியுக மனிதர்களால் உருவ வழிபாடாக மாற்றப்பட்டுள்ளது என்பதும் தெளிவாகிறது.

**இயக்கர்கள் :** இலங்கையின் மேற்குக்கரையில் லங்கா நகரி இராஜதானியை கைப்பற்றியிருந்த புலஸ்திய முனிவரின் மகன் குவேரன் வெளியேறிய பின்னர், திரும்பவும் இராவணனார் லங்கா நகரியில் தனது ஆட்சியை தொடர்ந்தார் என்பது ஒட்டக்கூத்தரின் கூற்றாகும்.

இயக்கர்கள் லங்கா நகரிக்கு எங்கிருந்து வந்தார்கள்? என்ற கேள்விக்கு, அவர்கள் ஆகாயத்திலிருந்து நிலத்திற்கு திரும்பி வந்தார்கள் என்று புராணங்கள் பதில் கூறுகின்றன. புராணங்களில் கூடுதலாக ஆகாயம், நிலம், நீர் போன்ற பகுதிகளில் உயிரினங்கள் வாழ்ந்தன என்ற கருத்து மேலோங்கி இருந்தது. இரட்சதர்கள் (இரா-ட்சதர்கள்) ஆகாயம் மற்றும் நிலத்திலும், நாகர்கள் நீரிலும் வாழ்பவர்கள் என்று பிற்காலத்தில் திருமுறையில் பாடப்பட்டுள்ளதை இதற்கு ஆதாரமாகக் குறிப்பிடலாம்.

காலத்திற்கு காலம் ஏற்பட்ட விஞ்ஞான வளர்ச்சிக்கேற்ப வரலாறுகள் மாறுபடும். வேற்று நாட்டிலிருந்து கடல்வழியாக வந்தவர்கள் நீரினில் வாழ்பவர்கள் என்றும், வான்வழியாக வந்தவர்கள் ஆகாயத்தில் வாழ்பவர்கள் என்ற நம்பிக்கையும், அக்காலத்தில் மக்கள் மத்தியில் இருந்துள்ளது.

தமிழ் ஆண்டுக் கணிப்பின்படி கி.மு.3084ம் ஆண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுகளில் வாழ்ந்த இராவண மகாராசாவின் சமாதி பற்றிய குறிப்புகள், கி.மு.500க்கும் 400க்கும் இடைப் பட்ட ஆண்டுகளில் போகர் எழுதிய பாடல்களில் உள்ளன. துவாபரயுகத்தின முடிவில் இராவணனார் சமாதி அடைந்திருந்தார் என்று எழுதப்பட்டுள்ளமை, இலங்கைத் தமிழரின் புராதனத்திற்கு ஒரு முக்கிய வர லாற்று அடையாளமாகும்.

துவாபரயுகத்திற்கு முன்புள்ள திரேதா யுகத்திலி ருந்த முப்பத்து முக்கோடி தேவர்கள், முனிவர்கள், ரிஷிகள், சித்தர்கள் ஆகியோர் இராவணனாரின் கோட்டையினுள், சொரூபமாய் (அருவமாய்) நின்று



அவரது சமாதியை தரிசிக்க காவல் இருந்தனர் என்று குறிப்பிடப்படுவது இராவணனாரின் பெருமையை காட்டுகிறது.

அரக்கர்களும் ஏவலாளர்களான கிங்கிலியர்களும் சமாதியைச் சுற்றிவர நின்று யாரும் அணுகா வண் ணம் பார்த்துக் கொண்டிருந்தனர் என்று சித்தர் காலாங்கி நாதர் கூறியதாக போகர் சித்தர் பாடல்கள் கூறுகின்றன. உள்ளதை உள்ளபடி எந்தவிதமான உணர்ச்சிக் கலப்புமின்றி எழுதுவது வரலாறாகும். ஏனையவை கற்பனை கலந்தவையாகவே கருதப்ப டுகின்றன என்பதை கவனத்தில் இருதுத்திக் கொள்ள வேண்டும்.

**கலியுக மன்னர்கள் :** கலியுகத்தில் இலங்கையை ஆட்சி செய்தவர் விபீணன் ஆகும். அதேநேரம் வட இந்தியாவில் அயோத்தி இராஜதானியில் இருந்து ஆட்சி செய்தவர் இராமராகும். ஆகவே வரலாற்றில் குறிக்கப்படும் நாடுகளை, முதலில் ஆட்சி செய்த இரண்டு கலியுக புருர்கள் இராமரும் விபீணனும் ஆகும். இராமர் வைஷ்ணவ சமயத்தவர், மற்றைய வர் வைஷ்ணவ சமயத்தை தழுவியவர் என்பதால் விஷ்ணுவை முழுமுதல் கடவுளாக வழிபட்டார்கள் என்பது முக்கிய அம்சமாகும்.

சமய வேறுபாடுகளில் உள்ள நம்பிக்கைகளில் இருந்து விடுபட்டு, நடுநிலையாக நின்று புராணங் களை யதார்த்தக் கண்ணால் பார்க்கும்போது, அவற்றில் ஒழிந்திருக்கும் வரலாறுகளும், விஞ்ஞா னத் தகவல்களும் தெளிவாகும். புராண வரலாறு களை சமய நம்பிக்கைகளோடு பார்த்தால் அதில் கூறப்பட்டுள்ளவை கற்பனையானவை போலவும், யதார்த்தத்திற்கு அப்பாற்பட்டவை என்றும் எண் ணத் தோன்றும். முக்கியமாக இந்தப் புராணங்களை விரித்து நோக்கிய தமிழ் அறிஞர்கள் தமது அறிவுக் கேற்ப வரலாறுகள் மற்றும் விஞ்ஞான வளர்ச்சிகள் போன்றவற்றில் உள்ள விடயங்களை சேர்த்துக் கூறத் தவறிவிட்டார்கள் என்றே கூறலாம்.

தியான வழிபாடுகள், ஆயுள்வேத வைத்திய முறைகள், தற்காப்புக்கலைகள், செயற்கை முறை கருத்தரிப்பு, வானத்தில் பறப்பது மற்றும் நவீன காலத் தில் பயன்படுத்தப்படும் ஆயுதங்களின் சக்தியைப் போன்று புராதன காலத்தில் யுத்தங்களில் பாவிக்கப் பட்டுள்ள ஆயுதங்கள் ஒத்ததாக இருந்தமை போன் றவற்றிற்கான ஆதாரங்கள் புராணங்களில் இருக் கின்றன. தற்காலத்தில் வளர்ச்சியடைந்துள்ள பல விஞ்ஞானத் தகவல்கள் புராணங்களில் உள்ளடக்கப் பட்டிருப்பதை பார்க்கும்போது வியப்பேற்படுகிறது.

புராணங்கள், இதிகாசங்கள், திருமுறைகள், போன் றவற்றை எழுதியவர்களை, கலியுகத்தில் 'மகான்கள்' என்று அழைக்கின்றோம். அவர்கள் வாழ்ந்த காலத் திலிருந்த மொழிவளர்ச்சிக்கேற்ப விடயங்களைப் பாடல்களாக தந்துள்ளனர். அந்தப் பாடல்களை இக் கால சமூகத்திற்கு ஏற்றவாறு யதார்த்தப்படுத்துவது அறிஞர்களின் கடமையாகும்.

இரட்சதர்கள் தமது இருப்பிடத்தை குவேரனிடம் இருந்து பெற்றுக் கொண்டதினால் அவருடைய செல்வங்களைக் காப்பவர்கள் என்ற அர்த்தத்தில் 'இரட்சதர்கள்' என்ற பெயர் வந்தது. 'இரட்சதர் கள்' என்ற பதத்தை புலவர்கள் 'இரா-ட்சதர்கள்' என்று மாற்றி, அதற்கு ஏற்றவாறு உருவங்களைக் கொடுத்து, புராணங்களையும், இதிகாசங்களையும், காவியங்களையும் படைத்துள்ளார்கள் என்றும் கரு தப்படுகிறது.

**துறைமுகங்கள் :** இலங்கையின் மேற்குக்கரையில் மா-தோட்டம் பிரிவில் இருந்த இயற்கைத் துறைமுக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான 'பெரிய இறங்குதுறை' சமஸ்கிருதத்தில் 'மா-தொட்ட' எனவும், அதற்கடுத்து மா-ந்தையிலிருந்த இறங்குதுறை மாந்-தொட்ட அல்லது மண்-தொட்ட (மண்-துறை) எனவும், அழைக்கப்பட்டுள்ளன. இவற்றோடு சேர்த்து கிழக்கே கோணமாமலையின் அருகிருந்த இயற்கைத் துறைமுகத்தையும், சேர்த்து மூன்று துறைமுகங்கள் இராவண மகாராசாவின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தன.

இதன் மூலம் கடல் போக்குவரத்து வாணிபத்தை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த காரணத்தினால் சக்கரவர்த்திக்கு இருந்த பலமும் இருந்தது என்று குறிப்பிடப்படுகிறது. அத்தோடு தென்னிந்திய எல்லைப் பிரதேசங்களில் தவம் செய்து வந்த முனிவர்களின் வழிபாட்டுக் கடமைகளுக்கும் இரட்சத குலத்த



வர் இடையூறுகள் செய்து வந்தனர். இந்த விடயம் ஒட்டக்கூத்தர் எழுதிய இராமகாதையில் 1ம் 2ம் படலங்களில் குறிக்கப்பட்டிருக்கிறது

இதனைச் சகிக்க முடியாத முனிவர்கள் அயோத்தி தசரத மகாராசாவிற்கு முறைப்பாடுளைச் செய்தார். அதனால் லங்கா மீது படையெடுப்பு நடத்தப்பட்டு அயோத்தி ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது என்பதுவே இராமகாதையின் அடிநாத வரலாறாக இருக்கின்றது.

இளைய சமூகத்தினர் தமிழர் வரலாற்றிலிருந்து விலகிச் செல்வதை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள். காலம், மொழி, விஞ்ஞானம் ஆகியன மாற்றம் கண்டிருக்கின்றன. புராணங்களில் உள்ள வீரம், காதல், சேகம் ஆகியவற்றைப் பற்றி மட்டும் மீண்டும் மீண்டும் கற்பனையாக விரித்துக் கூறிக் கொண்டிருப்பதை, எதிர்காலச் சமூகம் ஏற்றுக் கொள்ளாது. விஞ்ஞானம், மனிதவியல், பூகோளவியல், போன்றவற்றில் உள்ள யதார்த்தங்களை, வரலாறுகள் ஊடாக வெளிக்கொணர வேண்டிய பொறுப்பும் அவசியமும் அறிஞர்கள் கைகளில் இருக்கிறது. .

**காவியம் கற்பனை கலந்தது :** இராமரை நாயகனாக சித்தரிக்கவேண்டும் என்ற சிறப்பு நோக்கி இராவண மகாராசா யுத்தகளத்தில் தோற்கடிக்கப்பட்டார் என்று மிகைப்படுத்தி கற்பனை கலந்து காவியம் படைக்கப்பட்டுள்ளது, காவியத்தின் சிறப்பு நோக்கி இராவண மகாராசாவை யுத்தகளத்தில் இராமர் தோற்கடித்து உயிரிழக்கச் செய்தார் என்று விடயம் தற்போது தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கைக்கு உரிய விடயமாக மாறி வருகின்றது.

தமிழில் கற்பனை கலந்த காவியங்கள் இற்றைக்கு சுமார் 1300 வருடங்களுக்கு முன்னர் பாடப்பட்டுள்ளன. இராவண மகாராசா சமாதி இருந்த விடயத்தைக் கூறும் போகர் 7000 பாடல்கள் கி.பி. 17ம் நூற்றாண்டிற்கு பின்னர் பாடப்பட்டவையாக இருக்க வேண்டும் என்ற அறிஞர்களின் கூற்றும் கவனத்தில் கொள்ளக் கூடியது.

சித்தர் காலாங்கி நாதர் (கி.மு.519-479 வரை)

இலங்கா நகரியின் கடற்கரையோரத்திலிருந்த தனது கோட்டையின் நடுவே இராவணனார் சமாதியிருந்தார். திரேதாயுகம் தொடக்கம் அரூபிகளாக இருந்த ரிஷிகளும் சித்தர்களும் துவாபர யுகத்தின் முடிவில் சமாதியிருந்த இராவணனாரின் சமாதியை வழிபட்டு வந்தனர். அண்ணளவாக 2500 வருடங்களுக்குப் பின்னர் ராவணனாரின் சமாதியை தரிசிக்கச் சென்றபோது ஏற்பட்ட அனுபவத்தை தனது சீடரான போகர் சித்தர் அவர்களிடம் காலாங்கிநாதர் கூறியுள்ளார். கிறிஸ்துவிற்கு முன்னர் 529 தொடக்கம் 479 ஆண்டுகளுக்குள் வாழ்ந்த காலாங்கி நாதர் சித்தர் மனித உருவில் செல்ல முடியாமல் போனதையும், போகர் சித்தர் தமது சப்த காண்டத்தில் பாடலாகப் பாடியுள்ளார்.


போகர் சித்தரின் பாடல்களில் கூறப்பட்டிருக்கும் முக்கிய விடயங்களுக்கு தொடர்பு இல்லாமல் இருந்த, இராவண மகாராசாவின் சமாதியிருப்பிற்கு முக்கியத்துவம் கொடுத்து 10 பாடல்கள் பாடப்பட்டிருப்பது இலங்கைத் தமிழர்களுக்கு பெருமை தரும் ஒன்றாகும். இராவண மகாராசாவைப்பற்றி ஆய்வு செய்யும் எம்போன்றவர்களுக்கு இந்த விடயம் மகிழ்ச்சியைத் தருகிறது என்பதை இங்கு பதிவிட விரும்புகிறேன். அறிஞர்களின் கருத்துக்களையும் கவனத்தில் இருத்திக் கொண்டு இராவணனார் சமாதியிருப்புப் பற்றி காலாங்கிச் சித்தர் கூறியதாக போகர் சித்தர் பாடியதாகக் கூறப்படும் பாடல்களையும் அதற்கான பொழிப்புரைகளையும் தொடர்ந்து பார்ப்போம்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையை சுற்றிவந்து இறுதியில் பௌத்த விகாரைக்குள் சங்கமமாகிய சிவபக்தன் இராவணனின் சிலை





என்.கே.எஸ்.
திருச்செல்வம்
வரலாற்று ஆய்வாளர்
இலங்கை
nksthirugmail.com

**தென்னிலங்கையில்** சிவபூமியின் சுவடுகளைத் தேடி கதிர் காமத்துக்கு சென்றபோது சற்றும் எதிர்பாராத வகையில் இராவணன் பற்றிய ஓர் தொல்பொருள் விடயம் கிடைத்தது. அது இராவணனின் பழமை வாய்ந்த சிலை. அங்கு அதன் விபரங்களைப் பெற்ற பின் அது தொடர்பான மேலும் சில முக்கிய தகவல்களைத் திரட்டுவதற்காக கொழும்புக்கு அருகில் உள்ள பன்னிபிட்டிய என்னுமிடத் துக்குச் சென்றேன். அது ஒரு பௌத்த விகாரை. அங்கு நான் இதுவரை எங்கும் கண்டிராத இராவணனின் பழமை வாய்ந்த மரச்சிலையைக் கண்டேன்.

இப்படி ஓர் அபூர்வமான சிலை எப்படி, எங்கு கிடைத்தது என அங்குள்ள முக்கியஸ்தர்களிடம் கேட்டபோது மிகவும் சுவாரஷ் யமான தகவல்கள் கிடைத்தன.

சில வருடங்களுக்கு முன்பு மன்னார் மாவட்டத்தின் தெற்கில் உள்ள காட்டில் இந்த சிலை கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதை கண்டெடுத்தவர்கள் சிங்கள மக்கள். பத்து தலைகளும், பல கைகளையும் உடைய இச்சிலையை முருகனின் சிலை என நினைத்து கதிர்காமத்திற்குக் கொண்டு சென்று அங்குள்ள கோயிலில் ஒப்படைத்துள்ளார்கள். கதிர்காமத்தில் உள்ளவர்கள் அது முருகன் சிலை அல்ல என்பதைக் கண்டு கொண்டார்கள். ஆனால் யாரின் சிலை என்பதை சரியாக அடையாளம் காண வில்லை. பின்பு அச்சிலை ஓர் மூலையிலே சில காலம் கிடந்துள்ளது.

இந்தக் கால கட்டத்தில் திருகோணமலை உல்லாச விடுதி ஒன்றின் சிங்கள உரிமையாளர் ஒருவர் கதிர்காமத்திற்கு சென்றுள்ளார். அவர் கதிர்காம கோயில் முக்கியஸ்தர் ஒருவரின் நண்பர். அவர் மூலையில் கிடந்த இந்தச் சிலையைக் கண்டு, தனது விடுதியில் காட்சிக்கு வைக்க உகந்தது என எண்ணி, சிலையை தனக்கு தரும்படி கேட்க, அவரும் சிலையை நண்பருக்குக் கொடுத்து விட்டார்.

பல காலமாக மன்னார் காட்டில் மறைந்து கிடந்து, பின்பு மன்னாரில் இருந்து, கதிர்காமத்திற்கும் சென்று, பின்பு அங்கிருந்து திருகோணமலைக்கு, அதாவது தான் ஆட்சிசெய்த திரிகூடகிரிக்கே சென்றார் சிலை வடிவில் இருந்த இராவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணன். இந்த கால கட்டத்தில் கொழும்புக்கு அருகில் உள்ள பன்னிபிட்டிய என்னுமிடத்தில் உள்ள ஓர் பௌத்த விகாரை யின் பிரதம பிக்கு இராவணன் மீது மிகுந்த பற்று கொண்டவ ராகவும், இராவணன் பற்றிய விடயங்களில் ஆர்வமுள்ள வராகவும் இருந்தார். பிக்கு வின் நண்பர் ஒருவர் மூலமாக மன்னார் காட்டுப்பகுதியில் பல தலைகளும், பல கைகளும் கொண்ட ஓர் சிலை இருப்ப தாக அவர் அறிந்தார். பன்னி பிட்டிய விகாரை பிக்குவிற்கு இராவணன் பற்றி நன்கு தெரிந் திருந்தபடியால், அச்சிலை தன் மனம் கவர்ந்த நாயகன் இராவ ணனுடையது தான் என்பதை சட்டென்று புரிந்து கொண் டார்.

உடனே மன்னாரில் குறிப் பிட்ட இடத்துக்கு தன் நண்ப ருடன் சென்று பார்த்த போது, அச்சிலை முருகனின் சிலை என நினைத்து கதிர் காமத்துக்கு கொண்டு செல்லப்பட்டது என அறிந்தார். உடனே கதிர்காமத் துக்கு விரைந்த பிக்கு அங்கு இச் சிலையைப் பற்றிக் கேட்டபோ துதான் தனது யூகம் சரியானது என உறுதி செய்து கொண் டார். அங்கு இருந்தவர்கள் அச் சிலையில் பத்து தலைகளும், இருபது கைகளும் இருந்ததாகக் கூறினர். ஆனால் அது முருகன் சிலை இல்லை எனவும், யாரு டைய சிலை என்பது தெரிய வில்லை என்பதால் ஓர் மூலை யில் கிடந்ததாகவும், பின்பு ஓர் விடுதி உரிமை யாளர் திருகோ ணமலைக்கு கொண்டு சென்று விட்டார் எனவும் பிக்குவிடம் கூறினர்.

உடனே அந்த சிலையை எப் படியாவது தனது இடத்துக்கு கொண்டு வரவேண்டும் என முடிவெடுத்து சிலையை தேடி திருகோணமலை க்குச் சென்ற



பிக்குவுக்கு அங்கும் ஏமாற்றமே காத்திருந்தது.

திருகோணமலையில் குறிப் பிட்ட விடுதியில் அந்த சிலை காணப் படவில்லை. சிலையை விடுதியில் வைக்கக் கூடாது என நண்பர்கள் கூறியதால் சி லையை தன் நண்பர் ஒருவரின் வீட்டுக்கு கொடுத்து விட்டதாக விடுதி உரிமையாளர் பிக்கு விடம் கூறினார்.

இருப்பினும் பிக்கு தனது முயற்சியைக் கைவிடவில்லை. விடுதியின் பக்கத்து ஊரில் உள்ள நண்பரின் வீட்டுக்குச் சென்றார். அங்கும் அவருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. சிலை வீட்டில் இல்லை.

வீட்டில் இருந்தவர்களிடம் சி லை பற்றி விசாரித்தபோது, அந்தச் சிலையை வீட்டில் வைத்திருக்கக் கூடாதாம், வைத் திருந்தால் வீட்டில் பிரச்சினை கள் ஏற்படுமாம் என்று அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் கூறிய தால் அருகில் உள்ள காட்டுப் பற்றைக்குள் மறைத்து வைத்து விட்டோம் எனக் கூறியுள்ள னர்.



அப்போதும் மனம் தளராத பிக்கு எப்படியாவது சி லையை எடுத்து விடலாம் என்ற நம்பிக்கையோடு சிலை யைத் தேடி அருகில் இருந்த ஓர் மைதானத்துக்கு அப்பால் உள்ள பற்றைக் காட்டுக்குச் சென்று பார்த்தார். தன் கண்க ளையே நம்ப முடியவில்லை. ஆறு அடி உயரமான இராவண னின் சிலையை கண்டார்.

பல நாட்களின் பின் தேடி அலைந்து இறுதியில் சிலை கைக்குக் கிடைத்த ஆனந்தத் தில் பூரித்துப்போன பிக்கு சி லையை கொழும்பு க்குக் கொண்டு வந்தார். கொழும்பி லே, பன்னிபிட்டியிலே தனது விகாரை வளாகத்திலேயே இரா வணனுக்கு ஓர் கோயில் கட்டி அங்கே தனக்குக் கிடைத்த பொக்கிஷமான இராவணனின் சிலையை பாதுகாப்பாக வைத் துள்ளார்.

இந்த சம்பவத்தைக் கேட்ட வுடன், ஆச்சரியமாக இருந் தது. ஓர் பௌத்த பிக்கு மிகவும் சிரமப்பட்டு, மனம் தளரா மல் பல நாட்கள் இலங்கை முழுவதும் தேடி அலைந்து மாபெரும் சிவபக்தன் இராவண னின் சிலையை பெற்றுள்ளார் என்பது வியப்பாக இருந்தது.

பன்னிபிட்டிய பிக்குவின் விகாரை வளாகத்தில் நான் கண்ட இராவணனின் இம்ம ரச்சிலை சுமார் 6 அடி உயரமா னது. அந்த சிலை 9 தலைகள், 19 கைகளைக் கொண்டிருந் தது. மிகுதி ஒரு தலையும், ஒரு கையும் வீணையாக இராவ ணின் கைகளில் காணப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பத்து தலைகளின் நெற்றியில் முப்பட்டையாக விபூதி, பொட்டு மற்றும் முறுக்கிய மீசை, தலைக ளில் கிரீடங்கள், மார்பிலும், தோள்களிலும் கவச ங்கள், கைகளில் வளையங்கள், கைகள், மார்பு, வயிறு ஆகியவற்றில் முப்பட்டை விபூதி, இடுப் பிலே கச்சை என சிவபக்தன் இராவணனின் அனைத்து அம்சங்களையும் கொண்டதாக இச்சி லை காணப்பட்டது.

இச்சிலை சுமார் 500 வருடங்கள் பழமையா னது எனவும், வேப்ப மரத்தினால் வார்க்கப்பட் டது எனவும் அறிந்தேன். சிலை இலங்கையில் செய்யப்பட்டதா அல்லது இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டதா என்பது தெரியவில்லை.

இச்சிலை மன்னாரின் தென்பகுதியில் உள்ள காட்டில் வாழ்ந்த ஓர் சந்நியாசியால் வணங்கப் பட்ட சிலையாக இருக்க வேண்டும். யுத்த காலத் தின் போது சந்நியாசி இவ்விடத்தை விட்டு வேறு இடத்திற்குச் சென்றிருப்பார். யுத்தம் முடிந்த பின்பு இப்பகுதிக்குச் சென்ற சிங்களவர்கள் சிலர் இச்சிலையைக் கண்டிருப்பார்கள். அவர்கள் மூல மாக இச்சிலை கதிர்காமத்திற்குக் கொண்டு செல் லப் பட்டுள்ளது.

நமக்கு சொந்தமானதை, நாம் கணக்கெடுக்கா மல் விட்டு விட்டதால் அவர்கள் கையிலெடுத்து விட்டார்கள். கோயிலும் கட்டி விட்டார்கள்.

வடக்கில் இருந்து தெற்குக்கு வந்து, அங்கிருந்து கிழக்குக்குச் சென்று, கிழக்கில் இருந்து மேற்கு வந்து, மொத்தத்தில் இலங்கைத் தீவையே சுற்றி வந்து அமைதியாக உறங்கிக் கொண்டிருக்கிறார் இராவணன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து தர்மாசிரியர் வழிகாட்டி

## சமய ஞானிகளும் பெரியார்களும்



வான்மீகி முனிவர்




வேதவியாசர்



அகத்தியர்



ஆறுமுகநாவலர்



சுவாமி விபுலானந்தர்




ஆதிசங்கரர்



மத்துவர்



இராமகிருஷ்ணர்



இராமானுஜர்



சுவாமி விவேகானந்தர்




ராஜாராம் மோகன் றோய்



தயானந்த சரசுவதி




மீராபாய்



துளசிதாசர்



அருணகிரி நாதர்



தாயுமானவர்



குமரகுருபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து தர்மாசிரியர் வழிகாட்டி
# சமய ஞானிகளும் பெரியார்களும்



## இராமானுஜர்

**அறிமுகம் :-**

ஆதிசங்கரரை அடுத்து வைணவ சமய வரலாற்றில் மிக முக்கியத்துவத்தை பெறுபவர் இராமானுஜர் ஆவார். அவர் சோழ நாட்டிலே ஸ்ரீ பெரும்புத்தூரில் பிறந்தவர். இவர் வாழ்ந்த காலம் கி.பி 1107 - 1137 வரையாகும். இவ்வாறு இவ்வுலகில் 120 ஆண்டுகள் வாழ்ந்தவர். கி.பி 11ஆம், 12ஆம் நூற்றாண்டிற்குரியவர் என்றும் கூறப்படுகின்றார். இவர் ஆதிகேசவ தீட்சிதர், காந்திமதி என்போருக்கு மகனாக அவதரித்தவர். யாதவப்பிரகாசர், ஸ்ரீ ஆளவந்தார், யமுனாச்சாரியார் என்போரிடம் கல்வி கற்று வைணவ சமயத்தின் உன்னதத்தை உணர்ந்து ஓர் சமயவாதியாகவும், சமூக சீர்திருத்த வாதியாகவும் வைணவ சமய வரலாற்றிலே திகழ்ந்தார்.

இராமானுஜரின் பணிகளைப் பொதுவாக மூன்று வகையாகப் பாகுபடுத்தி நோக்கலாம்.

**இராமானுஜரின் பணிகள்**

- வைணவ சமயப்பணிகள்
- சீர்திருத்தப் பணிகள்
- வைணவ வேதாந்தம்

**01. வைணவ சமயப்பணிகள்**

- **அ. வைணவ சமய சம்பிரதாயம்**
- **ஆ. சமய, பக்தி, உரை நூல்கள்**
- **இ. திக்விஜயம்**
- **ஈ. மடங்கள்**
- **உ. திருவரங்கப் பணிகள்**
- **ஊ. வைணவ சமயப் புனருஸ்தானம்**

**02. சீர்திருத்தப் பணிகள்**

- **அ. சமய சிர்திருத்தம்**
- **ஆ. சமூக சிர்திருத்தம்**

**01. வைணவ சமய மறுமலர்ச்சி**

**அ. வைணவ சமய சம்பிரதாயம்.**

இராமனுஜரின் வாழ்வியல் சூழல் வைணவச் சார்புடையது அச்சூழலில் வைணவச் சம்பிரதாயத்தைப் பேணி பாதுகாக்கும் முதல் ஊற்றாக விளங்கியவர் இராமானுஜர், இவர் யாதகப்பிரகாசர், ஸ்ரீ ஆளவந்தார், யமுனாச்சாரியார் ஆகியோரிடம் கற்ற கல்விச் சிந்தனைகளைக் கொண்டு வைணவ சமய சம்பிரதாயத்தை பேணிக்காத்தார்.

இவர்களிடம் கற்ற வைணவப் பொருளை உணர்ந்து நாட்டிலே வைணவம் வளர்த்த பெருமைக்குரியவர். வடநாட்டிலே பிரசங்கம், கதாகலாட்சேபம், வாதங்கள், கோயில் வழிபாடு, தலயாத்திரை போன்ற உத்தி முறைகளைக் கையாண்டு ஆயிரக்கணக்கானவர்



சைவப்புலவர் சு . துஷ்யந்த்
BA (Hons) PGDE, MA
முன்னாள் ஆசிரியர்.
பாரீஸ் நகர் – பிரான்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை வட நாட்டிலே வைணவராக்கிய பெருமைக்குரியவர். இதனால் வைணவ சம்பிரதாயம் மேன்மையுற்றது.

**ஆ. சமய பக்தி, உரைநூல்கள்**

இராமானுஜர் தத்துவம், பக்தி, உரை சார்ந்த நூல்கள் ஒன்பதினை இயற்றியுள்ளார். இந்நூல்களின் சாரங்கள் வைணவசமய சம்பிரதாயம், சமய சீர்திருத்தம் போன்றவற்றின் வளர்ச்சிக்கு உறுதுணையாகின.

✸வேதாந்த ஸங்கிரகம் - வேதபொருள்களை ஒழுங்குபடுத்தி விசிட்டாத்துவத்தை
உறுதியாக நிறுவும் நூல்

✸ஸ்ரீபாஸ்யம் - பிரம சூத்திரத்திற்கான விரிவான விக்கவுரை

✸கீதாபாஸ்யம் பகவத்கீதைக்கு எழுதப்பட்ட விரிவான தெளிவான
பேருரை

✸வேதாந்த தீபம் - பிரம்மசூத்திரத்திற்குரிய சுருக்கவுரை

✸வேதாந்த சாரம் பிரம்மசூத்திரத்திற்குரிய எளிய உரை

✸சரணாகதி கத்யம் - இறைவனைப் புகலாய் பற்றுவதாகிய சரணாகதி பற்றிக்
கூறும் நூல்

✸ஸ்ரீரங்க கத்யம் திருவரங்க நாயகனை வருணித்து அவனிடம் சரணாகதி
அடைவதை விளக்கும் நூல்


✸ ஸ்ரீ வைகுண்ட கத்யம் வைகுண்ட லோகத்தை பக்தியுடன் வருணித்து முக்தி
நிலைபற்றிக் கூறுகின்ற நூல்

✸ நித்யக் ரந்தம் அடியவர்கள் தினமும் பரமனை வழிப்படுத்துவதற்குரிய
முறைகளையும் விதிகளையும் கூறுகின்ற நூல்

**இ. திக்விஜயம்**

இராமானுஜர் தனது எழுபத்து நான்கு சீடர்களுடனும், எண்ணற்ற அடியார்களுடனும் திவ்விய தேசங்களுக்கு தலையாத்திரை மூலம் திக்விஜயம் மேற்கொண்டு வைணவ சம்பிரதாயத்தை மேன்மையடையச் செய்தார்.

காஞ்சிபுரம் சென்று அங்கிருந்த சாஸ்திர விற்பன்னர்களுடன் வாதிட்டு வென்று, அவர்களையும் தமது கூட்டத்தில் இணைத்துக் கொண்டார். பின்பு மதுரைக்குச் சென்று புலவர்களின் பேரவையில் ஆழ்வார்களின் திவ்விய பிரபந்தத்தின் நுட்பங்களை



விளக்கி, வைணவம் சாரவைத்தார். காஞ்சிக்குச் சென்று கதாகலாட்சேபம் செய்தார். பின்பு திருக்குறுங்குடி, திருநகரி, திருவனந்தபுரம் ஆகிய தேசங்களில் பரந்தாமனை வழிபட்டு அதன்பின் வடக்கே திரும்பினார். வடக்கில் துவாரகை, வடமதுரை, பிருந்தாவனம், சாளக்கிராமம், அயோத்தி, பதரிகாசிரமம், புஸ்கரம் ஆகிய சேத்திரங்களில் யாத்திரை செய்து ஈற்றில் காஷ்மீருக்குச் சென்றடைந்தார்.

**ஈ. மடங்கள்**

ஆதிசங்கரர் இந்துசமய பாரம்பரியங்களையும், தத்துவப் போதனைகளும் செய்வதற்கு மடங்கள் ஃவேதாந்த கேத்திரங்கள் ஸ்தாபித்ததுபோல் இராமானுஜரும் மேல்கோட்டை, பூரி, திருவரங்கம், பிருந்தாவனம், துவாரகை, பத்ரிகாசிரமம் போன்ற சேத்திரங்களில் மடங்களை அமைத்து வைணவ சமயப் போதனைகள்,பிரபந்த பாடல் நுட்பங்கள், சமயசீர்திருத்தம் முதலிய பணிகளை மேற்கொண்டார். இதன்பயனால் வைணவ சம்பிரதாயம் மேன்னையுற்றது.

மேல்கோட்டையில் ஆலயம் ஒன்றை அமைத்து பொது மக்களின் வழிபாட்டுக்குரியதாக்கினார். பூரியில் எம்பார் மடத்தை நிறுவி அற்புதங்களும், போதனைகளும் நிகழ்த்தியவர்.

**உ. திருவரங்கப் பணிகள்**

இராமானுஜர் இவ்வுலகில் 120 ஆண்டுகள் வாழ்ந்தவர். இதில் 60 ஆண்டுகள் திருவரங்க தலத்தில் கழித்தார். இறுதியில் பரமபதம் அடைந்த தலமும் இதுவே என்பதும் குறிப்பிடத்தக்கது. வைணவ சமய மரபிலே கோயில் என்று அழைக்கப்படும் இத்தலத்தின் மேன்மை இராமானுஜர் வாழ்ந்த காலத்தில் மிக உன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னத நிலை அடைந்தது. இதனால் வைணவசமய சம்பிரதாயங்கள் மேன்மையுற்றது.

இவர் திருவரங்க நிர்வாகப்பொறுப்பை ஏற்க முன்பு அங்கிருந்த பிரதான அர்ச்சகர் பக்திமானாக இராமல், பணத்தையும், உயர்ந்தோரையும் நம்பி கீழோரை ஆலய வழிபாட்டில் இருந்து வெறுத்தொதுக்கினார். இராமானுஜர் ஆலய பரிபாலனம், அர்ச்சகர் என்ற பொறுப்புக்களை ஏற்று ஆலயத்தின் முற்போக்குத் தனங்களில் மாற்றங்களை ஏற்படுத்தினார். திருவரங்கன் அருளால் அற்புதங்களைப் புரிந்தார். ஓம் நமோ நாராயணா என்ற எட்டெழுத்து மந்திரத்தை உபதேசித்து எல்லோருக்கும் வைகுண்ட வாழ்வளித்தார். உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற பாகுபாடு இன்றி இழிகுலத்தாரை திருக்குலத்தார் எனப்போற்றி அடியார்கள் அனைவரையும் கோயில் வழிபாட்டிலும், பணிகளிலும் ஈடுபடவைத்தார். திருவரங்கத்தில் வைணவமடம் ஒன்று அமைத்துப் போதனைகள் புரிந்தவர். ஆழ்வார்களின் பிரபந்த பாசுரங்களை நாள்தோறும் பாராயணம் செய்வதற்கு ஏற்பாடு செய்தவர். திருவரங்கனின் மீது ஸ்ரீரங்ககத்யம் எனும் பக்தி நூலைப் பாடியவர்.

## ஊ. வைணவ சமயப் புனருஸ்தானம்

கி.பி 13ஆம் நூற்றாண்டினைத் தொடர்ந்து வட இந்திய பக்தி நெறியில் வைணவ சமய மறுமலர்ச்சியின் முன்னோடியாக விளங்கியவர் இராமானுஜர். இஸ்லாமியரின் ஆட்சிக்காலத்துக்கு முன்பு சைவம் முதன்மை பெற்றது போல் இஸ்லாமியரின் ஆட்சிக்குப் பின்பு வைணவம் புனருஸ்தானம் பெற்று வளர்ச்சியடைந்தது.



தென்நாட்டில் இருந்து வைணவத்தின் மேன்மைகளையும், வளர்ச்சிமுறைகளையும் வட இந்தியா முழுவதும் பரப்பிய பெருமைக்குரியவர். விஷ்ணு ஷேத்திரங்களுக்கு தலயாத்திரை சென்று வாதங்கள், கதாகலாட்சேபம், பிரசாரம், மடங்களை நிறுவுதல் ஆகிய உத்தி முறைகளைக் கையாண்டு வைணவத்தை புனருஸ்தானத்திற்கு உட்படுத்தியவர்.

வைணவ சமயத்திற்கு என்று ஒரு பக்தி முறையை ஆழ்வார்கள் பாடிய பாசுரங்கள் மூலம் வளர்த்தவர். குறிப்பாக நம்மாழ்வார் பாடிய திருவாசிரியம், திருவாய்மொழி, பெரிய திருவந்தாதி, திருவிருத்தம் ஆகிய பாடல்களை ஆழ அகலமாக ஆராய்ந்து விஷிட்டாத்துவைதம் எனும் கோட்பாட்டை உருவாக்கி அதனை வைணவ சமயத்தினுள் பிரயோகித்தவர்.

இராமானுஜர் கூறும் வைணவ இறைகோட்பாடு குணங்குறிகளையுடையது. அதுவே விஷ்ணு எனும் பரம்பொருளாகும். அதனால் ராமர், கிருஷ்ணர் வழிபாடு வளர்ச்சி பெறுவதற்கும் கபீர்தாசர், மீராபாய், துளசிதாசர், இராமனந்தர், சைதன்யர் போன்றோர் வடநாட்டிலே வைணவ பக்தி நெறியை முன்னெடுக்கப்படுவதற்கும் இராமானுஜரே முன்னோடியானவராகத் திகழ்ந்தவர்.

## 02. சீர்திருத்தப் பணிகள்

### அ. சமய சீர்திருத்தம்

இராமானுஜர் யாதவப்பிரகாசர், ஸ்ரீ ஆளவந்தார், யமுனாச்சாரியார் ஆகியோரிடம் வைணவ போதனைகள் பெற்று அச்சிந்தனைகளினூடாக சமய சீர்திருத்தம் செய்தார்.

திருவரங்கத்தில் இவர் தங்கியிருந்து, ஆலய வழிபாட்டு முறையில் சீர்திருத்தம் செய்தார். ஆலயம் பொது மக்களுக்கு பொதுவானது. சாதி வேறுபாடு இன்றி அனைவரும் வழிபாடும், தொழும்புகளும் செய்வதற்குரிய இடம் என்பதனை வலியுறுத்தி வாய்ப்பளித்தார். இவர் இவ் ஆலயத்தின் பிரதான அர்ச்சகராக விளங்கியும் முகாமைப்பொறுப்பையும் ஏற்று, கோயில் பரிபாலத்தை சீர்திருத்தம் செய்தார்.

வைணவ சமயம் சார்பான உரைநூல்கள், பக்தி நூல்களை இயற்றி அவற்றில் உள்ள சிந்தனைகளைச் சமய சீர்திருத்தத்திற்கு ஆதாரப்படுத்தியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைணவ மடங்களை அமைத்து, வைணவ சமய சீர்தி ருத்தங்களைப் பரிந்தார். மடங்களிலே ஆழ்வார்க ளின் பாசுரங்களை ஓதுவித்தும், போதனைகள், கதா கலாட்சேபம் செய்தும் சீர்திருத்தம் மேற்கொண்டார்.

## ஆ. சமூகச் சீர்திருத்தம்


இராமானுஜர் ஒரு சமூக சீர்திருத்தவாதி எனக் கூறு தலும் பொருத்தமானதே. சாதிவேறுபாடு காட்டாமல் சமூகத்திலே சமரச சன்மான்ர்க்க நெறியை வளர்த்த வர். தீண்டாதோர் என்பவர்களை திருக்குலத்தோர் எனப் போற்றி கோயில் கைங்கரியங்களில் ஈடுப டவும் வைத்தார்.

பூனூல் அணிவதனால் மட்டும் ஒருவன் பிராம ணன் ஆகிவிட முடியாது. எவனொருவன் விஷ்ணு மீது தூய்மையான பக்தியை செலுத்துகிறானோ அவனே உயர்ந்தவன். உண்மையான பக்தன் என் பதை எடுத்துக்காட்டினார். மக்கள் யாவும் இறை வனின் குழந்தைகள் இதில் சாதி வேறுபாடு தேவை இல்லை.

## 03. வைணவ வேதாந்தப்பணி

இராமானுஜர் காட்சி, கருதல், உரை ஆகிய பிரமா ணங்களையும், பிரஸ்தான திரயங்கள், ஆழ்வார் களின் பாசுரங்கள், ஸ்ரீ பாஷ்யம், கீதாபாஷ்யம் முதலிய உரை நூல்கள் என்பவற்றைப் பிரமாண நூல்களாகவும் ஏற்றுக் கொண்டு விஷ்டாத்து வைதம் எனும் வேதாந்தக் கோட்பாட்டினை நிறுவி னார். இதனை உபய வேதாந்தம் என்றும் கூறுவர்.

விஷேசணங்களான சித்தையும், அசித்தையும் உட லாகக் கொண்டு அவற்றை அந்தர்யாமியாக நின்று இயக்கும் உயிராக, விஷேஷியப் பொருளாக விளங் குவது ஈஸ்வரன் எனும் பிரமம் என்பதே விஷிட்டாத் துவைத சாராம்சம் என விளங்கினார். இராமானுர் மூன்று பொருள்கள் உண்மையானவை அவற்றைப்





பிரிக்க முடியாது எனக் கூறுகின்றார், அப்பொருள் களை ஈஸ்வரன் (திருமால்), சித்து (ஆன்மா), அசி த்து (உலகம்) என வரையறுக்கின்றார். இவற்றைத் தத்துவதிரயம் எனவும் குறிப்பிடுகின்றார்.

தத்துவ திரயப் பொருள்களை விளக்குவதற்கு சரீரசரீரீ சம்பந்தம், அப்பிரசித்தி, கொள்கைகளை முன்வைத்து விளக்குகின்றார். சரீரசரீரீ சம்பந்தப்படி ஓர் உடலை உயிர் இயங்குவது போல சித்து, அசித்து ஆகிய உடல் போன்ற கூறுகளை உயிராக நின்று அந்தர்யாமியாக கலந்து நின்று இயக்குபவன் ஈஸ் வரன் ஆகும். அப்பிரசித்திக் கொள்கைப்படி மூன்று பொருள்களையும் ஒன்றிலிருந்து பிரிக்க முடியாது. பழமும் சுவையும் போல ஒன்று நிலைப்பதற்கு இன் னொன்று அவசியம் என்பதையும் குறிப்பிடுகின் றார். மேலும் இம்மூன்று பொருட்களுக்கும் உள்ள தொடர்புகளை மூன்று பேதங்கள் மூலம் வரையறுத் துக் காட்டுகின்றார்.

ஆன்மா எண்ணிக்கையில் பல என ஏற்கும் இரா மானுஜர் அவற்றை முக்திநிலை அடைந்தவை, பெத்த நிலையில் உள்ளவை, பெத்த நிலையில் இருந்து முத்தி நிலைக்குச் செல்பவை என மூன்று வகைப்ப டுத்தினார். மேலும் ஆன்மா குறைபாட்டு அறிவைக் கொண்டிருப்பதனால் கன்மத்துள்ளும் உட்படுகின் றது. இதிலிருந்து விடுபட ஆன்மா தர்மபூதஞானநி லையை அடையவேண்டும் எனவும் கூறுகின்றார். ஆன்மாவின் முத்தி பற்றிக்கூறும் போது ஸ்ரீ நாரா யணன் வீற்றிருக்கும்வைகுண்ட நிலையை அடை வதை இறுதி இலட்சியமாகக் கொண்டு பக்தி யோகத் தில் உள்ள பிரபத்தி வழிபாடு, சரணாகதி மார்க்கம் முதலியவற்றை அனுசரித்து பரமபதம் அடையலாம் என்கிறார்.

இராமானுஜரின் கோட்பாடு சங்கரரின் கோட்பாட் டில் இருந்து வேறுபட்டுச் செல்கின்றது. மத்துவர், சைவசித்தாந்திகளின் கொள்கைகள் பலவற்றுடன் ஒன்றுபட்டும் செல்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சித்த மருத்துவமும் விஞ்ஞானமும் உணவு முறைகள்


**1.4.1.2உடல் வளர்ச்சிக்குதவும் உணவுக்கூறுகள்.**

1. புரதம் - இதன் பிரதானதொழிலே இழையங்களின் வளர்ச்சியைஏற்படுத்துவதும்,வளர்ச்சியில் ஏற்படும் குறைபாடுகளைமீளமைப்பதும் ஆகும். புரதத்தின் அடிப்படைத் தொழிற்பாட்டுஅலகுஅமினோஅமிலங்கள் (**Aminoacids**) ஆகும்.

எனவேவளரும் குழந்தைகள் சிறுவர்களுக்குமிகவும் அவசியமானஉணவுக்கூறாகும். வளரும் பருவத்தில் உள்ளவர்களுக்கு இனிப்புசுவையுள்ளஉணவுப்பொருட்களைஅதிகம் வழங்கசித்தமருத்துவம் சொல்கின்றது. இங்கு இனிப்புச் சுவைஎன்பதுசீனியைஅடிப்படையாகக் கொண்ட இனிப்புச்சுவைஅல்ல. இனிப்புச் சுவையுடையபொருட்கள் எனக் கருதப்படுவதுபுரதம்சார்ந்தமாமிசப்பொருட்கள்,தாவரப்பொருட்கள் என்பவற்றையாகும்.

அத்துடன் மாச்சத்துள்ளதானியங்களும்,கிழங்குவகைகளும் அடங்குகின்றன. எனவே இவற்றின்மூலம் வளர்;சிக்குத் தேவையானபுரதச்சத்தும், இதன்போது தேவையானசக்தியைவழங்கத் தேவையானமாச்சத்

சித்த மரு. தியாகராஜா சுதர்மன்
BSMS, Dip. in Counseling &
PG. Dip. in Food & Nutrition.
மானிப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



துக்களும் தேவையானஅளவுகிடைக்கின்றன..

2. உயிர்ச்சத்துக்களும் கனிமங்களும்; - உயிர்ச்சத்து **C** ஆனது,கலங்களுக்கிடையிலானஒட்டுதல்களைமேற்கொள்ளக்கூடியபொருளைஉருவாக்குகின்றது. இதனைகொலாஜன் (**Collagen**) எனப்படும். இது இழையங்களைப் பலப்படுத்துவதிலும், இழையங்களில் ஏற்படும் இரத்தக்கசிவையும் தடுக்கின்றது.

(கலம் **cells**) இழையம் (**Tissues**) அங்கம் (**Organ**)

கனிமங்களில் பிரதானமாககல்சியம் (**Calcium-Ca**),பொஸ்பரஸ் (**Phosperus - P**) என்பனஎன்பு வளர்ச்சிக்குஅத்தியாவசியமாகின்றன.

இரும்புச்சத்து (**Iron - Fe**) செங்குருதிச்சிறுதுணிக்கைகளில் (**Redbloodcells - RBC**) உள்ள ஈமேசடகுளோபினை (**Haemoglobins-Hb**) உருவாக்குவதற்குஅத்தியாவசியமாகின்றன.

இவற்றைப்போல் ஏனைய உயிர்ச்சத்துக்களும்,தாதுக்களும் உடல்வளர்ச்சிக்குஅத்தியாவசியமாகின்றன.

3. கொழுப்பமிலங்கள் (**Fatty acids**) -கொழுப்புக்களின் அனுசேபத்தில் இருந்துகொழுப்பின் அடிப்படைத் தொழிற்பாட்டுஅலகாககிடைப்பது. இது கலங்களின் சுவர்களின் (**Cellwalls**) ஆக்கத்தில் பங்கெடுத்து,அதன்மூலம் கொழுப்பில் கரையக்கூடியபொருட்கள் கலங்களுக்குள் செல்வதற்குஉதவுகின்றது.

### 1.4.1.3 அனுசேபத் தொழிற்பாடுகளை ஒழுங்காக்கல்

உடலுக்குத்தேவையானசக்தியைவழங்குவதிலும்,வளர்ச்சியைஏற்படுத்துவதிலும் ஏராளமான இரசாயனதொழிற்பாடுகள் வினைத்திறனுடன் ஒருங்கிணைத்;து செயற்படுத்தப்படுகின்றன. மனிதன் உயிருடன் வாழ்வதற்கு இத்தொழிற்பாடுகள் இயங்குநிலையில் இருத்தல் வேண்டும். இவ்விரசாயனதொழிற்பாடுகள் இயக்கமற்றுப் போகும்போது இறப்புஏற்படுகின்றது.

உயிர்ச்சத்துக்களும்,தாதுக்களும் பிரதானமாக இவ்விரசாயனதொழிற்பாடுகளுக்குஅவசியமான போதிலும்,தாவரச்சத்துக்களும் (**Phytonutrients**) இரண்டாம் நிலைஅனுசேபதொழிற்பாடுகளுக்குஉதவுகின்றன.

உயிர்ச்சத்துக்கள் - பெரும்பாலானஉயிர்ச்சத்துக்கள் கலங்களின் அனுசேப (**Cellmetabolism**) தொழிற்பாடுகளில், இணைநொதியச் (**Coenzmes**) செயற்பாடுகளைமேற்கொள்கின்றன. உதாரணமாக,பெரும்பாலானடீவகைஉயிர்ச்சத்துக்கள் இவ்வகையில் தொழிற்படுகின்றன. நாம் தவிட்டில் உள்ளஉயிர்ச்சத்துடீகளைநீக்கி, இலைவகைகள் உண்பதைக் குறைத்து, **Bcomplex** போடுகின்றோம்.

ஆனால் முன்னோர்தவிட்டுடன் கூடியஅரிசிவகைகளைபாவித்ததுமட்டுமல்லாது,அரிமாவுடன் மேலும் இலைவகைகளைசேர்த்துஅரைத்துஉணவுதயாரித்தனர். அத்துடன் உணவுதயாரிக்கும்போதுகீரை, இலைவகைகள்,பால் சேர்த்துஉணவுகளைத் தயாரித்துஉண்டுஆரோக்கியமாகவாழ்ந்தனர். இம்முறையின் அறிவியலே இன்றுகழசவகைநைன கழழனள என விருத்தியடைந்துள்ளது.

உதாரணம் - பொருத்துமான்கொடிசேர்த்தரைத்தஅரிசிமாவிடத்தல் இலைசேர்த்தரைத்தமா,கீரைவகைள்,முருங்கையிலை,குறிஞ்சா இலைசேர்த்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செய்தபிட்டு,மரக்கறிசேர்த்துதயாரித்தரொட்டி, கூழ் வகைகள்.

**கனிமங்கள்;** இவையும் உயிர்ச்சத்துக்கள் போலவே இணைநொதியத் தொழிற்பாடுகளில் ஈடு படுகின்றன. உதாரணமாக, **Cobalt** கனிமப்பொருள்,உயிர்ச்சத்துடீ12 (**B12 (Cobalamin**) இன் மையப்பொருளாகஉள்ளது. இதன் குறைபாடுவரும் போதுஒருவகைகுருதிச்சோகை(**-Pernicious anemia**) ஏற்படுகின்றது.

**நீர்,நார்ச்சத்துக்கள்** - நீர்அடிப்படைஊடகமாக (**Fundermental agent)** அனைத்துஅனுசேபத் தொழிற்பாடுகளுக்கும் உதவிஉயிர்வாழ்வதற்குஉ தவுகின்றது. நார்ச்சத்தானதுஉணவுக்கால்வாய் தொகுதியில் உணவானதுசரியானமுறையில் நகர்வதற்கும்,ஊட்டச்சத்துக்களின் அகத்துறிஞ்சலுக்கும் உதவுகின்றது.

**1.5 சித்தமருத்துவத்தில் உண்ணும் உணவுக்குநிகழ்வது.**

உதித்திடுமுடம்புதன்னிலுண்டிடுமன்னந் தண்ணீர்
மதித்திடு மூன்று கூறாய் மலசலத் திரண்டு கூறும்
கதித்திடுமொருகூறுந்தான் கருதிடுமிரத்தமாகி
விதித்தநன் முறைதப்
பாமன்மெய்த்தனைவளரச் செய்யும்.
– பரராசசேகரவைத்தியம் – அங்காதிபாதம் – செய்.37.

மனிதர் உட்கொள்கின்ற உணவுமற்றும் திரவஆகாரங்கள்,உணவுக்கால்வாயிற் சமிபாடடைந்து மூன்று கூறுகளாகப் பிரிக்கப்படுகின்றன. அவற்றுள் ஒரு கூறு அகத்துறிஞ்சப்பட்டு இரத்தம் முதலியதாதுக்களைவளர்க்கும். ஏனைய இரு கூறுகளும் மலசலங்களாகவெளியேற்றப்படும்.

திருமந்திரத்தில்,
அருந்தியவன்னமவை மூன்று கூறாம்
பொருந்துமுடன் மனம் போமலமென்னத்
திருந்துமுடன்மனமாங்கூறு சேர்ந்திட்டு
இருந்தனமுன்னாள்இரதமதாகுமே
– திருமந்திரம். செய்.1896.

மனிதர்அருந்தும் உணவானதுஉணவுக்கால்வாயில் மூன்று கூறுகளாகப் பிரிக்கப்பட்டுஅதன் ஒரு கூறு உடலையும், இன்னொரு கூறு மனத்தையும் வளர்க்கும், மூன்றாவது கூறு மலமாகவெளியேறும் என கூறப்பட்டுள்ளது.

நோயிலையங்கிநீர்கால் நுடங்குடம் பொத்துநிற்கில்
ஆயுளுஞ் சுகமுமுண்டாமன்மைப்படைவிற் சேரும்
ஏயசிந் தையினிலின்பமிசைத்திடுமகிழ்ச்சியெய்தும்
சேய்மனைவாழ்வினோடுசெல்வமுஞ்
சிறக்குமன்றே
– பரராசசேகரவைத்தியம் –
அங்காதிபாதம் – செய்.352.

பித்தம் (அங்கி),கபம் (நீர்),வாதம் (கால்) ஆகிய மூன்றும் உணவின் பயனாகஉடலுடன் ஒருமித்து,தமதுசமநிலையில் இருந்தால் நீண்ட ஆயுள்,ஆரோக்கியம்,நற்சிந்தனை,மகிழ்ச்சியானகுடும்பவாழ்க்கை,செல்வம் என்பனகிடைக்கும்.


இவற்றின் அடிப்படையில் பார்க்கும்போதுசிறந்த உணவின் மூலம் ஆரோக்கியமானதுஅதாவதுஉடல் உளசமூகஆன்மீகநிலைகிடைக்கின்றது.

எனவேஅறுசுவைகளுடன் கூடியஅளவானஉணவுமகிழ்ச்சியானஆரோக்கியமானவாழ்க்கைக்கும்,நீண்டஆயுளுக்கும்,முக்திக்கும் வழிவகுக்கும். அதாவதுபிறவியின் பயன்களானஅறம்,பொருள், இன்பம்,வீடுபேறுஅடைவதற்கு,நோயில்லாஉடல் அவசியமாகின்றது. இதனைதிருமந்திரத்தில் திருமூலர் இவ்வாறுவலியுறுத்துகின்றார்.

உடம்பாரழியிலுயிராரழிவர்
திடம்படமெஞ்ஞானஞ் சேரவுமாட்டார்
உடம்பைவளர்க்குமுபாயமறிந்தே
உடம்பைவளர்த்தேனுயிர்வளர்த் தேனே
– திருமந்நிரம் சபீரசித்தியுபாயம், செய்.1.

உடம்பைவளர்க்கும் உபாயங்களுள் நோய் வராதுதடுப்பதேசிறந்ததாகும். இதனையேநோயற்றவாழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேகுறைவற்றசெல்வம் எனக் கூறப்படுகின்றது.

**இதனையேதிருக்குறலில்,**
**எதிரதாக்காக்குமறிவினார்க் கில்லை**
**அதிரவருவதோர்நோய்**

நோய்வருவதற்குரியகாரணங்களைநீக்கிதம் உட லைகாத்துக்கொள்ளும் அறிவுடையோருக்குநோய் வராதுஎன்று கூறப்பட்டுள்ளது. இதனையேஆங்கி லத்தில் **Prevention is better than cure** எனப்ப டுகின்றது.

நோயில்லாவாழ்வுக்குஉணவுமுக்கியமானதாகின் றது. இதனையேஉணவேமருந்துமருந்தேஉணவுஎன திருமூலர் கூறியுள்ளார். உடல் ஆரோக்கியத்துக்குதே வையானஉயிர்ச்சத்துக்களையும்,கனிமங்களையும் உணவுவகைகளில் இருந்துபெற்றுக்கொள்வதே கூடி யநன்மைபயக்கும். ஏனெனில் உணவில் கூடுதலாக வேறுவேறுதாவர இரசாயனங்கள்

காணப்படுகின்றன. இவை செயற்கையானசத்து மாத்திரைகளிலோ,சத்துமாவகைகளிலோகாணப்படுவ தில்லை. எனினும் சிலநோய் நிலைகளில் மருத்துவர்க ளின் அல்லதுதுறைசார்ந்தவர்களின் அறிவுரைகளின் படிசெயற்கையானமாத்திரைகள்,சத்துமா வகைகள் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் உண்டு.

### 1.6 திருக்குறளில் உணவு.

திருவள்ளுவர்மருந்துஎன்னும் அதிகாரத்தில் உண வின் முக்கியத்துவத்தினையும் உண்ணும் முறைக ளையும் பற்றிபின்வரும் குறள்கள் மூலம் வலியுறுத்தி யுள்ளார்.

**அதிகாரம் 95 -மருந்து,**
**மருந்தெனவேண்டாவாம் யாக்கைக்கு**
**அருந்தியது அற்றதுபோற்றிஉணின்.**
942

நாம் உண்டஉணவுஉடலில் சமிபாடைந்ததுதெரிந் து,அதன் பின் உணவுஉட்கொண்டுவருவோமானால் மருந்தென்றஒன்றுதேவையில்லைஎமதுஉடலுக்கு.

**அற்றால் அளவறிந்துஉண்க அஃதுடம்பு**
**பெற்றான் நெடிதுய்க்குமாறு.**
943

நாம் உண்டஉணவுஉடலில் சமிபாடைந்ததுதெரிந் து,எமக்குதேவையானஉணவின் அளவறிந்துஉண் போமானால் இவ்வுடம்புநீண்டஆயளைப்பெறும்.

**‘‘அற்றதுஅறிந்துகடைப்பிடித்துமாறல்ல**
**துய்க்கதுவரப் பசித்து.’’**
944

நாம் உண்டஉணவுஉடலில் சமிபாடைந்ததுதெரிந் து,எமக்குதேவையானஉணவின் அளவறிந்து,எமக்கு ஒத்துவரக்கூடியஉணவுகளைநன்குபசியெடுத்தபின் உணவுஉண்ணவேண்டும்.

**மாறுபாடு இல்லாதஉண்டிமறுத்துண்ணின்**
**ஊறுபாடு இல்லைஉயிர்க்கு.**
945

உடம்புக்குஒத்துவரக்கூடியஉணவுகளையும் அளவோடுஉண்போமானால் உடலில் நோயின்றி வாழலாம். (அளவுக்குமிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு).

**இழிவறந்துஉண்பான்கண் இன்பம்போல் நிற்கும்**
**கழிபேரிரையான்கண் நோய்.**
946

தனக்குதேவையானஉணவின் சரியானஅளவினை அறிந்துஉண்பவனிடத்தல் இன்பமும்,அளவுக்குஅதிக மாகஉண்பவனிடத்தில் நோயும் இருக்கும்.

**தீயளவன்றித் தெரியான் பெரிதுண்ணின்**
**நோயளவின்றிப் படும்.**
947

தனக்குதேவையானஉணவின் சரியானஅளவி னைஅறிந்துகொள்வதுமட்டுமன்றி,ஏற்பட்டபசியின் அளவினைஅறிந்துஉண்ணல் வேண்டும். இல்லை யேல் நோய் ஏற்படும்.

திருக்குறளில் உள்ளமருந்துஎன்னும் அதிகாரத்தில் உள்ளபத்துகுறள்களில், ஆறு குறள்கள் உணவி னைப்பற்றியும் உணவுஉண்ணும் முறைபற்றியுமேகு றிப்பிட்டுஆரோக்கியத்தில் உணவின் முக்கியத்துவத் தைவலியுறுத்தியுள்ளார்திருவள்ளுவர்.

தொடரும்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முருக வழிபாட்டில் வாழ்க்கை நெறி

**நக்கீரர்** தனது நூலான திருமுருகாற்றுப்படையில் அறுபடை வீடுகளான திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவிநன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை ஆகியவற்றின் சிறப்புக்கள், அங்கு நடைபெறும் வழிபாட்டு முறைகள், வாழ்க்கை நெறிகளையும் விபரிக்கின்றார். மக்களது




சைவப்புலவர்,
சைவசித்தாந்த பண்டிதர்,
சித்தாந்தரத்தினம்,

**திருமதி.சிவானந்தஜோதி ஞானசூரியம்– M.A**

25/9, மாரியம்மன்கோயில் வீதி,
கல்லடி, மட்டக்களப்பு.
மின்னஞ்சல்: gpranujaa@yahoo.com
0771768830


வழிபாட்டில் உருப்பெற்ற முருகவழிபாடு, பரிபாடல் திறன் என்னும் நூலில் முருகவணக்கம் இயற்கையிலே சூரிய வணக்கமாக இடம்பெற்றதென்றும், மேலும் மலையும் மலை சார்ந்த மக்கள் பல்வேறு துன்பங்களை அநுபவிக்கவேண்டிய நிலையில் இருந்தனர் என்றும், காடடர்ந்த மலைநாட்டில் கொடிய விலங்குகளின் மத்தியில் தமது வாழ்க்கையை நடாத்தவேண்டிய நிலை ஏற்பட்டது. கொடிய இருள் படர்ந்து துன்பப்பட்டனர். அத்துடன் மலைப்பிரதேசமாகையால் குளிரால் ஒருவரை ஒருவர் காணாமல் துன்புற்றனர். காலையில் சூரியனின் வரவு பெரிய ஆனந்தத்தைக் கொடுத்தது. குளிரையும் இருளையும் நீக்கி நல்லுணர்வு கொடுத்ததினால் சூரியனைக் கடவுளாக வணங்கத் தொடங்கினர். எனவே சூரிய வணக்கத்திலிருந்து முருக வணக்கம் தோன்றியது என்பதை குன்றம் பூதனார் திருப்பரங் குன்றத்தில் வீற்றிருக்கும் முருகனை, வெண்சுடர் வேல் வேள் விரைமயிலின் மேல் ஞாயிறு என மயிலின் தோகைபோல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியக் கதிர்கள் இருப்பதாக மயில்மேல் எழுந்தருளும் ஞாயிறாக குறிப்பிடுகிறார். நல்லந்துவனாரும் முருகனை விறல் வெய்யோன் என்று குறிப்பிடுகிறார். இவ்வாறு பரிபாடலில் முருகனை சூரியனாக உருவகித்து கூறுவது மக்களின் வாழ்க்கை நெறியில் முருகன் இணைந்துவிட்டான் என்பதையும், முருக வணக்கத்தின் தோற்றம் சூரியவணக்கத்தில் ஆரம்பித்திருக்கலாம் என்பதையும் உணர முடிகிறது. திருமுருகாற்றுப்படையில் முருகனை அறிமுகம் செய்யும் நக்கீரர் சூரியனுடன் தொடர்புபடுத்தும்போது,

**உலகம் உவப்ப வலநேர் புதிருதரு**
**பலர் புகழ் ஞாயிறு கடற்கண்டாங்**
**கோவற இமைக்குங் சேண் விளங்கவிரொளி**
**உறுநர்த் தாங்கிய மதனுடை நோற்றாட்**
**மறுவில் கற்பின் வாணுதல் கணவன்**
**(1 - 6) என்னும்**

அடிகளில் நக்கீரர், உலகு எனும் மங்கலச் சொல்லுடன் தொடங்கி இறைவனின் அட்ட மூர்த்தங்களில் ஒன்றான சூரியனையே முருகனுக்கு உவமை கூறுகின்றார். கதிரவனை முருகனுக்கும் அதன் ஒளியை திருவருளுக்கும் ஒப்புமை காட்டுவது வாழ்க்கை நெறியின் இறை வழிபாடாகும். இத்தகைய ஒளியை ஒத்த உயர்ந்த அவனது திருவடியை அடைபவர்களின் அறியாமையை முருகன் நீக்கி தன் திருவடியில் தாங்கிக்கொள்வான். தீங்கு செய்யும் பிறரை தன் மேகம்போன்ற கைகளால் தாக்கி துன்புறுத்துவான். இத்துன்பமும் உயிர்களை வாழ்வில் நெறிப்படுத்துவதற்காக கொடுப்பதே. இரண்டு செயலும் முருகனின் அறக்கருணையையும், மறக்கருணையையும் காட்டுகின்றது.

சிவாகமங்கள் இருபத்து எட்டில் காமிகம், காரணம், சுப்ரபேதம் ஆகிய ஆகமங்கள் முருகனின் வரலாறு பற்றிக் கூறுகின்றன. குமாரதந்திரம் என்னும் ஆகம நூல் முருகனின் விழா, பூசை, விரதம், வரலாறு முதலியவற்றை விபரித்துக் கூறுகிறது. இந்து சமயத்தின் ஆறு பிரிவுகளாலும் முருகன் போற்றப்படுவது சிறப்பு அம்சமாகும். முருகவழிபாட்டின் வாழ்வியல் நெறி பற்றிக் கூறும் ஏனைய நூல்களாக ஸ்காந்தபுராணம், சுப்பிரமணியபுஜங்கம், கந்தபுராணம், கந்தர்அலங்காரம், கந்தர்அநுபூதி, கந்தர் கலிவெண்பா, கந்தர் சஸ்டி கவசம், கதிரைமலைப் பள்ளு, சண்முக கவசம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

முருகனுக்குரிய ஆயுதங்களாக வஜ்ஜிராயுதம், கத்தி, கோழி, கதம், ஜெபமாலை, ஸ்விஸ்த்திகம்;, கேடயம், கரும்பு, வில், சூலம், பரசு, ஆனிக்கட்டை,



சக்கரம், அங்குசம், பாசம் என்பன விளங்குகின்றன. முருகனுக்கு விருப்பமான மாலையாக புஸ்ப மாலை, அரைநூல் மாலை, தாமரை மாலை, கடப்பமலர் மாலை என்பன காணப்படுகின்றன. உகந்த மலர்கள், வெட்சி, குரா, கூதளம், காந்தள், கடம்பு என்பனவாகும். இவருக்கு உகந்தவை இசை, தமிழ், குறிஞ்சிநிலம், தேன், தினைமா, வாசனைப்புகை, குரவைக் கூத்து, சிறப்பாக அமைந்த படை, வேலாயுதம்,(இது ஞானசக்தி) என்பனவாகும். முருகனின் தேவியர் இச்சா, கிரியா சக்திகளைக் குறிப்பவர்களாகும். அவரது நடனம் குடை, துடி ஆகும்.

ஈழத்தில் முருகனின் சிறப்புத் தலங்களாக கதிர்காமம், சிணீன்னக் கதிர்காமம் என்று அழைக்கப்படும் மண்டூர், நல்லூர், மாவிட்டபுரம், செல்வச்சந்நிதி, சித்தாண்டி, வெருகல் என்பன விளங்குகின்றன. அவரது தோற்றத்தை நோக்குமிடத்து சுப்பிரமணியர், ஸ்கந்தர், அக்கினிபாதர், சௌரமேயர், காங்கேயர், கமாரர்,சண்முகர், தாரணி, சேகானி, குகன், பிமசாரி, தேசிகர்., கிரௌசர், மயில்வாகனர், வேலாயுதர் என்பனவாகும். முருகனின் பிரதிமாலெட்சணத்தை பார்ப்போமானால், அழகிய இளைஞனாகக் காட்சியளிக்கும் குமரன் ஆறு முகங்களும் பன்னிரு கரங்களும் வேற்படையும் உடையவனுமாய் வள்ளி, தெய்வானை என்னும் இரு தேவியரை இருமருங்கிலும் வைத்து படமெடுத்தாடும் நாகத்தின்மேல் நின்றாடும் மயில் வாகனத்தில் அமர்ந்த தோற்றத்தில் செந்நிறமாகக் காட்சியளிக்கின்றார்.

## முருகனுடைய வழிபாட்டுமுறைகள்:

முருக வழிபாடு ஆகமம் சார்ந்த, ஆகமம் சாராத வழிபாடாகவும் இடம்பெற்று வருகின்றது. ஆகமம் சார்ந்த வழிபாட்டு முறையாக நித்திய, காமிய, நிஷ்காமிக கிரியைகளாக நடாத்தப்படும். ஆகமம் சாராத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வழிபாடாக பூசாரியைக் கொண்டு வழிபாடாற்றல், வாய்கட்டிப் பூசை செய்தல், குருவை முதன்மைப் படுத்தி பொங்கல், படையல், மடை வைத்து பூசை செய்து வழிபடல், குரவையிட்டுஅவன் புகழ் பாடுதல், தோரணம், மணி, கதம்பமாலை முதலியவை கொண்டு அலங்கரித்து வழிபடல்;, முருகனை அருவநிலையில் தவயோகிகளும் ஞானிகளும் அமர்ந்து உரையாடி மகிழ்ந்து வழிபடல், போன்றவைகளோடு குமாரதந்தி ரத்தில் கிரியா பாதம் கூறுமிடத்தில் நித்திய பூசை என் பவற்றுடன் பக்தர்கள் குரு தீட்சை பெற்றுக்கொண்டு ஆன்;மார்த்த வழிபாடு, பரார்த்த வழிபாடுசெய்யும் முறை பற்றியும் விளக்குகிறது. சமய தீட்சை பெற்ற வர்கள் சைவ அனுட்டானங்கள் பண்ணி வரும்போது மனம் ஒருநிலைப்படும். பின்னர் விசேட தீட்சை பெற்று சிவ பூசை செய்யவேண்டும். இவர்களுக்கு ஆன்மார்த்த பூசை செய்யும் தகுதி கிடைக்கிறது. இவ் வான்மார்த்த வழிபாட்டில் முருகப் பெருமானையும் வழிபடலாமென்பது சிவாகம துணிபு. குமாரதந்திரம் என்னும் ஆகம நூலில் சிவ தீட்ஷாவிதே: பச்சாத் குக தீஷாம் சகமரயேத் என்று கூறப்பட்டுள்ளது. இதன் பொருளாக சிவ தீட்ஷைகளாகிய சமய, விசேட தீட ஷைகளைப் பெற்று சிவ பூசைகளைச் செய்பவர் குக தீட்ஷை பெற்று முருகப் பெருமானை வழிபடலாம். மேலும்,

''தர்மார்த்த காமமோட்ஷார்த்தம்
ஆன்மார்த்த யகனம் ஸ்ம்ருதம்
ஸ்கந்த பூஜாம் விநா பும்ஸாம்
புத்ரவிருத்தி : கதம்பவேத் ''
என்று கூறப்படுகின்றது.

அதாவது அறம், பொருள், இன்பம், வீடுபேறு இவை கள் நமக்குக் கிடைக்க வேண்டுமானால் ஆன்மார்த்த வழிபாடாக முருகப்பெருமானை வழிபட்டால் சந்ததி விருத்தியாகும். எனவே வாழ்க்கை நெறிமுறையில் தினந்தோறும் ஆன்மார்த்த முருக வழிபாடு செய்ய வேண்டும் என்றும்,இல்லங்களில் விக்கிரக வடிவத் திலோ படத்திலோ வழிபட்டு லக்ஷண அமைப்பின்படி செய்யலாம். தங்கத்தினாலான விக்கிரகம் உத்தமம். வெள்ளியினாலானது மத்திமம். செப்பு, பஞ்சலோகம், கற்சிலை போன்றவையும் மரத்தினாலும், அமைத்து பூசை வழிபாடு ஆற்றப்படுகின்றது. வழிபாட்டு முறையின்போது நின்ற உருவிலாவது உட்கார்ந்த நிலையிலாவது அல்லது மயில்மீது அமர்ந்த கோலத் திலாவது சிற்ப சாத்திர லெட்சணப்படி வடிவமைக்க வேண்டும். நேர்கொண்ட பார்வை சிரித்த முகம் இருக்கும் விக்கிரகம்தான் பூசை வழிபாட்டுக்கு உகந் தது. மேல்நோக்கிய கிடை நோக்கிய கோணல் பார் வைகள் விலக்கத்தக்கவை. அவை சந்ததி, தனம், புகழ் நாசத்தை தரும். முருகப்பெருமானை பூசை செய்யும் இடம் புனிதமானதாக வீட்டின் நடுவில் சுவாமியறை யில் வைத்து உபதேச மார்க்கமாக கற்று வழுவாது பூசை செய்யவேண்டும். வழிபாட்டுக்கு முக்கியமானது பக்தி. அன்புடன் விக்கிரகத்தை குழந்தையைப் போல ஒருமனதுடன் முருகப்பெருமானின் திருவுருவத்தை நிலைநிறுத்தி பூசை வழிபாடு இயற்றவேண்டும்.

மக்களின் வாழ்க்கை முறையில் தங்கள் மனத்தி ருப்திக்காக முருகப்பெருமானுக்கு கோழிச் சேவல்க ளையும் மயிற் குழாங்களையும் நேர்த்திக்கடனாக விடுவர். கந்தனுக்கு காவடி ஆட்டம் ஆடி வழிப டுவதும் மரபு. தூக்குக் காவடி, துலாக்காவடி, செ தில்குத்தி காவடி, பறவைக் காவடி, பால் காவடி, ச ர்க்கரைக் காவடி, பாட்டுக் காவடி போன்ற காவடி ஆட்டங்களாலும் வழிபாடு ஆற்றுவதுண்டு. கற்பூரச் சட்டி, மாவிளக்கு, தினைமாவிளக்கு எடுத்து வழிப டுவதுடன் பாற்குட பவனி எடுப்போர் முருகஸ்த லங்கள் மீது பாத யாத்திரை செல்வோர் மகோற்சவ காலங்களில் புராணபடனம் சொல்வோர், பஜனைக் குழு, பாடும் பணியே பணியாக இருப்பர்.கந்தவேள் திருமுறை ஓதுவோர், அங்கப்பிரதட்சணம் செய் வோர் குகன் பனுவல்களை பாடி ஆடிச்செல்வோர். முருகன் பெயரால் தண்ணீர்ப் பந்தல் தாகசாந்தி,அன் னதானம் இடுவோர் போன்ற நிகழ்வுகளால் முருகன் எம் வாழ்வோடு ஒன்றிவிட்டான் என்ற மனத்திடத்து டன் முருகா! முருகா! எனக் கோசம் இட்டு வீதிகளில் பக்திக்கனி வினையூட்டும் நிகழ்ச்சியாக முருகனை சரணாகதியடைந்து தீர்த்தமாடி நலனிலும் தீங்கினும் அவனை மறவாது வழிபாடாற்றி வருவதை இன்றும் எம்மக்களிடையே காணக்கூடியதாக உள்ளது.

## வாழ்வில் கலந்த முருகனின் சிறப்பு

வாழ்வில் கலந்துவிட்ட முருகவழிபாட்டில் அவனு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டைய நாமங்களைக் கொண்டே வாழ்கின்றார்கள். குழந்தைகளுக்கு குழந்தை வேலன், அடியார்களுக்கு பாலசுப்ரமணியன், கலைஞர்களுக்கும் கவிஞர்களுக்கும் சண்முகன்,ஞானத்தை விளக்க சுவாமிநாதன் இல்லறத்தார்க்கு பழனியாண்டவன்.

குமாரர் ஒருவரே ஆண்மகன், ஏனெனில் மற்றவர்கள் பெண் வயிற்றில் பிறந்தவர்கள். இவர் ஆணாகிய சிவனது நெற்றிக் கட்பொறியிலிருந்து உதித்தவர். மற்றவர்கள் காமச் சேர்க்கையிலே தோன்ற முருகனோ மன்மதனை எரித்த காம அழிவில் இருந்து அவதரித்தவர். மாரன் என்பது மன்மதனைக் குறிக்கும். குமாரன் என்பது காமத்தைக் கடந்தவர், மன்மதனின் அழிவில் தோன்றியவர் எனப் பொருள்படும். முருகன் ஞானசக்திவேல். கிரியாசக்தி தெய்வானை அம்மை, இச்சா சக்தி வள்ளியம்மை.ஐம்புல வேடர்களிடையே வாழ்ந்த வள்ளி என்னும் ஆன்மாவை திருவருள் வடிவாகிய குருவாய் எழுந்தருளி முருகன் தம்பாற் சேர்த்துக்கொண்டார். இவை வள்ளி திருமணம் தத்துவக் கருத்துக்கு இடமளிக்கிறது.இது யான் எனது என்ற அகந்தையற்ற அடியவர்களிடம் முருகன் தானே வந்து அருள்புரிவதை விளக்குவதாகும்.வாழ்வின் ரணத்தை நோக்கும்போது குமாரர் என்று கூறுவது கு என்றால் கொடுப்பவர், தம்மை வழிடுபவருக்கு நிலபுலன்கள்,கல்வி, லஷ்மிகடாட்சம் ஆகியவற்றைக் கொடுப்பவர் எனப்படும்.

சிவனின் ஐந்து முகங்களோடு சக்தியின் ஒரு முகமான அதோமுகமும் சேர்ந்து ஆறுமுகமானது. இது சான்றோரிடம் காணப்படும் (சிற்சக்தி) ஆறாவது அறிவிற்குப் பொருளாகும். அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும் என்று நக்கீரர் கூறியது இந்த அதோமுகத்தையேயாகும். அடுத்து நமசிவாயஇசிவாயநமஎன்னும் மந்திரம்போல், முருகனுக்கு மந்திரம் ஆறெழுத்து சடாட்சரம் எனப்படும். குமாராய நம என்பதுதான் இந்த ஆறெழுத்து என்றாலும், நச்சினார்க்கினியார்சரவணபவ என்றும் கூறலாம் என்கிறார். முருகப்பெருமான் செந்நிறத்தவர், சிவந்த ஆடையர் ஆதலால் சேயோன் எனப் பெயர் பெற்றார். சிறப்பாக அமைந்த படை வேலாயுதம். இது ஞானசக்தியாகும். வாழ்வில் கலந்துவிட்ட முருகனை, ஒற்றுமையை நிலைநிறுத்தி சமநோக்குடைய வாய்ப்பும் வளமுமான மக்களை வைகறையில் துயில் எழுப்பும் கோழி கூவும் சத்தம், முருகன் வந்து எழுப்புவதாக எண்ணி மகிழ்வர்.கொக்கு + அற + கோ, கொக்கு என்றால் மாமரமாகிய சூரபத்மன். அற என்றால் அறுத்த, கோ என்றால் அரசன் என பொருள்படும். எனவே மாமரமாய் நின்ற சூரனை வென்று தேவர் துயர் நீக்கிய அரசர்க்கரசனாகிய முருகன் எனக்கருதி மக்கள் வாழ்க்கை நடாத்தினார்கள். முருகனின் சிறப்பம்சங்களில் மக்களின் ஈடுபாடும், பக்தியும், வழிபாட்டுமுறையும் தத்துவ விளக்கத்தை ஊன்றி நிற்கின்றது. அந்தவகையில் வேதங்கள் சிவனை சதாசிவம் என்று ஒருமுறை அழைக்க, சுப்பிரமணியக்கடவுளை சுப்பிரமணியோம், சுப்பிரமணியோம், சுப்பிரமணியோம் என்று மூன்று முறை அழைத்து மக்கள் வழிபட்டனர். இது முருகப்பெருமானின் பரம்பொருள் தன்மைக்குச் சான்றாகும்.

சுப்பிரமண்ய என்றால் நலம், இனிமை, கூடியுள்ள பிரம ஞானத்தில் விருப்பத்தை வளர்ப்பது என்று சு- ஆனந்தம், பிரஹம - பரம்பொருள் நிலை என்று அவர்கள் தங்களைப் பலப்படுத்திக்கொண்டனர். மக்கள் அறவழியில் நின்றாலே இம்மையிலும் மறுமையிலும் சிவம் கிட்டும் என்று மனதை திசை திருப்பி அறம் செய்ய கெடுவாய் மனனனே கதிகேள் கரவாதிடுவாய் என கந்தர் அனுபூதிப் படி மனதிற்கு நல்வழி சொல்லி தான தருமம் செய்யும் நற்பண்பை வளர்த்துக்கொண்டனர். தற்காலத்தில் பெற்றோர் தம் பிள்ளைக்கு பெயர்களை கருத்துணர்வோ குறிக்கோளோ இன்றி ஓசைச் சிறப்பினை மட்டும் நோக்கி வைக்கிறார்கள். அப்பெயர்கள் வாய்க்குள் நுழைவதுமில்லை. பெயரின் பொருள் தங்களுக்கே தெரியாத கேவல நிலை. ஆனால் எம் முன்னோர்களின் வாழ்வில் கலந்துவிட்ட முருகனையும் அவன் அருள் ஆற்றலையும் அவனது இருப்பையும் உணர்ந்து தமது பிள்ளைகளுக்கு இறைவன் இறைவியையோ தொடர்புள்ள நாமங்களையே சூட்டினர். இவ்வாறு சூட்டியமைக்கு உளவியல்ரீதியான காரணமுமுண்டு. பிள்ளையின் பெயரை அழைத்தால் அடிக்கடி இறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாமத்தைக் கூறும் புண்ணியம் அவர்களுக்கு கிட்டு கிறது. பெயர் சூட்டப்பட்டவரும் எழுதும்போதும் அழைக்கும்போதும் அப்புண்ணியத்தைப் பெறுகின் றார் என்று வாழ்வின் உத்தமராய் வாழ்ந்து தம் பெயர் மூலம் சமயத்திலே ஈடுபாடும் பக்தியும் வளர வாய்ப்பு ஏற்படுத்துவார். அந்த வகையில் முற்கா லத்தில் சுப்பிரமணியம், கந்தப்பிள்ளை,முருகையா, தம்பையா, ஆறுமுகம், சண்முகம், வேலாயுதம், முத்து சாமி, பழனிச் சாமி, சரவணமுத்து, சிவகுரு, பரமகுரு, கார்த்திகேசு, மயில்வாகனம் என்ற பெயர்கள் மூல மும் பின்னர் இடைக்காலத்தில் ராசா, நாதன்,அன் விகுதிகள் சேர்க்கப்பட்டு ஆறுமுகராசா, சண்முக நாதன், செந்தில்நாதன், விசாகன், மயூரன் என்று இடைக்காலத்தில் மருவியதாகவும், பெண்களுக்கு வள்ளி, தெய்வானை, வள்ளிநாயகி, தெய்வநாயகி வேதநாயகி எனவும் பெயர் வைத்து அழைப்பதால் முருக பக்தியின் சிறப்பினை அறிந்து வாழவைக்கும் முருகன் வாழ்வில் எம்மோடு இணந்துவிட்டார் என்று துணிவுபெற்று கலியுகவரதனை சரணாகதியடைந்து வேலனை மறவாது வாழ்வியலை நடத்துகின்றனர்.

**முடிபு**

முருக நம்பிக்கையில்யாமிருக்கப் பயமேன், வேலும் மயிலும் துணை,வேலுண்டு வினையில்லை,மயிலும் அயிலும் கொண்டு வன்பகை தணிக்கலாம், நெஞ்சம தில் அஞ்சலென வேல் தோன்றும் , நெஞ்சில் ஒரு கால் நினைக்கில் இருகாலும்தோன்றும் .அச்சம் அகற்றும் அயில் வேலும், சுற்றி நில்லாதே போ பகையே துள்ளி வருகுது வேல் போன்ற மகுட வாசகங்களினால் தங்க ளைப் பலப்படுத்திக்கொண்டு,

''கண்ணேறு வாராது பிணி ஒன்றும்
சேராது கவலைப்படாது நெஞ்சம்
கலியாது சலியாது நலியாது மெலியாது
கலி என்ற பேய் அடாது
விண்ணேறுமணுகாது கன்மவினை
தொடராது விசமச் சுரம் வராது
வெய்ய பூதம் பில்லி வஞ்சனைகள் முடுகாது
விசம் பரவு ஜெந்துமடரா
எண்ணேறு சனனங்கள் கிடையாது
காலபயம் என்னளவுமேயிராதிங்
கேழைக்கிரங்கியருள் தெய்வமே, தண்ணேறு
கங்கைமலர் தங்கையருள் தங்கமே
சரச கோபாலன் மருகா சதுர்மறைகளே தந்த
பரமகுருவாய் வந்த சரவணபவானந்தனே''

என்று சடாட்சர மந்திரத்தை உச்சாடனம் செய்து இவ்வுலகவாழ்வில் பூரணம் காண்கின்ற போதுதான் மறு உலக வாழ்வும் சிறப்பாக அமைகின்றது என்கின் றது சைவ சித்தாந்தம். அவ்வகையான சமய வாழ்வு ஆன்மீக வாழ்வே - எம் வாழ்வின் நெறியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இறையும் இசையும்

## பல்லவர் கால பக்தி இலக்கியங்களிலும், சங்க கால அகத்திணையிலும் காணப்டும் இசைக்கூறுகள்

**முன்னுரை**

உலக மொழிகளிலே ஒப்பற்ற மொழியாக, செம்மொழி என்ற சிறப்பிற்குரியதாக விளங்கி வரும் மொழி தமிழ் மொழியாகும். இம்; மொழியில் எத்தனையோ இலக்கிய இலக்கண நூல்கள் தோன்றியுள்ளன,தோன்றி வருகின்றன. அவற்றையெல்லாம் வரலாற்று நோக்கில் காணும் போது தான் அம் மொழியின் சிறப்பு புலப்படும். இந் நூல்களினூடே அக்கால மக்களின் கலை, கலாசாரம், சமூக, சமய பண்புகளை அறியக்கூடியதாக உள்ளது. சங்கம் இருந்து தமிழ் வளர்த்த இனம் தமிழினமாகும்.

ஆரம்ப காலத்தில் எழுந்த நூல்களிலே முதன்மையானது சங்க இலக்கியங்களாகும். இக்கால மன்னர்கள் புலவர்களை ஆதரித்தமையால் இக்காலத்திலே பலவாரியான நூல்கள் எழுதப்பட்டன. இந்நூல்கள் அக்கால மக்களின் வாழ்க்கையைக் கலையழகுடன் கூறுகின்றன. அதே போல பல்லவர் காலத்திலும் வைதீக சமயத்தை வளர்க்க வேண்டும் என்பதற்காக சமண சமயத்தை எதிர்த்து நாயன்மார்களும் ஆழ்வார்களும் போராடியமை அதற்காக பக்திப் பாசுரங்களைக் கருவியாகக் கொண்டமை பக்தி இலக்கியங்கள் செல்வாக்குப்பெறக் காரணமாய் அமைந்தது. இக்காலத்தில் எழுந்த நூல்களும் இக்கால மக்களின் வாழ்வியலை மனக்கண்முன்னே காட்டுகின்றன.

குறுந்தொகையில் புலப்படும் இசை

சங்க இலக்கியங்களில் காதலும், வீரமும் கருப்பொருளாக விளங்குகின்றன. தமிழில் காதல் பற்றிக் கூறும் நூல்கள் ஏராளம். குறுந்தொகையானது நான்கடிச் சிற்றெல்லைகளையும், எட்டடிப் பேரெல்லைகளையும் கொண்ட அகவற்பாக்களால் எழுதப்பட்ட அழகான இலக்கியமாகும்.

கருங்கால் வேம்பின் ஒண் பூ யாணர்
என்னை இன்றியும் கழிவது கொல்லோ?
ஆற்று அயல் எழுந்த வெண் கோட்டு அதவத்து
எழு குளிறு மிதித்த ஒரு பழம் போலக்
குழைய, கொடியோர் நாவே
காதலர் அகல கல்லென்றவ்வே

“இளங்கலைமணி” சுரேந்திரா– நரேந்திரா
போதனாசிரியர் (வாய்ப்பாட்டு)
நடன, நாடகத்துறை,
சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.
மின்னஞ்சல்:– msnarendra1288@gmail.com
Contact No: 0094764624990 / 0094754340220



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேம்பு பூக்கும் இளவேனில் பருவம் தலைவன் வினை முடித்து வருவதாகக் கூறிச் சென்ற பருவமாகும். இக்காலம் வந்தும் தலைவன் வராமையினால் தலைவியிடத்தே காதல் மேலீட்டால் வருந்துகிறாள். பிரிவுத்துயரால் மெலிவுற்றாள் என்பதிலிருந்து தலைவியின் சிருங்கார ரஸம் உணர்த்தப் படுகிறது.

தலைவன் தலைவிக்கு இடையேயான காதல் ஸ்தாயி பாவமாகும். தலைவியிடம் சிருங்கார ரஸம் உண்டாவதற்குக் காரணமாய் விளங்குவது ஆலம்பனவிபாவமாகும். தலைவியின் பிரிவுத்துயரால் மெலிவுற்றமையை வியாபிசாரிபாவமாகக் கொள்ளலாம்.

## பல்லவர் கால பக்தி நெறியும், இசையும்

சங்க காலத்தில் மன்னர்களையும் மக்களையும் பாடுவது போல் இறைவனையும் இறையடியார்களையும் பாடும் இலக்கிய மரபு பல்லவர் காலத்திலே எழுந்தது. இதனால் இக்காலத்தைச் சமய மறுமலர்ச்சிக் காலம் என்று அழைப்பர். இதனையே பக்தி இலக்கிய காலம் என்றும் கூறுவர் பக்தியிலக்கிய வளம் தமிழுக்குரிய பெருஞ்சிறப்பாகும். இத்துணைப் பெருந்தொகையாக அது வேறு இலக்கிய வளமுள்ள எந்த மொழியிலாயினும் எழவில்லை என்பது அறிஞர் துணிபாகும். இப்பக்தி இலக்கியங்களின் பண்பினையும் போக்கினையும் ஆராய்ந்து கூறுவது எளிதல்ல.

இக்காலத்தில் எழுந்த பக்தி இலக்கியங்களை இரண்டாக வகுக்கலாம். ஒன்று தனித்தனி பதிகங்களிற் பக்தி இலக்கியங்களைக் கூறுவது மற்றயைது அவற்றைப் பிரபந்தங்களிலே அமைத்து அப்பாத்திரங்களின் மனோபாவங்களை எடுத்துக்கூறும் வாயிலாகத் தம்முடைய பக்தியனுபவங்களை வெளிப்படுத்தினர்.

அப்பிரபந்தங்களுட் பெரும்பாலனவை அகத்திணை எனக் கூறப்படுவதிலிருந்து காதல் உணர்வுடன் பாடப்பட்ட பக்திப் பாடல்களில் சிருங்கார ரஸம் இடம் பெற்றுள்ளமை தெளிவாகின்றது. தனித்தனி பதிகங்களுட் சில அகத்திணைக்குரிய துறைகள் தழுவி வந்துள்ளவெனினும் பெரும்பாலனவை முன்னிலைப்பரவல்; படர்க்கைப் பரவலாகிய கடவுள் வாழ்த்துக்களாகவுள்ளன. அகத்திணை தழுவி வந்த பதிகங்களுள்ளும் பிரபந்தங்களுள்ளும் அன்பின் ஐந்திணை தழுவி வந்தவை மிகச் சிலவென்றே கூறலாம். அவற்றுட் பெரும்பாலனவை கைக்கிளை பெருந்திணைகளில் உள்ளன. இவை காதற் பிரிவினால் ஏற்படும் விளைவுகளை வெளிப்படுத்தும் பாடல்களாகவுள்ளன. இதனூடே பக்தி மரபில் சிருங்கார ரஸம் புலனாகிறது.

தலைவன் தலைவியருக்கிடையே உள்ள அன்பை வெளிப்படுத்துவதற்கென வகுக்கப்பட்ட அகப்பொருட்டுறைகள் யாவும் இறைவன் மீது அடியார்கள் கொண்ட அன்பினை வெளிப்படுத்துவதற்கு ஏற்ற கருவியாக அமைகின்றன. அகத்திணை செய்யுட்களில் வந்துள்ள உலகியற் காதல் தோத்திரப் பாடல்களிலே தெய்வீக காதலாக உருவெடுக்கின்றது இங்கே கடவுள் பால் அடியார்க்கு ஏற்படும் காதலாக காணலாம் சிருங்கார ரஸமானது அழகாக இங்கே வெளிப்படுத்தப்படுகின்றது.

அகத்திணை மரபில் அமைந்த பக்திப் பாடல்கள் பெரும்பாலும் தலைவி கூற்றாகவும் தோழி கூற்றாகவும் செவிலி கூற்றாகவும் வந்துள்ளன. தலைவனிடத்தே தலைவி கொண்ட காதல் இறைவனிடத்தில் அடியார் கொண்ட அன்பாக மாறுகிறது தெய்வானுபவங்களை உலகியல் வாழ்க்கையனுபவங்களில் அமைத்துக் கூறும் வழக்கு இக்காலப்பகுதியிலேயே ஆரம்பமாகின்றது.

உலகியற் காதலாகிய அன்பின் ஐந்திணை தான் கவிதைக்குப் பொருளாக அமைதல் வேண்டும். என்பது மரபாகும்.அம்மரபு பிறளாமல் இக்காலத்தில் எழுந்த இலக்கிய நூல்களும் சில, அவற்றுட் சிற்றம்லக் கோவையாரை ஓர் உதாரணமாக கூறலாம். அந்நூலில் தலைவன் தலைவியார் மாட்டு நிகழும் உலகிற் காதலே கூறப்படுகின்றது. எனினும் இறையன்பு அதனோடு அழகுற இணைக்கப்படுட்டுள்ளமையும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே பல்லவர் கால பக்தி மரபிலே பரதர் கூறும் சிங்கார ரஸம் புலப்படுவது தெளிவாகின்றது.

**பல்லர் கால பக்தி இலக்கியங்களில் வெளிப்படுத்தப்படும் இசை**

**திருக்கோவையாரில் புலப்படுத்தும் இசை**

புல்லவர் கால பக்திஇலக்கியங்களுள் ஒன்றான திருக்கோவையார் என்னும் நூலை மாணிக்கவாசகர் அகப்பொருள் கோவை நூலாகப் பாடியுள்ளார். இயற்கை புணர்ச்சி முதல் பரத்தையிற் பிரிவு ஈ;றாக இருபத்தைந்து கிளவிக் கொத்துக்களையுடைய இந் நூலில் சிருங்கார ரசம் வெளிப்படும் விதம் பற்றி நோக்குவோம்.

திருக்கோவையாரில் முதலாவது பாடல் காட்சி எனும் தலைப்பிலமைந்தாகும். குடட்சி எனின் தலை மகளை தலைமகன் கண்ணுற்று, அதனால் வியப்புற் றதாக இப்பாடல் அமையப்பட்டுள்ளது.

திருவளர் தாமரை சீர்வளர்
காவிகள் ஈசர்தில்லைக்
குருவளர் பூங்குமழ் கோங்குபைங்
காந்தள் கொண்(டு) ஓங்குதெய்வ
மருவளர் மாலையொர் வல்லியின்
ஒல்கி அனநடை வாய்ந்து
உருவளர் காமன் தன் வென்றிக்
கொடி போன(று) ஒளிர்கின்றதே

அகாவது அழகுமிக்க தாமரை போன்ற அழகினையும், நீல நிறப் போன்றவளும், சிவனுடைய சிதம்பரத்தில் நிறமிகுந்த பொலிவுடைய குமிழம் போன்றவளும், கோங்கு அரும்புகளையும் செவ்விக் காந்தட் பூக்களையும் , இம்மலர்களை அவயமாக கொண்டு (அதகவது தாமரைப் பூவினை முகமாகவும் செங்கழுநீர்ப் பூக்களை கண்களாகவும், குமிழ மலரை நாசியாகவும், கோங்கரும்புகளை முலைகளாகவும், செங்காந்தட் பூவை கரங்களாகவும் இப்படி அவயமாக கொண்டு உயர்ந்க வாசணை மிக்க மலர்களால் வேயப்பட்ட மாலையினதும் கொடி போன்ற இவள் நடந்து வருகின்றமை அன்னம் ஒன்று நடந்து வருகின்றது போன்று காட்சியளிக்கின்றது. இது என்ன அதிசயமே! ஏன தலைவன் தலைவியினது தோற்றப் பொலிவைக் கண்டு வியப்பிலிருந்து அவன்பால் சிருங்கார ரஸம் புலப்படுகிறது.

தலைவியைக் கண்ணுற்ற தலைவன் அழகினை சிறப்புறக் கூறுவதிலிருந்து அவனது காதல் உணர்வு வெளிப்படுகின்றது. ஆவனிடத்தே சிருங்கார ரஸம் தோன்றியதன் பொருட்டு அவன் தலைவியைப் பல வாறு வர்ணிக்கின்றான்.



தலைவியைக் கண்ணுற்று தலைவனிடத்தே தோன்றிய காதலை ஸ்தாயி பாவமாகக் கொள்ள லாம் அவளது முகம், கண், நாசி, முலைகள் , கரங்கள் என்பன நாயகியிடத்தில் காதலன் தோன்ற காரணங்கள் ஆகும். இவையே ஆலம்பன விபாவமாகும். அவளுடைய அவயங்களின் அழகானதும் தலைவனிடத்தே சிருங்கார ரஸத்தினை மென்மேலும் அதிகரிக்கச் செய்கின்றது. இவை உத்தீபன விபாவங்களாகும் அவளுடைய அழகிலே மயங்கி அவன் ஸ்தம்பிக்கின் றான். இது ஸாத்வீக பாவமாகும்,

**நாச்சியார் திருமொழியில் இசை**

ஆண்டாளால் பாடப்பட்ட நாச்சியார் திருமொழி கண்ணணைத் தனது நாயகனாகக் கொண்டு அவனை அடையத்துடிக்கும் ஆண்டாளின் தவிப்பை எடுத்துக் காட்டுகிறது. இப்பாடல்கள் அனைத்திலும் காதல் சுவை மேலோங்கி இருப்பதைக் காணலாம். வைணவ சமயங்கள் கூறும் இவரது வரலாறு இறைவன் மீது இவர் கொண்டிருந்த காதலை விளக்கும் வித்தியாசம்டன ஒரு வரலாறு ஆகும். இவருடைய நாச்சியார் திருமொழி பாடல்களில் காணப்படும் சிருங்கார ரஸம் பற்றி நோக்குவோம்.

ஆண்டாள் திருமாளுடன் திருமணம் நடப்பதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவு காண்கிறாள். பக்தியும் காதலும் ஒருசேரக் கொண்டிருந்த ஆண்டாளின் திருமணம் திருவரங்கனுடன் நடக்கின்றது. ஆண்டாளின் கனவு உரைக்கும் பாசுரங்கள் தமிழுக்கும் தமிழர் முறைக்கும் அற்புதமான எடுத்துக் காட்டுக்களாகும்.

**வாரணம் ஆயிரம் சூழ வலம் செய்து**
**நடக்கின்றாளென்றெதிர்**
**பூரண பொற்குடம் வைத்துப்புரமெங்கும்**
**தோரணம் நாட்டக் கனாக் கண்டேன் தோழி! நான்**

நாளை மறுநாள் என நிச்சயம் செய்து, பாளையோடு கூடிய கமுகு மகளால் அலங்காரம் செய்தனர், இந்திரன் உள்ளிட்ட தேவர் கூட்டம் வந்திருந்து மணத்தை உறுதி செய்தனர். மணப்புடைவை உடுத்தி மணமாலை சுட்டினர். நான்கு திசைகளில் இருந்தும் கொண்டு வந்த தீர்த்தத்தால் நீராட்டி பார்ப்பனார்கள் மந்திரங்களை சொல்ல, புனிதனான கண்ணனோடு என்னை இணைத்து காப்புக் கட்டினர். பெண்கள் மங்கள விளக்கும் கலசமும் ஏந்தினர்.

**மத்தளம் கொட்ட வரிச்சங்கு நின்றூத**
**முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்**
**மைத்துனன் நம்பி மது வந்த என்னைக்**
**கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன் தோழி! நான்**

பின் தீவலம் செய்தோம். நாராயணன் தன்; திருக் கையால் என் தால் ( பாதம் ) அம்மி மிதிக்கச் செய்தார். உடன் பிறந்தோர் தீயின் முன் நிறுத்தி, அச்சுதன் கைமேல் என் கையை வைத்தனர். குங்குமம் பூசி சந்தனம் தடவ வந்தோம். இக்கனவு வாழ்வது போலவே உணர்ச்சி மேலீட்டுக் கற்பனை செய்து அருளியமையாகும். ஆண்டாளுக்கு திருமாலை காணவேண்டுமென்ற ஆசை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே வந்தது. ஆனால் அவள் ஆசைப்படி அவனைக் காண முடியவில்லை, இருந்த போதும் அவள் காதல் குறையவில்லை. இது அயோக சிரங்காரத்தைப் புலப்படுத்துகின்றது.

முடிவுரை

சங்க காலத்திலும், பல்லவர் காலத்திலும் பலவாரியான இலக்கியங்கள் தோற்றம் பெற்றிருந்தன. இவ் இலக்கியங்கள் அக்கால மக்களின் மக்களுடைய வாழ்வியல் அம்சங்களைச் சித்தரிப்பதாக அமைந்துள்ளன. அதாவது அக்கால மக்களின் சமூக, கலாசார, கலை, பொருளாதார போன்ற பல்வேறு வாழ்வியல் பண்களை எமக்கு அழகாக படம்பிடித்துக் காட்டுபவையாக அமைந்துள்ளது.

மக்களின் வாழ்வியல் அம்சங்களைக் காட்டும் நூல்களாக சங்ககால அகத்திணை நூல்களையும், பல்லவர் கால இலக்கியங்களுள் சிலவற்றையம் குறிப்பிடலாம். சங்க கால மக்களின் காதல் உணர்வுகளை சித்தரிக்கும் நூல்களில் நற்றினை, குறுந்தொகை என்பன குறிப்பிட தக்கன. அதே போன்று பல்லவர் காலத்தில் காணப்பட்ட காதலை வெளிப்படுத்தும் இலக்கியங்களில். நாச்சியார் திருமொழி, திருக்கோவையார் ஆகிய நூல்கள் சிறப்பிடம் பெருகின்றன. இவ்வகையில் இவ்விரு காலங்களில் எழுந்த இசை பற்றிய் சங்ககால அகத்திணை சார்ந்த இலக்கியங்களிலே அதிகமாக பிரதிபலிக்கப்படுகின்ற விதத்தினை எடுத்துக்காட்டுவதாக இவ் ஆய்வானது அமைகிறது.

## அடிக்குறிப்பு...


01. பேராசிரியர் செல்வநாயகம் வி.தமிழ் இலக்கிய வரலாறு குமரன் புத்தக இல்லம் 2005 பக்கம் 10

02. சுப்பிரமணியம்.ந இந்திய வரலாறு, நியூ சென்சரி புக் ஹவுஸ் பக்கம் 20

03. சங்க இலக்கியமும் சமூக மெய்யியற் சிந்தனைகளும் பக்கம் 34

லீலாம்பிகை செல்வராஜா, நடன சாரம், யுனி ஆர்ட்ஸ், பக்கம் 20


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை இந்து தர்மாசிரியர் வழிகாட்டி

**பாட அலகு 3.3**

**3.3 விஜய நகர நாயக்கர் கால கட்டடக் கலை**



**( 1 ) அறிமுகம்**

தென்னிந்திய வரலாற்றில் விஜய நகர நாயக்கர் காலம் மகோன்னதமான பல சிறப்பம்சங்கள் பொருந்திய காலமாகும் . இரு கி.பி 14 ம் நூற்றாண்டிற்கும் 18 ம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலமாகும் . விஜயநகர சாம்ராச்சியம் கர்நாடகம் , ஆந்திரா , தமிழகம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய பேரரசாக விளங்கியது .

சோழர் ஆட்சி முடிவுற்றதும் இஸ்லாமியரின் ஆதிக்கம் பரவலாகியது . அவர்கள் இஸ்லாமிய மதத்தைப் பரப்புரை செய்யும் விதத்திலும் , இந்து ஆலயங்களை இடித்தளிப்பதிலும் , அங்குள்ள செல்வங்களைச் சூறையாடுவதிலும் தங்கள் கவனத்தைச் செலுத்தியமையால் இந்து சமயம் கவனிப்பாரின்றி வீழ்ச்சி நிலை அடைந்திருந்தது . இச்சூழ்நிலையில் 14ம் நூற்றாண்டின் நான்கவது தசாப்தத்திலே தெலுங்கு தேசத்து நாயக்கர்களும் , கர்நாடக தேசத்து பிரதானிகளும் இணைந்து கிளர்ச்சி புரிந்து இஸ்லாமியரின் ஆதிக்கத்தை அழித்தார்கள் . இதற்கு கரிகரன் , புக்கன் போன்ற அரசர்கள் வித்திட்டார்கள் .

கிருஷ்ணதேவராயர் காலத்தில் விஜய நகரம் உன்னத நிலையில் இருந்து . அதற்கு அவருக்கு வித்தியாரண்யர் எனும் குருவின் பணிகளில் ஆதரவும் காரண



**சைவப்புலவர் சு . துஷ்யந்த்**
**BA (Hons) PGDE, MA**
**முன்னாள் ஆசிரியர்.**
**பாரீஸ் நகர் – பிரான்சு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மாக இருந்தது . இவர்களின் பேராதரவினால் வைதிக சமய நெறிகள் தளைத்தோங்கின . பிற சமயங்களும் அரச ஆதரவுடன் வளர்ச்சி கண்டன . இந்து ஆலயங்கள் நிர்மாணிக்கப்பட்டன , பல ஆலயங்களில் புனரமைக்கப்பட்டன . புனரமைக்கப்பட்ட ஆலயங்களில் புதிய பாணி கட்டடக்கலையில் உருவெடுத்தன .

**2. விஜய நகரக் கோயில்களும் நாயக்கர் காலக்கோயில்களும்**

**அ ) விஜய நகரக் கோயில்கள் கட்டடச் சிறப்புக்கள்**

விஜய நகர காலத்திலே தென்னிந்தியக் கட்டடக் கலையில் குறிப்பிடத்தக்க வார்ச்சிகள் ஏற்பட்டன . இக் காலத்துக் கோயில்களை கர்நாடகம் , ஆந்திரா , தமிழகம் என பிராந்திய அடிப்படையில் மூன்று வகைகளாக பிரித்து நோக்கலாம் . இம் மூன்று பிராந்தியங்களிலும் தனியான பண்புகளைக் கொண்ட கட்டடக் கலை மரபுகள் நெடுங் காலமாக வளர்ச்சி பெற்றிருந்தன . திராவிடப் பாணியின் செல்வாக்கும் கர்நாடகம் , ஆந்திர தேசத்துக் கோயில்களிலும் கூடுதலான அளவில் ஏற்பட்டது .

**கர்நாடகக் கோயில்கள்**

* சிருங்கேரியிலுள்ள வித்தியாசங்கர் கோயில்
* விட்டலசுவாமி கோயில்
* ஹஸாரராமர் கோயில்
* விருபாக்ஷர் கோயில்

**ஆந்திரப் பிரதேசக் கோயில்**

* லெபாக்ஷியிலுள்ள வீரபத்திரக் கோயில்

தொண்டை நாட்டுக் கோயில்கள்

* வேலூர் கோட்டை ஜலகண்டேஸ்வரம் .
* சிரிஞ்சிபுரத்திலுள்ள மார்க்க சகாய நாதர் கோயில்
* வடவார்க்கட்டு தேவிபுரத்து அம்மன் கோயில்

புனர்நிர்மானம் பெற்ற கோயில்கள்

* காஞ்சிபுரத்து ஏகாம்பர நாதர் கோயில்
* காஞ்சியுத்து வரதராசப் பெருமாள் கோயில்
* பாடல் பெற்ற திருவரங்கக் கோயில்
* கள்ளழகர் கோயில்
* திரு மோகூர்
* திரு வாதவூர்

இத்தகைய கோயில்களில் விஜய நகரப் பாணியில் அமைந்த மண்டபங்கள் ( கலியாணமண்டயம் , நூற்றுக்கால் , ஆயிரங்கால் மண்டபம் ) , திருச்சுற்று பிரகாரம் , மண்டபங்களை அலங்கரிக்கும் விதம் விதமான தூண்கள் , இராசகோபுரங்கள் , கடவுள் சிற்பங்கள் , என்பன கட்டடப் பொதுப் பண்புகளாக விளங்குகின்றன . அவற்றைத் தனித் தனியாக ஆராயும் பொழுது விஜயநகர காலக் கட்டடக் கலையின் பண்புகளையும் சிறப்பம்சங்களையும் அறிந்து கொள்ளலாம் .

**மண்டபங்கள் கல்யாண மண்டபம்**

விஜய நகரக் கோயில்களுக்கு முன்பாக இருந்த மண்டபங்கள் இக் காலத்தில் புதிய பாணியில் உருவாக்கப்பட்டு விசாலமாகின . குறிப்பாக தென்னிந்திய கட்டடக் கலையில் கல்யாண மண்டபம், ஆயிரம் கால் மண்டபம் , நூற்றுக்கால் மண்டம் , நாட்டிய மண்டபம் , தேரடி மண்டபம் , நீராழிமண்டபம் எனப் பல வகையான மண்டபங்கள் நிர்மாணிக்கப்பட்டமை விஜயநகர கலைப் பாணியில் புதுப்படைப்பாகும் .

இதில் பல்லவ , சோழர் காலங்களில் அமைக்கப்படாத ஒன்று இக்காலத்தில் கல்யாண மண்பமாக பரிணமித்துள்ளன புனரமைக்கப்பட்ட கோயில்களிலும் , புதிய கோயில்களிலும் தவிர்க்க முடியாத கட்டடமாக இம் மண்டபம் அமைக்கப்பட்டன . இதற்குக் காரணம் இறைவன் இறைவியின் திருக்கல்யாண உற்சவம் விஜயநகர காலம் முதலாகத் தென்னிந்தியக் கோயில்களிலே பொது வழக்காகி விட்டதனால் கல்யாண மண்டபம் எல்லாக் கோயில்களிலும் உருவாக்கப்பட்டிருந்தன . பொதுவாக கல்யாண மண்டபம் பக்கச் சுவரின்றி அமைந்திக்கும் , அதன் கூறை தட்டையானது . மண்டபம் முழுவதும் கல்லினால் அமைத்திருக்கும் மண்டபத்தினை சிற்ப வேலைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுகள் பொருந்திய தூண்கள் தாங்கிநிற்கும். இதனால் கல்யாண மண்டபம் ஓர் அலங்கார மண்டபம் போலக் காட்சியளிக்கும். குறிப்பாக இம் மண்டபம் கோயில்களின் கிழக்கு வாயிலின் இடப்புறமாகவே அமைந்திருக்கும். எடுத்துக்காட்டாக விட்டல சுவாமி, காஞ்சிபுர வரதராஜ கோயில்களின் கலியாண மண்டபங்களைக் குறிப்பிடலாம்.

காஞ்சிபுர கல்யாண மண்டபம் கோயிலை நோக்கி உயரமான இடத்தில் உள்ளது அம்மண்டபத்தின் நடுமேடையை ஆமை ஒன்று தாங்கி நிற்பது சிற்பமாக வடிவமைக்கப்பட்டுள்ளது, அம்மண்டபத்தின் தூண்களில் இராவணவதம், நரசிம்ம அவதாரம் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது.

## தூண்கள்

மாண்டபங்களைத் தாங்கி நிற்கும் பிரதான உறுப்பு தூண்களாகும் விஜய நகர காலத்தில் மூன்று வகையான தூண்கள் கோயில் மண்டபங்களில் அமைக்கப்பட்டிருப்பதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அவை முறையே

01. பிரதான நடுத்தூணை ஒட்டிய வண்ணமாகப் அதன் பக்கங்களில் குதிரை, யாளி, கடவுட் படிமம் முதலிய வடிவங்கள் செதுக்கப்பட்டிருக்கும். இவ் விதமான தூண்கள் 100 கால் மாண்டம், 1000 கால் மண்டபம், திருநடைமாளிகை போன்றவற்றிலே காணப்படும்.

02. தூண்களின் நடுவிலுள்ள பிரதானமான தூணைச் சுற்றி உருண்டை வடிவமான மெலிந்த கம்பங்கள் அமைந்திருக்கும். அவை எல்லாம் ஒரே கல்லில் செதுக்க ப்பட்டவை. கம்பங்கள் ஒவ்வொன்றையும் கைவிரல்களினாற் தட்டும் பொழுது கர்நாடக சப்தஸ்வரம் ஒலிக்கும். இதை இசைத் தூண்கள் என்பர். இத் தூண்கனள விட்டல சுவாமி கோயில் மண்டபத்தில் காணமுடியும்.

03. கோயிலின் மாதிரியான சிற்றுருவங்கள் வனப்பு மிகுந்த கோலத்திலே கீழிருந்து மேலாகப் பல வரிகளிலே செதுக்கப்பட்டிருக்கும். சில தூண்களில் கோபுரம், சிகரம் என்பனவற்றிலுள்ள மாடங்களை ஒத்த நுண்ணிய உருவங்கள் செதுக்கப் பட்டிருக்கும்.

பொதுவாக விஜய நகர பாணியிலே உருவான தூண்கள் அளவில் பெரியவை, உயரமானவை, மிகுந்த சுற்றாவினைக் கொண்டவை. ஒவ்வொரு தூணும் தனிக் கல்லில் உருவானவை. ஆனால் கூட்டுத்தூண்கள் போலக் காட்சியளிக்கும் விதமாக வடிவமைக்கப்பட்டவை ஆகும். திருவரங்கத்தில் குதிரைக் களரி என்று சொல்லப்படும் சேஷாத்திரி



மண்டபத்திலும், வேலூர் சல கண்டேடேஸ்வரர் கோயிலிலும் தாவிப்பாயும் போர்க்குதிரை வடிவம், குதிரைமேல் போர் வீரன் அமைந்திருக்கும் கோலத்தில் தூண்கள் காணப்படுவது இப்பாணியின் சிறப்பாகும்.

இதேபோல பல்லவர் கலைப் பாணியில் உருவான யாளித் தூண்கள் விஜய நகரப் பாணியில் தூணின் அடிப்பாகத்திலே யாளியின் உருவத்தை அமைத்தார்கள். மண்டபங்களில் அமைந்துள்ள கலப்புத் தூண்களிலே சாலையை நோக்கிய துணைத் தூணிலே அதன் மேற்பாகத்தில் வாயைப்பிளந்து கொண்டு முன்னங்கால்களை துக்கி நிற்கும் நிலையில் யாளியின் முழுவடிவம் அமைக்கப்பட்டுள்ளது. மற்றும் விஜயநகர கலைப் பாணியில் அமைந்த கட்டடங்களை சிரமமின்றி அடையாளம் காண உதவுவது தூண்களின் மேற்பகுதியில் அமைந்திருக்கும் புஷ்ப போதிகை என்னும் பிரதான உறுப்பாடும். இதுவும் இப்பாணியில் அமைந்த தூணின் சிறப்பம்சமாகும்.

## இராஜ கோபுரங்கள்

சோழர் காலத்தில் சிதம்பரக் கட்டுமானத்தில் உதயமான கோபுர அமைப்பினை முன்மாதிரியாகக் கொண்டு விஜயநகர காலத்தில் இராச கோபுரங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல எழுப்பப்பட்டன . கிருஷ்ணதேவராயன் என் னும் அரசனினால் பல கோபுங்கள் எழுப்பப்பட்டன . இவற்றுள் குறிப்பிடத்தக்கவை .
1.திருவண்ணாமலையில் இவர் அமைத்த உயர் கோபுர ம்
2.வரதராஜப்பெருமான் கோயில் உயர் கோபுர ம்
3. காஞ்சி ஏகாம்பநாதர் கோயில் உயர் கோபுர ம்
4.சிதம்பரக் கோயிலின் வடக்குக் கோபுரத்தை இவர் புதுப்பித்தார்
5.விருபாட்சர் கோயிலின் ஒரு பழைய கோபுரத்தை பழது பார்ப்பதோடு ஒரு புதிய கோபுரத்தையும் கட்டி னார் .

## சுற்றுப்பிரகாரம்

விஜய நகர மன்னர்கள் அந்நியர்களிடம் இருந்து கோயில்களைப் பாதுகாக்கும் பொருட்டு , ஒரு கோயிலுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சுற்றுப் பிரகாரங் களை அமைத்தனர் . சுற்றுப்பிரகாரத்திலுள் உள்ளே மக்கள் குடியிருப்புக்கள் , கடைத் தெருக்கள் , அங்கா டிகள் என பலவற்றையும் அமைத்து கோயிலை ஒரு நகரமாக விஜயநகர மன்னர்கள் மாற்றியமைத்தார் கள் . ஸ்ரீரங்கத்தில் மூன்று சுற்றுப்பிரகாரங்கள் இம் மன்னர்களால் அமைக்கப்பட்டுள்ளது.

## கல்தேர்

மலைகளை மேலிருந்து கீழாக வெட்டி பல்லவ மன்னர்கள் மாமல்லபுரத்தில் 8 ரதக் கோயில்களை உருவாக்கியதைத் தொடர்ந்து , ஆலய வளாகத்தி னுள் கருங்கற்களைப் பயன்படுத்தி சிற்ப வேலைப் பாடுகளுடன் , சக்கரங்கள் என்பவற்றைத் தாங்கி கல்தேர்கள் விஜய நகரத்துக் கோயில்களில் உருவாக் கப்பட்டன . முதலாவது கல்தேர்கள் கோயில் விட் டல சுவாமி கோயில் தான் அமைக்கப்பட்டது . அதன் அடிப்பாகம் சக்கரங்கள் , தேரின் முதற்தளம் என் பன ஒரே கல்லில் உருவானது . இதனைப் போன்ற கல்தேர்கள் தாட்பத்திரி , திருவாமுர் முதலிய தலங் களிலும் கானப்படுகின்றன .இவ்வாறு விஜய நகர கலைப்பாணி , பின் நாயக்கர் காலக்கட்டடக் கலை யின் வார்ச்சிக்கும் காரணமாக விளங்கியது .

## ( ஆ ) நாயக்கர் காலக் கோயில்களும் கட்டடச் சிறப்புக்களும்

தென்னிந்தியாவிலே விஜய நகரப் பேரரசினைத் தொடர்ந்து , அப்பேரரசு பல இராச்சியங்களையும் ,



உட்பிரிவுகளையும் பிரித்து , அவை ஒவ்வொன் றையும் நிர்வாகம் புரிவதற்கு , 'நாயங்கர நிர்வாகத் தினை' கட்டமைத்தனர் . அவ்வாறானவர்களே நாயக்கர் என அழைக்கப்பட்டனர் . இவர்கள் விஜய நகரராயக்கரின் பிரதிநிதிகளாக செஞ்சி , தஞ்சை , மதுரை , வேலூர் , கர்நாடக மாநிலம் ஆகிய தேசங்க ளில் நாயக்க ஆட்சி முறையை ஏற்படுத்தினார்கள் . இவர்களின் ஆட்சி கி.பி . 16 ஆம் நூற்றாண்டிலி ருந்து 18 ஆம் நூற்றாண்டு வரை நீடித்தது .

நாயக்கர் கலைப் பாணியில் அமைந்த கோயில் கள் மதுரையில் மட்டுமன்றி திருவரங்கம் , திருவா னைக்கா , திருவாவூர் , இராமேஸ்வரம் , சிதம்பரம் , திருவண்ணாமலை முதலிய தலங்களிலெல்லாம் , அப்பாணியின் அம்சங்களைக் காணமுடிகின்றது .

இங்கும் மண்டபங்கள் , கோபுரங்கள் , தூண்கள் , பொற்றாமரைக் குளம் . திருச்சுற்றாலை , சிற்பங்கள் போன்ற உறுப்புக்கள் நாயக்கர் கலைப் பாணியில் உருவாக்கப்பட்டன .

## மண்டபங்கள்

மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயி லின் வடக்குமண்டபம் , வீரப்ப மண்டபம் , புது மண்டபம் , ஆயிரம் கால் மண்டபம் என்பன மதுரை நாயக்கர்களால் அமைக்கப்பட்ட மண்டபங் களாகும் . இவை தவிர கிளிகட்டி மண்டபம் , கம் பத் தடிமண்டபம் , என்பனவும் விசேடமானவை , சுந்தரேஸ்வரர் கோயிலில் ஃவிஜரங்க சொக்க நாத ரால் . கருமையான கற்தூண்கள் பொருத்திய பீடம் , தோரணங்களுடன் கூடிய கல்யாண மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது .

## கோபுரங்கள்

மதுரைக் கோபுரங்கள் வானோங்கு கோபுரங்கள் ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை நெடுநிலையானவை , அழகு மிகுந்தவை . சிற்ப அலங்கார வனப்புடன் கம்பீரத்துடன் காட்சிதருபவை . மதுரை , கோபுரக்கலைக்கு புகழ் பூத்தது . பல கோபு ரம்களில் நாயக்க கோபுரம் அச்சுதராயரின் ஆட்சியில் கட்டப்பட்டது . அதில் கடக கோபுரம் 16 ம் நூற்றாண் டில் புனரமைக்கப்பட்டது . இதே போல் இராமேஸ் வரத்திலுள்ள கிழக்கு , மற்றும் மேற்கு கோபுரங்கள் நாயக்கர் காலத் திருப்பணிகளாகும் , இவ்வாறு விஜய நகரரால் உருவாக்கப்பட்ட கோபுரம் நாயக்க காலத் தில் கோபுரங்களாக வளர்ச்சியடைந்தது .

## தூண்கள்

நாயக்கர்கள் சித்திர வேலைப்பாடு , சிற்ப வேலைப் பாடு களைக் கொண்ட நூற்றுக்கால் மண்டபம் , ஆயிரங் கால் மண்டபம் , திருச் சுற்று மாளிகைகள் என்பனவற்றை அமைத்தார் . அவற்றில் தூண்களை பிரதான உறுப்பாக வடித்தார்கள் மனிதரைப் போல உயரமான சிற்ப வடி வங்களும் , சில கடவுள் படிமங்களும் , வேறுசில மன்னர்களின் உருவங்க ளையும் வடித்துள்ளனர் . திருப்பரங்குன்றக் கோயி லின் கம்பத்தடி மண்டபத்தின் தூண்களில் திருவிளை யாடற் புராணக் காலக் காட்சிகள் சிற்பங்களாகச் செ துக்கப்பட்டுள்ளது . இராமேஸ்வர மண்டபத் தூண் களில் ஆடல் மகளிர் படிமங்களும் , விலங்குகளின் உருவங்களும் , கடவுளரின் படிமங்களும் சிற்பங் களாக அமைந்துள்ளன .


## மதுரை மீனாட்சி அம்மன் கோயில்

நாயக்கர் காலத்தில் உருவாக்கப்பட்ட அரசாட்சி மிக்க சக்தி மிக்க மதுரைக் கோயில் , திராவிடக் கலை யின் பூரணத்துவமான வளர்ச்சியின் முத்திரையாக விளங்குகின்றது . இது மதுரைக் கலைப் பாணிக்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றது . 850 அடி நீ ளமும் 795 அடி அகலமும் கொண்டுள்ள நீள் சதுர மான முற்றத்தில் இரண்டு கோயில்கள் அமைக்கப்பட் டுள்ளன .

1. **சுந்தரேஸ்வரர் கோயில் .**
2. **மீனாக்ஷி அம்மன் கோயில்**

சுந்தரேஸ்வரர் கோயில் மதுரை விசுவநாத நாயக் கரால் (கி.பி 1529 1564 ) உருவாக்கப்பட்டது . இது கோயில் இந்திரனுடைய ஆணைப்படி விஷ்வ கர்மனால் அமைக்கப்பட்டது என்பதும் ஐதிகமாகும் . இதனால் இக் கோயில் 'இந்திர விமானம்' என்றும் போற்றுவர் . இக் கோயில் கருப்பகிருகம் , அதன் அதிஷ்டானம் . மூலவராக சுயம்புலிங்கம் , அர்த்த மண்டபம் , மகா மண்டம் , எண் கோணப்பட்டைத் தூண்கள் , திருவிளையாடற் புராணக் கதைச்சிற்பங் கள் நாட்டிய கோலகள் , தேவக் கோட்ங்களும் சிற்பங்களும் ஷோக்கா நாதர் மண்டபம் என்றும் அம்சங்களைக் கொண்டதாக விளங்குகின்றது .

சுந்தரேஸ்வரரின் கோயில் அருகாமையில் மினாக்ஷி அம்மனுக்கு கோயில் அமைக்கப்பட்டுள்ளது . இக் கோயிலுக்கு தெற்குப் புறமாக பொற்றாம ரைக் குளம் அமைந்துள்ளது . இக் கோயிலில் மண் டபம் திருச்சுற்றாலை , திரு நடைமாளிகை என்றும் அமைப்புக்கள் வனப்புடன் விளங்குகின்றன . அவற் றின் கட்டட அமைப்புக்களும், கவர்ச்சி மிக்க சிற்பங் களும் ஆலயத்தின் உன்னத கோலத்திற்கு அழகு சேர்த்துள்ளன . மண்டபங்களில் கிளிகட்டி மண்டபம் , கம்பத்தடி மண்டபம் , ஆயிரம் கால் மண்ட பம் , புதுமண்டபம் என்னும் நான்கும் சிறப்புவாய்ந்த வை.மண்டவங்களை கடவுள் , விலங்கு , போர் வீரர் கள் ஆகிய உருவங்கள் பொருந்திய தூண் சிற்பங் கள் அழகுபடுத்தியுள்ளன . குறிப்பாக தூண்களில் மதுரைப்பாணி தெரியும் அளவிற்கு சிறப்பாக வடிவ மைக்கப்பட்டுள்ளது .




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இதே போல் மதுரைக் கோயில் கோபுரங்கள் வானோங்கு கோபுரங்கள் , அவை நெடுநிலையா னவை , வானத்து முகில்களோடு தோய்யும் வண்ண மாக : வேலைப்பாட்டில் உன்னதமாக உருவாக்க பட்டுள்ளது . பாண்டியகள் கட்டிய தளங்களைப் பின்பற்றி சிய கோபுரங்கள் கட்டப் பெற்றுள்ளன . சில கோபுரங்கள் நாயக்கர்களால் கட்டப்பெற்றவை .

நாயக்கரது சிற்பக்கலை பற்றி அறிந்து கொள்ள வேண்டும் எனில் இக்கோயில் சிற்பங்கள் மட்டுமே போதும் என்பர் . புது மண்டபத்தில் புராணக்கதை திருவிளையாடற் புராணக் கதை தொடர்பான சிற்பங்கள் ஏறாளம் காணப்படுகின்றன . அவை திரு மலை நாயக்கரின் பணி சார்ந்தவை . இதே போல் சித்திர மண்டபத்தின் வடக்கு , கிழக்கு விதானங்களில் திருவிளையாடற் புராணம் கூறும் 63 சிவலீலைகள் பற்றிய ஓவியங்களும் தீட்டப்பட்டுள்ளன .

**மாதிரி வினாக்கள்**

( 1 ) விஜய நகர நாயக்கர் காலத்து கோயில் கட்டடக் கலையில் ஏற்பட்ட மாற்றங்களை மேல் வருவனவற்றைக் கருத்தில் கொண்டு விளக்குக .

1. அக்காலச் சூழ்நிலை .
2. திருச்சுற்றுமாளிகை
3. தூண்கள்
4. கல்யாண மண்டபம்
5. இராச கோபுரம்
6. கல்தேர்

( 2 ) நாயக்கர் கலைப் பாணியின் சிறப்பிற்குரிய முத்திரை யாக விளங்குவது மதுரை மீனாட்சியம்மன் கோயிலாகும் இக் கூற்றை ஆராய்க .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஒரு தனித்துவமான கவிஞரின் தனித்துவமான மாணவர்

**புலவருடைய** பாக்குவெட்டியை அவர் வைத்த இடத்தில் காணவில்லை. பாக்குவெட்டி என்றால் சும் மாவா? அது எத்தனை விடயங்களுக்கு உதவுகின்றது. பாக்கு கிடைக்கும் போது அதனை நான்கு ஆறாகப் பிளந்து கொள்ளுவது மட்டும் அல்ல அதன் வேலை. விறகுச் சுள்ளிகளை ஒடித்துப்போட, காய்கறி நறுக்க, சோற்று உப்புக்கு அடைவு வைக்க, அரிப்பு எடுத்தால் முதுகில் சொறிந்து கொள்ள, என்று எத்தனை விட யங்களுக்கு உதவுகின்ற பாக்குவெட்டி அது. அதனை யாராவது எடுத்திருந்தால் தயவுசெய்து தந்து விடுங் கள் என்கிறார் இப்புலவர்.

**விறகு தறிக்கக் கறிநறுக்க வெண்சோற்றுப்புக்கு**
**அடகுவைக்கப்**
**பிறகு பிளவுகிடைத்ததென்றால்**
**நாலாறாகப் பிளந்து கொள்ளப்**
**பறகுபறகென்றே சொறியப் பதமாயிருந்த**
**பாக்குவெட்டி**
**இறகு முளைத்துப் போவதுண்டோ**
**எடுத்தீராயிற் கொடுப்பீரே!**

பாக்குவெட்டி பற்றிக் கூடச்சொற்சுவையும் நகைச் சுவையும் தோன்றக் கவிபாடும் ஆற்றல் பெற்ற அற் புதமான இப்புலவர் இற்றைக்கு இருநூறு வருடங்க ளுக்கு முன்னர் வாழ்ந்தவர். கவிராயர் (கவிராஜர்) என்னும் பட்டம் பெற்றவர். எனினும் சோற்றுக்குப் போடும் உப்பு வாங்குவதற்குக் கூடப் பாக்குவெட்டிய அடகுவைக்கும் ஏழ்மை நிலையில் வாழ்ந்தவர் என்று தெரிகின்றது.

புலவர்களுக்குப் பொன்னும் பொருளும் வாரிவழங்கிய அதியமானும் பாரியும் மூவேந்தர்களும் ஆட்சிசெய்த தமிழகத் தை, தெலுங்கரும் மராட்டியரும் நவாப் புகளும் வெள்ளைக்காரரும் தம்முள்ளே பங்கு போட்டுக்கொண்டு ஆண்டுவந்த காலம் அது. ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ளப் போராடிக் கொண்டிருந்த அவர்களுக்குத் தமிழ்ப்புலவர்களின் பாடல் களைக் கேட்டு மகிழ்வதற்கு நேரம் எங்கே கிடைத்தது. அப்படியே நேரம் கிடைத்தி



**கலாநிதி**
**பால. சிவகடாட்சம்**



ருந்தாலும் பரிசு கொடுப்பதற்கு மனம் இருக்க வேண் டுமே. பாவலர்கள் என்ன செய்யமுடியும். அவர்க ளுக்கும் வயிறு என்று ஒன்று உண்டல்லவா?

**கல்லைத்தான் மண்ணைத்தான்**
**காய்ச்சித்தான் குடிக்கத்தான் கற்பித்தானா**
**இல்லைத்தான் பொன்னைத்தான்**
**எனக்குத்தான் கொடுத்துத்தான் இரட்சித்தானா**
**அல்லைத்தான் சொல்லித்தான்**
**ஆரைத்தான் நோவத்தான் ஐயோ எங்கும்**
**பல்லைத்தான் திறக்கத்தான் பதுமத்தான்**
**புவியில்தான் பண்ணினானே.**

என்று பரிசுக்காகக் கண்டவன் போனவனுக்குப் பல்லைக் காட்டிப் பாடிக்காட்டிக் கெஞ்சவைத்து விட்ட படைப்புக் கடவுளான அந்தப் பிரமனை நொந் துகொண்டே தமிழுணர்வு பெற்ற பிரபுக்களைத்தே டிச் சென்றார் இராமச்சந்திரக் கவிராயர் என்று அறியப்பட்ட இப்புலவர். பிரபுக் களிடம் இவர் சென்றபோது பார்க்க நேரிட்ட காட்சிகளோ மிகப்பல.

புலவரைக் கண்டதும்வணக்கம்என்று மட்டும் சொல்லிவிட்டுப் போய்விடும் பிரபுக்கள் சிலர்உண்டு. இவர் போன நேரம் பார்த்துச் சிலருக்குக் காக்கை வலி போல் ஒரு கடுமையான வருத்தம் வந்து விடும். ஒருசிலருக்கு அப்பொழுதுதான் அவசியமாகச் சரிபார்க்க வேண்டிய கணக்குப் புத்தகம் வந்துவிடும். இந்த நடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப் பிரபுக்களைத் தவிர்த்துப் பார்த்தால் கண்டவுடன் வேட்டைநாய் போல் கடிக்கவரும் பிரபுக்கள் தான் உள்ளனர். இத்தகைய கேடு கெட்டவர்களின் அனுதாபம் வேண்டி எத்தனை நாளுக்கென்று நான் தமிழைப்பாடிப் பாடித் திரிவது என்று தாம் வணங்கும் திருப்பரங்குன்றத்து முருகனிடம் முறையிடுகின்றார் இந்தக் கவிராயர்.

**வணக்கம் வரும்சிலநேரம், குமரகண்ட**
**வலிப்புவரும் சிலநேரம் வலியச்செய்யக்**
**கணக்குவரும் சிலநேரம் வேட்டைநாய் போல்**
**கடிக்கவரும் சிலநேரம் கயவர்க்கெல்லாம்**
**இணக்கம்வரும்படி தமிழைப்பாடிப் பாடி**
**எத்தனை நாள் திரிந்து திரிந்(து) உழல்வேன் ஐயா**
**குணக்கடலே அருட்கடலே அசுரரான**
**குரைகடலை வென்றபரங் குன்றுளானே**

நெல்வயலில் பெருவிளைச்சல் பெற்றதன் மூலம் பஞ்சகாலத்தில் பணம் சம்பாதித்து ஆடம்பரமாக வாழ்ந்த சிலரைச் சந்தித்து உதவி கேட்கச் சென்றார் கவிராயர். அந்தத் திடீர்ப் பணக்காரர்களோ புலவர்களைக் கண்டதும் பாய்ந்து சென்று கதவைச் சாத்தும் கஞ்சப் பேர்வழிகளாக இருந்தனர்.

**புல்லுக்கட்டும் விறகும் சுமந்தபேர்**
**பூர்வகாலத்துப் புண்ணியவசத்தினால்**
**நெல்லுக்கட்டும் பணக்கட்டும் கண்டபின்**
**நீலக்கல்லில் கடுக்கனும் போடுவார்**
**சொல்லுக்கட்டும் புலவரைக் கண்டக்காற்**
**றூறிப்பாய்ந்து கதவை அடைத்து எதிர்**
**மல்லுக் கட்டும் மடையரைப் பாடவோ**
**மலைச் சாரலில் வாழ்பெரியம்மையே.**

கவிபாடிப் பரிசு பெறும் வழிகள் மூடப்பட்ட நிலையில் பட்டகடனையும் அடைக்கமுடியாமல் தவித்த இராமச்சந்திரகவிராயரிடம் வசதிபடைத்த வெள்ளைக்கார மாணவர் ஒருவர் தமிழ் படிக்கவந்தார். பிற்காலத்தில் தமிழ் இலக்கியவரலாற்றில் முக்கிய தடம்பதித்தவரும் சென்னை மாகாணத்தின் அப்போதைய கலெக்டரும் சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு கன்னடம், மலையாளம் ஆகியமொழிகளில் பாண்டித்தியம் பெற்றவருமான பிரான்சிஸ் வைற்எல்லீஸ் (**Francis Whyte Ellis 17771819**) என்பவரே இராமச்சந்திர கவிராயரிடம் தமிழ் கற்றுக்கொள்ள வந்த வெள்ளைக்காரர்.

பிற்காலத்தில்எல்லீஸ்துரைஎன்று பொதுமக்களால் அன்புடன் அழைக்கப்பெற்ற பிரான்சிஸ் வைட்எல்



**எல்லீஸ் வெளியிட்ட திருவள்ளுவர் உருவம் பதித்த தங்கக் காசுகள்**

லீஸ் அவர்கள்1796 ஆம்ஆண்டில் கிழக்கிந்திய கம்பெனியின் சேவையில் ஒரு எழுத்தராக இணைந்து கொண்டவர். தனது கடுமையான உழைப்பினாலும் திறமையினாலும் படிப்படியாகப் பதவிஉயர்வு பெற்று 1810 ஆம் ஆண்டில் சென்னை மாகாணத்தின் கலெக்டராக நியமனம் பெற்றவர்.

எல்லீஸ் அவர்களின் பன்மொழிப்புலமை அக்காலப்பகுதியில் ஐரோப்பியர் பலராலும் அறியப்பட்டிருந்தது. பண்டைய சமஸ்கிருத நூலொன்றின் பிரெஞ்சு மொழி பெயர்ப்பாகக் கருதப்பட்ட 'ஏசுர்வேதம்' (**EzourVedam**) என்னும் நூல்பற்றிய உண்மையைக் கண்டறியுமாறு அலெக்சாண்டர் ஜான்ஸ்டன் என்பவர் எல்லீஸிடம் கோரிக்கை விட்டிருந்தார். மேற்படி நூலினை ஆராய்ந்த பின்னர் அந்நூல் பழைய சமஸ்கிருதநூலொன்றின் மொழிபெயர்ப்பு அல்ல என்பதையும் தத்துவபோதகசுவாமிகள் என்னும் பெயருடன் உலாவிய ரோபேர்ட்டி நோபிலி (**Robert de Nobili 1577 1656**) என்பவரால் இந்துக்களைக் கிறிஸ்தவமதத்திற்கு மாற்றும் நோக்கத்தில் சுயமாக இயற்றப்பட்ட போலி நூல் என்பதையும் எல்லீஸ் நிரூபித்தார்.

கிறித்துவமதக் கொள்கைகளை விளக்கும் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்ட நூலின் பிரெஞ்சுமொழி பெயர்ப்பாக வொல்டயர் (**Voltaire**) முதலான ஐரோப்பிய அறிஞர்களால் நம்பப்பெற்ற 'ஏசுர்வேதம்' ஒருபோலி நூல் என எல்லீஸ் நிறுவியதையிட்டுச் சிலர் அதிருப்திஅடைந்தனர். எனினும் பலர் எல்லீசின் நேர்மையைப் பெரிதும் பாராட்டினர்.

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய தென்னிந்தியப் பேசுமொழிகள் தமக்குள்ளே ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை, அவை சமஸ்கிருத மூலத்திலிருந்து பெறப்பட்டவை அல்ல என்னும் கருத்தினை முதன் முதலாகத் தெரிவித்தவர் எல்லீஸ். அலெக்ஸாண்டர் டங்கன் காம்ப்பெல் (**Alexander Duncan Campbell**) என்பவர் எழுதிய தெலுங்கு இலக்கண நூலுக்குத் தாம் எழுதிய திராவிடச்சான்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் தலைப்பிலான அணிந்துரையில் எல்லீஸ் அவர்கள் இக்கருத்தை முன்வைத்தார்கள்.

தென்னிந்திய மொழிகளை ஒருதனி மொழிக்குடும்பமாக அடையாளப்படுத்திய முதல் அறிஞர் என்னும் பெருமை எல்லீஸ் அவர்களுக்கே சேரவேண்டியது. எனினும் திராவிடமொழிக் குடும்பத்தை முன்மொழிந்த அறிஞராக ரொபர்ட்கால்டுவெல் (**Robert Caldwell**) அவர்களே பேசப்படுகின்றார். திராவிட அல்லது தென்னிந்தியக் குடும்பமொழிகளின் ஓர் ஒப்பீட்டு இலக்கணம் என்னும் தமது நூலின் முதல் பதிப்பிற்கான முன்னுரையில் கால்டுவெல் அவர்கள் இவ்விடயத்தில் எல்லிஸின் பங்களிப்பை ஒப்புக்கொண்டுள்ளார்.

எல்லீஸ் உறுப்பினராக இருந்த சென்னை இலக்கிய சங்கத்தில் இராமச்சந்திரகவிராயரும் உறுப்பினராக இருந்தார். 1812 ஆம் ஆண்டில் எல்லீஸ் சென்னையில் செயின்ட்ஜார்ஜ் கோட்டைக் கல்லூரியை நிறுவினார். இக்கல்லூரி பிரித்தானியரையும் இந்தியர்களையும் உறுப்பினர்களாகக் கொண்டிருந்தது, 1813 இல்எல்லீஸ் இக்கல்லூரியில் அச்சகம் ஒன்றை அமைக்க முன்னின்று உழைத்தார்.

இந்த அச்சகத்தின் முதல் பதிப்பாக வீரமாமுனிவரின் கொடுந்தமிழ்இலக்கணம் வெளிவந்தது. 1824 இல் இராமச்சந்திரகவிராயரும் தாண்டவராயமுதலியும் இணைந்து வீரமாமுனிவரின் சதுரகராதியை அச்சில் பதிப்பித்தனர்.

தமிழ்ப்புலமைமிக்க எல்லீஸ் அவர்கள் திருவள்ளுவர் மீதும் அவரது நூலான திருக்குறள்மீதும் பேரபிமானம் கொண்டிருந்தார். திருக்குறள் அறத்துப்பாலின் 18 அத்தியாயங்களை ஆங்கிலத்தில் கவிதை வடிவிலும் உரை நடையிலும் மொழி பெயர்த்தார். இவற்றுள் எல்லீஸ் அவர்களின் விரிவான உரையுடன்கூடிய 13 அத்தியாயங்கள் 1819ஆம் ஆண்டில் சென்ற்ஜோர்ஜ் கோட்டைக்கல்லூரி அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்றன.

அப்போது சென்னையில் திறைசேரி மற்றும் நாணயசாலைப் பொறுப்பில் இருந்த எல்லீஸ் வள்ளுவரின் உருவத்தைத் தாங்கிய தங்க நாணயத்தையும் வெளியிட்டார். திருவள்ளுவரை இவ்வாறு கௌரவித்தவர்களுள் எல்லீஸ் அவர்களே முதன்மை பெறுகின்றார்.

1818 ஆம் ஆண்டில் சென்னைப்பட்டினம் கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறையைச் சந்தித்தபோது எல்லீஸின் உத்தரவின் பேரில் 27 கிணறுகள் தோண்டப்பெற்றன. இவற்றுள் ஒன்றுதான் ராயப்பேட்டையில் உள்ள பெரியபாளையத்தம்மன் கோவில் கிணறு. ராயப்பேட்டை அரசுமருத்துவமனையின் இணைப்பிற்குப் பின்னுள்ள கிணற்றையும் அங்கிருந்த கல்வெட்டு ஒன்றையும் 1970களில் தமிழகத் தொல் பொருள் துறையின் ஊழியர்கள் கண்டுபிடித்ததாக தொல்பொருள் துறையின் முன்னாள் இயக்குநர் நாகசாமி அவர்கள் வெளியிட்ட ஒருதுண்டுப்பிரசுரம் கூறுகின்றது. கவிதை வடிவில் எழுதப்பெற்ற இந்த நீண்டகல்வெட்டு இப்போது மதுரையிலுள்ள திருமலை நாயக்கர் அரண்மனையில் காட்சிக்கு வைக்கப்பட்டிருப்பதாக அறியமுடிகின்றது.

இக்கல் வெட்டில் தன்னை 'சென்னைப் பட்டினத்து எல்லீசன்' என்று பெருமையுடன் அறிவிக்கும் எல்லீஸ் அவர்கள் வள்ளுவரைத் தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் என்று புகழ்ந்துரைக்கின்றார். தாம் இக்கிணறுகளை வெட்டுவதற்கான உந்துதலை வள்ளுவரின் குறள் ஒன்றே தந்ததாகக் கூறும் எல்லீஸ் அக்குறளையும் கல்வெட்டில் பதிவு செய்துள்ளார்.

இருபுனலும்வாய்ந்தமலையும்வருபுனலும்
வல்லரணும்நாட்டிற்குறுப்பு(அதிகாரம்:நாடு, குறள் எண்:737)

என்னும் குறள் கூறும் உண்மையை ஆழமாக மனதில் பதித்துக் கொண்டேன்' என்கிறார் எல்லீஸ்.

மழைநீரும், நிலத்தடி நீரும், பொருத்தமாக அமைந்த மலையும்,அதிலிருந்து ஓடிவரும் ஆற்றுநீரும்,வலுவான கோட்டையும் ஒருநாட்டின் இன்றியமையாத உறுப்புக்கள் என்பதை இக்குறள் எடுத்துரைக்கின்றது. சென்னை போன்ற வரண்டபிரதேசங்களில் மழை குறைந்த கோடைகாலத்தில் நிலத்தடி நீரைப்பெற்றுக் கொள்வதற்குக் கிணறுகளின் தேவையை வள்ளுவரின் குறள் எல்லீஸுக்கு உணர்த்தியிருக்கலாம்.

சயங்கொண்ட தொண்டிய சாணுறு நாடெனும்
ஆழியில் இழைத்த வழகுறுமாமணி
குணகடன் முதலாகுட கடலளவு
நெடுநிலம் தாழநிமிர்ந்திடு சென்னப்
பட்டணத்து எல்லீசன் என்பவன்யானே
பண்டாரகாரிய பாரம் சுமக்கையில்
புலவர்கள் பெருமான் மயிலையம்பதியான்
தெய்வப்புலமைத் திருவள்ளுவனார்
திருக்குறள் தன்னில் திருவுளம்பற்றி
இருபுனலும் வாய்த்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற் குறுப்பு
என்பதின் பொருளை என்னுள் ஆய்ந்து
ஸ்வஸ்தி ஸ்ரீசாலிவாகனசகாப்தவருறாச்செல்லா நின்ற
இங்கிலிசுவரு 1818ம் ஆண்டில்
பிரபவாதிவருக்குமேற் செல்லா நின்ற
பஹுதான்ய* வருத்தில்வாரதிதி
நக்ஷத்திரயோக கரணம் பார்த்து
சுபதினத்தில் இதனோடு இருபத்தேழு
துரவுகண்டு புண்ணியாஹவாசநம்
பண்ணுவித்தேன்
* வெகுதானியவருடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கல் வெட்டு திருவள்ளுவர் மீது எல்லீஸ் கொண்டிருந்த பெருமதிப்பை உறுதிப்படுத்துவதாகஉள்ளது. ஆங்கிலேயரான எல்லீஸ் தாம் தமிழர் பாரம்பரியத் தின்படி பஞ்சாங்கத்தில் சுபநேரம் பார்த்துக் கிணறு வெட்டுவித்ததையும் கல்வெட்டில் குறிப்பிடத் தவற வில்லை.

1819 ஆம் ஆண்டு மார்ச்மாதம் 10 ஆம் தியதி இராமநாதபுரத்துக் கலெக்டரின் விருந்தினராக இருந்த போது எல்லீஸ் அவர்கள் உணவுநச்சாக்கம் (**food poisioning**)காரணமாகத் தமது நாற்பத்தோராவது வயதில் மரணமடைந்தார். தமிழ்நாட்டின் திண்டுக் கல் என்னும் ஊரில் உள்ள அவரது கல்லறையில் ஆங்கிலத்தில் ஒன்றும் தமிழில் ஒன்றுமாக இரண்டு கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. ஆங்கிலத்தில் உள்ள கல்வெட்டு எல்லீஸ் சென்னையில் 27 கிணறுகள் தோண்டியதைக் குறிப்பிடுகிறது. கவிதை வடிவில் காணப்படும் தமிழ்க்கல்வெட்டு தெய்வப்புலவர் திருவள்ளுவர் செய்த திருக்குறள் நூலின் அறத்துப்பாலினை விரிவான உரையுடன் எல்லிஸ் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தமை பற்றிப் பேசுகின்றது.

எல்லீசன் என்னும் இயற்பெயர் உடையோன்
திருவள்ளுவப் பெயர்த் தெய்வம்
செப்பியருள் குறள் நூலுள் அறப்பாலினுக்குத்
தங்குபலநூல் உதாரண கடலைப்பெய்து
இங்கிலீசுதனில் இணங்க மொழி பெயர்த்தோன்

எல்லீஸ் அவர்களை நினைவுகூரும் கல்வெட்டுக்கள் அவரது தமிழ்ப் புலமையையும் திருக்குறளின் மேல் அவர்கொண்டிருந்த பற்றுதலையும் பறைசாற்றுவன வாக உள்ளன.

மொழியியலிலும் வரலாற்றிலும் தமது பன்முகத்திறமையை வெளிகாக்காட்டிய எல்லீஸ் சிறந்ததொரு நிர்வாகியாகவும் செயலாற்றினார். பிரித்தானிய காலனித்துவ ஆட்சியில் அரசாங்க உறுப்பினராக இருந்த அதேவேளையில் சாதாரணமக்களின் வாழ்க்கை பற்றியும் சிந்தித்தார். இதன் காரணமாக இவரால் இந்தியக் குடிமக்களின் அன்பையும் ஆதரவையும் பெறமுடிந்தது. 19ஆம் நூற்றாண்டில் தமிழ்மறுமலர்ச்சியின் முன்னோடி என எல்லீஸை தலித்ஆர்வலர் அயோத்தி தாசர் பாராட்டியுள்ளார். கறையான் அரித்து அழியும் நிலையில் இருந்த ஓலைச்சுவடிகளுள் தங்களிடம் கிடைத்தவற்றை அச்சிட்டு வெளிக்கொண்டு வந்தவர்



**பிரான்சிஸ் வைற் எல்லீஸ்**
Francis Whyte Ellis

எல்லீஸ் பெருமகனார்என்று பதிவு செய்துள்ளார் அயோத்திதாசர்.

இராமநாதபுரத்தில் எல்லீஸ் இறந்தபோது, அவர்விட்டுச் சென்ற மொழியியல் மற்றும் அரசியல் தொடர்பான ஆவணங்கள் சேர்வால்டர்எலியட் (**Sir Walter Elliot**) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. இவை பின்னர்ஜி. யு. போப் அவர்களிடம் வந்து சேர்ந்தன. போப் அவற்றை ஆக்ஸ் போர்டில் உள்ள போட்லியன் நூலகத்தில் (**Bodleian Library**) சேர்த்தார். சேர்வால்டர் எலியட்டின் தகவலின்படி, எல்லீஸின் வெளியிடப்படாத மற்றும் பலபடைப்புக்கள் மதுரை கலெக்டர் ரூஸ்பெட்ரியின் (**Rous Petrie**) சமையல்காரரால் எரிக்கப்பட்டு விட்டதாகத் தெரியவருகின்றது. எல்லீஸ் தாம் நாற்பது ஆண்டுகளில் பழுத்த அறிஞராக ஆன பின்னரேயே அவற்றை வெளியிட வேண்டும் எனஎண்ணியிருந்ததாகக் கூறப்படுகின்றது.

தோமஸ்டிரவுட்மன் (**Thomas Trautmann**) என்பவரால் இங்கிலாந்தில் கண்டறியப்பட்டதாகக் கூறப்படும் தமிழின் யாப்பியல் பற்றிய எல்லீஸின்நூல்அவர் வெளியிடாது விட்டுச் சென்ற கையெழுத்துப் பிரதிகளுக்கு உரியனவாக இருத்தல்கூடும்.

ஜி.யு.போப்அவர்கள்1886 ஆம் ஆண்டில் தமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*திருக்குறள் ஆங்கிலமொழி பெயர்ப்பை வெளியிட்ட போது எல்லீஸினது ம்வீரமாமுனிவரினதும் திருக்குறள் உரைகளையும் மீள்பதிப்புச் செய்தார். எல்லீஸை அசாதாரணதிறன்கொண்டஓர்அறிஞர் என்றுபோப் அவர்கள் புகழ்ந்துரைத்துள்ளார்கள்.*

*கலெக்டர் எல்லீஸின் நிர்வாகத் திறமையைப் பாராட்டிப் இராமச்சந்திரகவிராயர் பாடியபோது அதற்குக்கைமாறாகக் கவிராயரின் தமிழ்ப்புலமையைப்பாராட்டித் தானும் ஒருகவிதையைப் பாடிவைத்தார் எல்லீஸ் அவர்கள்.*

**செந்தமிழ்ச் செல்வனும் ஓர் ஆயிரம்**
**தலைச்சேடனும் யாழ்**
**சுந்தரத்தோடு இசைவல்லோனும்**
**யாவரும்தோத் திரம்செய்**
**கந்தனைச் சொல்லும் கவிராமச் சந்திரனைக்**
**கண்டுவெட்கி**
**அந்தர வெற்பிழி பாதாளம் தேடி**
**அடங்கினரே**

*யாவரும் போற்றும் கந்தன் நாமத்தைப் பேசும் இராமச்சந்திரகவியின் திறமைகண்டு அவர் எதிர் நிற்க வெட்கப்பட்டு அகத்தியனும் ஆயிரம்தலை ஆதி சேடனும் யாழ்மீட்டி இசைபாடும் நாரதனும் அந்தர மலைக் கீழ்உள்ள பாதாளத்தில் சென்று பதுங்கினரே என்பது இப்பாடலின் பொருள்.*

*இக்கவிதையைத் தாம் எழுதிய தமிழ் புளூட்டார்க் (***Tamil Plutarch***) என்னும் தமிழ்ப்புலவர்கள் பற்றிய வரலாற்று நூலில்பதிவு செய்து ள்ள ஈழத்தறிஞர் சைமன் காசிச்செட்டி (***Simon Casie Chetty***) இராமச்சந்திரகவிராயர் எல்லீஸின் தமிழாசிரியர் மட்டுமல்லர் அவருடைய நெருங்கிய நண்பரும்கூட என்பதையும் குறிப்பிட்டுள்ளார்.*

*இராமச்சந்திரகவிராயரை ஒருசில வித்தியாசமான தனிப்பாடல்கள் மூலமாவே பலரும் அறிந்து வைத்திருக்கின்றார்கள். எனினும் அவர் ஒருநாடகஆசிரியரும் கூட. பாரதவிலாசம் சூதுது கிலுரிதல் (1870), இரணியவாசகப்பா, (1871), சகுந்தலை விலாசம் (1876), ருக்மாங்கத விலாசம் (1882), இரங்கூன் சண்டை நாடகம் (1882) என்பன இவர் எழுதியுள்ள நாடகங்களுட் சிலவாகும்.*

## உசாத்துணை


**Arthur Coke Burnell (2010)Elements of SouthIndian Palæography from the Fourth to the Seventeenth Century A.D.: Being an Introduction to the Study of SouthIndian Inscriptions and Mss**

**Blackburn, Stuart (2006). Print, folklore, and nationalism in colonial South India. Orient Blackswan. pp. 92&95.**

**Rocher, Ludo (1984). Ezourvedam: a French Veda of the eighteenth century. John Benjamins Publishing Company. pp. 18&20.**

**Trautmann, Thomas. R. (2006). Languages and nations: the Dravidian proof in colonial Madras. Yoda**

**Simon Casie Chetty (1859) The Tamil Plutarch, Jaffna. p. 81**

*அயோத்திதாசர்,க. அயோத்திதாசப்பண்டிதர்சிந்தனைகள், தொகுதிஇரண்டு, தலித்சாகியஅக்கடமி,* **p. 548**

*வேங்கடாசலபதி, ஆ.இரா. எல்லீசன்என்றொரு அறிஞன்,காலச்சுவடு, மே 2007*

*மஹாதேவன், ஐராவதம்.'திருவள்ளுவர்திருமேனி தாங்கிய தங்கக்காசு2 , வரலாறு.காம், இதழ் 36, ஜூன்16ஜூலை15, 2007*


*பேராசிரியர்தாமஸ்டிரவுட்மன்அவர்களின்***Languages and nations: the Dravidian proof in colonial Madras***என்னும்நூலைத்திராவிடச்சான்று என்னும்தலைப்பில்பேராசிரியர்இராம.சுந்தரம்அவர்கள்மொழிபெயர்த்துள்ளார்கள். இந்நூல்காலச்சுவடுபதிப்பகத்தால் 2007 இல்வெளியிடப்பெற்றுள்ளது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியங்களில் நடமாடும் இலட்சிய புருஷர்கள்

**திருமதி யுவராயினி பழனித்தம்பி**
ஓய்வு பெற்ற தமிழ் ஆசிரியை
கோட்டைக்கல்லாறு



**உலகம்** இனிது நடைபெறுவதற்கும் மக்கள் நலமுறுவதற்கும் இலக்கியங்கள் அவசியமாகின்றன. பழமையின் பழமையும் புதுமையும் பெற்று நிலை பேறடைந்து திகழ்கின்றது. இந்த இலட்சியங்கள் பல வகையின. இவ்வாறான இலட்சியங்களை கடைப்பிடித்து ஒழுகும் ஒழுகமுயலும் தனி மனிதர் பலர் நம்முள் ஒன்று கூடிய கூட்டமே சமூக அமைப்புக்கு அத்திவாரமாகின்றது. வள்ளுவப் பெருந்தகையார் தனிமனிதனை கொண்டே நல்லறங்களை வகுத்துள்ளார். ஒவ்வொரு தனிமனிதனுக்கும் இலட்சியம் அவசியமாகிறது. அவ்வாறு இல்லாவிடின் இலட்சியம் அமைந்ததொரு சமூகத்தை உருவாக்கவும் முடியாது.



இலட்சியங்கள் எல்லோரிடத்தும் ஒருங்கே அமைவனவல்ல. இலட்சியவாதிகள் தாமும் ஈடேறி பிறரையும் ஈடேற்றும் தன்மை வாய்ந்தவர்கள். இலட்சியங்களுள்ளே இது நிறைந்தது இது குறைந்தது என உயர்வு தாழ்வு கற்பித்தல் முடியாது. இலட்சியங்களை கடைப்பிடித்தொழுகும் இலக்கியவாதிகளினுள்ளும் உயர்வு தாழ்வு கற்பிக்கவும் முடியாது. இப்படியான இலட்சியவாதிகளை நாம் இலக்கியங்களில் பெரிதும் காண்கின்றோம். இலட்சிய வாழ்வினை உயிர் பெறச் செய்த அந்த இலட்சிய புருஷர்களை இங்கு குறிப்பிடுவது மகிழ்ச்சிக்குரியது.

இலட்சியம் இல்லாத மனிதன் மனிதனேயல்லன். இலட்சியம் இல்லாத வாழ்வும் வாழ்வன்று. இலட்சியத்திற்காக உயிர் வாழவேண்டும், உயிர் வாழ்வதற்காக இலட்சியத்தை கைவிடலாகாது. அது ''ஈமஞ்சேர் மலை போல விழுந்து அழிந்திடப்பட்ட செயலாகும்''. இலக்கியங்களில் மனதை விட்டகலா மகாபாரதத்தை எடுத்து நோக்கும் போது அருச்சுனன் எனும் கதாபாத்திரம் எம் கண்முன்னே தோன்றுகின்றது. அர்ஜுனன் உயிரை விடவும் மானத்தையே பெரிதாக மதித்து அதனை லட்சியமாகக் கொண்டவர்.

> ''ஊனமேயான ஊனிடையிருக்கும்
> உயிரினைத்துறந்து பொண்பூணாம்
> மானமே புரப்பத் தவனிமேலெவர்க்கும்
> வரிசையும் தேற்றமும் மரபும்.''

அதாவது உடல் உறுப்புகளால் ஆன தசையின் உள்ளே மறைந்திருக்கும் உயிரைத் துறந்தாவது அழகிய ஆபரணமான மானத்தை காப்பதே உலகில் வாழும் எல்லோருக்கும் முறைமையும் குடிப்பிறப்பும் மரபாகும் என்பது இதன் பொருளாகும். இங்கு அர்ஜுனன் உயிரைவிட மானத்தையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிதான இலட்சியமாக கருதினார். இதைத்தான் வள்ளுவப் பெருந்தகையும் 'மயிர்நீப்பின் வாழாக் கவரிமான் அன்னார் உயிர்நீப்பர் மானம் வரின்' என்று கூறினார்.

இதே மகாபாரதத்திலே அறத்தின் வடிவமாக தோன்றும் தருமன் ஓர் இலட்சிய புருசன் ஆகின் றார். தர்மபுத்திரர் அறத்தை இலட்சியமாகக் கொண் டவர். அறத்தின் பயனாக தனக்குக் கிடைத்த முக்தி இன்பத்தையே தியாகம் செய்தவர். தருமன் முக்தி உலகிற்கு செல்லும்போது அங்கு அவரது இலட்சி யத்திற்கு ஒரு சோதனை நிகழ்கின்றது. புழுத்த நாய் ஒன்றை அங்கே காண்கின்றார். அந்த தாய்க்கும் தனக்கும் இடையிலான ஒற்றுமையை காண் கிறார். அதற்கு வந்த துன்பம் தனக்கு வந்ததாக எண்ணி அந்த நாயை தன் தோளில் தூக்கி வைத் துக் கொண்டு செல்கிறார். ஆனால் முக்தி உல கம் அவரை தடுக்கிறது. இந்த நாய்க்கு இல்லாத உரிமை எனக்கு எதற்கு என்று முக்தி உலகமே வேண்டாம் என மறுத்து கூறியவருக்கு அறத்தின் பயனாக முக்தி உலகம் மீண்டும் கிடைக்கின்றது. இங்கு அறத்தை இலட்சியமாகக் கொண்ட தருமர் வெற்றியாளராக காணப்படுகின்றார்.

வீரகவிராசரால் எழுதப்பட்ட அரிச்சந்திர புராணத் தில் அரிச்சந்திரன் உண்மை பேசுவதையே இலட்சி யமாகக் கொண்டவன். சந்திரமதியினை வாளால் வெட்ட வேண்டிய சந்தர்ப்பம் வரும் பொழுது கூட விசுவாமித்திரர் இந்த இடத்திலாவது பொய் கூறும் படி கேட்க அரிச்சந்திரன் தலைமை நிமிர்ந்து பின்வ ருமாறு கூறினான்.

'மதியிழந்தனம் பாலனை இழந்தனம் படைத்த நிதியிழந்தனம் இனி எமக்கு உனது என நினைக்கும் கதியிழக்கிலும் கட்டுரைக இழக்கிலேம்' என்றான் மதி இழந்து வாய் இழந்து அருந்தவன் மறைந்தான்' அதாவது அரிச்சந்திரன் விஸ்வாமித்திரரை நோக்கி பின்வருமாறு கூறுகிறார். நாட்டை இழந்து விட் டோம் மகனை இழந்து விட்டோம் செல்வங்கள் அனைத்தையும் இழந்து விட்டோம் இனி எனக்கு கிடைக்க வேண்டிய முக்தியை இழக்கவேண்டி ஏற் பட்டாலும் எக்காரணம் கொண்டும் சத்தியத்தை தவற விட மாட்டேன் என அறுதியிட்டுக் கூற விசு வாமித்திரர் தலைகவிழ்ந்து சென்றார். என அரிச் சந்திர புராணம் கூறுகிறது. இங்கு அரிச்சந்திரன் வாய்மையை இலட்சியமாகக் கொண்டவன் என் பது புலனாகிறது.

அடுத்து என் மனக்கண் முன் நிழலாகும் இலட் சியப்புருசர்கள் வரிசையில் இராமாயணத்தில் உலாவரும் கதாபாத்திரம் தசரத மன்னன். சூரிய குலத்து முதல்வர்களில் ஒருவரான இவர் இரா மாயண காட்சி ஒன்றில் இரண்டு இலட்சியங் களிடையே ஊசலாடுன்றார். ஒன்று அரசியல் மற்றையது சத்தியம். இவ்விரண்டில் ஒன்றை தெரிவு செய்வதில் திண்டாடுகிறார். அரசியல் கொள் கையின் படி மூத்த புதல்வனுக்கு முடிசூட்டுவதா அல்லது கூறிய சத்திய வாக்கை நிலைநாட்டுவதா? இந்த தர்மசங்கடத்தில் மத்தியிலே அரசியல் நிலை மாறக்கூடியது ஆனால் சத்தியம் நிலைத்திருக்கக் கூடியது என்பதை உணர்ந்து நிலைமாறும் தன்மை யில் உள்ள அரசியலைக் கடை பிடிப்பதைவிட சத் திய வாக்கை காப்பாற்றி தன் உயிரை விடுகிறான். சத்தியத்தின் பொருட்டுத் தன் உயிரை தியாகம் செய்த தசரத மன்னனின் வாழ்க்கையில் நிகழ்ந்த இந்தப் பெரு நிகழ்ச்சியானது சத்தியத்தை இலட்சிய மாகக் கொள்பவருக்கு உதாரணமாகின்றது.

இதைத்தொடர்ந்து இலட்சியவாதிகளிடத்து காணப்படும் மற்றொரு மாண்பினையும் நாம் நோக்குவது அவசியமாகும். இலட்சியங்களுக்காக தம்மை தியாகம் செய்து நல்லோர்கள் மத்தியில் தாம் பெற்ற இலட்சிய பயனை செய்த நல்லோருள் ஒரு வரை இங்கு காண்கின்றோம். அவரே திருவருளே இலட்சியமாகக் கொண்டு பட்டம் பதவிகளையும் நிதிகளையும் தியாகம் செய்த மாணிக்கவாசக பெரு மானார். 'நரகம் புகினும் என்னேன் திருவருளா மிருக்கப் பெறின் இறைவா' என்று திருவருட்ப யனை விடுத்து திருவருளையே வழுத்தி ஆனந்தம் அடைகின்றார். அதாவது நரகம் செல்ல வேண்டி யிருந்தாலும் வருந்த மாட்டேன் இறைவா அங் கும் உன் திருவருள் இருக்கப் பெற்றால் போதும் என்கின்றார். இங்கு இவரது இலட்சியம் திருவருள் ஆகின்றது இப்படிப்பட்ட பல்வேறுபட்ட இலக்கிய வாதிகளை நாம் இலக்கியங்களில் காண்கின்றோம் பெருமை அடைகின்றோம்.

மேற்கூறப்பட்ட இலட்சியங்களை கொண்ட இலட்சிய புருஷர்களின் மானம், அறம், வாய்மை, சத்தியம் திருவருள் போன்ற இலட்சியங்களை அறிந்துகொண்டோம்.

இதேபோல் சங்கப் பாடலில் இடம்பெறும் குறுந் தொகை பாடல் உணர்த்தும் குறிஞ்சி நாடானின் நட்பும் இலட்சியத்தில் அடக்கம் பெறுகின்றது.

**''நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று**
**நீரினும் ஆரள வின்றே**
**சாரல் குறிஞ்சிப் பூக்கொண்டு பெருந்தேன்**
**இழைக்கும் நாடனொடு நட்பு''**

அதாவது மலைச்சாரலில் கரிய கண்களையு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டைய குறிஞ்சி மலர்களில் இருந்து பெரிய தேன் கூடுகளை தேனீக்கள் உருவாகும் அப்படிப்பட்ட நாட்டை உடைய தலைவனது காதலானது நிலவுல கத்திலும் பெரியது வானளவிற்கு உயர்ந்தது நீரின் ஆழத்தை விட ஆழமானது என கூறப்படுகின்றது. இங்கு குறிஞ்சி நாட்டு தலைவனின் காதல் நட்பு இலட்சியத்தில் உள்வாங்கப்படுகின்றது.

இவ்வாறு சுட்டப்படுகின்ற இலட்சிய புருஷர்க ளுள் முல்லைக்கு தேர் கொடுத்த பாரி மயிலுக்கு போர்வை வழங்கிய பேகன் பெரும் சித்திரனாருக்கு தனது தலையை பரிசாக வழங்கிய குமணன் கவச குண்டலங்களை வழங்கிய கர்ணன் எனப்படுகின்ற இலட்சிய புருஷர்களும் போற்றப்படத்தக்கவர்க ளே. இப்படிப்பட்ட இலக்கியவாதிகளின் தூல வடி வங்கள் மறைந்தாலும் இலட்சியங்கள் மறைந்து விடுவதில்லை. அவை நம் உள்ளத்தே கலந்து நம்மை ஆட்கொண்டு நிற்கின்ற. இவை என்றுமே அழியாத கோலங்கள் ஆகின்றன.

5000 ஆண்டுகளின் முன்பே கடைபிடித்து அனு பவித்த இலட்சிய சம நோக்கினை நாம் மீண்டும் பெற வேண்டும். இலக்கியங்களே பரந்துபட்ட கிடக்கின்ற இலட்சிய புருஷர்கள் இலட்சியங்க ளின் இயல்பினை நாம் உணர்தல் வேண்டும். இலட்சிய புருஷர்களின் நோக்கம் அவர்களின் சகிப் புத்தன்மைகளையும் இலக்கியங்களினூடே கற்றுக் கொள்ள வேண்டும். இந்த இலக்கிய பூங்காவன இலட்சிய புருஷர்கள் இலட்சியங்கள் நறுமணம் ஆகி நமக்கு புத்துயிர் அளிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளைய தலைமுறையினரின் மனநலம் காப்பதன் அவசியம்

**இன்றைய காலகட்டத்தில், இளைய தலைமுறையினர் போட்டிகள் நிறைந்த உலகில் தங்கள் முன்னேற்றத்திற்காக பல்வேறு எதிர்ப்புகள், சவால்களை சந்திக்க வேண்டியுள்ளது. அதை எதிர்கொள்ள முடியாத சூழ்நிலையில் இளைய தலைமுறையினர் மனநல பாதிப்புக்கு ஆளாவது அதிகரித்து வருகிறது.**



திருமதி.
பவானி சற்குணசெல்வம்
(கொலண்ட்)

*அவர்களின் சிதறிவரும் மன நலத்தை சீர்படுத்தி அவர்களுக்கு சிறந்த வழிகளைக் காட்டி, கல்வி பெற்று பணிக்குச் சேரும் வரை, நாமும் சேர்ந்து நடந்து செல்வது தான் தற்போது மிகவும் முக்கியம். குழந்தைகளின் மன நல பாதிப்புகளை கண்டறிந்து காப்பது அவசரத் தேவை தானே? உலக அளவில் 1020% குழந்தைகளுக்கு மற்றும் வளர் இளம் பருவத்தினருக்கு மனநல பாதிப்புகள் உள்ளதாம். வயது வந்தவர்களில் நால்வரில் ஒருவருக்கும் குழந்தைகளில் பத்து பேரில் ஒருவருக்கும் மனநல பாதிப்புகள் இருப்பதாக கூறப்படுகின்றது. மனநல பாதிப்புகள் உள்ளவர்களில் 90 சதவீதத்தினருக்கு 14 வயதிற்குள் அறிகுறிகள் தோன்றுகின்றன. அதாவது சில குழந்தைகள் பாதிப்புகளுடனேயே வளர்கின்றனர்.*

*மனநல பாதிப்புகளுக்கான பல மறைமுகமான அறிகுறிகளை பெற்றோர், நண்பர்கள் மற்றும் ஆசிரியர்கள் உணர்வதில்லை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகளின் தினசரி நடவடிக்கைகளை கூர்ந்து கவனித்து வந்தால் மட்டுமே இவற்றைக் கண்டறிய முடியும். அப்போது தான் உடனடியாக தகுந்த மருத்துவரை அணுகி உதவி பெறலாம். நல்வாழ்வு (Health) என்பது உடல், மனம் மற்றும் சமுதாய நலமும் சேர்ந்தது. நோய்கள் இன்றி இருப்பது மட்டுமல்ல என்று உலகசுகாதார நிறுவனம் (WHO) உறுதியுடன் வரையறுத்திருக்கிறது.

## குழந்தைகளுக்கான உரிமை

"குழந்தைகளுக்கான உரிமை என்ற முக்கியமான கோட்பாட்டினை ஐக்கிய நாடுகள் சபை அறிவித்திருக்கிறது. அதன்படி ஒவ்வொரு குழந்தைக்கும்



நல்வாழ்வு பெற, கல்வி பெற, தனக்குரிய மதிப்பு மற்றும் கௌரவத்துடன் (Dignity) வாழ உரிமை உண்டு. இதில் ஏதாவது மாறி நடந்தால் அது மனித உரிமை மீறல் மட்டுமல்ல, உலகளாவிய குழந்தைகள் உரிமை மீறலும் ஆகும். மன நல பாதிப்புகள் உள்ள ஒவ்வொரு சிறார்க்கும் கல்வி மற்றும் சம வாய்ப்புகள் கிடைப்பது சந்தேகமே.

## தகவல் தொழில்நுட்பத்தின் தாக்கம்

வானமே எல்லையாக தகவல் தொழில்நுட்பம் வளர்ந்து உலகமே சிறு கிராமமாக இயங்குகிறது. பெருகிவரும் மக்கள்தொகை, தேவையான கல்வியும் வேலை வாய்ப்பும் பெற மிகப்பெரிய போட்டி, ஒவ்வொரு நிலையிலும் பெருகிவரும் எதிர்பார்ப்புகள் (தனக்குள், பெற்றோர் மற்றும் ஆசிரியர்களிடமிருந்து) மேலும் இரட்டை முனை கத்திகளாக சமூக ஊடகங்கள் என்பன பல சிறார்களின் மனதில் பெரிய தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. தான், தனக்குரிய இடம் என்று ஐஞீனுணஞுடினுரதர இஞுரடிண்டிண்ல் இயற்கையாகவே கொதித்துக் கொண்டிருக்கும் (Adolescent Turmoil) வளர் இளம் பருவத்தினருக்கு இந்த தாக்கங்கள் எரியும் நெருப்பில் எண்ணையை ஊற்றுவதுபோல் ஆகிறது.

சிறார்களுக்கு உணர்வுகளும், எண்ணங்களும் உடல் வளர்வதுபோல் வளர்ந்து வருகின்றன. மன அழுத்தங்கள் இவர்களை எளிதில் பாதித்துவிடும். சரியான சிகிச்சை முறைகளால் எளிதில் சரி செய்து சீர்ப்படுத்திவிடவும் முடியும். எனவே மறைமுகமான அறிகுறிகளை ஆரம்பத்திலேயே கண்டறிவது மிகவும் முக்கியம்.

## அறிகுறிகள்

கோபம், மனச் சோர்வு, பட படப்பு, பள்ளிக்குச் செல்ல விருப்பமில்லாமல் இருப்பது, கவனமின்மை, மற்றவர்களிடமிருந்து ஒதுங்கி இருத்தல், காரணமில்லாமல் தலைவலி, வயிற்றுவலி போன்றவை குழந்தைகளிடம் காணப்படலாம். வளர் இளம் பருவத்தினரிடம் படபடப்பு, மனச்சோர்வு, மிகவும் அதிகமாக அல்லது மிகவும் குறைவாக சாப்பிடுவது, அதிக தூக்கம், தூக்கமின்மை, ஆபத்தான செயல்களில் இறங்குவது, மிக வேகமாக மோட்டார் வாகனங்களை ஓட்டுதல், பாலியல் உணர்வுகளால் உந்தப்படுதல், சிகரெட், புகையிலை போதைப் பொருட்கள் மது ஆகியவற்றை பழக்கப்படுத்திக் கொள்வது போன்றவை காணப்படலாம்.

சிறு ஏமாற்றங்களைக் கூட தாங்க முடியாமல் தவிப்பதும் மன நல பாதிப்பின் ஒரு வெளிப்பாடு தான்! இதனால் தற்கொலை முயற்சியில் இவர்கள் ஈடுபடலாம். இளம் வயதினர் தற்கொலை செய்து கொள்வதற்கான காரணங்களை ஆராய்ந்ததில் 90 சதவீதத்தினருக்கு மன நல பாதிப்புகள் இருந்தது தெரிய வந்துள்ளது.

## ஆய்வின் முடிவுகள்

மரு கார்லிவ் என்பவர் 2014ல் ஒரு ஆய்வினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொண்டார். சுமார் 15000 பள்ளி மாணவர் களிடையே தனித்தனியாக ஒரு மதிப்பீட்டு கேள்வித் தொகுப்பு (Scoring system Questionnarie) மூலம் விவரங்களை சேர்த்தார். மாணவர்களில் மன நல பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்புள்ளவர்கள் என்று 3 பிரிவுகளாகப் பிரித்தார். அதிக வாய்ப்பு 13.2% (High Risk) குறைவான வாய்ப்பு 57.8% (Low Risk) மறைமுக வாய்ப்பு 29% (Invisible Risk) என்று கண்டறிந்தார். இதில் மூன்றாவது பிரிவில் மாணவர்களைத் தனித்தனியாக கேள்விகள் கேட்டபிறகு தான் அவர்களிடம் பாதிப்புகள் இருப்பது தெரிந்திருக்கிறது. பட படப்பு, (anxiety) மனச் சோர்வு (Depression) தற்கொலை எண்ணங்கள் போன்றவை ஏடிஞ்ட கீடிண்டு மற்றும் ஐணதிடிண் டிளுடுநு கீடிண்டு உள்ள சிறார்களுக்கு சமமாகவே இருப்பதாக தெரியவந்துள்ள புள்ளி விவரம் நம்மை பயமுறுத்துகிறது. அதாவது வெளியில் தெரியாத மன நல பாதிப்புக் குழந்தைகளைக் கண்டறிந்து சிகிச்சை அளிப்பது மிக மிக அவசியமாகிறது. நோய் முற்றிய பிறகு சிகிச்சை அளித்தால் அதிக பயனளிக்காது.

மரு வில்லியம் பார் என்பவரின் ஆராய்ச்சி முடிவுகளும் பயத்தை ஏற்படுத்துகின்றன. ஒவ்வொரு தற்கொலை இறப்புக்கு அருகில் 200 தற்கொலை முயற்சிகள் இருக்கக்கூடும் என்று கணக்கிடப்படுகிறது. இந்த அடிப்படையில் வளர் இளம் பருவத்தினரை மன நல பாதிப்புகளிலிருந்து காப்பாற்றுவது அவசரத் தேவை அல்லவா?

**காரணங்கள்**

★ சில மன நல பாதிப்புகள் ( Attention Deficit Hyperactive Disorder & ADHD, Bipolar Disorder போன்றவை) மரபு வழி நோயாக இருக்கலாம் என்று அறிவியல் ஆராய்ச்சி குறிப்பிடுகிறது. பெற்றோர்களில் ஒருவருக்கு இந்த நோய்கள் இருந்தால்கூட சிறு வயதிலேயே குழந்தைளுக்கும் தோன்றக்கூடும்.

★ குடும்பத்தில் சண்டை, மன முறிவுகள், ஒரு பெற்றோரால் அல்லது பெற்றோர்கள் இல்லாமல் வளர்க்கப்படும் குழந்தைகள், ஏழ்மை, பெற்றோர் அல்லது உடன் பிறந்தோரின் இறப்பு ஆகியவை சிறார்களுக்கு மனநில பாதிப்புகளை ஏற்படுத்தலாம்.

★ இத்துடன் சேர்ந்து நட்பு முறிவு, காதல் தோல்வி, கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளில் தோல்வி ஆகியவை வளர் இளம் பருவத்தினருக்கு மனச்சிதைவை ஏற்படுத்தலாம்.

★ இயற்கை பேரிடர்களான கடல் சீற்றம், பூகம்பம், தீ விபத்து போன்றவை மற்றும் போர், வன்முறைக் கலவரங்கள் போன்றவையும் மன நல பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும்.

மன நல பாதிப்புகள் தற்போது தன்னுள்ளேயே உறைந்து மனச்சோர்வு, தற்கொலை எண்ணங்கள் என்று வெளிப்படுகிறதாம்.

வருங்கால தூண்களான குழந்தைகள் மற்றும் வளர் இளம் பருவத்தினரை பாதுகாப்பது நம் அனைவருடைய கடமை.

**என்ன செய்யலாம்?**

1) இளம் வயதினருக்கு ஏற்படும் மனநல பாதிப்புகளைப் பற்றி அனைவருக்கும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும்.

2) பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், சமூக ஆர்வலர்களுக்கும் குழந்தைகளின் மன நல பாதிப்புகளை கண்டறிந்து சிகிச்சை அளிப்பது பற்றி கருத்தரங்கள் நடத்த வேண்டும். குறிப்பாக மன நல பாதிப்புகளை ஆரம்ப நிலையில் கண்டறிவது எப்படி என்பதை அறிவுறுத்தவேண்டும்.

3) சுகாதார ஆய்வாளர்கள், மருத்துவர்கள் மருத்துவ உதவியாளர்களுக்கு குழந்தைகள் மன நல பாதிப்பு சிகிச்சை குறைகள் பற்றிய பயிற்சிகள் அளிக்கப்படவேண்டும்.

4) தொலை தொடர்பு சாதனங்கள், விளம்பரங்கள் மூலம் சமூகத்தின் அனைத்து தரப்பினருக்கும் செய்திகளை பரப்பவேண்டும்.

5) அனைத்து சுகாதார சிகிச்சை மையத்திலும் இளையவர்களின் மன நல பாதிப்புகளை கண்டறியவும் வசதிகளும் சிகிச்சையும் கிடைக்க அரசு ஏற்பாடு செய்யவேண்டும். மேல் சிகிச்சை மையங்களும் சிறப்பு மருத்துவர்கள் சேவையும் இளம் சிறார்களுக்கு கிடைக்க போதிய நிதியுடன் மையங்களை ஏற்படுத்தித் தரவேண்டும்.

இளம் வயதினரின் மன நலம் காப்பதை கடமையாக, தற்போதைய முன்னுரிமையாக எடுத்துக் கொண்டு அனைவரும் செயல்படவேண்டும். குழந்தைகளை நல்ல முறையில் பராமரித்து அவர்கள் மன நலத்தைப் பேணி வளர்த்தால் அவர்கள் இளம் பருவத்தில் நல்ல உடல் மற்றும் மன ஆரோக்கியத்துடன் கல்வி, வேலை வாய்ப்பு பெற்று நல்ல குடிமகனாக வீட்டிற்கும் நாட்டிற்கும் உரிய பங்கினை அளிப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

**கேள்வி பதில்கள்**

**இளைஞர்களுக்கு உண்டாகும் மனவழுத்த அறிகுறிகள் எவை?**

★கல்வி சாதனைகளில் வீழ்ச்சி

★நட்புறவில் நடத்தைப் பிரச்சினைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- குடும்பத்தோடும் பிறரோடும் கூடி ஒழுகாமை
- உற்சாகமும் உத்வேகமும் இழத்தல்.
- சுய ஊக்குவிப்பில் சிரமம்
- தேவையற்ற முரட்டுத்தனம், கோபம், வெறி
- வருத்தம் மற்றும் இயலாமை உணர்வுகளை வெளிப்படுத்தல்
- விமரிசனங்களைத் தாங்கிக்கொள்ளமுடியாமை
- பெற்றோரின் எதிர்பார்ப்புக்கு இணங்க வாழ முடியாமை
- சுயகௌரவக் குறைவும் குற்ற உணர்வில் வருந்துதல்

இளைஞர்களில் உடல் ரீதியிலான மாற்றங்கள் ஏன் நிகழ்கிறது?

10 விருந்து 19 வயது வரை (WHO அளவுகோலின் படி) ஓர் இளைஞரின் உடல் தீவிர மாறுதலை அடைகிறது. பருவ காலத்திற்குள் நுழைவதால் இளைஞர்கள் உடல் மாற்றங்களையும் உணர்வு மாற்றங்களையும் அனுபவிக்கிறார்கள். இதனால் உடல் வடிவ மாறுதலோடு ஆளுமையும் நடத்தையும் தீவிரமாக மாறுகிறது. இதற்கு ஒரு பாதி காரணம் பாலுணர்வு பற்றிய அறிதலே. இது மாதவிடாயினாலும் பிற உடல் மாற்றத்தாலும் ஏற்படுபவை. இன்னொரு பாதி காரணம் இயக்கு நீர்கள் (homones) அதிகமாகச் சுரப்பதால் மனநிலையில் அவை பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

தங்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண, ஆண்களைவிட பெண்கள் உதவி நாடும் வாய்ப்பும் அதிகம் என்று தெரியவந்துள்ளது.பெண்கள் துன்பத்தில் இருக்கும்போது தங்களுடைய குடும்பத்தினர், நண்பர்களுடன் பகிர்ந்துகொள்வர். ஆனால் பலம், சகிப்புத்தன்மை, பிறர் உதவியின்றி செயல்படுதல், சவாலை எதிர்கொள்ளும் திறன் போன்றவை ஆண்மையைக் குறிக்கும் தகுதிகளாகக் கருதப்படுகின்றன. அதனால் பொதுவாகவே சில ஆண்கள், தாங்கள் மனதளவில் பாதிக்கப்பட்டிருப்பதை ஒப்புக்கொள்வது பலவீனம் என்று கருதுகிறார்கள்.

குடும்ப ஆதரவுடன் மனவுளைச்சலைச் சமாளிக்கும் உத்திமுறைகளை ஒருவர் வளர்த்துக் கொள்வது முக்கியம் என்றும் உதவி கேட்பதும் பலமே, பலவீனம் அல்ல என்றும் வலியுறுத்தப்படுகிறது.

மாற்றங்களுக்கு உள்ளாவதையே வழக்கமாகக் கொண்டிருக்கும் இந்த உலகில், இளைய தலைமுறையினர் மனநல ஆரோக்கியத்தோடு வாழ்வது மிக முக்கியம். வாழ்நாள் முழுவதும் நலமுடன் திகழ, நல்ல மனநலத்தோடு இருக்க வேண்டும். மாறாக, இன்றைய இளைய தலைமுறையானது பல்வேறு விதமான அதிர்ச்சிகள், மனநலக் குறைபாடுகள், தற்கொலை எண்ணம் உட்படப் பல்வேறு விஷயங்களால் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். இதிலிருந்து இவர்களை விடுவித்து, அடுத்துவரும் தலைமுறையைக் காக்க வேண்டியது அவசியம். குறிப்பாக, 15 முதல் 24 வயதுக்கு உட்பட்டோரின் மனநலத்தைக் காக்க வேண்டும்; அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளது ஐக்கிய நாடுகள் சபை. அந்த வகையிலேயே, அக்டோபர் 10 உலக மனநல தினம் அனுசரிக்கப்படுகிறது.

இளைஞர்கள் மனித நேயத்தை மேலும் வளர்த்துக் கொள்ள வேண்டும். போலிகளைக் கண்டு ஏமாறாமல் நகல்களை நம்பி மோசம் போகாமல் நிஜங்களைத் தேடும் பயணத்தை துவக்க வேண்டும். காலத்தின் அருமையையும்... உயிர்களின் மதிப்பையும்... வாழ்க்கையின் அர்த்தத்தையும்... உண்மையின் உன்னதத்தையும்... இதயப்பூர்வமான அன்பையும்... கனிந்த நட்பையும்... புரிந்துகொள்ள முயல வேண்டும். அப்போதுதான் எதிர்கால சந்ததியினராவது ஆரோக்கியமான சமூக சூழலில் வாழ்க்கையை மனிதத்துடன் மகிழ்ச்சியாக பயணிக்க முடியும்.

**உசாத்துணைகள்:**


1.kinderen en adolescenten met psychische klachten.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தென்னாடு

www.thennadu.org

உ
சிவமயம்

# தென்னாடு

## செந்தமிழாகம சிவமடம்-கொக்குவில்



### அருள்மிகு ஐம்பூதநாதர் அருட்கோலம் மற்றும் ஈழத்து சித்தர்கள் தவக்கோலம்

- சிவமயங்கல நீராட்டு (உருத்திர அபிஷேகம்)
- சிவப்பெருவேள்வி ( உருத்தியர மகாயாகம்)
- பிறைத்தோற்ற வழிபாடு (பிரதோஷம்)
- சித்தர்கள்/ நாயன்மார்கள் குருபூசை
- சிவஞானப் பெருவேள்வி ( திருமுறை முற்றோதல்)
- தென்புலத்தார் வழிபாடுகள்
- நிறைநிலவு ( பௌர்ணமி) வழிபாடு
- மறைநிலவு (அமாவாசை) வழிபாடு
- ஆண்டுப் பிறைநாள் (திதி)
- பிறைநாள் சடங்குகள் (திதி)

**கருமுதல் திருவரை சகல சடங்குகளும் செந்தமிழிலே இயற்றப்படும்**



குளங்கரை ஒழுங்கை.
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தொடர்புகளுக்கு :
+94 21 221 2739